வரு.73 இல. 15 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

2021 ஏப்ரல் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை April 11 Sunday, 2021

32 பக்கங்கள் 40/-
















# தமிழ், சிங்கள புத்தாண்டு கொடுப்பனவாக ரூ.5,000

## அரசு தீர்மானம் என்கிறார் செஹான்

சுப்பிரமணியம் நிஷாந்தன்





கொவிட்19 தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் சமுர்த்தி பயனாளிகளின் குடும்பங்களுக்கு தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆளுங்கட்சி உறுப்பினர்களின் வேண்டுகோளின் பேரில் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அறிவுறுத்தலின் பிரகாரம் இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுய தொழில்,

04




# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நிதி வழங்கியவர் இப்ராஹீமே

## குடும்பத்துடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்



உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்காக இப்ராஹிம் மௌலவி என்பவரே நிதி உதவி வழங்கினார் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.

இப்ராஹிம் மௌலவி என்ற நபர் தற்போது குடும்பத்தினருடன் தடுத்துவைக்கப்பட்டுள்ளாரென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்காக அந்த நபர் 50 மில்லியனை செலவிட்டுள்ளாரெனவும் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதி சஹ்ரான் ஹாசிம் மற்றும் அவரது சகாக்களிடம் 30 மில்லியன் மீட்கப்பட்டதென தெரிவித்துள்ள அமைச்சர் அந்த பணத்தை பயன்படுத்தி ஆடம்பர வாழ்க்கையை வாழ்ந்திருக்கலாம் ஆனால் இஸ்லாமிய அரசை உருவாக்குவதற்காகவே இந்த நிதி பயன்படுத்தப்பட்டதெனவும் அமைச்சர் கூறியுள்ளார். எந்த நாடும் இந்த நிதியை வழங்கவில்லையென தெரிவித்துள்ள அவர், இப்ராஹிமின் இரு புதல்வர்கள் தற்கொலை குண்டுதாக்குதலை மேற்கொண்டனர்.

04

# பிணையில் விடுதலை செய்யப்பட்ட யாழ். மேயருக்கு ஜூன் 26 இல் வழக்கு

## அதிகாலை கைதாகி இரவு 08 மணிக்கு விடுதலை



இலங்கையில் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்க முற்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மாநகர முதல்வர், சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் நேற்று முன்தினம் இரவு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினமிரவு அவர் ஆஜர்படுத்தப்பட்ட போது, பிணையில் விடுவிக்க உத்தரவிடப்பட்டது. யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் யாழ். நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது 02 இலட்ச ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அத்துடன் இந்த வழக்கு எதிர்வரும் 06 ஆம் மாதம் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.


யாழ்ப்பாணம் மாநகர சபையில் வரி வசூலிப்பாளர்களுக்கு சீருடை வழங்கியமையை அடுத்து சர்ச்சை எழுந்தது. தமிழீழ பொலிஸ் துறையின் சீருடையை ஒத்த சீருடையை வழங்கியதாக பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர், மாநகர சபை உறுப்பினர் வரதராஜன்



04

# இளவரசர் பிலிப் மறைவுக்கு ஜனாதிபதி அனுதாபம்

## மகாராணியாருக்கு கடிதம்



பிரிட்டிஷ் மகாராணியாரின் கணவர் இளவரசர் பிலிப். உடல் நலக்குறைவால் காலமாகியுள்ளமை தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கை சார்பாகவும் இலங்கை மக்கள் சார்பாகவும் தனது அனுதாபங்களை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மகாராணியாருக்கு ஜனாதிபதி

04

# பிலவ வருஷம்



## வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி



**புதுவருடம் பிறக்கும் நேரம்:**
பங்குனி (31) – 14.04.2021 புதன்கிழமை
அதிகாலை 1.39

**விஷு புண்ணியகாலம்:**
13.04.2021, 9.30 பி. ப. முதல் 14.04.2021 5.39 காலை வரை

**ஆடை நிறம்** : நீலம், சிவப்பு நிற பட்டாடை/ நீலம், சிவப்பு கரை கொண்ட பட்டாடை
**ஆபரணம்** : நீலம், பவளம் இழைத்த ஆபரணங்கள்

## திருக்கணிதப் பஞ்சாங்கத்தின்படி

**புதுவருடம் பிறக்கும் நேரம்:**
பங்குனி (31) – 14.04.2021 புதன்கிழமை
அதிகாலை 2.31

**விஷு புண்ணியகாலம்:**
13.04.2021, இரவு 10.33 முதல் 14.04.2021 5.39 காலை வரை

**ஆடை நிறம்** : செந்நிறப் பட்டாடை, சிவப்பு கரை கொண்ட வெள்ளை ஆடை
**ஆபரணம்** : பவளம் கொண்ட ஆபரணங்கள்



கலாநிதி சிவஸ்ரீ
**இராமச்சந்திரகுருக்கள் பாபு சர்மா**
சர்வதேச இந்து மத பீட செயலாளர்

ஜனாதிபதியின் 'கிராமத்துடன் கலந்துரையாடல்'

# மக்களின் தேவை; அரசின் எதிர்பார்ப்பு நடைமுறைப்படுத்த ஜனாதிபதி செயலணி

## அமைச்சர் நாமல் தலைமையில் ஜனாதிபதி உருவாக்கம்



'கிராமத்துடன் கலந்துரையாடல்' நிகழ்ச்சியின் மூலம் அரசாங்கம் எதிர்பார்க்கும் நோக்கங்கள், மக்களின் தேவைகளை சிறப்பாகவும் பயனுடையதாகவும் நடைமுறைப்படுத்துவதற்கும் மீள் பரீட்சிப்பதற்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி செயலணி ஒன்றை நியமித்துள்ளார். 'கிராமத்துடன் கலந்துரையாடல் கிராமிய அபிவிருத்தி ஜனாதிபதி செயலணி' என்று அதற்கு பெயரிடப்பட்டுள்ளது.

04

# மணிவண்ணன் விடுவிப்புக்கு ஜனாதிபதியே பிரதான காரணம்

## எனது கோரிக்கையை ஏற்று விடுவித்தார்



யாழ்.மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணனுக்கு முதல் மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


மணிவண்ணன் முதல்வராகுவதற்கு ஈ.பி.டி.பியும் ஆதரவு தெரிவித்தது. யாழ். மாநகரசபையின் செயற்பாட்டை சிக்கலில்லாமல் நடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு

04

ஆயிரம் ரூபா சம்பளம் பூரண வெற்றி

# தோட்ட நிறுவனங்களால் அதிகரித்த சம்பளம் வழங்கல்

## அரசுக்கு நன்றி தெரிவித்தார் ஜீவன்



சம்பள நிர்ணய சபை அங்கீகரித்த தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை தோட்ட நிறுவனங்கள் நேற்று வழங்கியுள்ளன.

இதற்கமைவாக நாளொன்றுக்கான அடிப்படை சம்பளம் 900 ரூபாவும், வரவு செலவு கொடுப்பனவாக 100 ரூபாவும்

04

12 ஆம் திகதி அரசாங்க விடுமுறை எனினும்

# RMV சேவைகள் வழமை போன்று நடைபெறும்

விசேட அரச விடுமுறை தினமாக எதிர்வரும் 12 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ள போதும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நாரஹேன்பிட்டி மற்றும் வேரஹர ஆகிய அலுவலகங்களின் சேவைகள் வழமை போன்று நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

04

# நவ்பரை கைது செய்தது நல்லாட்சி அரசாங்கமே

## அப்போது உறக்கத்தில் இருந்தாரா ஹக்கீம்



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரி யார் ? என்றும் இதன் பின்னால் இஸ்ரேல் உளவுப்படை இருந்ததா? என்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இப்போது கேட்பதன் மூலம் இவரும் அமைச்சராக இருந்த அரசாங்கத்திடம் இதனை கேட்காமல் தூங்கிக்கொண்டிருந்தாரா? என உலமா கட்சித் தலைவர் மௌலவி

04

புதிய அரசியலமைப்பு மாற்றத்தில் உள்ளடக்கி

# மதமாற்றம், பசுவதையை உடன் நிறுத்த ஜனாதிபதியிடம் சிவசேனா அமைப்பு கோரல்

## 18 ஆலயங்களில் நேற்று அடையாள உண்ணாவிரதம்

வாச்சிக்குடா விஷேட நிருபர்

மதமாற்றச் தடைச் சட்டத்தை இயற்றி புதிய அரசியலமைப்பில் உட்படுத்துமாறும் பசுவதையை உடன் நிறுத்துமாறும் சைவ சமயத்துக்கு முன்னுரிமை வழங்குமாறும் ஜனாதிபதியிடம் கோரி சிவசேனா அமைப்பினரால் 18 ஆலயங்களில் அடையாள உண்ணாவிரதம் நேற்று (10) அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் ஒரு கட்டமாக அக்கரைப்பற்று கோளாவில்

04



விக்கல் வீராச்சாமி



மணிவண்ணன் வெளியால வந்ததுக்கு பலரும் உரிமை கோருகினம், அப்ப பிடிச்சுக் கொடுத்தது யார் அண்ணே...?

அதிகமா வருத்தப்பட்டு நீண்ட அறிக்கை விட்டு கவலை தெரிவிச்ச எல்லாரையும் நோட் பண்ணுங்க, அவங்களாதான் இருக்கும்...!!!

# தடைக்கு எதிராக நீதிமன்றம் செல்லும் முஸ்லிம் அமைப்புகள்

## சட்ட ஆலோசனை பெறுவதாக தகவல்

11 முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகளை தடை செய்ய சட்ட மாஅதிபர், பொலிஸ் மாஅதிபருக்கு அனுமதி வழங்கியமைக்கு எதிராக அந்த அமைப்புகளில் சில வழக்கு தொடர, சட்ட ஆலோசனைகளை பெற்று வருவதாக தெரியவருகிறது.

தடை செய்யப்படும் அமைப்புகள் பட்டியலிலிருக்கும் இலங்கை தவ்ஹித் ஜமாத் அமைப்பு நேற்று தமது சட்டத்தரணிகளை சந்தித்து ஆலோசனை பெற்றதாக அந்த அமைப்பின் உப செயலாளர் ரி.அஹமட் தெரிவித்துள்ளார். முஸ்லிம் அமைப்புகளை தடை செய்யும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு 14 நாட்களுக்கு முன்னர் தமது அமைப்பு, இந்த தடைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கை தொடுக்குமெனவும் அஹமட் கூறியுள்ளார்.

அடிப்படைவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய

04

# அழகிப் போட்டியில் கிரீடப் பிடிச்சண்டை

அழகு ராணிகளாவது சுலபமான காரியமல்ல. அதற்காக தமது வாழ்க்கையையே அர்ப்பணிக்க வேண்டும். முக்கியமாக பெரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். விருப்பமான உணவுகளை உண்ண முடியாது. கண்டபடி வெளியே வெயிலில் திரிய முடியாது.

சமைக்க முடியாது. நகங்கள் அசிங்கமாகும். விரல்கள் நிறமாற்றமடையும். திருமணத்திற்கு முன்னர் இவற்றை எப்படியாயினும் பராமரித்துக் கொள்ள முடியும். எனினும் தெற்காசியாவைச் சேர்ந்த நாடான இலங்கையில் குடும்ப கட்டமைப்பில் பெண்கள் மீது ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் ஏராளமாகும். இது ஒரு குடும்பத்திற்கான உலக அங்கீகாரம் பெற்ற அளவுகோலாகும். அப்படியாயின் குடும்பத்தினுள் கணவன் மனைவியைப் போன்று பிள்ளைகளும் இருக்க வேண்டும். பிள்ளைகள் இல்லாமல் அது குடும்பமாக இருக்க முடியாது. விரிவான குடும்பத்தில் வயதான பெற்றோர்கள் இருக்க முடியும். எவ்வாறானதொரு குடும்பத்திலும் மனைவி மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள் ஏராளமானவை. அந்த பொறுப்புக்களையும் தாங்கிக் கொண்டு, வேலையும் செய்து கொண்டு, தமது வெளித் தோற்றத்தை முடியுமானளவுக்கு பராமரித்துக் கொண்டு ஆளுமையினை தக்க வைத்துக் கொள்ளும் பெண்கள் எமது நாட்டில் அனேகமானோர் உள்ளனர். இதனாலோ என்னவோ திருமணமான அழகிகள் கிரீடத்திற்காக பகிரங்க மேடையில் வைத்து சில தினங்களுக்கு முன்னர் நடாத்திய நாடகம் தற்போது அனேகமானோரின் பேசு பொருளாக ஆகிவிட்டிருக்கின்றது.

திருமதி அழகுராணியைத் தெரிவு செய்யும் போட்டியின் போதே இச்சம்பவம் இடம்பெற்றது. முதலாமிடத்தைப்பெற்ற வெற்றியாளர் மேடையில் பார்வையாளர்களை நோக்கிக் கையசைத்துக்கொண்டிருந்த போது மேடைக்கு வந்த இரு பெண்கள் அவளது தலையில் சூடப்பட்ட கிரீடத்தைக் கழற்றி இரண்டாம் இடத்தைப் பெற்ற போட்டியாளருக்கு அணிவித்தனர். வெற்றி பெற்ற அழகுராணி உடனடியாக மேடையிலிருந்து இறங்கிச் சென்றார். கிரீடத்தை மாத்திரம் பெற்றுக் கொண்ட இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட போட்டியாளர் மகிழ்ச்சியில் சிரித்துக் கொண்டிருந்தார்.

திருமதி அழகிகள் இவ்வாறு மேடையில் சண்டையிட்டுக் கொண்டாலும் உலகில் பெரும் பிரபலமாகியிருப்பது திருமணமாகாத பெண்களுக்கான அழகிப் போட்டியாகும். உலக அளவில் அவ்வாறிருந்த போதிலும் எமது நாட்டில் உலக அளவில் வெற்றி பெற்று புகழீட்டியவர்கள் திருமதி அழகிகள்தான். திருமதி அழகிகள் தான் இருவர் வெற்றிபெற்றிருக்கின்றார்கள். பெண்கள் சீக்கிரமாகவே திருமணம் செய்து கொண்டாலும் அவர்களது ஆசைக்கும், விருப்பத்திற்கும், திறமைக்கும் இடம் வழங்கி உலக அழகியாவது வரைக்கும் கொண்டு செல்வதற்கு எமது நாட்டு ஆண்கள் முற்போக்கானவர்கள்தான். இலங்கைப் பெண்களான நாம் இது தொடர்பில் பெருமை கொள்ள வேண்டியிருந்தாலும் இந்த அழகிப் போட்டிகளின் உள் விடயங்களை அறிந்திருப்பதால் அவ்வாறு பெருமை கொள்ள முடியாதுள்ளது.

எவ்வாறாயினும் மேலே குறிப்பிட்டதைப் போன்று திருமணமான பெண்கள் அழகிகளாக ஆவது இலகுவான காரியமல்ல. ஒரு தாயாக, மனைவியாக தமது வீட்டுப் பொறுப்புக்களை நிறைவேற்றும் பெண்கள் அழகு ராணிகளாக ஆவது முற்போக்கானதாகும். எனவே இங்கு மதிப்பீட்டிற்கு உள்ளாவது அவளது அழகு மாத்திரமல்ல என்பதனாலாகும். அவளது அர்ப்பணிப்பு, திறமைகள், பொறுமை, தாங்கிக் கொள்ளல், அன்பு, பாசம், இரக்கம் போன்றன மாத்திரமின்றி தாய்மையும் இங்கு மதிப்பீட்டுக்கு உள்ளாவதன் காரணத்தினாலாகும். மனைவி மற்றும் தாயாக தமது குடும்பத்தினுள் பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றும் பெண்கள் உண்மையில் தாய்க்குரிய பண்புகளைக் கொண்டவர்களாகும். அந்த தாய்க்குரிய பண்புகள் பிள்ளைகளுக்கு மாத்திரமின்றி, கணவரையும் கவனிப்பதாகும். இலங்கை குடும்பங்களில் தலைமை தாங்குபவள் தாயாகும். அனைத்தும் நடப்பது தாயைச் சுற்றியேயாகும். இல்லையெனில் சமையல் அறையைச் சுற்றியாகும். அவளது பொறுப்புக்கள் ஏராளமானவை. அவள் மேலதிக தொழில் செய்பவளாக இருந்தால் நிலைமை இன்னும் மோசமானதாகும்.

அவ்வாறான திருமணமான பெண்கள் அழகு ராணிகளாக கிரீடத்தைச் சூடிக் கொள்வார்களாயின் அது அவர்களுக்கு கிடைக்க வேண்டிய கிரீடமாகும். உண்மையிலேயே திருமணமான அழகு ராணி கிரீடம் அந்





தளவுக்கு முக்கியமாவது என்பதனாலாகும்.

திருமதி உலக அழகி கிரீடத்தை இலங்கைக்கு முதலில் கொண்டு வந்த ரோஸி சேனாநாயக்கா அந்த கிரீடத்திற்கு உண்மையில் உரித்துடையவர். அவர் நாட்டில் பெரும் புகழைப் பெற்றதோடு, எல்லையற்ற பிரபலமும் கிடைத்தது. பெனடோலில் இருந்து வீட்டுக்கு அடிக்கும் பெயிண்ட் வரைக்கும் விளம்பரங்களில் ரோஸி இல்லாமல் இல்லை என்ற நிலை இருந்தது. ரோஸியின் வருகையுடன் திருமணமாகாத அழகு ராணிகளுக்கான எதிர்பார்ப்புக்கள் தோன்ற ஆரம்பித்த போதும், அதற்கு பல ஆண்டுகளுக்குப் பிறகு, கரோலின் ஜூரி அழகு ராணிக்கான மகுடம் சூட்டிய வரை அந்த கனவு நனவாகவில்லை. கரோலின் கொண்டு வந்ததும் திருமணமான அழகு ராணி கிரீடமாகும். உலக அழகு ராணி கிரீடத்தைக் இலங்கைக்குக் கொண்டு வந்தாலும் கரோலின் ரோஸியைப் போன்று பிரபலம் ஆகியிருக்கவில்லை.

இதற்கு பல காரணங்கள் இருக்கலாம். சில நேரம் தற்போது இலங்கையின் அழகு ராணிகளை விட வெளிநாட்டு அழகு ராணிகள் எமது நாட்டில் பிரபல்யம் அடைந்திருக்கின்றமை ஒரு காரணமாக இருக்கலாம்.

இப்போது இலங்கையில் அழகிப் போட்டிகள் பிரபலம் அடைவதில்லை. இதற்கு உண்மையான அழகிய யுவதிகள் உண்மையான திறமைமிக்க யுவதிகள் கலந்து கொள்கின்றார்களா என்ற கேள்வியும் எழுகின்றது. இப்போட்டிகள் இப்போது



உண்மையிலேயே ஒரு மாபியாவாக ஆகியிருக்கின்றது. இத்துறைக்கு வரும் யுவதிகள் ஏதேனும் ஒரு துறையின் முக்கியஸ்தர் ஒருவரின் அடிமையாக இருக்க நேரிடுகின்றது. சுருக்கமாகச் சொல்லப் போனால் தற்போதிருப்பது இருப்பது அழகு ராணி புரடக்ஷன் ஹவுஸ் களாகும். அவ்வாறான புரடக்ஷன் ஹவுஸ் உரிமையாளர்கள் அழகு ராணிகளை முடித்துக் கொண்டிருக்கின்றார்கள். சந்திமால் ஜயசிங்கவும் அவ்வாறான தயாரிப்பு இல்லத்தின் ஒரு உரிமையாளராகும். அல்லது நாட்டின் பிரபலமான அழகு ராணிகளின் தயாரிப்பு இல்லத்தின் உரிமையாளராகும். அவர் செய்த எந்த வேலையும் தவறுவதில்லை. இங்கு நினைவுபடுத்த வேண்டிய பல விடயங்கள் உள்ளன. அதில் இலங்கையின் இரண்டாவது உலக திருமதி அழகு ராணி கரோலின் ஜூரியும் சந்திமாலின் ஒரு தயாரிப்பு என்பதுதான். அதேபோன்று மேடையின் மீது சண்டையிட்டுக் கொண்ட இந்த திருமதி அழகு ராணியும் சந்திமாலின் ஒரு தயாரிப்பாகும். இப்போது நாம் அந்த சம்பவத்தைப் பார்ப்போம்.

இம்முறை இலங்கையின் திருமணமான அழகு ராணிக்கான கிரீடம் கிடைத்தது புஷ்பிக்கா த சில்வாவுக்காகும். மேடையில் வைத்து



தலையிலிருந்த கிரீடம் கழற்றப்பட்டு அவமானப் படுத்தப்பட்டதும் அவரேயாகும். உண்மையில் சொல்லப் போனால் தற்போது புஷ்பிக்காவுக்கு கிடைத்திருப்பது, கிரீடம் கிடைப்பதை விடவும் மிகப்பிரமாண்டமான பிரபலமாகும். சாதாரண அழகு ராணிப் போட்டியான இந்த நிகழ்வு அவளுக்கு கிரீடம் சூட்டப்பட்டதோடு முடிவடைந்திருந்தால் இந்தளவுக்கு அவளுக்கு பிரமாண்டமான பிரபல்யம் கிடைத்திருக்காது. அது மாத்திரமல்ல, தற்போது சமூக ஊடகங்கள் ஊடாக புஷ்பிக்காவுக்கு கிடைத்திருக்கும் அனுதாபம் அதிகமானதாகும். அவளைச் சுற்றி மக்கள் கருத்துக்களும் எழுந்திருப்பது எதிர்காலத்தில் அரசியல் மேடையாக இருந்தாலும் சாதிக்க முடியுமானளவுக்காகும். அருகில் தேர்தல் ஒன்று நடக்குமாயின் புஷ்பிக்காவை நேராகவே பாராளுமன்றத்திற்கு அனுப்புமளவுக்கு எமது நாட்டு மக்கள் உணர்ச்சி வசப்படுபவர்கள் என்பதை எழுதாமல் இருக்க முடியாது.

மேடையில் வைத்து அவளது தலையில் சூட்டப்பட்டிருந்த கிரீடத்தைக் கழற்றி அப்புறப்படுத்தியது கரோலின் ஜூரியாகும். அவர் அவ்வாறு செய்வதற்கு முன்னர் அதற்கான காரணங்களைக் கூறினார். விழாவிற்கு வருகை தந்த பிரதம அதிதிகள் வெளியேறிச் சென்றதன் பின்னரே அதனை அவர் கூறியிருந்தார். நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு ஆயத்தமாக இருந்தது அப்படித்தான். கரோலின் ஜூரியின் காரணங்களுக்கு அமைய புஷ்பிக்கா விவாகரத்துப் பெற்றவர். அவர் திருமதி அழகுராணிப் போட்டிக்கு லாயக்கற்றவர் என்பதே. எனவே அவருக்கு திருமணமானவர்களுக்கான அழகு ராணி கிரீடம் உரித்துடையது அல்ல. புஷ்பிக்கா கூறியது, தான் பிள்ளையுடன் கணவரிடமிருந்து பிரிந்து வாழ்ந்த போதிலும் விவாகரத்துப் பெற்றிருக்கவில்லை என்றாகும். இவ்வாறான போட்டிகளில் கலந்து கொள்ளும் பெண்களின் அனைத்து விடயங்களையும் அறிந்துள்ள ஏற்பாட்டுக் குழுவினர், நடுவர்கள் புஷ்பிக்காவின் விவாகரத்துப் பற்றி அறியாதிருந்தார்கள் என நினைக்கத் தோன்றவில்லை. அவ்வாறு அறிந்து கொண்டும் அவர்கள் புஷ்பிக்காவை நிராகரிக்காதிருந்தால் கரோலினுக்கு அது பற்றி வேதனை ஏற்படுவதற்கு இடமிருந்திருக்காது. அப்படியாயின் கரோலின் புஷ்பிக்காவின் கிரீடத்தைக் கழற்றும் போது ஏற்பாட்டுக் குழுவின் முன்வந்து அதற்கு எதிர்ப்பைத் தெரிவித்திருக்க வேண்டும். அவ்வாறு செய்திருக்க வேண்டியது கரோலினின் செயற்பாடு நியாயம் அல்லாத காரணத்தினாலாகும். அது கண்டிப்பாக சட்டதிட்டங்களில் உள்ளடங்காதிருந்ததனலாகும். போட்டி சட்டதிட்டங்களுக்கு அமைய புஷ்பிக்கா நடுவர் குழுவினை ஏமாற்றவில்லை. எனினும் அவ்வாறு இடம் பெறவில்லை. கிரீடத்தைக் கழற்றி புஷ்பிக்கா மேடையிலிருந்து வெளியேறிச் சென்றதன் பின்னர் சந்திமால் மேடைக்கு பின்னால் வந்து பார்த்துக் கொண்டிருந்துவிட்டு சென்றதை காணக்கூடியதாக இருந்தது.

"கரோலின் ஜூரியைப் பற்றியும் கூற வேண்டியுள்ளது. அவர் உண்மையிலேயே எமது நாட்டிற்கு கிரீடத்தைக் வென்று தந்த ஒரு பெண்ணாகும். அவர் பல நாடுகளின் போட்டியாளர்களைத் தோற்கடித்து மிகப் பிரமாண்டமான வெற்றியைப் பெற்றுக் கொண்ட திறமையான பெண்ணாகும்.

உண்மையிலேயே அழகு ராணிகளைத் தெரிவு செய்யும் போது குறித்த பெண்களின் அழகை மாத்திரம் பார்ப்பதில்லை என்பது உலகமே அறிந்த உண்மையாகும். இங்கு போட்டியாளர்களின் அழகு, உடம்பு அமைப்பு, இயக்கம், அவர்களின் அறிவு, புத்திசாலித்தனம், சந்தர்ப்பவாத ஞானம் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற பதில்களை வழங்கும் செயற்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்படும். உதாரணமாக, 1994ம் ஆண்டில் உலக அழகு ராணியாக கிரீடம் சூட்டிக் கொண்ட ஐஸ்வர்யா ராயைக் குறிப்பிட முடியும். அவரது இறுதிச் சுற்றில் அவரோடு போட்டியிட்ட தெற்காபிரிக்காவின் அழகி மற்றும் வெனிசுவேலா அழகி ஆகியோரைத் தோற்கடித்து வெற்றி பெறும் வாய்ப்பு கிடைத்தது, இறுதிச் சுற்றில் அவளிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் வழங்கிய பதில்களின் காரணத்தினாலாகும். அந்த பதில்களை உலகிற்கே காட்டியது அவரது புத்திசாலித்தனம். இது ஒரு எளிய உதாரணம் மாத்திரமேயாகும். இந்த உதாரணத்தை நாம் கூறுவது, கரோலின் பெற்றுக் கொண்டதும் இலகுவான வெற்றியல்ல என்பதை உறுதிப்படுத்துவதற்காகும்.

கவலையான விடயம் என்னவென்றால், அப்படியான கரோலின் மேடையின் மீது தான் உலகிற்கே நிரூபித்துக் காட்டிய அறிவு, புத்திசாலித்தனம், பொறுமை, தாய்மை போன்றவற்றை நொடிப் பொழுதில் சிதைத்துக் கொண்டார் என்பதுதான் . புஷ்பிக்கா விவாகரத்துப் பெற்றவராயின் அதற்கு எதிர்ப்பைத் தெரிப்பதைச் செய்ய வேண்டியது நிகழ்வுக்கு முன்னராகும். அதாவது, புஷ்பிக்கா தோற்றுப் போயிருந்தால் அவள் விவாகரத்தானதோ, விரைவில் விவாகரத்து நிகழப்போகின்றது என்பதோ கரோலினுக்கு எந்தப் பிரிச்சினையுமில்லை. கடைசி தருணம் வரைக்கும் தனது எதிர்ப்பைத் தெரிவிப்பதை தாமதப்படுத்திய கரோலின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய செயற்பட்டு கடைசி தருணத்தில் தனது நாடகத்தை அரங்கேற்றி தான் அவ்வளவு கஷ்டப்பட்டு பெற்றுக் கொண்ட கிரீடத்தை காலால் மிதித்துள்ளார். மேடையின் மீது தனது நடத்தை, ஆவேசத்தைக் கட்டுப்படுத்த முடியாத ஒரு பெண் எவ்வாறு அழகு ராணியாக ஆக முடியும் என்ற கேள்வி எமது மனங்களில் எழுகின்றது.







எம். எஸ். முஸப்பிர்
(புத்தளம் விசேட நிருபர்)

# யார் இந்த மணிவண்ணன்?

**யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து 2010ஆம் ஆண்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணியை உருவாக்கினார்கள். அவ்வாறு உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளராக சட்டத்தரணி மணிவண்ணன் பதவி வகித்தார்.**



தமிழ் தேசிய மக்கள் முன்னணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் 2010, 2015ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு எந்தவொரு ஆசனத்தையும் பெறாது தோல்வி அடைந்தது.

அதேவேளை 2013ஆம் ஆண்டு மாகாண சபை தேர்தல், ஜனாதிபதி தேர்தல்களை புறக்கணித்தது. இந்நிலையில் 2018ஆம் ஆண்டு பெப்ரவரி நடைபெற்ற உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி குறிப்பிடத்தக்களவு வெற்றியினை பதிவு செய்தது. அத்தேர்தலில் யாழ். மாவட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி 85 ஆயிரத்து 198 வாக்குகளை பெற்றிருந்தது.

குறித்த தேர்தல் மூலம் யாழ். மாநகர சபையில் கிடைக்கப்பெற்ற ஆசனங்கள் ஊடாக விகிதாசார அடிப்படையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் கட்சியினால் தேர்ந்தெடுக்கப்பட்டு மாநகர சபை உறுப்பினரானார்.

மாநகர சபை உறுப்பினராக கட்சியினால் நியமிக்கப்பட்டு ஓரிரு மாதத்தில், யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வதியாத ஒருவரை உறுப்பினராக தேர்ந்தெடுத்தமை உள்ளூராட்சி தேர்தல் விதியை மீறும் செயல். எனவே அகில இலங்கை தமிழ் காங்கிரஸால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் வி.மணிவண்ணனை அந்தப் பதவியிலிருந்து நீக்கி கட்டளையிடவேண்டும் எனக் கோரி மாநகர சபை எல்லையில் வதியும் வாக்காளர் ஒருவரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்தார்.

குறித்த மனு மீதான விசாரணைகளை அடுத்து மணிவண்ணன் சபை அமர்வுகளில் பங்கெடுக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது. இடைக்காலத் தடை உத்தரவுக்கு ஆட்சேபணை தெரிவித்து மணிவண்ணன், உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்.

## கட்சிக்குள் உட்பூசல்கள் ஆரம்பம்.

அது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நீதிமன்றங்களில் நடைபெற்று வந்தன. இந்நிலையில் , 2020ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டது.

அத்தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பில் மணிவண்ணன் போட்டியிட்டார். தேர்தல் பிரசார கால பகுதியில் மணிவண்ணனுக்கு கட்சிக்கும் இடையில் பூசல்கள் ஏற்பட்டன.

தேர்தல் காலத்தில் நீறு பூத்த நெருப்பாக கட்சி உட்பூசல் இருந்தது. தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு 55ஆயிரத்து 303 வாக்குகள் கிடைக்கப்பெற்றன (2010ஆம் ஆண்டு தேர்தலில் 6ஆயிரத்து 362 வாக்குகள். 2015ஆம் ஆண்டு 15ஆயிரத்து 22 வாக்குகள்) அதன் மூலம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (31,658 வாக்குகள்) யாழ். தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவானார். அதேவேளை தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு கிடைக்கப்பெற்ற தேசிய பட்டியல் ஆசனத்தின் ஊடாக அக்கட்சியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் (24,794 வாக்குகள்) கட்சியினால் தெரிவு செய்யப்பட்டார். அத்தேர்தலில் மணிவண்ணன் 22,741 வாக்குகளை பெற்றுக்கொண்டார்.

தேர்தல் காலத்தில் கட்சிக்கும் மணிவண்ணனுக்கு இடையில் காணப்பட்ட உட்பூசல்கள் தேர்தல் முடிவடைந்த பின்னர் பகிரங்கமானது. மணிவண்ணன் தரப்பு கஜேந்திரர் தரப்பு (நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரன்) பிரிந்து நின்றனர். சமூக வலைத்தளங்களிலும் ஒரு தரப்பு மீது ஒரு தரப்பு குற்றம் சாட்டி விமர்சனங்களை முன்வைத்து கருத்து மோதல்களில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் மணிவண்ணனை தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து நீக்குவதாக அறிவித்தனர். அத்துடன் மணிவண்ணனுடன் சேர்ந்தவர்களையும் நீக்குவதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் முடிவெடுத்தனர்.

மணிவண்ணனை நீக்குவதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி அறிவித்ததை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் மணிவண்ணன் மாநகர சபை உறுப்பினராக பதவி வகிக்க முடியாது என தொடர்ந்த மனுவை கடந்த ஒக்டோபர் 13ஆம் திகதி மீளபெற்றுக்கொண்டார். அதனால் மணிவண்ணன் மீண்டும் மாநகர சபை உறுப்பினராக சபை அமர்வுகளில் கலந்து கொண்டார்.

அந்நிலையில் அப்போது மாநகர சபை முதல்வராக இருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் தெரிவான இமானுவேல் ஆர்னோல்ட் 2021ஆம் ஆண்டுக்கான பாதீட்டை சபையில் சமர்ப்பித்த போது அது தோற்கடிக்கப்பட்டது. அதனால் ஆர்னோல்ட்டின் பதவி பறிபோனது.

அதனை அடுத்து யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் பதவிக்கு ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் வகையில் வடமாகாண உள்ளூராட்சி சபை ஆணையாளர் தலைமையில் கடந்த டிசம்பர் மாதம் 30ஆம் திகதி முதல்வர் தெரிவு இடம்பெற்றது. அதில் மீண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் ஆர்னோல்ட் முதல்வர் பதவிக்கு போட்டியிட்டார். அவரை எதிர்த்து மணிவண்ணன் போட்டியிட்டார். அதில் ஒரு வாக்கு அதிமாக பெற்று மணிவண்ணன் முதல்வராக தெரிவானார்.

மணிவண்ணனுக்கு ஆதரவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈழமக்கள் ஜனநாயக கட்சியினரும் (ஈ.பி.டி.பி.) வாக்களித்திருந்தனர். அதனை அடுத்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மணிவண்ணனை தோழர் எனவும் , ஈபி.டி.பி எனவும் கடுமையான விமர்சனங்களை முன் வைத்தனர். சிலர் அநாகரிகமான விமர்சனங்களையும் முன் வைத்தனர்.

கடந்த வியாழக்கிழமை ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் கிங்ஸ் நெல்சன் நாடாளுமன்றில் யாழ்.மாநகர சபையினால் உருவாக்கப்பட்ட குழு குறித்து கேள்வி எழுப்பிய போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஈ.பி.டி.பி யின் ஆதரவு சபை தான் என்ற தொனி பட கூறி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதற்கு இடையில் மணிவண்ணன் உள்ளிட்டவர்களை தாம் நீக்கி விட்டதாகவும் , அவர்களின் உறுப்புரிமையை நீக்குமாறும் தேர்தல் ஆணையகத்திடம் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கோரியது. அதற்கு எதிராக மணிவண்ணன் தரப்பினால் யாழ்.மாவட்ட நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதன் அடிப்படையில் மணிவண்ணன் உள்ளிட்டோரின் உறுப்புரிமையை நீக்க மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது.

அதனை எதிர்த்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மாகாண குடியியல் மேல் நீதிமன்றில் மனு தாக்கல் செய்தனர். குறித்த மனு மீதான விசாரணையை அடுத்து மேன் முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதனால் அவர்கள் தொடர்ந்தும் உறுப்பினர்களாக நீடிக்கின்றனர்.

இந்த நிலையில் மணிவண்ணனின் ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டு வந்த நிலையில், கடந்த புதன்கிழமை யாழ்.மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனின் எண்ணக்கருவில் மாநகர சபை புதிய குழு ஒன்றினை உருவாக்கியது.



> “கொழும்பு மாநகர சபை பின்பற்றுகின்ற, பாவிக்கின்ற சீருடையையே நாங்களும் இந்த ஊழியர்களுக்கு வழங்குவதென யோசித்து அதே மாதிரியான சீருடையை வழங்கியி–ருந்தோம். இதில் வேறு எந்த உள்நோக்கமோ, திட்டமோ எங்களுக்கு இருக்கவில்லை.”

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் சுகாதார நடைமுறைகளை கண்காணித்தல் , ஒழுங்கு விதிகளை கண்காணித்தல், கழிவகற்றல் பொறிமுறைகளை கண்காணித்தல் என்பவற்றுடன் , அவற்றை மீறுபவர்களுக்கு அவ்விடத்தில் தண்டப்பணம் அறவிடும் பணிகளை மேற்கொள்ளும் நோக்குடன் குறித்த குழு உருவாக்கப்பட்டது.

மாநகர சபையின் சுகாதார பணிமனையில் பணியாற்றும் உத்தியோகஸ்தர்கள் 5 பேர் அக்குழுவில் உள்வாங்கப்பட்டு அவர்களுக்கான புதிய சீருடைகளும் அறிமுகம் செய்யப்பட்டது.

குறித்த குழு தமது பணிகளை கடந்த புதன்கிழமை 7ஆம் திகதி ஆரம்பித்திருந்த நிலையில் அக்குழுவினரின் படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வைரலாகியது.

அக்குழுவின் சீருடை தமிழீழ விடுதலை புலிகளின் காவல்துறையின் சீருடையை ஒத்தது என சமூக வலைத்தளங்களில் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. சிலர் புலிகளின் மீள் உருவாக்கும் சிந்தனையில் சீருடைகள் அமைந்துள்ளன எனவும் , மணிவண்ணன் எதிர்ப்பு அணியினர் புலிகளின் காவல் துறையை கொச்சைப்படுத்தும் நோக்குடன் மணிவண்ணன் செயற்படுகின்றார் எனவும் கருத்துக்களை முன் வைத்தனர்.

அது மாத்திரமன்றி புலிகளின் காவல் துறையின் படங்களையும் , மாநகர சபையின் புதிய குழுவின் படங்களையும் ஒன்றாக இணைந்து சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து கருத்துக்களை முன் வைத்தனர்.

பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

கடந்த புதன்கிழமை இரவு யாழ். மாநகர ஆணையாளர் ஜெயசீலனை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து நீண்ட நேரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சுமார் மூன்று மணி நேரம் வாக்கு மூலத்தை பதிவு செய்தனர்.

அதன் பின்னர் குறித்த குழுவை சேர்ந்தவர்களிடமும் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அவர்களின் சீருடைகளை ஒப்படைக்குமாறு கோரி சீருடைகளை பெற்றுக்கொண்டனர்.

அந்நிலையில் கடந்த வியாழக்கிழமை 08ஆம் திகதி தென்னிலங்கை சமூக , இணைய ஊடகங்கள் உட்பட பல ஊடகங்களிலும் யாழ். மாநகர சபை குழுவையும் , தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல் துறையினரையும் ஒப்பிட்டும் , பொலிஸாரின் கடமைகளில் தலையீடு செய்யவே அக்குழு உருவாக்கப்பட்டது எனவும் செய்திகள் வெளியாகின. அதனால் மாநகர சபையின் குழு தொடர்பில் நாடாளுமன்றத்திலும் சர்ச்சைகள் ஏற்பட்டன. குழு தொடர்பில் தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்திலும் பேசப்பட்டன

அதேவேளை யாழ். மாநகர சபையின் குழு தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சைகளை அடுத்து அக்குழு தொடர்பில் யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஊடகங்களுக்கு விளக்கமளித்தார்.

அதன்போது, "கொழும்பு மாநகர சபையை முன்மாதிரியாக கொண்டே ஐந்து ஊழியர்களை கொண்ட குழுவை அமைத்து, மாநகர சபையின் தூய்மையையும், ஒழுங்கையும் பேண நடவடிக்கை எடுத்தோம். இந்த ஐந்து ஊழியர்களும் சபையில் ஊழியர்களாக செயற்பட்டவர்களே அவர்களையே இந்த விசேட பணிக்கு நாங்கள் நியமித்திருந்தோம்.

அவர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும்போது மக்கள் அவர்களை இலகுவாக அடையாளம் காணவேண்டிய தேவை இருந்ததாலும், அவர்களுக்கு வேண்டத்தகாத பிரச்சினைகள் ஏற்படக்கூடாது என்பதற்காக சீருடை ஒன்றையும் அறிமுகப்படுத்தி வழங்கியிருந்தோம்.

கொழும்பு மாநகர சபை பின்பற்றுகின்ற, பாவிக்கின்ற சீருடையையே நாங்களும் இந்த ஊழியர்களுக்கு வழங்குவதென யோசித்து அதே மாதிரியான சீருடையை வழங்கியிருந்தோம். இதில் வேறு எந்த உள்நோக்கமோ, திட்டமோ எங்களுக்கு இருக்கவில்லை. என தெரிவித்தார்.

அந்நிலையில் வியாழக்கிழமை இரவு 08 மணியளவில் யாழ்ப்பாண முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் மற்றும் உறுப்பினர் வ. பார்த்தீபன் ஆகிய இருவரையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு அழைத்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சுமார் 06 மணி நேர விசாரணைகளின் பின்னர் வெள்ளிக்கிழமை அதிகாலை மாநகர சபை உறுப்பினர் வ. பார்த்திபனை விடுவித்த பொலிஸார் தமிழீழ விடுதலைப் புலிகளை மீள் உருவாக்க முயற்சித்த குற்றச்சாட்டில் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் முதல்வரை வெள்ளிக்கிழமை அதிகாலை 01.40 மணிக்கு கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட முதல்வரை உடனடியாகவே மேலதிக விசாரணைகளுக்கு என வவுனியாவாவில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவு அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

யாழ். மாநகரத்தின் தூய்மையை பேணும் நோக்குடன் அமைக்கப்பட்ட குழு ஒன்றின் சீருடை புலிகளின் காவல்துறையின் சீருடை போல் உள்ளது என சமூக வலைத்தளங்கள் மற்றும் சில இணைய ஊடகங்கள் உள்ளிட்டவற்றில் வெளியான கருத்துக்களின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்து முதல்வரை பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் புலிகளை மீள் உருவாக்க முனைந்தார் என குற்றம் சாட்டி கைது செய்திருப்பதனை தமிழ் அரசியல் வாதிகள் பலரும் கண்டித்து தமது கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

சுமார் 15 மணி நேரங்களுக்கு மேலாக தடுத்து வைத்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர், மணிவண்ணனை தண்டனை சட்டக்கோவை பிரிவு 120, 132 மற்றும் 143 ஆகிவற்றின் கீழ் (கைது செய்தது பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ்) யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் முற்படுத்தினர்.

அதன்போது நாடாளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் பெண் சட்டத்தரணிகள் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் மணிவண்ணன் சார்பில் முன்னிலையாகி பிணை விண்ணப்பம் செய்தனர்.

பயங்கரவாத தடுப்பு பிரிவினர் மற்றும் பொலிஸார் பிணைக்கு ஆட்சேபனை தெரிவித்தனர். இரு தரப்பு வாதங்களையும் அடுத்து நீதவான் பொலிஸாரிடம் "பணியாளர்களிடம் சீருடைகளை கைப்பற்றி உள்ளீர்கள்தானே, அதில் விடுதலைப்புலிகளின் சின்னங்கள் ஏதாவது பொறிக்கப்பட்டு இருந்தனவா? " என கேள்வி எழுப்பினார். அதற்கு பொலிஸார் இல்லை என பதில் அளித்தனர்.

அதனை அடுத்து நீதவான் மணிவண்ணனை 2 இலட்ச ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் செல்ல அனுமதித்து, வழக்கினை எதிர்வரும் ஜூன் மாதம் 26ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

மணிவண்ணன் பிணையில் விடுவிக்கப்பட்டதும் நீதிமன்றின் முன் கூடி இருந்த ஆதரவாளர்கள் மணிவண்ணனை கட்டித்தழுவி தமது மகிழ்ச்சியினை வெளிப்படுத்தினர்.

மணிவண்ணனின் அரசியல், கொள்கைகள் எவ்வாறு இருந்தாலும் மாநகரத்தை தூய்மையாக அழகாக மாற்ற யாழ். மாநகர முதல்வராக மணிவண்ணன் காத்திரமான பங்களிப்பை முன்னெடுக்க வேண்டும் என்பதே மாநகரத்திற்குள் வாழும் மக்களின் எதிர்பார்ப்பு.

மயூரப்பிரியன்...

# ஐம்பது வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட புரட்சி



மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொரகொட

போராட்டம், புரட்சி மற்றும் யுத்தம் நாட்டிற்கு பழக்கமில்லாத ஒன்றல்ல. ஏகாதிபத்தியவாதிகள் நாட்டை அடிமைபடுத்த முற்பட்ட வேளையில் அதற்கு எதிராக வீர சிங்களவர்கள் போர் புரிந்தார்கள். ஏகாதிபத்தியவாதிகள் வருவதற்கு முன்னரே ஆக்கிரமிப்புகள் இடம்பெற்றதாக சரித்திரத்தில் கூறப்படுகிறது. அந்நிய ர்கள் இந்நாட்டிற்கு வந்து மோதல்களில் ஈடுபட்டுள்ளார்கள். கலிங்கர்,நாகர், சோழ ஆக்கிரமிப்பு, ஒல்லாந்தர்,போர்த்துகீசியர் மற்றும் ஆங்கில ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிராக இலங்கையர்கள் போர்புரிந்துள்ளார்கள். 1971 புரட்சி சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கை சரித்திரத்தின் திருப்புமுனையாகும். ஐம்பது வருடங்களுக்கு பின்னர் மக்கள் விடுதலை முன்னணியின் முதலாவது புரட்சி தொடர்பாக நிலவும் கருத்து எதுவாயினும் நாடு பயணம் செய்ய வேண்டிய பாதை பற்றி சிந்திக்க வேண்டிய சந்தர்ப்பமாகும்.

1971 புரட்சியால் நாடு இழந்த தைரியமான பெறுமதி மிக்க உயிர்கள் பற்றி நினைவு கூற வேண்டும். அன்றைய அரசாங்கம் புரட்சியை அடக்கியதோடு குற்றவியல் நீதி ஆணைக்குழுவை அமைத்து அரசுக்கு எதிராக சூழ்ச்சி செய்த குற்றத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டது. தண்டணை வழங்கப்பட்டாலும் பின்னர் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜயவர்தனவின் அரசாங்கம் குற்றவாளிகளை குற்றங்களிலிருந்து விடுவித்தது. மீண்டும் அரசியலுக்கு வரும் உரிமையை பெற்றுக் கொடுத்தது. 1987ல் மக்கள் விடுதலை முன்னணி மீண்டும் ஆயுதத்தை இரண்டாவது முறையாக கையில் எடுத்தது. தெற்கில் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்த வேளையில் வடக்கிலும் ஆயுதப்போராட்டம் ஆரம்பித்தது. தெற்கில் அடக்கிய அரசாங்கம் இளைஞர்களின் விரக்திக்கு காரணத்தை ஆராய ஆணைக்குழுவொன்றையும் நியமித்ததுடன் இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்க வேண்டுமென ஆணைக்குழு பரிந்துரை செய்தது முக்கிய விடயமாகும். வடக்கில் போராட்டம் பயங்கரவாதம் வரை விரிவடைந்தது. அப்பாவி உயிர்களை ஆயிரக்கணக்கில் பலி கொண்ட மற்றும் பொருளாதாரத்தை பாதிப்படையச் செய்த வடக்கின் பயங்கரவாதத்தை முற்றிலும் ஒழிக்க முடிந்தாலும் அதனை ஏற்படுத்த காரணமாக இருந்த அடிப்படை காரணத்துக்கான தீர்வை வழங்க முடியவில்லை.

இளைஞர்களின் விரக்தி ஆணைக்குழுவின் பரிந்துரை என்பவற்றை மறந்து போயுள்ள நாம் அனைவரும் வடக்குக்கான தீர்வை தாமதித்து வருகிறோம். அவ்வாறான பின்னணியில் இன,மத மற்றும் வேறு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஆத்திரமூட்டும் சம்பவங்கள் உருவாகும் வாய்ப்பு அதிகமாக உள்ளதாக தெரிகிறது. ஈஸ்டர் தாக்குதல் அதில் ஒரு பக்கம். இவ்வாறான தாக்குதல்களால் உறுதி செய்யப்படும் விடயம் ஒன்றுள்ளது. நாம் அனைவரும் எதிர் காலத்தை பாதுகாப்பானதாக ஆக்கிக் கொண்டுள்ளோம். வன்முறையை மாற்றி நியாயத்தை நிலைநாட்டுமாறு உரத்து கூறும் சந்தர்ப்பங்களில் அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டது. ஒவ்வொரு பத்து பதினைந்து வருடங்களுக்கும் ஒரு முறை தரப்படுத்தல் மூலம் இருப்பை பாதுகாக்கும் தவறான கட்டமைப்பை முற்றாக முடிவுக்கு கொண்டு வர வேண்டும். இளைஞர்களின் கருத்துகளை, எண்ணங்களை புரிந்து கொண்டு சமூக முறைமையை மாற்ற வேண்டும். தொழில்நுட்ப யுகத்தில் நாடு நுழைந்துள்ளது. நடைபெறுவது ஒன்றும் ரகசியம் அல்ல. உள் விடயங்களை அறிந்து அதனை வெறுக்கும் சமூகத்தால் நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாது.

நாட்டில் மோசமான வகுப்புவாத பிரச்சினை உண்டு. நாடு இனம், மதம், குலம் கல்வி கற்கும் பாடசாலை என்ற ரீதியில் பிரிந்துள்ளது. ஏழை பணக்காரன் என்ற பேதம் உண்டு. இருப்பவருக்கும் இல்லாதவருக்கும் இடையேயான இடைவெளி வெளியே தெரிவதை விட மோசமானது. சமனான சந்தர்ப்பங்கள் குறைவு. அரசியல் பலம் சமூகத்தில் எல்லா அடுக்குகளிலும் பரவியுள்ளது. அரசியல் பலம் இல்லாமல் எதுவும் செய்ய முடியாது என எண்ணும் சமூகத்தில் நிம்மதி இருக்கமுடியாது. நல்லிணக்கம் ஒரு மக்கள் பிரிவினருக்கு மாத்திரமில்லை. எம் அனைவருக்குள்ளும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நிலையான முறையொன்று தேவையாகும். வழிமுறை நியாயமானது எனத் தெரியும் அளவுக்கு மக்களிடையே நலலிணக்கத்துக்கான சந்தர்ப்பம் கிடைக்கும்.

1971 இளைஞர் புரட்சியை ஞாபகப்படுத்தும் இவ்வேளையில் புரட்சி செய்யும் இளைஞர்கள் குறித்து மாத்திரமல்ல போராட்டத்துக்காக நாட்டை விட்டுச் செல்ல முடிவெடுத்துள்ளவர்கள் பற்றியும் கவனம் செலுத்த வேண்டும். அது இன்னுமொரு மீள்புரட்சியாகும். புரட்சியால் இழக்கப்படுபவரகள் மாத்திரமல்ல அமைதியாக நாட்டை விட்டு செல்வதும் அபாக்கியமே. அரசாங்கம், எதிர்க்கட்சி ஏனைய பிரிவினர் மாத்திரமல்ல நாம் அனைவரும் இந்த பின்னணிக்கு பொறுப்பு கூற வேண்டும். மதத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள் ஆழமாக சிந்தித்து உண்மையான விடயங்களை ஆராய்ந்து ஒப்புதலுக்கு வர வேண்டியது அவசியமாகும்.

தமிழில்: வீ.ஆர்.வயலட்

# கலஹா, தெல்தோட்டை குறூப் நவயுக நற்பணி மன்றத்தின் புத்தாண்டு கிரிக்கெட் போட்டி

**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**

கலஹா,தெல்தோட்டை குறூப் நவயுக நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது. மன்றத்தின் தலைவர் படிகாசன் நிமலன் தலைமையில் கலஹா ரன்தரு விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

நிபந்தனைகள்

அணிக்கு 8 பேர் இருப்பதுடன் போட்டியில் பங்குபற்றும் அணிகள் தெல்தோட்டை குறூப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாக இருத்தலும் அவசியம். விளையாட்டின் போது அதற்குரிய உடையணிதல் வேண்டும். விளையாட்டில் ஈடுபடும் வீரர்கள் மது உட்பட போதை தரக்கூடய எவற்றையாவது உபயோகித்திருந்தால் அந்த அணிகள் போட்டியிலிருந்து நீக்கப்படும்.

ஏதேனும் பிரச்சினைகள் குறித்து ஏற்பாட்டுக் குழுவினருடன் பேச வேண்டுமாயின் அணியின் தலைவருக்கு மட்டுமே அனுமதியுண்டு. மற்றும் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

போட்டியில் வெற்றி பெறும் முதல் மூன்று அணிகளுக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்பாட்டுக்குழுவை தொடர்புகொண்டு மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

# இராஜதந்திர உறவுவை பலப்படுத்த இலங்கையில் நியூசிலாந்து தூதரகம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

## வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தகவல்

இலங்கைக்கும் நியூசிலாந்துக்குமிடையிலான இராஜதந்திர உறவுகளை பலப்படுத்தும் வகையில் இந்த வருட நடுப்பகுதியில் நியூசிலாந்து உயர்ஸ்தானிகராலயம் கொழும்பில் திறக்கப்படவுள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. மேற்படி உயர்ஸ்தானிகராலயம் திறக்கப்பட்ட பின்னர் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உள்ளக செயற்பாட்டு நடவடிக்கைகள் மேலும் விரிவுபடுத்தப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இலங்கைக்கும் நியூசிலாந்துக்குமிடையிலான முதலாவது சுற்று வெளிநாட்டமைச்சு ஆலோசனைக் குழு கூட்டம் இணையம் மூலம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

வெளிவிவகார அமைச்சின் கிழக்காசிய பிரிவுக்கான பதில் பணிப்பாளர் நாயகம் ரோஹன அம்பகொல்ல மற்றும் நியூஸிலாந்து வெளிவிவகார மற்றும் வர்த்தக அமைச்சின் தெற்கு மற்றும் தென்கிழக்காசியாவிற்கான முகாமையாளர் என்றூஸ் நீட்ஸ் ஆகியோரின் தலைமையில் இந்த இணைய பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது. இரு நாடுகளுக்கும் முக்கியமான பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. (ஸ)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு ...

மகளும் தன்னை தானே தெமட்டகொடையில் வெடிக்கவைத்துக்கொண்டார் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## தோட்ட நிறுவனங்களால்...

தற்போது வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைவாக , பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலையீட்டில் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா நாளாந்த சம்பளம் கிடைத்திருப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொட்டகலையிலுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதற்கு முன்னர் அவர்களது நாளாந்த சம்பளம் 750 ரூபாவாக காணப்பட்டது. 1,000 ரூபா சம்பளம் தொடர்பில் நீண்ட காலமாக தோட்ட நிறுவனங்களுக்கும், தொழிற் சங்கங்களுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தது. 1,000 ரூபா நாளாந்த சம்பள விடயம் 2021ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்திலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேவேளை, நாளாந்த சம்பளம் 1,000 ரூபாவை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட அரசாங்கத்திற்கும், தொழிற்சங்கங்களுக்கும், தோட்டத் தொழிலாளர்கள் நன்றி தெரிவித்திருக்கின்றனர்.

## தமிழ், சிங்கள புத்தாண்டு...

வணிக அபிவிருத்தி மற்றும் பயன்பாடு குறைவான அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். கிராம சேவகர் மட்டத்தில் அடையாளம் காணப்பட்ட குடும்பங்களுக்காக வழங்கப்படவுள்ள இக் கொடுப்பனவுகள் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷவின் தலையீட்டில் குறைந்த வருவாய் கொண்ட குடும்பங்களுக்கு இந்த கொடுப்பனவை வழங்குவதற்காக ஏற்பாடுகள் சமுர்த்தி திணைக்களதுடன் ஒருங்கிணைந்த திட்டமாக செயல் படுத்தப்படவுள்ளது. தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக இக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

## தடைக்கு எதிராக நீதிமன்றம்...

11 இஸ்லாமிய அமைப்புகளை தடை செய்யுமாறு சட்ட மாஅதிபர் தப்புல டி லிவேரா உத்தரவிட்டிருந்தார். அதன்படி ஐக்கிய தௌஹீத் ஜமாஅத் (UTJ), சிலோன் தௌஹீத் ஜமாஅத் (CTJ), சிறிலங்கா தௌஹீத் ஜமாஅத் (SLTJ), அகில இலங்கை தௌஹீத் ஜமாஅத் (ACTJ), ஜம்இய்யதுல் அன்சாரி சுன்னத்துல் மொஹமதியா (JASM), தாருல் அதர்ஜம் உல் அதர், சிறிலங்கா இஸ்லாமிய மாணவர் சங்கம் ஜமியா (SLISM), ஐஎஸ் அமைப்பு (ISIS), அல் கொய்தா(ALQaeda), சேவ்த பேர்ள்ஸ் அமைப்பு (Save the pearls), சுப்பர் முஸ்லிம் அமைப்பு (Super Muslim) ஆகிய அமைப்புகளின் செயற்பாடுகளை இலங்கையினுள் தடை செய்ய சட்ட மாஅதிபர் அனுமதி வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## RMV சேவைகள் வழமை போன்று...

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுமித் அலஹகோன் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, அன்றைய தினத்திற்கான நேரத்தை ஒதுக்கி கொண்டவர்களுக்கான சேவைகள் மாத்திரமே நடைபெறும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் யாழ்ப்பாணம், குருநாகல், கம்பஹா, அனுராதபுரம் மற்றும் ஹம்பாந்தோட்டை அலுவலகங்களில் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கான நேரத்தை ஒதுக்கி கொண்டவர்களுக்கான சேவைகளும் நடைபெறும் எனவும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது. சேவை பெறுநர்கள் 011 2 677 877 என்ற இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி தமக்கான நேரத்தை ஒதுக்கி கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நவ்பரை கைது செய்தது...

முபாறக் அப்துல் மஜீத் கேள்வி எழுப்பியுள்ளார். அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது

தாக்குதலின் பிரதான மூளையாக நவ்பர் மௌலவி இருந்திருக்க வாய்ப்பில்லையென்ற ஹக்கீமின் கருத்தை நாமும் சொல்லி வருகின்றோம். காத்தான்குடி நவ்பர்மௌலவி என்ற ஒருவர் முஸ்லிம் சமூகத்துள் அறியப்பட்டிருக்கவில்லை. அவர் ஆயுத தீவிரவாத கருத்துக்களை பிரசாரம் செய்ததாக பிரசுரங்களோ, புத்தகங்களோ வெளியிட்டதாக நாம் காணவில்லை.

ஆனாலும் நவ்பர் மௌலவியை கைது செய்தது எமது ஜனாதிபதி கோட்டாபயவின் அரசு அல்ல, மாறாக ஹக்கீமின் அரசுதான் கைது செய்து சிறையில் அடைத்தது. ஹக்கீம் சொல்வது போல் நவ்பர் மௌலவி பிரதான சூத்திரதாரியல்ல என்றிருப்பின் ஹக்கீமின் அரசு ஏன் அவரை கைது செய்தது? அந்த கைதுக்கெதிராக ஏன் ஹக்கீம், தான் கொண்டு வந்த ஜனாதிபதியிடமும் தான் முட்டுக்கொடுத்த பிரதமர் ரணிலிடமும் இதனை கேட்கவில்லை. கேட்க முடியாத கோழையாக விலை போனவராக அல்லது நல்லாட்சி அரசுதான் ஸஹ்ரானை இயக்கியது என்று அறிந்தும் மௌனமாக இருந்தாரா என்று கேட்கிறோம்.

இதன் பின்னனியில் இஸ்ரேல் இருந்திருந்தால் இஸ்ரேலுக்கு நெருக்கமாக இருந்த ரணில் அரசாங்கத்தில் ஹக்கீம் ஏன் வாய்மூடி பார்த்துக் கொண்டிருந்தார். மஹிந்த ராஜபக்ஷ அரசு இஸ்ரேலுக்கெதிரான அரசு என்றும் பலஸ்தீன அபிமாணி என்பதும் உலமா கட்சி ராஜபக்ஷாக்களை ஆதரிப்பதற்கான பிரதான காரணமாகும்.

பணத்துக்கும் பதவிக்கும் ஆசைப்பட்ட முஸ்லிம் கட்சிகள் ரணில் ஆட்சிக்கு வாக்களித்து விட்டு இப்போது இத்தாக்குதல் பின்னால் இஸ்ரேல் உள்ளதா? என ஹக்கீம் கேட்பதன் மூலம் மிகப்பெரிய ஜோக்கராக மாறியுள்ளார்.

## பிணையில் விடுதலை செய்யப்பட்ட...

பார்த்திபன் ஆகியோர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோவினால் நேற்று முன்தினம் அதிகாலை 1.40 மணிக்கு கைது செய்யப்பட்டார்.

அதன் பின்னர் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் வவுனியா பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் நேற்று முன்தினம் காலை ஒப்படைக்கப்பட்டார். நேற்று முன்தினம் மதியம் சட்டவைத்திய பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார்.

பரிசோதனைகளின் பின்னர் கண்டிவீதியில் அமைந்துள்ள பயங்கரவாரத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவிற்கு மீண்டும் அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

சுமார் 10 மணிநேர விசாரணையின் பின்னர் முதல்வர் வி. மணிவண்ணன் நேற்று முன்தினம் இரவு 08 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட யாழ். முதல்வர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

## மதமாற்றம், பசுவதையை...

ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலயத்தில் நேற்று காலை முதல் ஆரம்பமான அடையாள உண்ணாவிரத போராட்டத்தில் சிவசேனா அமைப்பின் அம்பாரை மாவட்ட இணைப்பாளர் ரி.ஜெயாகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தவத்திரு விபுலானந்த அடிகளாரின் 119 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு சிவசேனா அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட அடையாள உண்ணாவிரத நிகழ்வில் கலந்து கொண்ட அமைப்பின் உறுப்பினர்கள் பிரார்த்தனை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் அடையாள உண்ணாவிரத நிகழ்வின் நோக்கம் பற்றி பல்வேறு கருத்துக்களையும் முன்வைத்தனர்.

ஜனாதிபதி, மதங்களை மதிக்கும் பக்குவம் கொண்டவர். அவர் மீது பூரண நம்பிக்கையும் எமக்குள்ளது. ஆகவே அவரது காலத்தில் மதமாற்ற சட்டத்தை உருவாக்கி இந்து மதத்தை மாத்திரமன்றி அனைத்து மதங்களின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தனர்.

எல்லா மதங்களும் ஒருமித்து வாழும் எமது நாட்டில் சில மதத்தவர் மக்களிடமுள்ள ஏழ்மை நிலை மற்றும் பொருளாதார நிலையை காரணம் காட்டி அவர்களை மதமாற்றம் செய்ய முயற்சிக்கின்றனர். இது தவறான செயற்பாடாகும். ஆகவே எமது நாட்டுக்கு மதமாற்றத் தடைச் சட்டம் அவசியமானதொன்றாக கருதப்படுவதுடன் எதிர்காலத்தில் ஜனாதிபதியின் கரத்தால் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

ஒரு தாக்கத்திற்கு எதிர்தாக்கம் உள்ளது என்பது சமய ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதுபோலவே மதமாற்றத்தை செய்கின்றவர்களும் மதமாற்றத்துக்குள்ளாகின்றவர்களும் எதிர் தாக்கத்தை அனுபவிப்பர் என்பது உண்மை. இந்நிலையில் மதமாற்ற தடைச்சட்டத்தை ஜனாதிபதி அவர்கள் முன்வைப்பாரானால் அதனை இந்துமக்களாகிய நாங்கள் முழு மனத்துடன் ஏற்றுக்கொள்வோம் என்றனர்.

## மணிவண்ணன் விடுவிப்புக்கு...

எமக்கும் உள்ளது. இதனால் ஜனாதிபதியுடன், மணிவண்ணன் விவகாரம் தொடர்பில் பேசினேன். அவருக்கு முதல் மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொண்டேன்.

எனது கருத்தை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவருக்கு முதலாவது மன்னிப்பை வழங்குவதாக தெரிவித்தார்.

இனி இன்னொரு சந்தர்ப்பத்தில் அவர் இதுபோல செயற்பட்டால் கடுமையான நடவடிக்கையெடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அவருக்கு மன்னிப்பு வழங்குவதால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்படாது. சாதாரண சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டு, அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார் என்றும் தெரிவித்தார்.

மணிவண்ணன் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது முகநூலிலும் இது தொடர்பான தகவல்களையும் பகிர்ந்துள்ளார். அதில் யாழ். மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் பணியாளர்களை நியமித்தது அவர்களுக்கு சீருடை வழங்கியது தொடர்பான செயலை, அறியாத் தவறாக கருதி மணிவண்ணனை விடுவித்து மாநகர சபையின் செயற்பாடுகளை மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு ஆவன செய்யுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளதாகவே அவர் தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் தகவலை பகிர்ந்துள்ளார்.

## மக்களின் தேவை; அரசின்...

அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணிக்கு இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய 15 பேரைக்கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர்களான நிமல் லன்சா, திலும் அமுனுகம, கஞ்சன விஜேசேகர, சீத்தா அரம்பேபொல, சன்ன ஜயசுமன, பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், கபில அத்துகோரல, சஞ்சீவ எதிரிமான்ன, நிபுன ரணவக்க, சாமர சம்பத் தசநாயக்க, டிரான் அலஸ், கெவிந்து குமாரதுங்க, சிவநேசதுரை சந்திரகாந்தன், சிந்தக்க அமல் மாயாதுன்னே மற்றும் ஜயந்த வீரசிங்க ஆகியோர் ஏனைய அங்கத்தவர்களாவர்.

ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சந்திமா விக்கிரமசிங்க 'கிராமத்துடன் கலந்துரையாடல்'கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகள், அதனோடு தொடர்பான அவசியமான அனைத்து தகவல்களையும் வழங்கி தொடர்பாடல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருப்பார்.

'கிராமத்துடன் கலந்துரையாடல்' நிகழ்ச்சியில் மக்கள் முன்வைக்கும் பிரச்சினைகள், சிக்கல்கள் தொடர்பாக ஜனாதிபதி வழங்கும் பணிப்புரைகள் மற்றும் உத்தரவுகளை உடனடியாக செயற்படுத்துவதற்காக மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் ஏனைய அனைத்து நிறுவனங்களினதும் பிரதானிகள் உட்பட பிரதேச ரீதியாக அனைத்து அதிகாரிகளையும் சேவை முக்கியத்துவத்தின் அடிப்படையில் செயற்பட வைப்பது ஜனாதிபதி செயலணியின் அடிப்படை பொறுப்பாகும்.

பிரதேச சபைகள், பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு உட்பட்ட தேசிய மட்டத்திலான அரசாங்க நிறுவனங்களின் மூலம் 2021 – 2023 வரவுசெலவு திட்டத்தின் நிதி ஒதுக்கீடுகள் மூலம் செயற்படுத்தப்படும் வீதிகள், குடிநீர் வழங்கல், மின்சாரம், தொலைபேசி தொடர்பாடல், விளையாட்டு மைதானங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், தொழிற்கல்வி நிறுவனங்கள், நகர்புற பல்கலைக்கழகங்கள், காணி வழங்குதல், வங்கிகள் மற்றும் நிதி வசதிகள், சந்தைகள், களஞ்சியசாலைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற திட்டங்களை விரைவுபடுத்துவது செயலணியின் பொறுப்பாகும். அரச முதலீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடைகள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் குறித்த கால எல்லைக்குள் சிறந்த தரத்துடன் விரைவுபடுத்துவது செயலணியின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

எந்தவொரு அரச சேவையாளரும் அல்லது அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது ஏனைய நிறுவனங்களின் அதிகாரி ஒருவர் செயலணி பொறுப்பளிக்கும் கடமையை நிறைவேற்றுவதை தாமதப்படுத்தல் அல்லது தவறவிடும் சந்தர்ப்பங்களை தமக்கு அறிவிக்குமாறு செயலணிக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## இளவரசர் பிலிப் மறைவுக்கு...

கடிதமொன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மாட்சிமைதங்கிய இராணி அவர்களே,

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கத்தினதும் மக்களினதும் சார்பாக, உங்கள் அன்புக் கணவர் எடின்பர்க் கோமகன் மேன்மைதங்கிய இளவரசர் பிலிப் அவர்களின் மறைவையிட்டு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளவரசர் பிலிப் அவர்கள் இலங்கை மீது மிகுந்த அன்பு கொண்டிருந்ததுடன், இரண்டாம் உலகப் போரின்போது இலங்கையில் அவர் குறுகிய காலம் தங்கியிருந்ததை அடிக்கடி மகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தார். அவர் இங்கு தங்கியிருந்த நினைவுகளும், அதன் பின்னர் மாட்சிமைதங்கிய உங்களுடன் இலங்கைக்கு அவர் மேற்கொண்ட இரண்டு அரசமுறை விஜயங்களும் இலங்கை மக்களின் உள்ளங்களில் நீங்கா இடம் பிடித்துள்ளன.

இளவரசரின் மறைவையிட்டு நாங்கள் மிகுந்த துயரங்கொண்டிருக்கும் அதேநேரம், பிரித்தானியா தேசத்திற்கு அவர் செய்த பெரும் சேவை, அவரது புகழ்பெற்ற கடற்படை பணிகள் மற்றும் பொதுநலவாய அமைப்புக்கான அவரது சேவைகளையும் நினைவு கூர்கிறோம்.

மாட்சிமைதங்கிய மகாராணி அவர்களே, தயவுசெய்து, என்னுடையவும் இலங்கை மக்களினதும் இரங்கலை அரச குடும்ப உறுப்பினர்களுக்கு தெரிவியுங்கள். இந்த துக்ககரமான நேரத்தில் எங்கள் எண்ணங்கள் மாட்சிமைதங்கிய உங்களுடனும் அரச குடும்பத்துடனும் ஐக்கிய இராச்சிய மக்களுடனும் உள்ளன.

தயவுசெய்து எங்கள் உண்மையான இரங்கலை ஏற்றுக்கொள்ளுங்கள் என்றும் ஜனாதிபதி தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## குட்டையை குழப்புகின்றாரா... (12 ஆம் பக்கத் தொடர்)

இந்து சமுத்திரத்தின் முக்கியமான பிராந்திய நாடுகள் இலங்கை விவகாரங்களில் தங்கள் பாதுகாப்பு கருதி சில முக்கிய அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்ற போதிலும் இலங்கைக்கு சம்பந்தமே இல்லாத மேற்கத்தைய நாடுகள் தங்கள் அரசியலை உட்புகுத்த முனைந்ததன் விளைவு இலங்கையை அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்றது மாத்திரமல்ல, உள்ளூர் அரசியல்வாதிகள் மூலம் மக்களிடம் இனவாதத்தையும், மதவாதத்தையும் விதைத்து இலங்கையை வன்முறையின் பிறப்பிடமாக மாற்றியிருந்தது.

இந்தியா ஈழத்தமிழர்களுக்கு எதிர் நிலையை எடுக்க காணமாக இருந்த இந்த மேற்கத்தைய வல்லாதிக்க சக்திகள் இப்போது இந்தியாவிடம் போராட்டத்தை கையளித்துவிட்டு போராடுங்கள் என்ற புது விதமான அரசியல் பொதியுடன் கிளம்பி வந்துள்ளன. மேற்கத்தைய நாடுகள் எவ்வாறு இந்தியாவை ஈழத் தமிழர்களுக்கு எதிர்நிலையை எடுக்க வைத்தன?, தமிழர்களை முட்டாள்களாக்கி ஏமாற்றியது என்பதை சுருக்கமாக சொல்ல முடியும். 2009 இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் அமெரிக்க கப்பல் ஈழத்தமிழர்களை காப்பாற்ற வரும் என்ற சொல்லாடல் அல்லது தமிழ் மக்களுக்கு இறுதிவரை கொடுக்கப்பட்ட பொய்யான நம்பிக்கை ஏமாற்றமாகி இறுதியில் இலங்கை இராணுவத்திடமே அனைத்து தமிழரும் சரணடைந்தனர்.

ஆகவே தமிழ் மக்கள் உண்மையான அரசியலை புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். வெற்று உணர்ச்சி அரசியலை அள்ளிக் கொட்டும் தமிழ் தேசிய அரசியல்வாதிகளின் பின்னால் பயணிக்கும் போது வெறும் அவலங்களே மிச்சமாக இருக்கும். சர்வதேசம் எவ்வாறாக சிரித்த முகத்துடன் தமிழர்களை அணைத்து முதுகில் கத்தியால் குத்தும் அரசியலை செய்கின்றது என்பதனை தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் மாத்திரமல்ல சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற உள்நாட்டு போர் இனமத பேதமின்றி அனைத்து இலங்கை குடிமக்களையும் காவு வாங்கியிருந்தது. நடைபெற்ற போரில் சர்வதேச நாடுகள் ஆயுத விற்பனை, அரசியல் பேரம் பேசுதல், நாட்டின் வளங்களை சுரண்டி செல்லுதல் என்று தங்கள் நலன்களை சிறப்பாக வளர்த்துக் கொண்டார்கள் தவிர அவலங்களையும், அகதி வாழ்க்கையையும் இலங்கையர்களுக்கு பரிசளித்திருந்தார்கள்.

முப்பது வருடங்களுக்கு மேலாக இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு போரை இந்த இணைத்தலைமை என்று சொல்லப்படும் நாடுகள் நிறுத்த முயற்சிக்கவில்லை என்பதும் இலங்கை நாடு ஒரு வன்முறைகள் நிறைந்த நாடாக தொடர்ச்சியாக இருக்க வேண்டும் என்ற விருப்பம் கொண்டவர்களாக சர்வதேச நாடுகள் இருக்கின்றன என்பதும் இலங்கையில் யுத்தகாலத்தில் சமாதான தூதுவராக செயற்பட்ட எரிக் சொல்கெய்மின் இன்றைய பேச்சு தெளிவாக்கியுள்ளது.

கடந்த மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் அமையத்தின் கூட்டத்தொடரில் இணைத்தலைமை நாடுகளால் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட அறிக்கையில் தமிழர்கள், ஈழம், இன அழிப்பு போன்ற வார்த்தைகள் தவிர்க்கப்பட்டு, தமிழர்களை ஏமாற்றவும் இலங்கை அரசை மறைமுகமாக எச்சரித்து அடிபணியச் செய்யவும் சூசகமான கடுமையான சாரமற்ற ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டு மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் சமாதான காலத்தில் சர்வதேச கண்காணிப்பக்குழு என்றும் அனுசரணை நாடுகள் என்றும் செயற்பட்டவர்களின் செயற்பாடுகளின் தொடர்ச்சிதான் இலங்கையில் உச்சபட்ச வன்முறையும் யுத்தமும் வெடித்து இலங்கை அழிவுப் பாதை நோக்கி பயணித்தது என்பதை தமிழ் மக்கள் மாத்திரமல்ல சிங்கள மக்களும் மறந்தவிடக் கூடாது.

இலங்கையில் போர் உச்சம் பெற்ற போது அனுசரணை வழங்கிய இணைத் தலைமை நாடுகளோ அல்லது சமாதான வேடமிட்ட நோர்வேயோ, அல்லது சர்வதேச சமூகமோ அல்லது ஐநா கட்டமைப்போ, இந்தியாவோ யுத்தத்தை நிறுத்தி மக்களை காப்பாற்ற முன்வரவில்லை என்பதை தமிழ் மக்கள் மறந்துவிடக்கூடாது. எனவே மீண்டும் வெள்ளைக் கொடியுடன் சமாதான வேடமிட்டு தமிழர்கள் தங்கள் உரிமைகளை பெற்றுக்கொள்ள ஆலோசனை கூறுகிறோம் என்ற பெயரில் உள்நுழையும் கபடதாரிகளை தமிழர்கள் மாத்திரமல்ல இலங்கை மக்கள் அனைவரும் இனங்கண்டு உசாராக வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்களின் 70 வருட அரசியல் உரிமைப் போராட்டத்தை சமாதானத் தூதுவராக செயற்பட்டு அழித்த எரிக் சொல்கெய்ம் தமிழ் மக்கள் காந்திஜி வழியில் அகிம்சை ரீதியில் போராடி வெல்ல வேண்டும் என்ற ஆலோசனையுடன் வந்துள்ளார்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு பிரச்சினை உள்ளது. அவைகள் தீர்க்கப்பட வேண்டும்.

அது சிங்கள மக்களுடன் பேசிதான் தீர்க்கப்பட வேண்டும். மதவாத, இனவாத அரசியல் நீக்கப்பட வேண்டும்.

தமிழர்களும் சிங்களவர்களும் முஸ்லிம்களும் இலங்கையர்கள் என்ற உணர்வுடன் ஒரே கொடியின் கீழ் ஒன்றிணைய வேண்டும் அதற்கான அரசியலை உள்ளூர் அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து செயற்படுத்த வேண்டும். சர்வதேச நாடுகள் இலங்கையை நாசம் செய்யும் திட்டத்துடன் கால்பதிக்கும் போது அவற்றை வேறுபிரித்து அறியும் அரசியல் அறிவு இலங்கை அரசியல்வாதிகளுக்கு இருக்க வேண்டும்.

சர்வதேசத்தை எவ்வாறு கையாள்வது, இந்தியாவை எவ்வாறு அணுகுவது போன்ற விடயங்களில் தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்றிணைந்து ஒரு வெளிப்படையான இராசதந்திர பொறிமுறை வகுக்கப்பட்டு அதனூடாக உலக அரசியலை கையாள முன்வர வேண்டும்.

அதே போல் இலங்கையில் மூவின அரசியல்வாதிகளும் இனவாத மதவாத அரசியலை கைவிட்டு மக்களுக்கான அரசியலை முன்கொண்டு செல்ல தயாராக வேண்டும் அவ்வாறு செயற்படும் பட்சத்தில் இலங்கைக்குள் உள்நுழையும் சர்வதேச வஞ்சக அரசிலை இனங்கண்டு எமது இலங்கை நாட்டையும் நாட்டு மக்களையும் தற்காத்து கொள்வதோடு எதிர்கால சந்ததியினருக்கு இன முரண்பாடுகளற்ற எமது அழகான இலங்கை தீவை கையளிக்க முடியும்.

## குடும்ப வணிக... (12 ஆம் பக்கத் தொடர்)

எவ்வாறாயினும் தலைமுறைகளுக்கு மத்தியில் குடும்ப வணிகங்களை கைமாற்றும்போது ஏற்படும் ஒவ்வாமைகள் மற்றும் கருத்து வேறுபாடுகள் காரணமாக ஆரம்பத்தில் சிறப்பாக இயங்கிய குடும்ப வணிகங்கள் தோற்றுவித்தவரின் மரணத்தின் பின்னர் சிதைந்துபோன வரலாறுகள் ஏராளம். அத்துடன் கடன் பெறுவதில் நிலவும் சிக்கல்கள், அரசியல் தலையிடுகள், வெளியாரின் தலையீடுகள், போட்டா போட்டி என்பவை காரணமாகவும் குடும்ப வணிகங்கள் சவால்களை எதிர்கொள்கின்றன.

2017இல் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின்படி இலங்கையின் குடும்ப வணிக நிறுவனங்களில் 32 சதவீதமானவை வணிகத்தை அடுத்த தலைமுறைக்கு நகர்த்தக் கூடிய ஒரு தொடர்ச்சித் திட்டத்தைக் கொண்டிருக்கவில்லை எனத் தெரியவந்தது. அத்துடன் இரண்டாம் தலைமுறை குடும்ப வணிகங்களில் (சகோதரர்களால் நடத்தப்படுபவை) தற்போது எதிர்காலத்திற்கான நீண்டகாலத்திட்டங்கள் இருக்கவில்லை. உலகளாவிய ரீதியில் நோக்குமிடத்து இச்சதவீதம் 43 வீதமாக உள்ளது. அதனால் இலங்கையில் குடும்ப வணிகங்களில் ஒரு நிச்சயமற்ற சூழல் நிலவுவது தெரிகிறது. அத்துடன் அவை பல்வேறு சவால்களையும் எதிர்கொள்கின்றன. இலங்கையில் குடும்ப வணிகங்கள் ஒரு நிலை மாறுகட்டத்தை எதிர்கொள்கின்றன. புதிய தலைமுறையானது புதிய சிந்தனைகளை தேடுகின்றது. புதிய சவால்களை இனங்கண்டு முறையான நீண்டகாலத் திட்டங்களின் அடிப்படையில் இயங்குவதன் மூலம் இலங்கையில் இவற்றை விருத்தி செய்ய முயலலாம்.




நுவரெலியா கிராண்ட் ஹோட்டலில்நடைபெற்ற நுவரெலியா லயன்ஸ் கழகத்தின் 55 ஆவது வருடாந்த ஒன்றுக்கூடல் நிகழ்வின் போது கடந்த 2018, 2019 ஆவதுவருடங்களில் தலைவராக செயல்பட்ட பொன்னையா சதீஸ் குமாருக்கு சிறந்த சேவையாற்றியதற்கான சிறப்பு விருதையும் லயன்ஸ் பதக்கத்தையும் லயன்ஸ் கழகத்தின் 306 C2 மாவட்ட முன்னாள் ஆளுநர் நிமால் ரணவக்க வழங்குவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில்காணலாம்.

*(நுவரெலியா சுப்பிரமணியம், கந்தப்பளை ரமணன்)*

# மதக் கோட்பாடுகளினாலான அமைப்புக்கள் மானிடத்தை ஒழுங்குபடுத்துமா?

மதங்களின் தோற்றுவாயல்மனிதாபிமானத்தின் மடியில்தான் கிடக்கிறது. எல்லோரையும் வாழ வைக்க வந்த வேதங்கள், இருப்போரையும் இன்று நெருக்கடிகளுக்குள் திணிக்கும் நிலையையே ஏற்படுத்துகிறதே! ஏன்?. விரிவான கோணத்தில் இந்தக் கேள்வி விரிய வேண்டும்.மதங்கள் பற்றித் தெளிவூட்டிய மூலகர்த்தாக்கள் மறைந்து, சுமார் பல ஆயிரம் வருடங்கள் கடந்துள்ள நிலையில்தான், இன்று இந்த நெருக்கடிகள் ஏற்படத் தொடங்கியுள்ளன.

இந்து மதம் 5000 வருடங்களைக் கடந்து நிற்கின்றது. பௌத்த மதம் 2500 வருடங்களை எட்டி நிற்கிறது. கிறிஸ்தவம் 2020 ஐத் தொட்டுநிற்கிறது. இஸ்லாம் 1500 வருடங்களை நெருங்கி நிற்கிறது. எனினும், இம்மதங்களின் மூலகர்த்தாக்கள் மறைந்த பின்னரும், இவற்றின் கோட்பாடுகள் உயிரூட்டப்படுகின்றன. இதற்கு, ஒவ்வொரு மதங்களின் கருத்துக்களையும் அடியொற்றி வந்த அமைப்புக்கள்தான் காரணம். ஆனால், இந்த அமைப்புக்கள் இன்று நாளாந்தம் அதிகரித்து வருவதன் அடிப்படை என்ன? ஏதாவது ஆதாயங்களுக்காக அதிகரிக்கின்றனவா? அவ்வாறானால், இந்த ஆதாயத்தில் ஆத்மீகமா, லௌகீகமா? அதிக பங்கெடுக்கிறது. எதிர்கொள்ளும் பிரச்சினைகளை சிந்திக்கையில், லௌகீக நோக்கில்தான், இந்த அமைப்புக்கள் அதிகரிப்பதாகத் தோன்றுகிறது. ஏற்படுகின்ற ஒவ்வொரு சிறிய, சிறிய அபிப்பிராய பேதங்களும் அடுத்த அமைப்பைத் தோற்றுவித்து விடுகிறதே. இதனால்தான் இன்று இத்தனை அமைப்புக்கள்.

முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தமட்டில் இந்த அமைப்புக்கள் எவையும் இந்த சமூகத்தின் அரசியல் தலைமைகளைக் கட்டுப்படுத்தவோ அல்லது அரசியலில் விழிப்பூட்டவோ இயலாதிருக்கின்றன. இவற்றுக்குப் பொதுவான தலைமையை வழங்கும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின், ஆலோசனைகள் கூட, சபையேறாமல் போன சந்தர்ப்பங்கள் தான், இச்சமூகத்தின் அரசியலில் அதிகம். இந்நிலையில்தான், இன்று 11 இஸ்லாமிய அமைப்புக்களை அரசாங்கம் தடை செய்துள்ளது. எல்லாம் ஈஸ்டர் தாக்குதல்களின் எதிரொலிகள்தான். அப்படியானால், அடிப்படைவாதத்தில் இவற்றுக்கும் சம்பந்தம் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறதோ? ஏன், ஈஸ்டர் தாக்குதலே, அடிப்படைவாதத்தின் அடையாளமாகத்தானே பார்க்கப்படுகிறது. இதுதான், இத்தடைகளிலும் இந்தச் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

ஈஸ்டர் தாக்குதல் நடந்து ஐந்து நாட்களின் பின்னர் ஏப்ரல் 26இல் சாய்ந்தமருதில் நடந்த சம்பவம் இருக்கிறதே! இதுதான், தாக்குதல் பற்றிய உளவுத்துறை விசாரணைக்கு ஆணிவேராக இருந்தது. இந்த விசாரணையில்தான் பல பக்க வேர்களும் முளைக்கத் தொடங்கின. அந்த வீட்டிலிருந்து மீட்கப்பட்ட பலவற்றில் ஒலிநாடாதான் இந்த விசாரணைக்கு ஒளியூட்டியது. "காபிரைக் கொல்லுங்கள், குப்பாரை வெட்டுங்கள்" என்று அந்தச் சாய்ந்தமருது வீட்டிலிருந்த பயங்கரவாதிகள், ஆவேஷமிட்ட ஆத்திரக் குரல்கள்தான் அந்த ஒலிநாடா. பின்னரென்ன. காபிரென்றால் யார்? குப்பார் யார்? என இஸ்லாத்திலுள்ள கருத்தியல்கள் நன்றாகத் துருவித் துருவி ஆராயப்பட்டன, அறியப்பட்டன.



இறை நிராகாரிப்போரை (முஸ்லிமல்லாதோர்)சிலை வணங்குவோரைக் கொல்லுமாறு, இஸ்லாம் சொல்லுகிறதா? இதற்காகவா இந்தத் தாக்குதல் என்றுதான் அனைவரும் முஸ்லிம்கள் மீது ஆச்சர்யம் கலந்த ஆத்திரத்தில் இருந்தனர். இதிலுள்ள கவலை என்ன தெரியுமா?. இத்தனை இஸ்லாமிய அமைப்புக்கள் இருந்தும் இதைத் தெளிவுபடுத்தவில்லையே! ஏனைய சமூகத்தினருக்கு இஸ்லாத்திலிருந்த ஐயம், அச்சத்தைப் போக்கவில்லையே! அவ்வாறு ஒரு அமைப்பு, சந்தேகத்தைக் களையும் வகையில் தெளிவூட்டினாலும், இன்னொரு இஸ்லாமிய அமைப்பு அதைக் குழப்பும் வகையில் விளக்கம் சொல்கிறதே. எந்த இயக்கங்களும் தேவையில்லை என்ற மனநிலையை முஸ்லிம்களிடத்தில் இது,ஏற்படுத்தாதா? புனித அல்குர்ஆன்" எதிரியைப் போர்க்களத்தில் கண்டால் அல்லது மோத நேரிட்டால் கொல்லுங்கள், வெட்டுங்கள்" இவ்வளவுதான் கூறுகிறது. சாதாரண சமாதான நேரத்தில் கண்டால் அவர்களை (எதிரிகள்) வெட்டவோ அல்லது கொல்லவோ தடைவிதித்திருக் கிறது இஸ்லாம். கண்ட இடத்திலென்பது போர்க்களக் காட்சிகளில் மட்டுமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதைப் பலரும் உணர்வது அவசியம். ஆனால், இஸ்லாத்தின் எதிரிகள் "போர்க்களத்தில்" என்ற சொல்லைத் தவிர்த்துவிட்டு, கண்ட இடத்தில் கொல்லுங்கள் என்ற புனித குர்ஆனின் வசனத்தை மட்டும் தூக்கிப்பிடிக்கின்றனர். இதில், இன்றைய சில கடும்போக்குவாதிகளுக்கு உள்ள சாதகம் என்னவென்றால், இஸ்லாத்தின் அன்றைய (அரேபிய) எதிரிகள் சிலைவணங்கிகளாக இருந்ததுதான்.

மேலும் சாய்ந்தமருது ஒலிநாடாவும் மாவனல்லை சிலை உடைப்புக்களுடன் சம்பந்தப்படுவதுதான், சகோதர சமூகங்களின் ஆத்திரத்தை அதிகப்படுத்தியது. இது, போதாததற்கு சில இஸ்லாமிய அமைப்புக்களின் கொதிநிலைப் பேச்சுக்கள், போக்குகளே நிலைமைகளைச் சீரழிக்கின்றன. சமூகங்களின் சகோதரத்துவத்துக்கு சவால்களாகவும் உள்ளவை இவ்வாறான பொறுப்பற்ற பேச்சுக்கள்தான். இந்தப் போக்குகள் இங்கு மட்டுமல்ல ஏனைய சமூகங்களிலும் விரவுவதுதான் கவலை.

மானிடத்தின் வாழ்வுக்கு வழிகோலாத அமைப்புக்கள் தோன்றுவதில், யாருக்கும் என்ன இலாபம்? இலட்சக் கணக்கில் நிதியைச் செலவு செய்து கட்டடங்களைக் கட்டி அமைப்புக்கள் நடாத்துவதால், அமைதி, ஆனந்தம் மக்களுக்கு ஏற்படுகிறதா? வயிற்றுப் பசிக்காக நாளாந்தம் அலையும் நமது ஜீவன்களைக் கேளுங்கள். மக்கள் வாழ்ந்தால்தானே, மதம் தேவைப்படும். மனிதர்கள் மாண்ட பின்னர், மதத்தின் இருப்பு யாருக்குத் தேவை. உண்மையில், ஒருகருத்தின் இருப்பைப் பலப்படுத்தும் நோக்கில், மற்றொரு நம்பிக்கையில் வாழும் அப்பாவிச் சிவில் சமூகத்தை அழித்தொழிக்க நினைப்பது அடிப்படைவாதம்தான்.

இந்த அழிப்புக்களின் செயற்பாடுகள்தான் தீவிரவாதம், கடும்போக்குவாதம், பயங்கரவாதமாகப் பரிணாமம் அடைகிறது. சிந்தனையால் மாற்றுவது, பணத்துக்காக மாற்றுவது, பலாத்காரத்தால் மாற்றுவது, வறுமையில் மாற்றுவதெல்லாம் கருத்தியலை அழிப்பதற்கான வெவ்வேறு வடிவங்களே. மனித உயிர்களைக் காவுகொண்டு வன்முறையால் மனிதனை மாற்றுவதே பயங்கரவாதமாகிறது.

எனவே, அறிவுக்கு அப்பாலான நமது ஆத்மீக நம்பிக்கைகள் மனச்சாட்சியின் நெறியில், மனிதாபிமானமாக இருக்க இறைவனைப் பிரார்த்திப்போம். "ஆடையணிகலன்கள் ஆண்டவன் விரும்புவதில்லை, அங்கொரு கண், இங்கொரு கண் ஆலய வழிபாடும் இல்லை".

**சுஐப் எம்.காசிம்...**






நுவரெலியா விளையாட்டுக் கழகத்தின் 100 ஆவது ஆண்டு பூர்த்தியைமுன்னிட்டு நுவரெலியா விளையாட்டுக்கழக மண்டபத்தில் கடந்த (08) வியாழக்கிழமை இக்கழக தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தலைமையிலான கழக உறுப்பினர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இரத்த தான நிகழ்வில் கழக உறுப்பினர்களும் பொதுமக்களும் இரத்த தானம் வழங்குவதையும் கலந்துக் கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## மொழிபெயர்ப்பாளராக சத்தியப் பிரமாணம்



சம்மாந்துறை அல்அர்ஸத் மகா வித்தியாலய ஆங்கில ஆசிரியை திருமதி. ஏ.பீ. பாத்திமா றினோஸா (PGDE, Dipin HR, BSW, HNDE, NCE) மொழிபெயர்ப்பாளராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் ஆசிரியராக மூதூர் உமர் பாறூக் வித்தியாலயத்திலும், வரிப்பத்தான் சேனை லீடர் ஜுனியர் பாடசாலையிலும் சேவையாற்றினார். இவர், இளமானிப் பட்டத்தினை ஆங்கில மொழி மூலமும் பட்டப்பின் கல்வியினை கொழும்பு பல்கலைக் கழகத்திலும் மேலும் மனித உரிமைகள் டிப்ளோமா, உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா மற்றும் ஆங்கிலத்தின் தேசிய சான்றிதழையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



வலம்புரி கவிதா வட்டத்தின் 72வது கவியரங்கம் கொழும்பு பழைய நகர மண்டபத்தில் இடம்பெற்ற போது "கோவுஸ்ஸ கே. ராம்ஜி உலகநாதனின்" கொழுந்தம்மா சிறு கதைகள் "இவன் ஒரு சாமான்யனின் சரிதம்" ஆகிய இரு நூல்களையும் நூலாசிரியரிடமிருந்து இலங்கைப் பொன்மனச்செம்மல் கவிஞர் தாஜ்மஹான் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.



கொழும்பு இந்துக் கல்லூரி, இரத்மலானையில் (06) பாடசாலை அதிபர் சி. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற 13 வருட உத்தரவாதக் கல்வித்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு மேல்மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஸ்ரீலால் நோனிஸ், பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பத்தோடு அன்றைய தினம் இக் கல்வித்திட்டத்திற்குரிய வகுப்பறை மற்றும் கனணி அறைகள் என்பன அவரால் திறந்து வைக்கப்பட்டன இதன்போது பிடிக்கப்பட்ட படங்கள்.

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429294, 2429296
பெக்ஸ் : 2429329

சார்வரி வருடம் பங்குனி மாதம் 29ம் நாள் ஞாயிற்றுக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷஃபான் பிறை 28

# மணிவண்ணன் கைதும் மாநகரசபையும்

இலங்கையில் உள்ள மாநகர சபைகளில் முக்கியத்துவம் பெற்ற ஒரு நகர சபையாக யாழ். மாநகரசபை விளங்குகிறது. தமிழர்கள் செறிந்து வாழும் ஒரு நகரத்தில் தமிழர்கள் ஆளும் தரப்பிலும் எதிர்த் தரப்பிலும் அமர்ந்து சபை எல்லைக்குட்பட்ட நிர்வாகத்தையும், அபிவிருத்தி நடவடிக்கைகளையும் நடத்தவும் வகுக்கவும் கூடிய ஒரே சபை இலங்கையில் யாழ். மாநகர சபை மட்டுமே. மிகச் சிறப்பாக இயங்கிய சபையாக இது விளங்கிய போதிலும் 1975 துரையப்பா படுகொலையின் பின்னர் நகர நிர்வாகம் படிப்படியாக நலிவடைந்து தீவிரவாதிகளின் கைகளுக்குச் சென்றதும் பின்னர் 2009 செப்டம்பர் முதலாம் திகதி யோகேஸ்வரி பற்குணராஜா புதிய மாநகர முதல்வராக பதவியேற்கும் வரை யாழ். மாநகரம் மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சியில் இருக்கவில்லை. கைவிடப்பட்ட நிலையில் இருந்தது என்பதே உண்மை.

வடபுலத்து தமிழ்ச் சமூகத்தின் நீண்ட நாள் கோரிக்கை, தமது அபிவிருத்தியைத் தாமே திட்டமிட்டு நிர்வகிக்கும் அதிகாரம் தம் வசம் வழங்கப்பட வேண்டும் என்பதே. கேட்கப்படும் அதிகார அலகுகளின் எல்லைகளில்தான் பிரச்சினை காணப்படுகிறதே தவிர, கோரிக்கையில் அல்ல, அதேபோல யுத்தத்தின் பின்னர் முதல் தடவையாக வடமாகாண சபைத் தேர்தலும் நடைபெற்று முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையில் ஆட்சியும் நடைபெற்றது. இம் மாகாண சபையின் ஆட்சி எவ்வாறு அமையும், மிகச் சிறப்பாகவும் எடுத்துக்காட்டாகவும் அமையுமா என நாடெங்கும் ஒரு எதிர்பார்ப்பு நிலவியதும் அந்த எதிர்பார்ப்பில் மண் அள்ளிப் போடப்பட்டதும் நாம் அறிந்தவையே.

யாழ். மண் நிறைய பிரச்சினைகள் கொண்டது. ஒரு போரைச் சந்தித்து மீண்டு வந்த மண் என்பதால் உறுதியாக நின்று செம்மையாக செயல்பட வேண்டிய அவசியம் இம் மண்ணில் இயங்கும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளுக்கு உண்டு. அதேபோல, யாழ். மாநாகர சபையும் சக்திமிக்கதாக இயங்கி மாநகர எல்லைவாழ் மக்களின் தேவைகளை நிறைவேற்றி வைக்க வேண்டிய பொறுப்பையும் கொண்டிருக்கிறது.

யாழ். நகரில் ஒரு நிர்வாக அமைப்பு 1923ம் ஆண்டு தோற்றம் பெற்றது. பத்து உறுப்பினர்களைக் கொண்ட நகர மாவட்ட கவுன்சில் நகர நிர்வாகத்தை பொறுப்பேற்றது. பின்னர் 1940ம் ஆண்டு யாழ். நகர சபை உதயமானது. 1949ம் ஆண்டு ஜனவரி மாதம் 15 உறுப்பினர்களைக் கொண்ட யாழ். மாநகரசபை இயக்கத்துக்கு வந்தது. கனகரட்னம் சபையின் முதல் முதல்வராக தெரிவாகினார்.

நகர சபை இயற்க ஆரம்பித்தாலும் 1975க்குப் பினன்ர் ஏற்பட்ட அசாதாரண சூழல்களினால் நகரசபை இயங்கவும் இல்லை; வரி அறவிடப்படவும் இல்லை. திருமதி யோகேஸ்வரி நகர முதல்வராக பதவியேற்ற போது இறுகிப்போயிருந்த மாநகரசபையின் சக்கரங்களை இயங்கச் செய்வதே அவர் முன்பிருந்த பாரிய சவாலாக இருந்தது.

விக்னேஸ்வரனின் காலத்தில் மாகாணசபை மக்கள் அபிலாசைகளை பூர்த்தி செய்வதாக அமையவில்லை என்பது உண்மையானாலும் தற்போது அச் சபையே முடங்கிக் கிடக்கிறது. இவ்வருட இறுதிக்குள் தேர்தல் நடத்துவதற்கு அரசு முயற்சித்தாலும் அதில் சிக்கல்கள் இருப்பதால் மாநகரசபை தேர்தல் சாத்தியப்படுமா என்று தெரியவில்லை. நகரசபையை எடுத்துக் கொண்டால் அது இயங்க ஆரம்பித்து பத்து ஆண்டுகளே கடந்துள்ளன. யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் பிரச்சினைகள். அபிவிருத்தித் திட்டங்கள். கட்டமைப்புகளை மேலும் விருத்தி செய்தல் போன்ற பலவற்றை அடையாளம் காணவும் தீர்க்கவும் மற்றும் நிதி ஆதாரங்களைத் தேடவும் வேண்டும். இதற்கு சீரான நிர்வாகம் அவசியம்.

2018ம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் யாழ். மாநகரசபையை இலங்கை தமிழ் அரசு கட்சி கைப்பற்றியது. இமானுவேல் ஆர்னோல்ட் மாநகர முதல்வரானார். அவரால் மூன்று ஆண்டுகளைக் கூட பூர்த்தி செய்ய முடியவில்லை. எதிர்த் தரப்பின் காய் நகர்த்தல்களின் விளைவாக அவர் பதவி கவிழ்க்கப்பட்டு 2020 டிசம்பர் 30ம் திகதி இன்றைய முதல்வர் மணிவண்ணன் மாநகர பிதாவானார். அவர் பதவியேற்ற சில மாதங்களிலேயே கடந்த வாரம் ஒன்பதாம் திகதி காலை அவர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு பின்னர் பிணையில் விடப்பட்டுள்ளார். அது ஒரு நீல நிற சீருடை விவகாரம்தான். விசாரணைகளின் பின்னர் அவர் குற்றம் புரிந்துள்ளாரா என்பது தெரியவரும். நாம் கவலைப்படுவதெல்லாம் மூன்று வருட காலத்தில் இரண்டு முதல்வர்கள் பதவியேற்றிருப்பதும் அதனால் மாநகர சபையின் செயற்பாடுகள், திட்டமிடல், நிதி ஆதாரங்களை அடைதல் என்பனவற்றிலும் ஒட்டு மொத்தமாக ஏற்பட்டுவரும் பின்னடைவும், சரிவும், இயங்கா நிலையையும் தான். முதல்வர் மணிவண்ணன் கைது செய்யப்பட்டுள்ளார் என்றால் இதுபோலவே வேறு இடங்களிலும் உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்கள் ஆளுநர்மார்களினால் நீக்கப்படும் சம்பவங்களைப் பார்க்கிறோம்.

மக்களால் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் அவர்களது பதவி காலத்தில் நீக்கப்படுவது தற்போது அதிகரித்து வருவதைக் காண்கிறோம். இது கவனமாக ஆராயப்பட வேண்டும். உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்படும் கணிசமான உறுப்பினர்கள் குற்றப் பின்னணி கொண்டவர்களாக உள்ளனர் என்பதும் அவர்கள் மீது ஏற்கனவே பல குற்றச் சாட்டுகள் இருப்பதும் அல்லது தமது பதவி காலத்திலேயே குற்றச் செயல்களில் ஈடுபடுவதையும் நாம் அவதானித்துள்ளோம். இவர்களை தெரிவு செய்து அரசியல் கட்சிகளே வேட்பாளர்களாக நியமித்து அவர்களை வெற்றிபெறவும் செய்கின்றன. வாக்காளர்களும் இத்தகையோரின் குற்றப் பின்னணியைப் பற்றிக் கவலை கொள்ளாமல் கட்சியை நினைவில் இருத்தி இத்தகையோருக்கு வாக்களித்து விடுகிறார்கள். அரசியல் கட்சிகள் செய்யும் தவறினால் பாதிக்கப்படுவது அந்தந்தப் பகுதிகளின் அபிவிருத்தியும் மக்களின் வரிப்பணமுமே.

யாழ். மாநகரசபை மூன்றாண்டுகளில் இருவேறு கட்சிகளின் இரண்டு முதல்வர்களை கண்டிருக்கிறது. அவரது கைது தொடர்பாக பாராளுமன்றத்தில் கருத்து தெரிவித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, பொலிஸ் உத்தியோகத்தர்களின் பணிகளை இன்னொரு சீருடை அணிந்தோர் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்று காட்டாமகப் பேசினார். எனவே இச்சீருடை அணிந்தோர் ஏன், எதற்காக நியமனம் செய்யப்பட்டனர் என்பது கண்டறியப்பட வேண்டும் என்பது ஒரு புறமிருக்க மாநகரசபையின் இயக்கத்தை சீர்குலையச் செய்யும் இத்தகைய நடவடிக்கைகளை முறைப்படியும் முன் அனுமதிகளுடனும் செய்திருந்தால் இந்த அனாவசிய குழப்பங்களையும் சந்தேகங்களையும் தவிர்ந்திருக்கலாம்.

தமிழ் மக்கள் பல பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர். கிடைக்கும் வாய்ப்புகளை செம்மையாகப் பயன்படுத்தி மக்கள் சேவையாற்ற வேண்டியதே முக்கியம். அதே சமயம் எடுத்ததற்கெல்லாம் சந்தேகப்படுவதும் அதை பூதாகரமாக முன்நிறுத்துவதும் தவிர்த்தல் நல்லது. காயங்கள் ஆற வேண்டும் என்பதே முக்கியம்.

தினகரன் விளம்பரம் : 0112429367 | விற்பனை பிரிவு : 0112429444, 0112429378 | விளம்பர முகாமையாளர் : 0112429673 | தினகரன் ஆசிரியபீடம் : editor.vm@lakehouse.lk

# புயலாக உருவெடுத்து தணிந்து போன சீருடை விவகாரம்!

**யாழ். மாநகரசபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தற்பொழுது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள சம்பவமானது, உள்நாட்டில் மாத்திரமன்றி சர்வதேச ரீதியிலும் கவனத்தை ஈர்த்துள்ள விடயமாக மாறியுள்ளது.**

தடைசெய்யப்பட்ட பயங்கரவாத இயக்கமென அறிவிக்கப்பட்டுள்ள எல்.ரி.ரி.ஈ இயக்கத்தை மீண்டும் உருவாக்க முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே மணிவண்ணன் கைது செய்யப்பட்டிருந்தார்.

யாழ். நகரப் பகுதியை தூய்மையாகப் பேணும் நோக்கில் பொது இடங்களில் குப்பைகளை வீசுபவர்கள் மற்றும் எச்சில் உமிழ்பவர்களுக்கு எதிராக தண்டப் பணம் அறவிடுவதற்காக விசேட குழுவொன்றை யாழ் மாநகரசபை முதல்வர் நியமித்திருந்தார்.

யாழ் மாநகர சபையின் பணியாளர்கள் ஐவர் இதற்காக நியமிக்கப்பட்டிருந்ததுடன், இவர்களுக்கு விசேட சீருடையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. கடும் நீல நிற நீளக் காற்சட்டையும், மென்நீல நிற மேற்சட்டையுமாக இந்த சீருடை அமைந்திருந்தது.

இவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட சீருடையில் ஐந்து மாநகரசபை ஊழியர்களும் பணியில் ஈடுபடும் படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்ட அதேசமயம், அப்படங்களை எல்.ரி.ரி.ஈயினரின் காவல்துறையினரின் அன்றைய படங்களுடன் ஒப்பிட்டு பல பதிவுகள் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டிருந்தன. இதனால் பெரும் சர்ச்சை உருவாகியிருந்தது.

இது குறித்து யாழ் மாநகரசபை முதலர்வ மணிவண்ணன் ஊடகங்களுக்கு விளக்கமளித்திருந்தார்.

'யாழ். மாநகர சபையால் மாநகரத்தை தூய்மைப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைச் செயற்பாட்டுக்காகவே இந்தக் குழு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள சீருடையில் எந்த விதமான உள்நோக்கமும் கிடையாது' என அவர் குறிப்பிட்டிருந்தார்.

'இந்தப் புதிய காவல் படையானது, ஏற்கனவே மாநகர சபையில் பணிபுரியும் ஐந்து ஊழியர்களைப் பயன்படுத்தியே உருவாக்கப்பட்டுள்ளது. இவர்கள் வடக்கில் உள்ள ஒரேயொரு மாநகரத்தைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருப்பதற்காக, குப்பைகளைக் கண்டபடி போடுபவர்கள் மற்றும் நகரை அசுத்தமாக்கும் பிற செயற்பாடுகளைச் செய்பவர்களைக் கண்டறிந்து அந்தச் செயற்பாடுகளைத் தடுப்பவர்களாகவே இருப்பர்' என்றும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

அத்துடன், இந்தச் செயற்பாடு கொழும்பு மாநகர சபையின் செயற்பாட்டைப் பின்பற்றியே முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் வீண்பழி சுமத்தப்படுவதாகவும் யாழ் மாநகரசபை முதல்வர் ஊடகங்களுக்குக் கூறியிருந்தார்.

இந்த நிலையிலேயே கடந்த வியாழக்கிழமை யாழ் மாநகரசபையில் அறிமுகப்படுத்தப்பட்ட சீருடையைப் பெற்றுச் சென்றிருந்த பொலிஸார், அன்று இரவு 8 மணிக்கு யாழ் மாநகரசபை முதல்வர் மணிவண்ணனை விசாரணைக்காக அழைத்திருந்தனர்.

அவரிடம் ஆறு மணி நேர விசாரணை முன்னெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதிகாலை 1.45 மணியளவில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு வவுனியா அழைத்துச் செல்லப்பட்டிருந்தார். அவருடைய இந்தக் கைது விவகாரம் பாராளுமன்றத்திலும் எதிரொலித்திருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்கள் எனப் பலரும் இவ்விவகாரம் தொடர்பாக பாராளுமன்றத்தில் குரல் எழுப்பியிருந்தனர்.

இதற்கு அரசாங்கத்தின் சார்பில் பதில் வழங்கியிருந்த சபை முதல்வரும் வெளிநாட்டு அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன, இவ்விடயத்தில் மத்தியஸ்தம் செய்யுமாறு சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு அரசாங்கம் அறிவுறுத்தியிருப்பதாகவும், இதில் ஏற்படுகின்ற முன்னேற்றம் குறித்து உடனுக்குடன் தெரியப்படுத்துவதாகவும் கூறியிருந்தார்.

அரசியல்வாதிகள் மாத்திரமன்றி வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட பலரும் இவ்விவகாரம் தொடர்பில் தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர். இந்த நிலையிலேயே வெள்ளிக்கிழமை பிற்பகல் யாழ் நீதிமன்றத்தில் மணிவண்ணன் ஆஜர்படுத்தப்பட்டார்.

இவரின் விடுதலைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட 25 இற்கும் அதிகமான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

'குறித்த சீருடையில் எந்த விதமான உள்நோக்கமும் கிடையாது, இதில் எல்.ரி.ரி.ஈயினரின் சின்னமோ எதுவுமோ கிடையாது. யாழ் மாநகர சபையின் சின்னமே அதில் பொறிக்கப்பட்டுள்ளது' என்று நீதிமன்றத்தில் சுட்டிக் காட்டப்பட்டதுடன், கொழும்பு மாநகர சபையைப் பின்பற்றியே சீருடையின் நிறம் தெரிவு செய்யப்பட்டது என்றும் நீதிமன்றத்தில் சட்டத்தரணிகளால் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி மாநகரசபை சட்டத்துக்கு அமைய விசேட பணிகளுக்காக ஊழியர்களை நியமிக்கும் அதிகாரம் முதல்வருக்கு உள்ளது என்ற விடயமும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த வாதப் பிரதிவாதங்களை செவிமடுத்த நீதிமன்றம், மணிவண்ணனை பிணையில் செல்வதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்த வழக்கு ஜுன் மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.



இந்த சீருடை விவகாரம் சமூக ஊடகங்களின் மூலம் சர்ச்சைக்குரிய விடயமாக மாற்றப்பட்ட நிலையில், தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிலரும் இதனை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர் என்றே சொல்ல வேண்டும். இதன் காரணமாகவே இவ்விவகாரம் பாராளுமன்றத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

**சர்ச்சைக்கு மத்தியில் பதவியேற்ற சிறிது காலத்திலேயே, சிக்கலில் அகப்பட்டுக் கொண்ட யாழ் மாநகர முதல்வர் மணிவண்ணன்!**






இந்த நிலையில் மணிவண்ணனை விடுவிப்பதற்காக ஆஜராகியிருந்த சட்டத்தரணியும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், "ஒரே நாடு ஒரே சட்டம் எனக் கூறப்பட்டு வரும் நிலையில் கொழும்பு மாநகர சபையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சீருடையை ஒத்த சீருடையுடன் யாழ் மாநகரசபை பணியாளர்கள் மாத்திரம் செயற்படுவதற்கு தடை விதிப்பது எந்த விதத்தில் நியாயமானது?" எனக் கேள்வியெழுப்பியிருந்தார்.

மக்களை எப்பொழுதும் அச்சத்தின் விளிம்பில் வைத்துக் கொள்ளும் அரசாங்கத்தின் முயற்சியின் ஒரு அங்கமே இது என்பது அவருடைய கருத்தாகவிருந்தது.

உட்கட்சி கழுத்தறுப்பு, கட்சியிலிருந்து இடைநீக்கம் என தொடர்ச்சியான சவால்களுக்கு மத்தியிலேயே மாநகரசபையின் முதல்வர் பதவியை மணிவண்ணன் ஏற்றிருந்தார். தான் சார்ந்திருந்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியே அவரை இடைநிறுத்தி, அக்கட்சி உறுப்பினர்களே அவருக்கு எதிராக செயற்படும் அரசியல் பின்னணியில் மணிவண்ணனுக்கு தொடர்ச்சியாக சவால்கள் வந்துள்ளன.

ஈ.பி.டி.பி உள்ளிட்ட சில கட்சிகளின் ஆதரவுடனேயே மணிவண்ணன் முதல்வராகியிருப்பதால் ஏற்கனவே பல்வேறு விடயங்களில் அவருக்கு அழுத்தம் காணப்படுகிறது. இதற்கிடையில் புதிய சீருடை சர்ச்சை அவருக்கு மத்திய அரசாங்கத்திலிருந்து ஒரு அழுத்தமாக அமைந்து விட்டது. சவால்களுக்கு மத்தியில் பெற்றுக் கொண்ட பொறுப்பை சரிவரச் செய்து தனது வினைத்திறனை நிலைநிறுத்தும் முயற்சியாக எடுத்த நடவடிக்கை அவருக்கு புதியதொரு சவாலை ஏற்படுத்தி விட்டது என்றே கூற வேண்டும்.

யாழ் மாநகரசபையின் பதவிக் காலம் இன்னும் ஒருவருடமே இருப்பதால் இதுபோன்ற சவால்களுக்கும் சர்ச்சைகளுக்கும் மத்தியில் மணிவண்ணன் தனது நிர்வாகத் திறமையை எவ்வாறு வெளிப்படுத்தப் போகின்றார் என்பது குறித்தே பலரும் கவனம் செலுத்துகின்றனர். அதேசமயம் இந்த சீருடை விவகாரம் பாரிய சிக்கல் எதுவுமின்றி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதும் நல்லதொரு விடயமாகும். இல்லையேல் தென்னிலங்கையில் அது மேலும் புயலைக் கிளப்பி விட்டிருக்கக் கூடும்.

பி.ஹர்ஷன்...



வார இறுதி
## அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்



# எஞ்சியிருந்த எம்.பி ஆசனத்தையும் பறிகொடுத்த ரஞ்சன் ராமநாயக்க!

**நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்காக உயர்நீதிமன்றத்தினால் நான்கு ஆண்டுகள் கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அத்தண்டனையை தற்போது அனுபவித்து வருகின்ற ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வறிதாகியிருப்பதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.**

பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்க அரசியலமைப்பின் ஊடாகத் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கான வெற்றிடம் உள்ளது என்பதை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பு வெளியாகி ரஞ்சன் ராமநாயக்க நான்கு ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்கத் தொடங்கியிருந்த போதும், தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவி வறிதாவதைத் தடுக்கும் வகையில் மேன்முறையீடு செய்திருந்தார். இது தொடர்பாக முடிவு எடுக்கப்படும் வரை பாராளுமன்ற உறுப்பினர் பதவி வறிதாகிறது என்ற அறிவிப்பை விடுப்பதற்கு தற்காலிக தடை உத்தரவு நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இவ்வார ஆரம்பத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றம் ரஞ்சன் ராமநாயக்கவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரிட் மனுவை தள்ளுபடி செய்வதாக அறிவித்தது. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து அவருடைய பாராளுமன்ற உறுப்பினர் பதவி வறிதாகிறது என்ற அறிவிப்பும் வெளியாகியது.

இந்த விவகாரம் இவ்வாரம் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வுகளில் பெரிதும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. பாராளுமன்றத்தில் பெரும் சர்ச்சைக்குரிய விவகாரமாகவும் இது அமைந்திருந்தது. ரஞ்சன் ராமநாயக்கவை பாராளுமன்றத்துக்கு அழைத்து வருவதற்கான கடும் முயற்சியில் அவருடைய அரசியல் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஈடுபட்டிருந்தது. தொடர்ச்சியாக இவ்விடயத்தை பாராளுமன்றத்தில் அவர்கள் முன்வைத்தபடி வந்தனர். அந்த விவகாரம் தொடர்பாக அரசு மீது எதிர்க்கட்சியினர் கண்டனங்களையும் தெரிவித்து வந்தனர்.

ரஞ்சன் ராமநாயக்க மீதான குற்றச்சாட்டு மூன்றரை வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவமொன்று தொடர்பானதாகும். அன்று அவர் தெரிவித்திருந்து கருத்தானது நாட்டின் நீதித்துறையை காரசாரமாக விமர்சிக்கும் வகையில் அமைந்திருந்ததுடன், அவர் தெரிவித்த கருத்தை பலர் கண்டனமும் செய்திருந்தனர். நீதித்துறையை இவ்வாறு அவமதிப்பது குற்றமென்பதை பலர் கண்டித்தனர்.

2017ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21ம் திகதி அப்போதைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவுடன் அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ரஞ்சன் ராமநாயக்க, 'இந்நாட்டு நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளுள் அநேகமானோர் மோசடி மிக்கவர்கள்' எனக் கூறியியிருந்தார்.

அவருடைய இந்தக் கருத்தும், அதனைத் தொடர்ந்து பல தடவைகள் நீதிபதிகளை விமர்சித்து முன்வைத்த கருத்துக்களுமே ரஞ்சன் சிறை செல்லக் காரணமாகியிருந்தன. நாட்டின் சட்டதிட்டங்களைப் பொறுத்தவரை அவர் அவ்வாறு கூறியிருந்தது கடுமையான குற்றமாகும்.

இராஜாங்க அமைச்சராகவிருந்த அவர் கூறிய இந்தக் கருத்து, ஒட்டுமொத்த நீதிமன்ற கட்டமைப்பு மீதும் பொதுமக்களுக்கு இருக்கும் நம்பிக்கையை சீர்குலைக்க முயற்சிப்பதாகவும், இதன் மூலம் நீதிமன்றத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியிருப்பதாகவும் குற்றம் சுமத்தி மாகல்கந்த சுதத்த தேரர் மற்றும் ஓய்வு பெற்ற விமானப் படை அதிகாரியான சுனில் பெரேரா ஆகியோர் உச்சநீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

இதனை விசாரித்த உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் அடங்கிய குழு, ரஞ்சன் ராமநாயக்கவுக்கு கடந்த ஜனவரி மாதம் 12ஆம் திகதி நான்கு வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்திருந்தது.

இந்தத் தீர்ப்பினைத் தொடர்ந்து ரஞ்சன் ராமநாயக்க சிறையில் அடைக்கப்பட்ட போதும், பாராளுமன்றத்துக்கு வருவதற்கான முயற்சிகளை அவருடைய சட்டத்தரணிகள் மூலம் மேற்கொண்டிருந்தார். இதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்திருந்தார்.

இருந்த போதும் அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த நிலையிலேயே அவருடைய பாராளுமன்ற ஆசனம் வறிதாவதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்தார். இது தொடர்பில் எதிர்க் கட்சியினர் பாராளுமன்றத்தில் குழப்பத்தில் ஈடுபட்டிருந்தனர். கடுமையான கண்டனங்களை எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர்.

எனினும், அரசியலமைப்புக்கு உட்பட்டே அவருடைய பாராளுமன்ற ஆசனம் வறிதாகியுள்ளது என்பதை செயலாளர் நாயகம் அறிவித்திருப்பதாக சபாநாயகர் பாராளுமன்றத்தில் விளக்கமளித்தார்.

அரசியலமைப்பின் 66 (ஈ) சரத்துக்கு அமையவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக சபாநாயகர் தெரிவித்தார். அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

89ஆம் அல்லது 91ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தகைமையீனத்துக்கு அவர் இலக்காகினால் வறிதாதல் வேண்டும் என்பதே சரியாகும். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உறுப்புரிமை வறிதாவதற்கான காரணம் பற்றி அரசியலமைப்பின் 89வது சரத்து தெளிவாகக் குறிப்பிடுகிறது.

அதில் குறிப்பிடப்படுவதாவது,

'இரண்டாண்டுகளுக்குக் குறையாதவொரு காலத்திற்கான மறியல் தண்டனையால் தண்டிக்கப்படக் கூடிய தவறொன்றுக்காக ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் அதனால் விதிக்கப்பட்ட ஆறு மாதங்களுக்குக் குறையாத ஒரு காலத்திற்காக மறியல் தண்டனையை (அது எப்பெயரினால் அழைக்கப்பட்டிருப்பினும் சரி) இப்போது அனுபவித்து வருபவராயிருத்தால், அல்லது நேர்முற்போந்த ஏழு ஆண்டு காலப் பகுதியின் போது அத்தகைய தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டவராயிருந்தால், அல்லது அத்தகைய மரண தண்டனைத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்குப் பதிலாக அளிக்கப்பட்ட ஆறு மாதங்களுக்குக் குறையாதவொரு காலத்துக்கான மறியல் தண்டனையை அனுபவிப்பவராயிருந்தால் அல்லது நேர்முற்போந்த ஏழு ஆண்டு காலப் பகுதியின் போது அத்தகைய தண்டனையை அனுபவித்து முடித்தவராயிருந்தால் ஆயின் இப்பந்தியின் கீழ் தகைமையற்றவராக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு கட்டற்ற மன்னிப்பு அளிக்கப்பட்டால் அத்தகைய தகைமையீனம் , அம்மன்னிப்பு அளிக்கப்பட்ட திகதியிலிருந்து இல்லாதொழிதல் வேண்டும்,' எனத் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு அமைய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உறுப்புரிமை வறிதாகியிருந்தால், அது பற்றி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கும் பொறுப்பு பாராளுமன்ற செயலாளர் நாயகத்துடையதாகும்.

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் அறிவிப்புக் கிடைத்ததும் குறித்த மாவட்டத்தில் அடுத்த இடத்தில் இருக்கும் நபரை பாராளுமன்ற உறுப்பினராக அறிவித்து தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதே நடைமுறையாகும்.

இந்த நடைமுறைகளுக்கு அமைய செயற்பட்ட தேர்தல்கள் ஆணைக்குழு ரஞ்சன் ராமநாயக்கவுக்கு அடுத்ததாக கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் காணப்பட்ட வேட்பாளரான அஜித் மான்னப்பெருமவின் பெயரை வர்த்தமானியில் வெளியிட்டது. இதன்படி அஜித் மான்னப்பெரும புதிய பாராளுமன்ற உறுப்பினராக கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.



## எதிர்க் கட்சியினரின் எழுந்தமானமான குற்றச்சாட்டுக்கு அரசியலமைப்பு ரீதியாக தெளிவான விளக்கமளித்த சபாநாயகர்

நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்ட காரணத்துக்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது பாராளுமன்ற உறுப்புரிமையை இழந்த பல சம்பவங்கள் இதற்கு முன்னர் இடம்பெற்றுள்ளன.

இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவும் தனது பாராளுமன்ற உறுப்புரிமையை இழந்திருந்தார். இராணுவ நீதிமன்றத்தினால் அவருக்கு இரண்டரை ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அவர் தனது பாராளுமன்ற உறுப்புரிமையை இழந்திருந்தார்.

இந்த நிலையில் நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்க தற்போது தனது பாராளுமன்ற உறுப்புரிமையை இழந்துள்ளமை அரசியல் அரங்கத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் அண்மைய அரசியல் வரலாற்றில் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்காக சிறைக்குச் சென்ற இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினராக ரஞ்சன் ராமநாயக்க காணப்படுகின்றார். இதற்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க நீதிமன்றத் தீர்ப்பொன்றை விமர்சித்ததன் காரணமாக அவருக்கு இரண்டு வருட கால கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

எனினும், தனக்கு வழங்கப்பட்ட தீர்ப்புத் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அவர் முறைப்பாடு செய்திருந்ததுடன், 2004ஆம் ஆண்டு சிறைக்குச் சென்றிருந்த அவர் 2006ஆம் ஆண்டு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுலை செய்யப்பட்டிருந்தார்.

சினிமா நடிகராகவிருந்து, அரசியல்வாதியாக மாறிய ரஞ்சன் ராமநாயக்க ஊழலுக்கு எதிராகவும், வெளிநாடுகளில் பணியாற்றும் பெண்களின் உரிமைகளுக்காகவும் தொடர்ந்தும் குரல் கொடுத்து வந்திருந்தார். இருந்தபோதும் பாராளுமன்றத்தில் அவர் முன்வைக்கும் சில குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவையாகக் காணப்பட்டதுடன், வாய்க்கு கடிவாளம் இல்லாது அவர் அடுக்கிச் சென்ற குற்றச்சாட்டுக்கள் அரசியல்வாதிகளை சீற்றத்துக்கும் சங்கடத்துக்கும் உள்ளாக்கியிருந்ததை கடந்த காலத்தில் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

பொறுப்பு வாய்ந்த ஒரு அரசியல்வாதிக்கு அவ்வாறான வார்த்தைப் பிரயோகங்கள் பொருத்தமானவை அல்ல. அது மாத்திரமன்றி, அரசியல்வாதிகள் உள்ளிட்ட பல்வேறு பிரபலங்களுடன் அவர் நடத்திய தொலைபேசி கலந்துரையாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு அவை பகிரங்கப்படுத்தப்பட்டதால் பலர் அசௌகரியங்களுக்கும் உள்ளாகியிருந்தனர்.

அவையெல்லாம் மக்கள் மத்தியில் அருவருப்பை ஏற்படுத்தி இருந்தன. இதுபோன்று பரபரப்புக்களுக்கு பஞ்சம் இல்லாத ஒரு நபராகவே ரஞ்சன் ராமநாயக்க காணப்பட்டார்.

எனினும், அரசியல் ரீதியாகப் பழிவாங்கும் நோக்கிலேயே அவருடைய பாராளுமன்ற உறுப்புரிமை பறிக்கப்பட்டிருப்பதாக எதிர்க் கட்சியினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர். இருந்தாலும் இதனை அரசாங்கத் தரப்பு முற்றுமுழுதாக மறுத்திருப்பதுடன், 'இதில் எந்த விதமான அரசியல் நோக்கங்களும் இல்லை. நாட்டின் நீதிமன்ற சட்டங்களுக்கும், அரசியலமைப்புக்கும் உட்பட்டதாகவே அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அரசியல் ரீதியாக அவரைப் பழிவாங்க வேண்டிய தேவை எமக்குக் கிடையாது' என அரசாங்கத்தின் அமைச்சர்கள் பலர் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர்.

அதேநேரம், ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்புரிமை பறிபோனதால் அவருடைய கட்சி உறுப்பினர்கள் சிலர் மகிழ்ச்சியடைந்திருப்பதாகவும், அவருடைய கம்பஹா மாவட்ட ஆதரவாளர்களை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள சிலர் முயற்சிப்பதாகவும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் பாராளுமன்றத்தில் குற்றஞ்சாட்டியிருந்ததும் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

எது எவ்வாறாக இருந்த போதிலும், மக்கள் ஆதரவுடன் பாராளுமன்றத்துக்கு தெரிவாகும் உறுப்பினர்கள் ஆதாரமற்ற வகையில் வார்த்தைகளை அள்ளி வீசுவது நாகரிகமல்ல என்பதையும், அவர்களது செயற்பாடுகள் பக்குவம் மிக்கதாகவும் மக்களுக்கு முன்மாதிரியாகவும் அமைய வேண்டும் என்பதையும் ரஞ்சன் ராமநாயக்க விவகாரம் எமக்கெல்லாம் சுட்டிக் காட்டுகின்றதென்பது மட்டும் உண்மை.

அவர் இப்போது நடிகனும் அல்ல, அரசியல்வாதியும் அல்ல. உயர்நீதிமன்றத்தினால் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டதனால், பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் இழந்துள்ள ஒருவராவார்.



அஜித் மான்னப்பெரும

**ஒழுக்க மரபுகள் கடைப்பிடித்தல், வரம்பு மீறாத வார்த்தைப் பிரயோகங்கள், அரசியல் நாகரிகம் பேணுதல் போன்றவையெல்லாம் மக்களின் பிரதிநிதிகளுக்கு மிக அவசியமென்பதை அனைவருக்கும் உணர்த்தியுள்ளது ரஞ்சன் ராமநாயக்க விவகாரம்**

# ஆயிரம் கிடைக்கும் ஆனால் வேறொன்றும் கிட்டாது என்பது கம்பனி நிலைப்பாடு!

**இ.தொ.கா.வால் மட்டுமே இதனைச் சாதிக்க முடிந்தது என்று அது கொக்கரிக்கலாம். அதற்கான களநிலவரம் சாதகமாகவே உள்ளது. விரைவில் வரலாம் என எதிர்பார்க்கப்படும் மாகாணசபைத் தேர்தலில் பிரதான துரும்புச் சீட்டாக 1000 ரூபா பெற்றுத் தந்ததைப் பாவிக்க இ.தொ.காவுக்கு நிறையவே வாய்ப்பு. இதனால் வீடமைப்புத் திட்டம் போன்று பாதியில் கைவிடப்பட்டுள்ள பல அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி மக்களின் அங்கலாய்ப்புகள் ஆறப்போடப் படலாம்'**

சம்பள நிர்ணய சபையின் ஆயிரம் ரூபா சம்பளம் என்ற முடிவை எதிர்த்து நீதிமன்றத்தில் கம்பனி தரப்பு தாக்கல் செய்த மனு விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் இடைக்காலத் தடை விதிக்க நீதிமன்றம் மறுத்துவிட்டது.

இதனால் சம்பள நிர்ணய சபையின் முடிவு நடைமுறைக்கு வருகிறது. மார்ச் 5ஆம் திகதியிலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் தினசரி வேதனமாக 1000 ரூபாவைப் பெற அருகதை உடையவர்கள் ஆகிறார்கள். கம்பனி தரப்பு அடிப்படைச் சம்பளமாக 900 ரூபாவை வழங்கவேண்டும். வாழ்கைச் செலவுப்படியாக 100 ரூபாவை அரசாங்கம் திறைசேரியிலிருந்து வழங்கும். இது எந்த அடிப்படையில் வழங்கப்படபோகிறது என்பதை பற்றி அறிவிக்கப்படாவிட்டாலும் காரியம் என்னவோ சித்தி. இதை வாசிக்கும் நேரம் 1000 ரூபா நாட் சம்பளத்தை தொழிலாளர்கள் பெற்றிருப்பார்கள்.

இதன் மூலம் அரசாங்க தரப்புக்கு ஒரு தலைவலி தீர்கின்றது. ஜனாதிபதியும் பிரதமரும் தேர்தல்கால வாக்குறுதியொன்றை நிறைவேற்றியுள்ளார்கள். பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன கூற்றில் சொல்வது என்றால் இது அரசாங்கத்துக்கு கிடைத்த வெற்றி. அரசே போராட வேண்டிய அளவுக்கு பலம் பொருந்தியதாக தோட்ட முதலாளிமார் சம்மேளனம் காணப்படுகின்றது.

இ.தொ.கா.வைப் பொறுத்தவரை இது ஆறுவருட போராட்டத்தின் அமோக அறுவடை. இ.தொ.கா.வால் மட்டுமே இதனைச் சாதிக்க முடிந்தது என்று அது கொக்கரிக்கலாம். அதற்கான களநிலவரம் சாதகமாகவே உள்ளது. விரைவில் வரலாம் என எதிர்பார்க்கப்படும் மாகாணசபைத் தேர்தலில் பிரதான துரும்புச் சீட்டாக 1000 ரூபா பெற்றுத் தந்ததைப் பாவிக்க இ.தொ.காவுக்கு நிறையவே வாய்ப்பு. இதனால் வீடமைப்புத் திட்டம் போன்று பாதியில் கைவிடப்பட்டுள்ள பல அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி மக்களின் அங்கலாய்ப்புகள் ஆறப்போடப் படலாம்.

மேலோட்டமாக பார்த்தால் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரதான பிரச்சினையாக பேசும் பொருளாகிய 1000 ரூபாய் தினச்சம்பளம் சாதிக்கப்பட்டாயிற்று. சரி தான். ஆனால் உள்ளோட்டமாக ஆராய்ந்தால் சில சங்கடங்களும் சண்டித் தனம் காட்டப் போவதைப் புரிந்து கொள்ளலாம்.

எவ்வித மேலதிக கொடுப்பனவுகளும் உள்ளடக்கப்படாமலே 1000 ரூபாய் கிடைக்கின்றது. அதனால் இதர சிறப்புக் கொடுப்பனவுகள், மாதம் இத்தனை நாட்கள் குறைந்தபட்சம் வேலை வழங்கப்பட வேண்டும் என்னும் புரிந்துணர்வு ஏற்பாடு, தொழிலாளர்களின் நலன் சார்ந்த நடவடிக்கைகள் அனைத்துமே கம்பனி தரப்புகளின் கரங்களுக்குள் தாரைவார்க்கப்பட்டிருக்குமோ என்னும் அச்சம் சிலருக்கு. ஏனெனில் இவைகளே கூட்டு ஒப்பந்தத்தின் சக்திவாய்ந்த சரத்துக்கள். இப்பொழுது கூட்டு ஒப்பந்தம் ஓரங்கட்டப்பட்டுள்ளது. அது மீளவும் களத்துக்கு வரவேண்டுமானால் சம்பள நிர்ணய சபையில் இருந்து பெருந்தோட்டத் தொழிற் சங்கங்கள் வெளியேற வேண்டும். அப்படி வெளியேறி மீண்டும் கூட்டு ஒப்பந்தப் பொறிமுறைக்குள் வந்தால் மட்டுமே தற்போது கேள்விக்குறியாகியிருக்கும் பல நன்மைகள் கிடைக்கும். இதனையே தோட்ட முதலாளிமார் சம்மேளன ஊடகப் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை அண்மையில் சூசகமாக சொல்லியிருந்தார்.

இதனாலேயே பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஏமாற்றப்படுள்ளார்கள் என்று ஒரு பிடி பிடிக்கின்றார் முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரம்.

> ‘ இனி தோட்டத் தொழிலாளர்கள் விவகாரத்தில் ஏதாவது நடக்க வேண்டுமானால் கம்பனி தரப்பை இணக்கப்பாட்டுக்கு கொண்டுவர முடியுமே தவிர பணிய வைக்க வாய்ப்பே இல்லை ’

## புலிவாலை பிடித்த கதையாகிவிட்டதா 1000 ரூபா சம்பள அதிகரிப்பு?

அவர் சொல்கிறார், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பு நடைமுறைக்கு வந்திருந்தாலும் மேலதிக கொடுப்பனவு உள்ளிட்ட பல்வேறு கொடுப்பனவுகள் இல்லாமல் செய்யப்பட்டு தொழிலாளர்கள் எமாற்றப்பட்டுள்ளதை எதிர்த்து போராட்டம் நடாத்த போகிறோம். புத்தாண்டுக்குப்பின் இது ஆரம்மாகும் என்கிறார்.

இதிலிருப்பது அரசியலாகவும் இருக்கலாம். மன அழுத்தத்தின் ஆதங்கமாகவும் இருக்கலாம். ஆனால் உண்மை இருக்கின்றது என்பதை முன்னாள் ஊவா மாகாண கல்வியமைச்சரும் பெருந்தோட்ட அபிவிருத்திக்கான பிரதமரின் இணைப்பாளருமாகிய செந்தில் தொண்டமான் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை எடுத்துக் காட்டவே செய்கின்றது.

பதுளை மாவட்டத்தில் பல தோட்டங்களில் தோட்டத் தொழிலாளர்களுக்கு மேலதிக கொழுந்துக்கான கொடுப்பனவை வழங்க கம்பனிகள் மறுக்கின்றன. இந்த அராஜக போக்கை கண்டிக்கின்றோம். அதிகரிக்கப்பட்டுள்ள சம்பளத்தில் மேலதிக கொடுப்பனவுகள் உள்ளடக்கப்படவில்லை. அடிப்படைச் சம்பளம் தான் 1000 ரூபாய். மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டால் மாத்திரமே எதிர்காலத்தில் தொழிலாளர் மேலதிக வேலைத் திட்டங்களை முன்னெடுப்பார்கள். அப்படி வழங்கப்படாவிடில் 30 நாட்கள் செய்யும் வேலையை இதுவரை 20 நாட்களில் செய்து வந்த நிலையை மாற்றி 30 நாட்கள் செய்து முடிக்கும் நடவடிக்கைகளில் இறங்க வேண்டிவரும். இதனால் கம்பனிகள் நாளாந்தம் 1000 ரூபா வீதம் 30 நாளைக்கு 30000 ரூபாவைச் சம்பளமாக வழங்க வேண்டிய நிலைமை ஏற்படும். இதுதான் செந்தில் தொண்டமானின் அறிவிப்பு. ஆக தொழிலாளர்கள் போராட்டம் 1000 ரூபா நாட் சம்பளத்தோடு அடங்கப் போவதில்லை. அதனைத் தக்க வைக்கவும் இதுவரை காலமும் பெற்றுவந்த மேலதிக கொடுப்பனவுகளைத் திரும்பவும் உறுதி செய்யவும் போராடியாக வேண்டியுள்ளது. இதனைத்தான் பழனி திகாம்பரமும் சொல்கிறார். செந்தில் தொண்டமானும் உறுதிப்படுத்துகிறார்.

முன்னையவர் வீதிப் போராட்டத்துக்கு விதி செய்யப்போகிறார். பின்னையவர் பீதியைக் கிளப்பி மெதுவாக வெலை செய்யம் திட்டத்துக்கு பச்சைக்கொடி காட்டுகின்றார். சம்பள நிர்ணய சபை அதன் கடமையை சரியாக செய்து முடித்துவிட்டது என்னவோ உண்மை தான். அரசாங்கமும் 1000 ரூபாய் நாட் சம்பளத்தை சட்டபூர்வமானதாக்கிவிட்டது. ஆனால் பிரச்சினை மட்டும் தீரவில்லை.

எனினும் சம்பள அதிகரிப்பு விவகாரத்தில் அரசாங்கத்தின் தலையீடு கம்பனிகளுக்கு விருப்பமான விடயமல்ல. கடந்த ஆட்சிக்காலத்தில் 50 ரூபா அதிகரிப்பு தர மறுத்து அது ஆடிய ஆட்டம் கொஞ்ச நஞ்சமல்ல. கடைசிவரை கம்பனி தரப்பை பணிய வைக்க முன்னைய ஆட்சியால் முடியாமல் போனது. அந்த வகையில் இந்த அரசாங்கம் கம்பனி தரப்பின் கடும் போக்கிற்கு தக்க பாடம் புகட்டியிருக்கின்றது. இனி தோட்டத் தொழிலாளர்கள் விவகாரத்தில் ஏதாவது நடக்க வேண்டுமானால் கம்பனி தரப்பை இணக்கப்பாட்டுக்கு கொண்டுவர முடியுமே தவிர பணிய வைக்க வாய்ப்பே இல்லை. பாராளுமன்றத்தில் கேள்வியொன்றுக்குப் பதிலளித்த பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன பெருந்தோட்டங்களைச் சுவீகரிக்க எந்தவொரு திட்டமும் இல்லை என்று கூறியுள்ளார்.

இனி அரசாங்கம் ஓரங்கட்டி நின்று நடப்பதை வேடிக்கைப் பார்க்கவும் செய்யலாம். சம்பள நிர்ணய சபையால் வேறு எந்த மேலதிக கொடுப்பனவுகளுக்கான பணிப்புரையை கம்பனிகளுக்கு விடமுடியாது. இதற்கிடையே என்னதான் வீராப்புப் பேசினாலும் மலையக தொழிற்சங்கங்களின் பலவீனம் சந்திக்கு வந்து நெடுநாளாயிற்று.

சோழியன் குடுமி சும்மா ஆடாது என்றொரு பழமொழி இருக்கிறது. 1000 ரூபாய் சம்பளத்தை தருகிறோம் என்று முதலாளிமார் சம்மேளனப் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை மகிழ்ச்சியுடன் கூறியிருப்பார் என்று நம்ப முடியுமா?

கம்பனி தரப்பு இந்தச் சம்பள விவகாரத்தை தமக்கு ஏற்பட்ட சறுக்கலாகவே கருதும். தானம் கொடுத்த மாட்டின் பல்லைப் பிடித்துப் பார்க்கும் பாமரத் தன்மையில் அது இயங்காது. இதற்காக இது சும்மாவும் இருக்காது. 1000 ரூபாய் சம்பள அதிகரிப்பின் பயனை முழுமையாக அனுபவிக்க முடியாதவாறு கம்பனிகள் கட்டாயம் காய் நகர்த்தவே செய்யும். அது முதலாளி வர்க்கத்துக்கே உரிய முதலீடு. இதன் ஆரம்பக் கட்டம் இப்பொழுது அரங்கேற ஆரம்பித்திருக்கிறது. இதனை எதிர்கொள்ள வேண்டிய தார்மீக பொறுப்பு சகல மலையக தலைமைகளுக்கும் இருக்கிறது. 1000 ரூபாய் வாங்கிக் கொடுத்த இ.தொ.காவுக்கு மேலதிக கொடுப்பனவு 40 ரூபாவை வாங்கித் தர முடியாதா என்று கேட்கிறார் செந்தில் தொண்டமான். அப்பாவித் தொழிலாளர்களை வீதிக்கு இறக்காமல் போராட்டங்களில் ஈடுபடுத்தாமல் சாதிக்க முடியுமானால் வரவேற்கத்தான் வேண்டும். புலிவாலை பிடித்த கதையாகிவிட்டதா 1000 ரூபா சம்பள அதிகரிப்பு?

> ‘1000 ரூபாய் சம்பள அதிகரிப்பின் பயனை முழுமையாக அனுபவிக்க முடியாதவாறு கம்பனிகள் கட்டாயம் காய் நகர்த்தவே செய்யும். அது முதலாளி மாரின் வர்க்க இதன் ஆரம்பக் கட்டம் இப்பொழுது அரங்கேற ஆரம்பித்திருக்கிறது ’

பன். பாலா ...

# பசறை பஸ் விபத்தில் தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு உதவுங்கள்

பசறை பஸ் விபத்தில் பலியான 14 பேரில் பாக்கியநாதன் யோகதாஸும் ஒருவர். இவரது இழப்பினால் ஐந்து பிள்ளைகளும், அவரது மனைவியும் பெரும் துயரில் இருப்பதுடன், எதிர்காலமும் கேள்விக்குறியாகியுள்ளது. இந்நிலையில் தமக்கு எவரும் உதவ முன்வருவார்களா என ஏக்கப்பெருமூச்சு விட்ட நிலையில் உள்ளனர்.


பாக்கியநாதன் யோகதாஸ்

பசறை மீதும்பிட்டிய பி. பிரிவு பெருந்தோட்டத்தைச் சேர்ந்த பாக்கியநாதன் யோகதாஸ் (53) லுணுகலை பசறை பஸ் விபத்தில் பலியானார். இவரது மனைவி வேலு சகாயமேரி (46) தனது ஐந்து பிள்ளைகளுடன் இதே தோட்டத்தில் வசித்து வருகிறார். சுகவீனம் காரணமாக அவரால் தொழில் செய்யமுடியாத நிலையிலுள்ளார்.

மகன் யோகதாஸ் வினோத் க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்து, உயர்தரத்திற்கு தெரிவாகியும், கல்வியைத்தொடர முடியாமல் தனியார் நிறுவனமொன்றில் விற்பனைப் பிரதிநிதியாக இருக்கிறார். மகன் யோகதாஸ் நிஸ்வதனன் ஆண்டு 10 வரை படித்திருக்கிறார். மகள் யோகதாஸ் அனிஷா க.பொ.த. உயர்தர கலைப்பிரிவில், லுணுகலை இராமகிருஸ்ணா மகா வித்தியாலயத்தில் கல்வியைத் தொடர்கிறார். மகன் யோகதாஸ் ஜோசப்பிரசாத் ஆண்டு எட்டிலும் மகன் யோகதாஸ் அபிஷேக் ஆண்டு தரம் ஐந்திலும் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்நிலையில் தமது பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு மனமுவந்து உதவுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.


யோகதாஸின் மனைவி பிள்ளைகளுடன்

விபத்தில் பலியான பாக்கியநாதன் யோகதாஸின் மனைவி வேலு சகாயமேரியை சந்தித்தோம். எமது குடும்பத்தை எனது கணவரே கவனித்து வந்தார். பிள்ளைகளை படிக்க வைத்து அவர்களை நல்லதொரு நிலைக்கு கொண்டுவர வேண்டும். பிள்ளைகள் நன்றாகப் படித்து தொழில் செய்யும் போது, அவர்களின் நிழலில் நாமும் வாழ்க்கை நடாத்தலாமென்று அடிக்கடி என்னிடம் கூறுவார். பெரும் எதிர்பார்ப்பு அவரிடம் இருந்தது. அவர் எடுக்கும் சம்பளத்தில் எமது குடும்ப வாழ்க்கை, வறுமையிலும் செம்மையாக அமைந்திருந்தது என்கிறார் சகாயமேரி.

வழமைபோன்று எனது கணவர் கடந்த 20ந்திகதி காலை பசறைக்கு தொழிலுக்காகப் புறப்பட்டார். அவர் சென்ற சில நிமிடங்களில் பஸ் விபத்துக்குள்ளானதை அறிந்து, அவ்விடத்திற்கு நாங்கள் சென்றோம். அங்கு ஒரே கூட்டம். காயப்பட்டவர்களையும், இறந்தவர்களையும் அம்பியூலன்ஸ் வண்டிகளில் ஏற்றிக்கொண்டிருந்தனர். கணவரை என்னாலோ, பிள்ளைகளாலோ பார்க்கமுடியவில்லை. மருத்துவமனையில் வைத்திருந்தபோதே அவரைப் பார்க்க முடிந்தது. எமது கனவு, எதிர்பார்ப்புகள் அனைத்தும் சுக்குநூறாகின. எனது பிள்ளைகளுக்காகவே வாழவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளேன்.

எனது பிள்ளைகளில் இருவருக்காவது அரச தொழில் வாய்ப்புக்கள் கிடைக்குமானால், எமது வாழ்வாதாரங்களை சீரமைத்துக்கொள்ளலாம். அத்துடன், எனக்கு கோழிவளர்ப்பு போன்ற சிறு கைத்தொழில்களை மேற்கொள்ள எவராவது உதவுவார்களானால் அதனூடாக வாழ்க்கையை கொண்டுநடத்தலாம் என கண்ணீர்மல்க கூறினார்.

வசதி படைத்தவர்கள் எவராவது இக்குடும்பத்தினருக்கு உதவ முன்வருவோர் **வேலு சகாயமேரி, சம்பத் வங்கி பசறை கிளை சேமிப்புக் கணக்கு இலக்கம் 114654558125** நிதி உதவிகளை வழங்க முடியும்.

மீதும்பிட்டிய “பி“ பிரிவைச் சேர்ந்த இராமன் நாகரட்ணம் (68) என்பவரும், இந்த பஸ் விபத்தில் பலியானார்.


கணவரை பறிகொடுத்த சுப்ரமணியம் லெட்சுமி

அவரது மனைவி சுப்ரமணியம் லெட்சுமி (62) கருத்துத் தெரிவிக்கையில், அவர் கலபட தோட்டத்தில் மருமகன் நோயினால் மரணமடைந்த செய்தியை கேட்டு அங்கு சென்றிருந்தார். அம்மரணத்திற்கு 'கோடி' புடவை எடுக்க பசறைக்கு போகவேண்டுமென்று கூறி, பஸ்ஸில் சென்றார். 'கோடி' எடுக்கச்சென்றவர் அப்படியே போய் விட்டார்.

எமக்கு இரு பிள்ளைகள். அவர்கள் திருமணம் செய்து சென்று விட்டனர். எனது மகளின் கணவரும் மரணமாகி விட்டார். அதனால், மகளையும் அவரது பிள்ளைகளையும் நானே பார்க்க வேண்டும். என்ன செய்வதென்றே தெரியவில்லை. கடவுள்தான் எம்மை காப்பாற்ற வேண்டும். எனது நிலையை நேரடியாகப் பார்த்து, எனக்கு உதவி செய்பவர்கள் **சுப்ரமணியம் லெட்சுமி, இலங்கை வங்கி, பசறைக்கிளை. கணக்கு இலக்கம் 5097311** உதவ முன்வருமாறு கேட்டுக்கொள்கின்றேன்“ என்றார். பசறை பஸ் விபத்தில் தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு உதவுங்கள்.

பதுளை எம்.செல்வராஜா ...

### ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தில்

# பெருந்தோட்டங்களும் உள்ளடக்கப்பட வேண்டும்




தேயிலை கைத்தொழிற்துறையை அடிப்படையாகக் கொண்ட தமிழ் தோட்ட சமூகத்தை சமமான உரிமைகளை அனுபவிக்கும் ஒரு சமூகமாகவே கருதுகின்றோம். எமக்கு அவர்கள் மீது வாக்கு பெறுமதிக்கு அப்பால் சென்று சகோதரவாஞ்சையே உண்டு. இதனால் நாம் கட்டியெழுப்பும் சுபீட்சமான தேசத்தில் அவர்களுக்கு மகிழ்ச்சியாக வாழக்கூடிய பொருளாதாரம் உயர்தரத்திலான வீடுகள், கல்வி மற்றும் சுகாதார வசதிகளைக் கொண்ட சொகுசான வாழ்க்கைக்கு அவர்களது தேவை மற்றும் கோரிக்கைகளுக்கு ஏற்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளம் 1000 ரூபாயாக அதிகரிக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது. சம்பளத்திற்கு மேலதிகமாக சகல குடும்பங்களுக்கும் வருமானத்தை பெற்றுக்கொள்வதற்காக தோட்டங்களில் தற்போது பயன்படுத்தாத காணிகளை உள்நாடு மற்றும் வெளிநாட்டில் கேள்வியாக உள்ள மல்லிகை பூ மற்றும் வேறு மலர் வகைகளை சேதன பசளையைக் கொண்டு செய்கை பண்ணப்படும். மரக்கறிகள் மற்றும் பழவகைகளை பயிர்செய்யும் வேலைத்திட்டம் மற்றும் காலநிலைக்கு பொருத்தமான இடை பயிர்களையும் பயிரிடுவதற்கான வேலைத்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

பெருந்தோட்ட மக்கள் வாழும் பகுதிகளில் தற்போது குறைபாடாக காணப்படும் உயர்தர விஞ்ஞான வணிக பாடங்களை கற்பிப்பதற்கான வசதிகள் உயர்தர கல்வி போதிக்கப்படும் சகல பாடசாலைகளுக்கும் தேவையான மனித மற்றும் பௌதிக வழங்கலை பெற்றுக் கொடுப்பதுடன் கடந்த காலங்களில் முறையற்ற வகையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஆசிரியர் உதவியாளர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும்.

பயிர்நிலங்களை பாதுகாக்கும் வகையில் நீண்டகாலம் நிலவிவரும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் பெருந்தோட்ட மக்களின் வீடில்லாப் பிரச்சினையை தீர்த்துவைப்பதற்கு தற்போது தோட்டப்புறங்களை அண்டிய பகுதிகளில் கொங்கிரீட் கூரைகளைக் கொண்ட வீடமைப்புத் திட்டம் ஒன்றையும் அரச மற்றும் தோட்ட உரிமையாளர்களின் பங்களிப்புடன் அறிமுகப்படுத்தப்படும். இந்த வீடமைப்புத் திட்டத்தில் சகல வசதிகளும் கொண்ட சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட வசதிகளும் கொண்ட வீடுகள் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

கா்ப்பிணித் தாய்மார் மற்றும் சிறுவர்களின் போஷாக்கு நிலையை மேம்படுத்துவதற்கு கிராமங்கள் மற்றும் தோட்ட மட்டத்தில் புதிய போஷாக்கு திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். அத்தோடு சகல தோட்ட மருத்துவமனைகளுக்கு தேவையான அனைத்து பௌதிக மற்றும் மனித வளத்தை வழங்கி சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

விவாசாய ஆராய்ச்சி அறிவு மற்றும் நவீன தொழில்நுட்ப பயன்பாட்டை இளைஞர், யுவதிகளுக்கு வழங்குவதற்காக விவசாயக் கல்லூரியொன்று உருவாக்கப்படுவதோடு சகல வசதிகளைக் கொண்ட தமிழ் மொழி மூல ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியொன்று அப்பகுதியில் உருவாக்கப்பட வேண்டும். பெருந் தோட்டத்துறை இளைஞர், யுவதிகளுக்கு தேவையான தொழிற் கல்வியை வழங்குவதற்காக திறந்த பல்கலைக் கழகக் கிளையொன்று ஹட்டனில் ஏற்கனவே அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்த பிரதேசங்களில் தற்போது மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகளை கண்டறிந்து தோட்டத்துறையை உள்ளடக்கும் வகையில் புதிய கைத்தொழில் வலயம் ஆரம்பிக்கப்பட வேண்டும். அரசாங்கத்திற்கு சொந்தமான தோட்டங்களில் பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக மீள் பயிர்செய்கை மற்றும் உர பயன்பாட்டுக்கு தேவையான மூலதனத்தை விநியோகிப்பதுடன் பொருத்தமான முகாமைத்துவ முறையொன்றை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இந்த தோட்டங்களில் உள்ள பழைய தோட்ட பங்களாக்கள் மற்றும் கைவிடப்பட்டுள்ள தேயிலை தொழிற்சாலைகளை சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய வகையில் பங்களாக்களாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக கொழும்பு ரேணுகா ஹோட்டலில் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளா் பி. முத்துலிங்கம் தலைமையில் 02.04.2021இல் ஏற்பாடு செய்திருந்த தொழிற்சங்கத் தலைவர்கள், புத்திஜீவிகள், சிவில் அமைப்பாளர்களின் கலந்துரையாடலில் மேற்கண்ட யோசனைகள் ஆராயப்பட்டு இத்திட்டங்கள் சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்களோடு தொடர்புகொண்டு கலந்துரையாடவுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.



ஆ.முத்துலிங்கம் ...
பொதுச் செயலாளர்,
ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம்.

# மகத்துவம் மிக்க ரமழான் நோன்பு



**இலங்கை உட்பட உலகெங்கிலும் வாழும் முஸ்லிம்கள் கட்டாயம் நிறைவேற்ற வேண்டிய இஸ்லாமியக் கடமையான ரமழான் மாத நோன்பு அடுத்துவரும் சில தினங்களில் ஆரம்பமாகின்றது. இது வருடத்திற்கு ஒரு தடவை நிறைவேற்றப்படும் ஒரு கடமையாகும். இற்றைக்கு 1440 வருடங்களுக்கு முன்னர் அதவாது ஹிஜ்ரி 02 ஆம் ஆண்டில் கடமையாக்கப்பட்டது தான் ரமழான் மாத நோன்பு. அல் குர்ஆன் அருளப்பட ஆரம்பமாகி 15 வருடங்களாகும்போது, அதாவது முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு (ஹிஜ்ரத்) புலம்பெயர்ந்து சென்ற இரண்டாம் வருடத்தில் தான் இது கடமையாகப்பட்டது. அது வரைக்கும் நுஹ் (அலை) அவர்களது காலம் முதல் நடைமுறையிலிருந்த மாதத்திற்கு மூன்று நாட்கள் நோன்பு நோற்கும் வழக்கமே காணப்பட்டது.**

இஸ்லாமிய வருடக் கணிப்பில் ஒன்பதாவது மாதமாக விளங்கும் ரமழான் மாதத்தை அல்லாஹ்த ஆலா கண்ணியப்படுத்தி மகத்துவப்படுத்தியுள்ளான். அல்லாஹ்வின் நண்பரான இப்ராஹீம் (அலை) அவர்கள் நோன்பு நோற்ற சமயத்தில் தான் அவர்களுக்கு இறைதூது அருளப்பட்டது. அது ரமழான் மாதத்தின் முதல் இரவிலாகும். அதேபோன்று மூஸா(அலை) அவர்களுக்கு ரமழான் பிறை 06 ஆம் நாளில் தௌராத் வேதம் அருளப்பட்டது. அதற்கு முன்னரான 40 நாட்கள் நோன்பு நோற்குமாறு அன்னாருக்கு அல்லாஹ் கட்டளை இட்டிருந்தான். அத்தோடு ஈஸா (அலை) அவர்களுக்கும் ரமழான் மாதம் பிறை 13 ஆம் நாளில் இன்ஜில் வேதம் அருளப்பட்டது. அதற்கு முன்னரான 40 நாட்கள் அன்னாரும் நோன்பு நோற்கப் பணிக்கப்பட்டிருந்தார். தாவூத் (அலை) அவர்களுக்கும் ரமழான் மாதம் பிறை 24 இல் தான் சபூர் வேதம் அருளப்பட்டது. அல் குர்ஆனும் ரமழான் மாதத்தின் கடைசிப் பத்திலுள்ள ஒற்றைப்படையான ஒரு இரவில் முதல் வானத்திற்கு இறக்கியருளப்பட்டதோடு இறுதி இறைத்தூதரான முஹம்மத் (ஸல்) அவர்கள் நோன்பு நோற்றபடி ஹிரா குகையில் தியானத்தில் இருந்த சமயமே அல் குர்ஆனும் அருளப்பட ஆரம்பமானது.

இந்த தகவல்களின் படி இறைவேதங்கள் ரமழான் மாதத்தில் அருளப்பட்டிருப்பதையும் இறைவேதங்கள் அருளப்பட முன்னர் இறைத்தூதர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள் நோன்பு நோற்று பக்குவப்படுத்தப்பட்டு புடம் போடப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது. அல்லாஹ் மனிதனைப் புடம் போட்டு பக்குவப்படுத்துவதற்காக நோன்பைப் பயன்படுத்தியுள்ளான்.

அதேநேரம் ரமழான் மாத நோன்பு முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் அவர்களது சமுதாயத்தினருக்கும் மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. அன்னாருக்கு முற்பட்ட கால சமுதாயங்களுக்கும் நோன்பு நோற்பது கடமையாக்கப்பட்டிருந்தது. இதனை அல் குர்ஆன் 'நம்பிக்கையாளர்களே... உங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போன்று உங்கள் மீதும் நோன்பு நோற்பது கடமையாக்கப்பட்டுள்ளது. (அதனால்) நீங்கள் இறையச்சமுடையவர் ஆகலாம். (அல் குர்ஆன் 02 - 183)

அதனால் ரமழான் நோன்பையும் ரமழான் காலத்தையும் அல்லாஹ்வின் கட்டளைக்கும் முஹம்மத் (ஸல்) அவர்களது வழிகாட்டல்களுக்கும் ஏற்ப ஒவ்வொருவரும் உச்சளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த ரமழான் மாதம் தொடர்பில் அல்லாஹுத் தஆலா, 'ரமழான் மாதம் எத்தகைய (மகத்துவமுடைய)தென்றால் அதில் தான் மனிதர்களுக்கு நேர்வழிகாட்டும் அல் குர்ஆன் (என்னும் வேதம்) இறக்கியருளப்பட்டது. அது (நன்மை தீமையைப்) பிரித்தறிவித்து நேரான வழியைத் தெளிவாக்கக்கூடிய வசனங்களை உடையதாகவும் இருக்கின்றது' (அல் குர்ஆன் 02-185) என்று குறிப்பிட்டிருக்கின்றான்.

அதாவது 'லவ்ஹுல் மஹ்பூல்' என்ற பாதுகாக்கப்பட்ட பதிவேட்டிருந்து முதல் வானத்திலிருக்கும் பைத்துல் இஸ்ஸாவுக்கு இம்மாதத்தின் இறுதிப்பத்தில் உள்ள ஒற்றைப்படையான ஒரு இரவில் தான் அல் குர்ஆன் இறக்கியருளப்பட்டது. அதனால் அந்த இரவு எவ்வாறு சிறப்பிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் அவன் குறிப்பிட்டு வைக்கத் தவறவில்லை.

'கண்ணியமுள்ள அந்த இரவு ஆயிரம் மாதங்களை விடவும் மேலானதாகும். அதில் மலக்குகளும் ஜிப்ரீலும் தங்கள் இறைவனின் கட்டளையின் பேரில் (நடைபெற வேண்டிய) எல்லா காரியங்களுடன் இறங்குகின்றனர்'

(அல் குர்ஆன் 97-3,4).

இதன்படி அந்த ஒரு இரவே ஆயிரம் மாதங்களை விடவும் மேலானதாக விளங்கிக் கொண்டிருப்பதோடு முழு மாதமும் கண்ணியப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. அதனால் 'உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ அவர் அதில் நோன்பு நோற்கவும்' (அல் குர்ஆன் 02-185) என்றும் அல்லாஹ் குறிப்பிட்டிருக்கின்றான்.

அதன் காரணத்தினால் ரமழான் மாதம் நோன்பு நோற்பதும் இறைவணக்கங்களில் ஈடுபடுவதும் கட்டாயமானது. அது ஏனைய மாதங்களில் நோன்பு நோற்பதை விடவும் அதிக சிறப்புக்கும் மகத்துவத்துக்குமுரியதாகும். இம்மாதத்தில் ஆற்றப்படும் ஒவ்வொரு நற்காரியமும் ஒன்றுக்கு பத்து முதல் 700 மடங்கு நன்மைகள் அளிக்கக்கூடியனவாக உள்ளன. இம்மாதத்தில் நோன்பு நோற்பது தொடர்பில் அல்லாஹ் குறிப்பிடுவதாக நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள். 'ஆதமின் மகனின் அனைத்து செயற்பாடுகளும் அவனுக்குரிய நோன்பு எனக்குரியது. அதற்கு நானே கூலி கொடுப்பேன்'. அத்தோடு அல் குர்ஆனும் ரமழான் நோன்பும் மனிதனுக்காக அல்லாஹ்விடம் சிபாரிசு செய்யக்கூடிய அந்தஸ்தையும் கூட பெற்றுள்ளன.

இவ்வாறு மகத்துவம் மிக்கதாக விளங்கும் அல் குர்ஆன் அருளப்பட்ட இம்மாதம் உலகம் இருக்கும் வரையும் சிறப்புக்குரியதாக விளங்குவதோடு, மனிதனின் இம்மை மறுமை வாழ்வின் சுபீட்சம் விமோசனத்தையே அல் குர்ஆன் இலக்காகவும் கொண்டிருக்கின்றது.

இம்மாதத்தில் நோன்பு நோற்பது கட்டாயக் கடமையான போதிலும் புத்திசுவாதீன மற்றவர்கள், சிறுகுழந்தைகள், குணப்படுத்த முடியாத நாட்பட்ட நோயாளர்கள் ஆகிய தரப்பினருக்கு அதில் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளன. அத்தோடு பாலூட்டும் தாய்மார், மாதவிடாய் ஏற்பட்டுள்ள பெண்கள், பயணத்தில் இருப்பவர்கள் போன்றோர் இக்கடமையை இம்மாதத்தில் நிறைவேற்றாது கணக்கிட்டு வேறு நாட்களில நிறைவேற்றிக் கொள்ளவும் சலுகை அளிக்கப்பட்டுள்ளன. மனிதனைப் புடம்போட்டு பக்குவப்படுத்துவதையே இலக்காகக் கொண்டுள்ள ரமழான் நோன்பு, மனிதன் வருடத்தில் பதினொரு மாதங்கள் கடைபிடிக்கின்ற பழக்கவழக்கங்களில் மாற்றங்களைக் கொண்டு வரக்கூடியதாகும். குறிப்பாக நோன்பு நோற்பதற்காக அதிகாலையில் பஜ்ர் தொழுகைக்கு முன்னர் எழுந்து ஸஹர் செய்ய வேண்டும். அதன் பின்னர் மாலை மஃரிப் அதான் கூறப்படும் வரையும் உணவையும் பானங்களையும் உடல், உள இச்சைககளையும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு ஏற்ப தவிர்த்துக் கொள்ள வேண்டும். அத்தோடு பொய் பேசுதல், கோள் சொல்லுதல், பொறாமை, பெருமை, ஆணவம், அகங்காரம் கொள்ளுதல், சண்டை சச்சரவுகளில் ஈடுபடுதல் உள்ளிட்ட தீய பழக்கவழக்கங்களையும் தவிர்த்துக் கொள்ளவும் தவறக்கூடாது. ஏனைய காலங்களைப் போலல்லாமல் இம்மாதத்தில் அதிகமதிகம் இறை வணக்கங்களில் ஈடுபட வேண்டும். இவை அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடுகள். எம்மைப் படைத்த ஒருவனுக்காகவே இவ்வாறு செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். அதன் பயனாக இறையச்சம் அதிகரிக்கும். உடலும், உள்ளமும் பக்குவம் அடையும். அடுத்தவரின் பசி உணர்வைப் புரிந்து கொள்ளவும், பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை மாத்திரமல்லாமல் கருணை, இரக்க மனப்பான்மை போன்ற பண்புகளும் மேலோங்கும். அத்தோடு ஆன்மீக மேம்பாட்டுக்கான சிறந்த பயிற்சிகளமாகவும் அமையும் ரமழான். இவற்றின் ஊடாக மனிதனில் பாரிய மாற்றங்களும் சீர்திருத்தங்களும் ஏற்படும். ரமழான் மாதத்தில் ஏற்படும் சீர்திருத்தங்களை வருடம் முழுவதும் கடைபிடித்தொழுக வேண்டும். அது தனிபரினதும், குடும்பத்தினதும் சமூகத்தினதும் அமைதி, சுபீட்சம், மேம்பாட்டுக்கும் பக்க துணையாக அமையும். மனித வாழ்வு ஒழுங்கு முறையாகவும் சீராகவும் அமையவும் வழிவகுக்கும்.

ஆகவே எண்ணிறைந்த சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள ரமழான் மாதத்தில் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கும் ஏற்ப நோன்பு நோற்று உரிய ஒழுங்கில் இம்மாதத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இது ஒவ்வொருவரதும் பொறுப்பும் கடமையும் மாத்திரமல்லாமல் ஈருலக வாழ்வின் சுபீட்சத்திற்கான அடித்தளமுமாகும்.

**மர்லின் மரிக்கார்...**

# முற்றுமுழுதான ஆராய்வுக்குரியதாக தமிழ் அரசியல் முன்னெடுப்பு

**தமிழ்த் தரப்பின் தேசியவாத அரசியல் முன்னெடுப்புகள் குறித்து கேள்விகளை எழுப்பி, மாற்றுப் பார்வை ஒன்றை முன்வைக்கிறார் கருணாகரன். அரச எதிர்ப்பு அரச ஆதரபு என்ற இரு நிலைப்பட்ட அரசியலில் பெற்றுக் கொண்டது என்ன? என்று கேள்விக்கான பதிலாகப் புதியதொரு வழிமுறை இடையூடாட்ட அரசியல் வேண்டும் என்பதை வலிறுத்தும் இந்தக் கட்டுரைத் தொடர் அதற்கான மாதிரியை அடையாளப்படுத்துகிறது. இதைக்குறித்த கருத்துகளை எதிர்பார்க்கப்படுகிறது.**

தமிழ்த்தேசியக் கட்சிகளின் (தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் விடுதலைக் கூட்டணி, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி) அரசியல் போதாமைகளும் ஜனநாயகப் பற்றாக்குறையும் சமூக நீதி குறித்த அக்கறையின்மையும் செயற்பாட்டுப் பலவீனமும் அவற்றை விட்டு நம்மைத் தூரத் தள்ளுகின்றன. தமிழ் மக்கள் எதிர்கொள்ளுகின்ற நெருக்கடிகளை முறியடிக்கக் கூடிய விடுதலை அரசியலை முன்னெடுப்பதற்கான அடிப்படைத் தகுதிகளை இவை கொண்டிருக்கவில்லை என்பது இதில் முக்கியமான குறைபாடாகும். இதிலும் முக்கியமாக முஸ்லிம் சமூகத்தினரோடு கொள்ள வேண்டிய உறவைப் பற்றியும் இணைந்து செயற்பட வேண்டிய அரசியல் தேவையைப் பற்றியும் இவற்றிடம் எந்த விதமான தெளிவான சித்திரங்களும் இல்லை. நடைமுறைகளும் இல்லை.

இதைப்போலவே வடக்கும் கிழக்கும் எப்படி அகரீதியாகவும் புறரீதியாகவும் இணைந்து அரசியல் மற்றும் பண்பாட்டு உறவில் நீடிப்பது என்பதைக்குறித்தும் இவற்றிடம் எந்த விதமான சிந்தனைகளையும் செயற்பாட்டு முறைமைகளையும் காணமுடியவில்லை. அவ்வாறே வடக்குக் கிழக்கில் உள்ள சிங்கள மக்களுடன் எப்படியான அரசியல் தன்மைகளை மேற்கொள்வது? அரசியலுக்கு அப்பால் சமூக வாழ்விலும் பண்பாடு, நிர்வாகம் உள்ளிட்ட பிற செயல்முறைகளிலும் எப்படி இணக்கப் புள்ளிகளையும் ஒருங்கிணைவையும் கொள்வது என்பதிலும் எந்தத் தெளிவும் இல்லை. (இதைக் குறித்து அடுத்த பகுதியில் விரிவாக ஆராயலாம்).

இந்த நிலையில் தனியே அரச எதிர்ப்புவாதமும் சர்வதேசத்தை நோக்கிய கையேந்தலுமாக தமிழ்த் தேசியவாத அரசியலை முன்னெடுக்க முடியுமா? அது பயன் தருமா? அதுவும் போராடிப் பேரிழப்புகளைச் சந்தித்த நிலையிலிருக்கும் மக்களுக்கு இவ்வாறான மேலோட்டமான அரசியல் (சட்டை கசங்காத அரசியல் அல்லது வெள்ளை வேட்டி அரசியல்) பயனுடையதா? சரியானதா?


இவ்வாறான நியாயமான கேள்விகளை நாம் எழுப்பும்போது உடனடியாக நம்மைநோக்கி, "அப்படியென்றால், நீங்கள் தமிழ்த்தேசியத்துக்கு எதிரானவரா? அரச சார்பானவரா, ஒத்தோடியா?" என்று கேட்கிறார்கள்.

ஏன் இப்படிக் கேட்கிறார்கள் என்று உண்மையில் விளங்கவில்லை. இதொரு குறுக்கு வழி எண்ணமே இவர்களை இப்படிக் கேட்க வைக்கிறது. மாற்றுச் சிந்தனைக்கு செல்ல முடியாத, மாற்று அரசியலைக் குறித்துச் சிந்திக்க முடியாத, மாற்றுச் செயல் முறையில் தம்மை ஈடுபடுத்த முடியாததன் காரணமே இது.

நாம் சில கேள்விகளைக் கேட்டால் அதற்கான பதிலைச் சொல்ல வேண்டியது அந்தத் தரப்பிலுள்ளவர்களின் பொறுப்பாகும். அதுவும் அரசியல் ரீதியான கேள்விகளையும் கருத்துகளையும் வெளிப்படையாக முன்வைத்தால் அதை அதே வெளிப்படைத் தன்மையோடு அணுகி, அவற்றுக்கான பதிலைக் காண முற்படுவதே நியாயம். அதுவே அழகு. அதுவே சரியானது. அதை விடுத்து, எதிர்க் கேள்விகளின் மூலம் திசை திருப்பல்களை மேற்கொள்வதும் அரச ஆதரவாளர் என்று குறிசுட்டு ஒரு பக்கம் தள்ளுவதும் நியாயமற்றது. அது கீழ்மையானது.

அரச ஆதரவு என்பதும் அரசை எப்படிப் பயன்படுத்துவது என்பதும் அரசைப் புரிந்து கொள்வது என்பதும் வெவ்வேறானது. நிபந்தனையற்ற (கேள்விகளற்ற) அரச ஆதரவு என்பதும் நிபந்தனையற்ற (கண்மூடித்தனமான) அரச எதிர்ப்பு என்பதும் ஏறக்குறைய ஒன்றுதான். அடித்தால் மொட்டை. கட்டினால் குடும்பி என்ற மாதிரி. இதையே கறுப்பு – வெள்ளை அரசியல் என்கிறோம். இந்தப் பார்வையே துரோகி – தியாகி என்ற பிரிகோட்டை உருவாக்கக் காரணமாகியது. இரண்டினதும் விளைவுகளில் வேறுபாடுகள் உண்டு. ஆனாலும் அரசியல் அடிப்படைகளில் இரண்டுக்கும் ஒத்த தன்மைகளுண்டு. முக்கியமாக உண்மைகளைக் காணத் தவறும் போக்கில்.

மற்றும்படி அரச ஆதரவு – அரச எதிர்ப்பு என்பதற்கு அப்பாலானதொரு வழிமுறையைப் பற்றியே நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. இது எப்படிச் சாத்தியமாகும் என்று பலரும் கேட்கலாம்.



அல்லது இதைக்குறித்த குழப்பம் அவர்களுக்கிருக்கலாம். இதற்கு முன்பு நாம் ஒன்றைப் பற்றி அறிய வேண்டும்.

இதுவரையான (60 ஆண்டுகளுக்கு மேலான) அரச எதிர்ப்பு நமக்கு எதைப் பெற்றுத் தந்தது? அதைப்போல இதுவரையான (20 ஆண்டுகள் வரையான) அரச ஆதரவு தந்தது என்ன?

எனவேதான் நாம் இரண்டுக்கும் அப்பாலான ஒன்றைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. அது கண்மூடித்தனமான அரச எதிர்ப்போ அரச ஆதரவோ அல்ல. இரண்டுக்கும் இடையிலானதைப் போன்றது. அதாவது தேவையானபோது – சரியானவற்றுக்கான ஆதரவைக் கொடுப்பது. பிழையானபோது அவற்றை எதிர்ப்பது. மறுப்பது.

இதை ஒரு அரசியல் வழிமுறையாக வளர்த்தெடுக்க வேண்டும். இது சற்றுக் கடினமானதே. ஆனால் இந்தக் கடினங்களை எதிர்கொண்டே நாம் நம்முடைய அரசியலை முன்னெடுக்க வேண்டும். எந்தக் கடினங்களையும் எதிர்கொள்ளாமல் எந்த இலக்கையும் எட்ட முடியாது.

சரி, ஆனால், இதற்கான சாத்தியங்கள் எப்படி? என்ற கேள்வியொன்று உங்களுக்குள் எழலாம். ஏனென்றால் அரச எதிர்ப்பில் பிரச்சினையே இல்லை. அரச ஆதரவை வரையறை செய்வதில்தான் பிரச்சினையே. நாம் நினைப்பதைப் போல அரச ஆதரவை வரையறுத்து வழங்க முடியாது. அது அதற்கு அனுமதிக்கப்போவதில்லை என்று நீங்கள் வாதிடலாம்.

அதில் உண்மையுண்டு. நிபந்தனையற்ற ஆதரவையே அதிகாரம் விரும்பும். அதையே அனுமதிக்கும். இந்த மாதிரி இடைநிலை நிற்கும் தன்மையை அது அனுமதிக்காது. அதற்கு இடமளிக்காது என்பதெல்லாம் ஏற்றுக் கொள்ளக் கூடியதே. ஆனாலும் அவர்களுக்கு தவிர்க்க முடியாமல் சில தேவைகள் – அவசியங்கள் உண்டு. அதைக் கவனித்து அதற்குள் காரியங்களைச் செயற்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படிச் செயற்படுத்திக் கொள்ளலாம். அது சோரம் போதல் அல்ல. அது அரசியல் சாதுரியமாகும். மக்கள் நிலைநின்று, மக்கள் நலனுக்காக இவ்வாறு செயற்படுவதாகும். இதை இராஜதந்திர ரீதியாகச் செயற்படுவது என்றும் கருதிக் கொள்ளலாம்.

இவ்வாறு வலிமையாகச் செயற்படுவதன் மூலம் ஒரு புதிய அரசியல் அடையாளத்தையும் வழிமுறையையும் உருவாக்கிக் கொள்ள முடியும். அந்த அரசியல் வழிமுறையும் அடையாளமும் முக்கியமானது. இங்கே நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டியதும் அதுவே. எப்படியென்றால், அரச எதிர்ப்பும் இல்லாமல் ஆதரவும் இல்லாமல் சரியானதை ஏற்றுக் கொண்டு, தவறானதை நிராகரித்தும் மறுத்தும் நியாயமாகச் செயற்படுவதாக ஒரு அடையாளத்தை உருவாக்குதல். இந்த அடையாளம் முக்கியமானது. இது எதிர்த்தரப்புகளுக்கும் வெளிச் சமூகத்துக்கும் ஒரு புதிய சேதியைச் சொல்லும். குறிப்பாக சிங்கள மக்களிடம் ஒரு புதிய புரிதலை ஏற்படுத்தும்.

இப்போதுள்ள அரச எதிர்ப்பை அல்லது தமிழ்த்தேசிய அரசியலை நாட்டுக்கும் தமக்கும் எதிரான போக்கு என்று கருதும் அல்லது கருதப்பட வைக்கும் நிலையே காணப்படுகிறது. எடுத்ததெற்கெல்லாம் எதிர்ப்பைக் காட்டுவது என்பது "எதிர்த்தரப்பு எதிரித் தரப்பு" என்று அடையாளமாக்கி, அதற்கான எதிர் மனநிலையை சிங்கள மக்களிடத்தில் வளர்த்திருக்கிறது. இந்த அடையாளத்தையும் மனநிலையையும் பயன்படுத்தியே சிங்கள மேலாதிக்க – இனவாத அரசியல் நடத்தப்படுகிறது.

இதை நான் மேற்சொன்ன இடையூடாட்ட (சரியைச் சரியென்றும் தவறைத் தவறென்றும் கருதிச் செயற்படும்) அரசியல் உடைக்கக் கூடியதாக இருக்கும். நாம் எதற்கும் எப்போதும் எதிரானவர்களல்ல. சரியானதை ஏற்றுக் கொள்வோம். அதற்கு ஆதரவழிப்போம். தவறானதை எதிர்ப்போம். அதை ஏற்றுக் கொள்ள மாட்டோம். ஆகவே நாம் எப்போதும் சரியானதை – நாட்டுக்கும் மக்களுக்கும் தேவையானதை ஏற்றுக் கொள்கிறோம் என்பதை உணர்த்துவது. இதன் மூலம் ஏற்கனவே இருக்கின்ற எதிர் அடையாளத்தை மாற்றியமைப்பது.

"இதிலும் பிரச்சினை உண்டே!" என்று நீங்கள் கேட்கலாம். "எங்களுடைய நோக்கில் சரியாகத் தோன்றுவது அவர்களுடைய நோக்கில் தவறாகத் தெரியும். அவர்களுடைய நோக்கில் சரியாகத் தோன்றுவது எங்களுக்குப் பிழையாகத் தோன்றும். இப்படியிருக்கும்போது நாம் எப்படிப் பொதுவான சரியை ஏற்றுக் கொள்வது?" என்ற விதமாக.

இந்தச் சிக்கலும் சிரமமும் உண்டே. அதுதான் முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது, இது ஒரு மிகமிகக் கடினமான வழிமுறை என்று. ஆனால் வேறு வழியில்லை. போர் மட்டும் இலகுவான வழியாக இருந்ததா, என்ன? அதில் எவ்வளவு இழப்புகள்? முக்கியமாக உயிரிழப்புகள், உடல் உறுப்பு இழப்புகள், வாழ்விழப்புகள், உடமை, வாழிட இழப்புகள் என ஏராளம் இழப்புகளை நாம் சந்திக்கவில்லையா? முப்பது ஆண்டுகள் அந்த வழியில் நம்மைச் செலவிடவில்லையா?

இது அதை விட இலகுவானது. ஆனால், மிகப் பொறுமையாக, மிக நிதானமாக, மிக விவேகமாகச் செயற்பட வேண்டியது.

இரண்டு தரப்புக்கும் பொதுவாகப் பொருந்தக் கூடிய சரிகளை முதலில் ஏற்றுக் கொள்வது. அதற்கான ஆதரவை வழங்குவது. அதைப்போல சிக்கலான இடங்களில் மிக நிதானமாக எமது தரப்பின் நியாயப்பாடுகளைச் சொல்லி, முன்பு சரியானவற்றுக்கு வழங்கிய ஆதரவை நினைவூட்டி எதிர்ப்பது.

இப்படிச் செய்து கொண்டு வரும்பொழுது நியாயமாக நாம் எதிர்ப்பைக் காட்டுகிறோம். நியாயங்களைக் கேட்கிறோம். நியாயமாகப் பேசுகிறோம் என்ற உணர்வு ஏற்படும். ஏனெனில் எதிர்த்தரப்பில் (சிங்களத்தரப்பில்) உள்ளவர்களுக்கு இதயமும் மூளையும் மனச்சாட்சியும் இல்லை என்று நாம் சொல்ல முடியாது. அவர்களிடமும் அறவுணர்வும் புரிதலும் உண்டு. உண்மையில் அவர்களை நாம் எதிர்த்தரப்பு என்றே கருத வேண்டியதில்லை. அப்படிக் கருதுவதே ஆயிரம் பிரச்சினைகளை உற்பவிக்கக் கூடியது. இது நம்முடைய கடந்த கால அனுபவம் இல்லையா?

என்பதால் நாம் இந்தச் சரியென்றால் அதை ஏற்றும் பிழையென்றால் அதை எதிர்த்தும் நிற்கும் ஒரு அரசியல் வழிமுறையை உருவாக்கி நிலைப்படுத்த வேண்டும். அதன் மூலம் புதிய அரசியல் திறப்பை (சாவியை) நம்முடைய கையில் எடுத்துக் கொள்ள முடியும். இன்றுள்ள ஒரே வழிமுறை இதுதான். அரசியலில் மாற்றுப்பார்வைகளுக்கு எப்போதும் இடமுண்டு என்பது யதார்த்தம். ஆனால், அந்த பலதரப்பட்ட பார்வைகளில் எவை சரியானவை, அனுபவத்துக்கும் அறிவுக்கும் நெருக்கமானவை என்று ஆராய்ந்து பார்ப்பது அவசியமானது. தமிழ் அரசியல் முன்னெடுப்பு என்பது முற்று முழுதான ஆராய்வுக்குரியதாக இன்றுள்ளது. அதைச் செய்தே தீர வேண்டும்.

**கருணாகரன்...**

**விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

பாதுகாப்பு அமைச்சு

**கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்**

**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலைக்காக Hybrid Cardiac Catheterization Laboratory மற்றும் தடையற்ற மின் வழங்கியின் (UPS) வழங்கல், விநியோகம், நிறுவுதல், செயற்பட வைத்தல், பயிற்சி மற்றும் பராமரிப்பு**

***Contract Identification No: MOD/KDU/02/2020***

1. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலைக்காக Hybrid Cardiac Catheterization Laboratory மற்றும் தடையற்ற மின் வழங்கியின் (UPS) வழங்கல், விநியோகம், நிறுவுதல், செயற்பட வைத்தல், பயிற்சி மற்றும் பராமரிப்பிற்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை, இரத்மலானை, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக, துணைவேந்தர் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

   a) Hybrid Cardiac Catheterization Laboratory மற்றும் தடையற்ற மின் வழங்கி (UPS) 01

2. தேசிய போட்டி ரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைகேட்பு நடத்தப்படும்.
3. குறைந்தது 10 ஆண்டு கால வர்த்தகப் பதிவைக் கொண்ட Hybrid Cardiac Catheterization Laboratory மற்றும் தடையற்ற மின் வழங்கியின் (UPS) வழங்கல் மற்றும் பராமரிப்பில் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவத்தை பெற்ற வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. வெளிநாட்டு விலைமனுதாரர்கள் முறையாக நியமிக்கப்பட்ட (அங்கீகாரம் பெற்ற) உள்நாட்டு முகவர் (இலங்கை) மூலம் கூறுவிலை சமர்ப்பித்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் குறைந்தது 440 மில்லியன் இலங்கை ரூபா அல்லது அதற்கு இணையான பெறுமதியில் சராசரி ஆண்டுப் புரள்வை விலைமனுதாரர் பெற்றிருத்தல் வேண்டும் (கடந்த 3 ஆண்டுகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்)
   - முன்னர் கூறப்பட்ட உள்நாட்டு முகவரானவர் குறைந்தது 05 ஆண்டுகள் வர்த்தகப் பதிவை பெற்றிருத்தல் வேண்டும்.
   - அனைத்து வர்த்தகக் குறியீடுகளும் இலங்கையில் குறைந்தது 05 ஆண்டுகள் சேவை வரலாற்றை கொண்டிருத்தல் வேண்டும்.
   - உற்பத்தியாளர்/ வழங்குநர் கடந்த 05 ஆண்டு காலத்தில் இதனை ஒத்த பண்புடைய குறைந்தது 03 ஒப்பந்தங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அந்த 03 ஒப்பந்தங்களின் ஒவ்வொன்றும் மேலுள்ள நோக்கத்தை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அதன் ஒவ்வொரு வழங்கலுக்கான ஒப்பந்தத் தொகை 220 மில்லியன் இலங்கை ரூபா அல்லது அதற்கு இணையான பெறுமதிக்கு குறையாதிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் உற்பத்தியாளரிடம் இருந்து 02 ஆண்டுகள் விரிவான உத்தரவாதம் மற்றும் 10 ஆண்டுகள் முறைமை உத்தரவாதம் மற்றும் உற்பத்தியாளரிடம் இருந்து உதிரிப்பாகங்கள், நுகர்பொருட்கள், மென்பொருள் மற்றும் துணைப்பொருட்களின் கிடைக்கும் தன்மை தொடர்பில் 10 ஆண்டுகள் உத்தரவாதத்தை வழங்கல் வேண்டும்.
   - உத்தரவாத காலத்திற்குள் நிறுவப்பட்ட முறைமையின் எந்த ஒரு விசாரணைக்காகவும் இலங்கையில் உள்நாட்டு அலுவலகம் அல்லது உள்நாட்டில் பதிவு செய்யப்பட்ட முகவர் ஒருவர் இருத்தல் வேண்டும்.
   - பொருட்களை உற்பத்தி செய்யாத அல்லது தயாரிக்காத விலைமனுதாரர், விலைமனு ஆவணத்தின் பிரிவு IV இல் உள்ளடக்கப்பட்ட வடிவத்தை பயன்படுத்தி உற்பத்தியாளர் அனுமதியை சமர்ப்பித்தல் வேண்டும்.
4. 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான தேவைகளை விலைமனுதாரர்கள் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதோடு அந்த சட்டத்தின் சில முக்கிய பகுதிகளின் சுருக்கம் பின்வருமாறு;

   (1) "எந்த ஒரு விலைமனுதாரர் சார்பிலும் முகவர் அல்லது உப முகவர், பிரதிநிதி அல்லது முன்மொழியப்பட்டவரான எந்த ஒரு நபரும், பிரிவு 10 இற்கு ஏற்ப பொது ஒப்பந்தத்தில் தம்மை பதிவு செய்தல் வேண்டும் என்பதோடு பிரிவு 6 இன் கீழ் வழங்கப்பட்டிருக்கும் தேவையான விபரங்களை பதிவு செய்வதற்கு வழங்கல் வேண்டும்."

   (2) "விலைமனுதாரர் ஒருவரின் சார்பாக அல்லது முகவர், உப முகவர், பிரிதிநிதி அல்லது முன்மொழியப்பட்ட எந்த ஒரு நபராக இருப்பவரும், இந்த பிரிவின் கீழ் பொது ஒப்பந்தத்தில் தம்மை பதிவு செய்வதற்கு அவர் பதிவாளர் முன் முதலில் தாம் முகவர் அல்லது உப முகவர், பிரதிநிதி அல்லது முன்மொழியப்பட்டவர் என்பதற்கான சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்."

   (3) (தொடர்புடையது என்றால்), 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய, விலைமனு ஆவணத்தை கொள்வனவு செய்யும்போது அல்லது அதற்கு முன்னர் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிப்பதற்கு விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.
5. ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலமானது ஒப்பந்தம் கைச்சாத்தான திகதியில் இருந்து (பயிற்சி மற்றும் பராமரிப்புத் தவிர்த்து) 90 நாட்காட்டி தினங்கள்.
6. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள்

   **தலைமை நிதி அதிகாரி I**
   **பாதுகாப்பு அமைச்சு,**
   **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
   **கொழும்பு-03,**
   **இலங்கை**

   (தொலைபேசி 011-2439381 தொலைநகல் 011-2390720) என்ற முகவரியில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம்.

   விலைமனு ஆவணங்களை 2021 மார்ச் 08 அன்று தொடக்கம் 2021 ஏப்ரல் 29 அன்று வரை வேலை நாட்களில் 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை மேலுள்ள முகவரியில் கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம் ((தொலைபேசி 011-2439381 தொலைநகல் 011-2390720 மற்றும் மின்னஞ்சல் procurement@defence.lk)
7. விலைமனுதாரர் மற்றும் அவரது உள்நாட்டு முகவர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.
8. மீளளிக்கப்படாத 36,000.00 இலங்கை ரூபாவை (இலங்கை ரூபா முப்பத்தி ஆறாயிரம்) செலுத்தி 2021 மார்ச் 08 அன்று தொடக்கம் 2021 ஏப்ரல் 29 அன்று வரை வேலை நாட்களில் 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை தலைமை நிதி அதிகாரி I, பாதுகாப்பு அமைச்சு, இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு-03, இலங்கை என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.
9. விலைமனுக்களை 2021 ஏப்ரல் 30 அன்று பி.ப. 1430 மணி அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் அல்லது கீழுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டியில் இடலாம்.

   **பெறுகைப் பிரிவு,**
   **பாதுகாப்பு அமைச்சு,**
   **தரைத் தளம்,**
   **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
   **கொழும்பு-03.**

   தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.
10. விலைமனுக்கள் 2021 ஏப்ரல் 30 அன்று தொடக்கம் 2021 ஜுலை 28 அன்று வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

    அனைத்து விலைமனுக்களும் 2021 ஏப்ரல் 30 அன்று தொடக்கம் 2021 ஒகஸ்ட் 26 அன்று வரை செல்லுபடியானதாக நிபந்தனையற்றதும் கோரும்போது பெறத்தக்கதுமான வடிவத்தில் இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வங்கில் இருந்து பெறப்பட்ட மூன்று மில்லியனே முந்நூறு ஆயிரம் இலங்கை ரூபா (இலங்கை ரூபா 3,300,000.00) "விலைமனு பிணை" ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையின் பயனாளியாக பாதுகாப்பு அமைச்சு, செயலாளர் இருத்தல் வேண்டும்.
11. தொடர்பு விபரங்கள்:

    **தலைமை நிதி அதிகாரி I**
    **தொலைபேசி: 011-2439381**
    **தொலைநகல் இல.: 011-2390720 மற்றும் மின்னஞ்சல் procurement@defence.lk**
    **பெறுகை அதிகாரி,**
    **ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை,**
    **வேரஹர, பொரலஸ்கமுவ, இலங்கை**
    **தொலைபேசி: 0094-11-2044555/ நீடிப்பு 4373**
    **தொலைநகல்: 0094-11-2044592**
    **மின்னஞ்சல்: procurement_ uh@kdu.ac.lk**
12. பின்வரும் முகவரிக்கு எழுத்துமூலமாக அறிவிக்க விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

    **தலைமை நிதி அதிகாரி I,**
    **பாதுகாப்பு அமைச்சு,**
    **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
    **கொழும்பு - 03, இலங்கை.**

    விலைமனு திறக்கும் நிகழ்வில் பங்கேற்கும் தனிநபர்கள் விலைமனு திறக்கப்படுவதற்கு குறைந்தது மூன்று (03) வேலை நாட்களுக்கு முன்னர் பெயர் மற்றும் தே.அ.அ./ கடவுச்சீட்டு இலக்கத்தை பின்வரும் முகவரிக்கு எழுத்துமூலம் அறிவிக்க விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

    **தலைமை நிதி அதிகாரி I,**
    **பாதுகாப்பு அமைச்சு,**
    **இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
    **கொழும்பு 03, இலங்கை.**
    **மின்னஞ்சல் procurement@defence.lk**

    குறித்த பெறுகை தொடர்பிலான எந்த ஒரு உத்தியோகபூர்வ விடயங்களிலும் பங்கேற்கும் தனிநபர்களின் பெயர் மற்றும் தே.அ.அ./ கடவுச்சீட்டு இலக்கம்.
13. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு வேரஹர, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை, பணிப்பாளர் மருத்துவ சேவை மாநாட்டு மண்டபத்தில் 2021 மார்ச் 17 அன்று மு.ப. 10.00 க்கு இடம்பெறும்.

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு-03,**
**இலங்கை**

2021 ஏப்ரல் 06

# பிலவ வருட தமிழ் புத்தாண்டு




## மேஷம்

பிலவ வருடம் பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும் ராசி நாதன் செவ்வாய்க்கு இந்த ஆண்டில் துவக்கத்திலேயே குருவின் பார்வையில் கிடைப்பது யோகம். சுக்கிரன் உங்கள் ராசியில் சஞ்சரிப்பதால் தைரியம் தன்னம்பிக்கை அதிகரிக்கும். செய்தொழிலில் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வும் கிடைக்கும். முயற்சிகளுக்கு வெற்றி உண்டாகும். திருமண யோகம் கை கூடி வரும். உடல் ஆரோக்கியம் அற்புதமாக அமையும். நம்பிக்கை அதிகரிக்கும். இந்த ராசியில் பிறந்துள்ள அரசியல்வாதிகளுக்கு வெற்றிகரமான ஆண்டாக அமைந்துள்ளது. அரசு வேலையில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த இடத்திற்கு மாற்றம் கிடைக்கும். ராணுவம், காவல்துறையைச் சேர்ந்தவர்களுக்கு இந்த ஆண்டு சிறப்பான ஆண்டாக அமைந்துள்ளது. புகழும் விருதுகளும் தேடி வரும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் அதிகம் நடைபெறும். உறவினர்கள் வீட்டு விஷேசங்களில் பங்கு பெறுவீர்கள். கணவன் மனைவி உறவு சந்தோஷமாக இருக்கும். நன்மைகள் அதிகம் நடைபெறும். சிவப்பு நிற ஆடைகளை தானமாக கொடுங்கள்.

## ரிஷபம்

சுக்கிரனை ராசி அதிபதியாகக் கொண்ட ரிஷப ராசிக்காரர்களுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும். வேலையில் சம்பள உயர்வும் கிடைக்கும். வீடுகளை விட்டு பிரிந்திருந்தவர்கள் இந்த ஆண்டு குடும்பத்தினருடன் இணைவார்கள். வீட்டுக்கடன் கிடைக்கும். சொத்துக்கள் வாங்குவீர்கள். பிலவ ஆண்டு பெண்களுக்கு மிகச்சிறந்த ஆண்டாக அமைந்துள்ளது. ராஜயோக அமைப்பாக அமைந்துள்ளது. எதிர்பார்ப்புகள் நிறைவேறும். ரிஷப ராசியில் பிறந்த அரசியல்வாதிகளுக்கு இது ராஜயோகங்களைத் தரக்கூடிய ஆண்டாக அமைந்துள்ளது. பாராட்டுக்களும் அரச பதவிகளும் தேடி வரும். நிறைய தனலாபம் உண்டாகும். கலைத்துறையினருக்கு உலக அளவில் புகழும் பாராட்டுக்களும் கிடைக்கும். பிள்ளைகளால் நிம்மதியும் சந்தோஷமும் அதிகரிக்கும். சுப காரியங்கள் நடைபெறும். பெண்களுக்கு பொன் பொருள் சேர்க்கை ஏற்படும்.

## மிதுனம்

புதன் பகவானை ராசி அதிபதியாகக் கொண்டவர்களுக்கு பிலவ ஆண்டு அற்புதங்களை நிகழ்த்தப்போகிறது. நல்ல வேலை கிடைக்கும். அஷ்டமத்து சனி மன அழுத்தத்தை கொடுத்துக்கொண்டிருக்கும். குடும்பத்தில் சந்தோஷமில்லாத நிலை இல்லாமல் இருந்தது. குருவின் பார்வை உங்கள் ராசிக்கு கிடைப்பதால் எதையும் தைரியமாக எதிர்கொள்வீர்கள் குறைகள் நீங்கி சந்தோஷம் அதிகரிக்கும். திருமண சுப காரியம் ஏற்படும். குழந்தைகள் சொல் பேச்சு கேட்பவர்களாக மாறுவார்கள். புத்திசாலித்தனமாக எதையும் எதிர்கொள்வீர்கள். இந்த ஆண்டு பொருளாதார நெருக்கடிகள் நீங்கும் மன நிம்மதி அதிகரிக்கும். அஷ்டமத்து சனியால் அரசியல்வாதிகளுக்கு தடைகளைத் தாண்டி முன்னேற்றம் உண்டாகும். வெற்றிகள் கிடைத்தாலும் பதவி எதுவும் கிடைக்க வாய்ப்பு இல்லை.

## கடகம்

சந்திரனை ராசி அதிபதியாகக் கொண்ட கடக ராசிக்காரர்களே, இந்த ஆண்டு ஆரம்பமே அமர்க்களமாக இருக்கிறது. கிரகங்களின் சஞ்சாரம் சாதகமாக இருப்பதால் மேன்மை அதிகரிக்கும். பத்தாம் வீட்டில் உச்சசூரியன் உடன் ராசி நாதன் இணைந்திருப்பது சிறப்பு. வீடுகளை விட்டு வெளியூர்களில் தங்கியிருப்பவர்களுக்கு குடும்பத்துடன் சேருவதற்கான நல்ல நேரம் கூடி வந்துள்ளது. படித்து முடித்து விட்டு வேலைக்காக காத்திருப்பவர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு கிடைக்கும். பங்குச்சந்தையில் திடீர் லாபம் கிடைக்கும். குரு பார்வை இந்த ஆண்டு உங்களுக்கு திடீர் யோகத்தை தரப்போகிறது. பட்ட கஷ்டங்களுக்கு பலன் கிடைக்கப் போகிறது. திருமணம் ஆகாதவர்களுக்கு இந்த ஆண்டு நிச்சயம் திருமணம் நடைபெறும். இந்த ராசியில் பிறந்த அரசியல்வாதிகளுக்கு இது வெற்றிகரமான ஆண்டாக அமைந்துள்ளது. வங்கி சேமிப்பும் உயரும். வங்கிக் கடன் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கண்டச்சனி காலம் என்றாலும் கவலை வேண்டாம் மன நிம்மதி அதிகரிக்கும். வியாழக்கிழமை, சனிக்கிழமைகளில் அனுமன் கோவிலுக்கு சென்று வழிபட்டு வாருங்கள் நன்மைகள் அதிகம் நடைபெறும்.

## சிம்மம்

சூரியனை ராசி அதிபதியாகக் கொண்ட சிம்ம ராசிக்காரர்களுக்கு பிலவ தமிழ் வருடம் அற்புதமாக ஆண்டாக அமைந்துள்ளது. குரு பகவான் தன்னுடைய ஏழாம் பார்வையால் உங்கள் ராசியை பார்வையிடுகிறார். தலைமை தாங்கும் பண்பு கொண்ட உங்களுக்கு இந்த ஆண்டு புதிய தொழில் முன்னேற்றம் தேடி வரும். புத்தாண்டு பிறக்கும் போது உங்கள் ராசிக்கு பத்தாம் அதிபதி சுக்கிரன் உங்கள் ராசிக்கு லாப ஸ்தான அதிபதியுடனும் இணைந்து சஞ்சரிப்பது உங்களுக்கு புதுவிதமான யோகத்தை தரப்போகிறது. முயற்சிகள் எல்லாம் வெற்றியாகும். அரசியல்வாதிகளுக்கு மிகப்பெரிய வெற்றிகளும் பதவிகளும் கிடைக்கப்போகிறது. கலைத்துறையினருக்கு புகழும் செல்வாக்கும் அதிகரிக்கும். பங்கு சந்தை முதலீடுகளில் நல்ல லாபம் கிடைக்கும். கணவன் மனைவி உறவில் இருந்த சிக்கல்கள் நீங்கி நெருக்கம் அதிகரிக்கும். சுப காரியங்கள் அதிகம் நடைபெறும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிலவ தமிழ் வருடத்தில் நீங்கள் சாதனையாளர்களாக மாறப்போகிறீர்கள். இந்த ஆண்டு தொட்டது துலங்கும் பொற்கால ஆண்டாக இருக்கப்போகிறது.

## கன்னி

புதன் பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட கன்னி ராசிக்காரர்களே, பிலவ தமிழ் வருடம் பிறக்கும் போது உங்கள் ராசி அதிபதி உங்களுடைய வீட்டிற்கு ஏழாம் வீட்டில் நீசம் பெற்ற நிலையில் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசி அதிபதியின் பார்வை உங்களுக்கு கிடைக்கிறது. முயற்சிகளுக்கும் உழைப்புக்கும் ஏற்ற பலன்களை அறுவடை செய்வார். ஐந்தாம் அதிபதி சனி ஆசி பெற்று சஞ்சரிக்கிறார். நிலையான வருமானம் கிடைக்கக் கூடிய வேலை வாய்ப்பு அமையும். கூட்டுத் தொழிலில் லாபம் கிடைக்கும். ஆசிரியர்கள், வங்கித்துறையில் வேலை செய்பவர்களுக்கு நல்ல மாற்றங்கள் நிறைந்த ஆண்டாக அமையும். உங்களின் திறமைக்கு மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். காதல் திருமணம் கை கூடி வரும். கணவன் மனைவி உறவில் இருந்த சிக்கல்கள் நீங்கும். பெண்களுக்கு பொன், பொருள் ஆபரண சேர்க்கை ஏற்படும். தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

## துலாம்

சுக்கிரபகவானை ராசி அதிபதியாகக் கொண்ட துலாம் ராசிக்காரர்களே, இந்த பிலவ வருடத்தில் உங்களுக்கு சாதகமான நிலையில் கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. இந்த ஆண்டு பிறக்கும் போதே குருவின் பொன்னான பார்வை உங்கள் ராசிக்கு கிடைக்கிறது. குரு பகவான் 5ஆம் வீட்டில் அமர்ந்து உங்கள் ராசியை பார்வையிடுவது சிறப்பு. நான்காம் வீட்டில் உள்ள அர்த்தாஷ்டம சனி பகவான் உங்களின் தொழில் ஸ்தானத்தை பார்வையிடுவதால் கவனமும் விழிப்புணர்வும் தேவை. இந்த ஆண்டில் தொழில், வியாபாரம், வேலை சிறப்பாக அமையும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கும். வாழ்க்கையில் இருந்த சிக்கல்கள் நீங்கும். வழக்கு விவகாரங்கள் சமாதானத்தில் முடியும். பெற்றோரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மொத்தத்தில் இந்த பிலவ புத்தாண்டு மாற்றங்களைத் தரப்போகிற ஆண்டாக அமையப்போகிறது. வியாழக்கிழமைகளில் சித்தர்கள் ஜீவ சமாதிகளுக்கு சென்று வழிபட்டு வர நன்மைகள் நடைபெறும்.

## விருச்சிகம்

செவ்வாய் பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த ஆண்டு தர்மகர்மாதிபதி யோகம் கிடைக்கிறது. தமிழ் புத்தாண்டு பிறக்கும் போது சூரியனும் சந்திரனும் ஒன்றாக இணைந்து ஆறாம் வீட்டில் சஞ்சரிக்கின்றனர். பத்தாம் அதிபதி உச்சம் பெற்றிருப்பது பலமான யோகத்தை தரும். குருவின் சஞ்சாரமும் நான்காம் வீட்டில் அமர்ந்து அவரது பார்வை உங்கள் ராசிக்கு 8,10,12 ஆம் வீடுகளின் மீது விழுகிறது. கடந்த காலங்களில் பட்ட துன்பங்களுக்கு எல்லாம் விடிவு காலம் பிறக்கப்போகிறது. ஏழரைச்சனி முடிவுக்கு வந்து விட்டாலும் கேது உங்கள் ராசியில் சஞ்சரிக்கிறார். சுப கிரகங்களின் சஞ்சாரம் சாதகமாக உள்ளது. உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வேலையில் இருந்த சிக்கல்கள் நீங்கும். உறக்கம் தொலைத்தவர்கள் இனி சுகமாக உறங்குவீர்கள். பங்குச் சந்தை முதலீடுகள் லாபத்தை கொடுக்கும்.

## தனுசு

குரு பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட தனுசு ராசிக்காரர்களுக்கு பிலவ வருடத்தில் ஆரம்பமே அமர்க்களம் என்பது போல இருக்கிறது. உங்கள் ராசி அதிபதி குரு பகவான் மூன்றாம் வீட்டில் பயணம் செய்கிறார். கஷ்டங்கள் கவலைகள் மாறக்கூடிய காலம் வந்து விட்டது. ஏழரை சனியில் பாத சனி நடைபெறுகிறது என்றாலும் சனியால் ஏற்படும் சங்கடங்கள் நீங்கும். கடன், நோய், வம்பு வழக்குப் பிரச்சினைகள் நீங்கும். ஆரோக்கியமான நோயற்ற வாழ்க்கை உண்டாகும். எதிரிகள் தொந்தரவு நீங்கும். ஆண்டு பிறக்கும் போது பாக்யாதிபதி சூரியன் உச்சம் பெற்றிருப்பதால் நிறைய பாக்கியங்கள் நிறைந்த ஆண்டாக அமையப்போகிறது. திருமண யோகம் கை கூடி வரும். திருமணம் முடிந்தவர்களுக்கு புத்திரபாக்கியம் கை கூடி வரும். வேலை இழந்து தவிப்பவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்.

## மகரம்

சனிபகவானை ராசி நாதனாகக் கொண்ட மகர ராசிக்காரர்களே பிலவ ஆண்டு பிறக்கும் போது உங்களுக்கு நவ கிரகங்களின் சஞ்சாரம் சாதகமாக உள்ளது. ஏழரை சனி காலமாக இருக்கிறதே என்று கவலைப்பட தேவையில்லை. காரணம் இரண்டாவது வீடான தன குடும்ப வாக்கு ஸ்தானத்தில் சுக கிரகமான குரு அதிசாரமாகக் குடியேறியுள்ளார். சூரியன் சுக ஸ்தானத்தில் உச்சம் பெற்றிருக்கிறார். சுக்கிரனும் உச்ச சூரியனுடன் இணைந்திருப்பார். தொழில் ஜீவன அமைப்பு நன்றாக உள்ளது. வேலையிழப்பு ஏற்பட்டவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கான அம்சங்கள் நிறைந்துள்ளன. உறவுகள், நட்புகளால் சில சங்கடங்கள் வந்தாலும் அதை எளிதாக அடையாளம் கண்டு கொள்வீர்கள். சனிபகவான் இந்த ஆண்டில் சில படிப்பினைகளை கொடுத்து விட்டு செல்வார். இந்த ஆண்டு எத்தகைய பாதிப்புகள் வந்தாலும் அதை எளிதில் எதிர்கொள்வீர்கள். பிலவ ஆண்டு நன்மைகள் அதிகம் நிறைந்த ஆண்டாக உள்ளது.

## கும்பம்

சனிபகவானை ராசி நாதனாகக் கொண்ட கும்ப ராசிக்காரர்களே பிலவ வருடம் பிறக்கும் போதே உங்கள் ராசிக்கு ஜென்ம ஸ்தானத்தில் குரு சஞ்சரிக்கிறார். விரைய ஸ்தானத்தில் ராசி அதிபதி சனிபகவான் ஆட்சி பெற்று வலுவான நிலையில் சஞ்சரிக்கிறார். தன வருமானம் அதிகரிக்கும் கூடவே வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். சுப விரைய செலவுகளாக மாற்றுங்கள். கடன் பிரச்சினைகள் நீங்கும் அளவிற்கு பொருளாதார வரவு அதிகரிக்கும். எதையும் எளிதாக சமாளிக்கும் தைரியம் பிறக்கும். கணவன் மனைவி உறவில் இருந்த சிக்கல்கள் நீங்கும். திருமண சுப காரியங்கள் நடைபெறும். காதல் திருமணம் நடைபெறும். பிள்ளைகளினால் சந்தோஷம் அதிகரிக்கும். பிறந்த ஜாதகத்தில் சனி நல்ல நிலையில் இருந்து தசாபுத்தி நடக்கும் பட்சத்தில் நிறைய நன்மைகள் நடைபெறும். சுப காரியங்கள் தடைகள் இன்றி நடைபெறும். தடைகளைத் தாண்டி இந்த ஆண்டு முன்னேற்றம் உண்டாகும்.

## மீனம்

குரு பகவானை ராசி நாதனாகக் கொண்ட மீன ராசிக்காரர்களே. பிறக்கப் போகும் பிலவ வருட தமிழ் புத்தாண்டு அற்புதமான யோகங்களைத் தரப்போகிறது. ராஜகிரகங்கள் அற்புதமான நிலையில் உள்ளன. சூரியன் சுக்கிரன் இரண்டாம் வீட்டில் பயணிக்கின்றனர். செவ்வாய் பகவானுக்கு குருவின் பார்வை கிடைப்பது சிறப்பம்சம். ராசி நாதன் குரு பகவான் புது வருடத்தில் முதல் ஐந்து மாதங்கள் விரைய ஸ்தானத்தில் பயணம் செய்கிறார். திடீர் சுப விரைய செலவுகள் ஏற்படும். பிள்ளைகளுக்கு திருமண சுபகாரியம் நடைபெறும். ஆவணி மாதத்தில் மீண்டும் குரு சனியோடு மீண்டும் இணைந்து லாப ஸ்தானத்தில் பயணிப்பார். தொழில் முன்னேற்றம் உண்டாகும். சவால்களை சாதனையாக மாற்றுவீர்கள். ராகுவின் பயணமும் உங்களுக்கு நிறைய லாபத்தை தரப்போகிறது. இந்த பிலவ ஆண்டு புத்துணர்ச்சியையும் உற்சாகத்தையும் தரப்போகிற ஆண்டாக அமைந்துள்ளது.

# மக்கள் பொறுப்புடன் செயற்படத் தவறினால்

# புத்தாண்டின் பின்னர் கொவிட் தீவிரமடையலாம்



## தொற்று நோயியல் தடுப்பு பிரிவின் பிரதம தொற்று நோயியல் நிபுணர் டொக்டர் சுதத் சமரவீர விளக்கம்

**இ**லங்கையில் கொவிட் 19 தொற்றின் தற்போதைய நிலைமை, புத்தாண்டு காலப்பகுதியில் நடந்து கொண்ட வேண்டிய ஒழுங்கு, இத்தொற்று தவிர்ப்புக்கான தடுப்பூசியின் இரண்டாம் சொட்டு வழங்குதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து சுகாதார அமைச்சின் தொற்று நோய்கள் தடுப்பு பிரிவின் பிரதம தொற்று நோயியல் நிபுணர் டொக்டர் சுதத் சமரவீர 'தினகரன் வார மஞ்சரி'க்கு அளித்த விஷேட பேட்டி.

**கே: நாட்டில் கொவிட் 19 தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருகின்ற தற்போதைய சூழலில் சித்திரை புத்தாண்டு அண்மித்துள்ளது. இந்த நிலையில் இத்தொற்று தவிர்ப்பு தொடர்பில் மக்கள் கவனம் செலுத்தாது நடந்து கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றனவே?**

பதில் கடந்த நத்தார் பண்டிகையின் பின்னரான இரண்டு மூன்று வாரங்களில் இத்தொற்று நாட்டில் தீவிரமடைந்தது. ஏனெனில் அப்பண்டிகைக் காலப்பகுதியில் இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்களில் மக்கள் அசிரத்தை காட்டினர். குறிப்பாகப் பொருட்கள் கொள்வனவுக்கு கொடுத்த முக்கியத்துவம் இத்தொற்றைத் தவிர்ப்பதற்கு அளிக்கப்படவில்லை. அதனால் நத்தார் பண்டிகையின் பின்னர் இத்தொற்று தீவிரமானது.

அவ்வாறான அனுபவத்தைப் பெற்றிருக்கையில் இந்த சிங்கள தமிழ் புத்தாண்டு காலப்பகுதியிலும் இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் கவனயீனமாக நடந்து கொள்வது அது மீண்டும் தீவிரமடைய உதவுவதாகவே அமையும். அதனால் இத்தொற்றைத் தவிர்ப்பதற்கான சுகாதார வழிகாட்டல்களாக விளங்கும் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், கைகழுவுதல் உள்ளிட்ட அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களப் பேணிக்கொள்ள வேண்டும். குறிப்பாக பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக கடையினுள் செல்ல முன்னரும் சென்று வெளியே வந்த பின்னரும் கைகளைக் கழுவிக்கொள்ள வேண்டும். அதேபோன்று பொதுப்போக்குவரத்துகளில் பயணிகள் நிறைந்து நெரிசலாக போக்குவரத்து வசதி குறைவாகக் காணப்படுவதே காரணமாகும். அதனால் பயணம் நிறைவடையும் வரையும் முகக்கவசத்தை அணித்திருப்பதோடு, தூரப் பயண பஸ் வண்டிகள் சிற்றுண்டி உண்பதற்காக தரித்து செல்லும் இடங்களிலும் முகக்கவசத்தை அணிந்து கொள்ள வேண்டும். சிற்றுண்டிகளை உண்பதாயின் சமூக இடைவெளியைப் பேணிக்கொள்வதே சிறந்தது. அத்தோடு பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்துபவர்கள் வீடு திரும்பியதும் அல்லது தாம் பயணிக்கும் இடத்தைச் சென்றடைந்ததும் கைகளை நன்கு கழுவிக்கொள்ள வேண்டும்.

புத்தாண்டு காலப்பகுதியின் நிமித்தம் இத்தொற்று தவிர்ப்புக்காக வழிகாட்டல்களும் வழங்கப்பட்டுள்ளன.

**கே: இத்தொற்று தவிர்ப்புக்காக புத்தாண்டின் நிமித்தம் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்கள் பற்றி சொல்கிறீர்களா?**

பதில் கடந்த வருடம் புத்தாண்டைக் கொண்டாடக் கிடைக்காத போதிலும் இம்முறை கொண்டாடக் கூடிய சூழல் காணப்படுகிறது. ஆனாலும் சுபவேளைக் கருமங்களை தம் குடும்பங்களுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்திக் கொள்வதோடு, உறவினர்களையும் நண்பர்களையும் சந்திக்கச் செல்வதையும் வரையறுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செல்கையில் சுகாதார வழிகாட்டல்களை உரிய ஒழுங்கில் பேணிக்கொள்ளத் தவறக்கூடாது. மக்கள் கூடும் இடங்களுக்கு செல்ல வேண்டாம். குறிப்பாக புத்தாண்டு விடுமுறைக் காலத்தில் நிறைப் பேர் நுவரெலியாவுக்கு செ ல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளன ர். தற்போதைய சூழலில் அவ்வாறான இடங்களுக்கு செல்வதைத் தவிர்த்து வீடுகளில் இருப்பதே ஆரோக்கியமானது.

மேலும் கிராம மட்டத்தில் புத்தாண்டு விளையாட்டுகள் ஒழுங்கு செய்யப்படும் போது சமூக இடைவெளியைப் பேணி நெருங்கி செயற்படாதிருக்க வேண்டும். இவ்வாறான வழி காட்டல்களின்படி செய றப்படத் தவறினால் புத்தாண்டின் பின்னரான இரண்டு மூன் று வாரங்களில் இத்தொற்று தீவிரமடையக்கூடிய அபாயம் ஏற்படும். அதன் விளைவாகப் பாடசாலைகள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள் உள்ளிட்டவற்றைத் தனிமைப்படுத்தவும் முடக்கவும் மூடவும் வேண்டிய நிலைமை உருவாகும். ஏனெனில் இந்தியா, பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகளில் இத்தொற்று மீண்டும் தீவிரமாகப் பரவும் நிலைமை ஏற்பட்டுள்ளது. உயிரிழப்புக்களும் அதிகரித்துள்ளன. அதனால் அந்நாடுகளை முடக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

அதேநேரம் இத்தொற்று கட்டுப்பாட்டுக்கு தடுப்பூசி வழங்கப்படுவதால், தாம் பாதுகாப்பு பெற்றுள்ளோம் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. அதன் காரணத்தினால் இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்கள் குறித்து அசிரத்தை காணப்படுகிறது. ஆனால் இத்தடுப்பூசியைப் பெற்றாலும் கூட இத்தொற்று ஏற்படலாம். இத்தடுப்பூசியானது இத்தொற்று தீவிர நிலையை அடைவதையும் மரணம் நிகழ்வதையுமே குறைக்கும் என்பதை மறக்கலாகாது.

**கே: இத்தொற்று தவிர்ப்புக்கான தடுப்பூசியின் இரண்டாம் சொட்டு வழங்கப்படுவது தொடர்பில் கூறுங்கள்?**

பதில் இந்நாட்டில் இற்றை வரையும் 09 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு அஸ்ட்ரா செனகா (இந்திய உற்பத்தியான கொவிஷீல்ட்) தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. தற்போது சுமார் 03 இலட்சம் தடுப்பூசி தான் கையிருப்பில் உள்ளது. இத்தடுப்பூசியின் இரண்டாம் சொட்டை வழங்குவது தொடர்பில் புதிய சான்றுகளுடன் செல்ல வேண்டியுள்ளது. நாம் இத்தடுப்பூசியை வழங்கத் தொடங்கும் போது இரண்டாம் சொட்டை 04 வாரங்களுக்குள் வழங்க வேண்டும் என மருத்துவ உலகம் தெரிவித்தது. அதன் பின்னரான ஆராய்ச்சி முடிவுகளில் இரண்டாம் சொட்டு வழங்கலை 12 வாரங்கள் வரை தாமதப்படுத்தினால் அதிக பிரதிபலன் கிடைக்குமெனத் தகவல் வெளியானது. கனடா போன்ற நாடுகள் இத்தடுப்பூசியின் இரண்டாம் சொட்டு வழங்குதலை 18 வாரங்கள் வரை தாமதப்படுத்தியுள்ளன. இவை தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

எனினும் இரண்டாம் சொட்டு வழங்கலை நாம் ஆரம்பித்த மூன்று வாரங்களுக்குள் எமக்கு கிடைக்கப்பெற வேண்டிய தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றுவிடும். இதனை இந்திய அரசாங்கமும், உலக சுகாதார ஸ்தாபனத்தின் 'கொவெக்ஸ்' திட்டமும் உறுதிப்படுத்தியுள்ளன. அதன் பயனாக இத்தடுப்பூசி கிடைக்கப்பெறுவதில் நிலவும் தாமதம் மே மாதமாகும் போது சீரடைந்துவிடும் என நம்புகின்றோம். இத்தடுப்பூசி கிடைக்கப்பெறுவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தினால் தடுப்பூசி வழங்குதல் குறைக்கப்பட்டுள்ள போதிலும் கொழும்பு மாநாகர சபை எல்லைக்குள் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

**கே: அஸ்ட்ரா செனகா தடுப்பூசிப் பெற்ற ஒரு சிலருக்கு இலங்கையிலும் இரத்தம் உறைதல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றனவே?**

பதில் இத்தடுப்பு மருந்தைப் பெற்றவர்களுக்கு இரத்தம் உறைதல் பாதிப்பு ஏற்படுவது ஐரோப்பிய நாடுகளில் முதலில் பதிவாகியது. அதனால் இத்தடுப்பு மருந்துப் பாவனையைச் சில நாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தின. சில நாடுகள் மீண்டும் இத் தடுப்பூசி வழங்கலை ஆரம்பித்துள்ளன. இந்த இரத்தம் உறைதல் பாதிப்பு இளம் வயதினருக்கு ஏற்படுவதைச் சில நாடுகள் அவதானித்துள்ளன. அதனால் சிரேஷ்ட பிரஜைகளுக்கு, குறிப்பாக 50முதல் 55 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் இத்தடுப்பு மருந்து தொடர்ந்தும் வழங்கப்படுகின்றது.

அந்த வகையில் இலங்கையில் இத்தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களில் வெவ்வேறு காரணங்களுக்காக வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற வந்த சுமார் 20 பேர் பதிவாகியுள்ளனர். அவர்களில் சிலர் இரத்தம் உறைதல் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். இவர்களில் சிலருக்கு மூளையிலும் இன்னும் சிலருக்கு ஈரலிலும் இன்னும் சிலருக்கு சிறுநீரகத்திலும் என்றபடி இரத்தம் உறைதல் ஏற்பட்டுள்ளது. இது இத்தடுப்பு மருந்தினால் ஏற்பட்டது என்பதற்குரிய உறுதியான சான்றுகள் இன்னும் இல்லை. ஆனால் ஒரு சில தொற்று நோய்கள் காரணமாகவும் இவ்வாறு ஏற்படலாம். இத்தடுப்பூசி வழங்கப்பட முன்னரும் இவ்வகை இரத்தம் உறைதலை இலங்கை மருத்துவர்களும் அவதானித்துள்ளனர். அதனால் தற்போது பதிவாகியுள்ள இரத்தம் உறைதலுக்கும் இத்தடுப்பூசிக்கும் தொடர்பு உள்ளதா என்பதை நாம் தீவிரமாக ஆராய்கின்றோம். அவ்வாறு இருக்குமாயின் அது தொடர்பில் உடனடியாக நாட்டு மக்களுக்கு அறிவிப்போம். இது தொடர்பில் முன்னெச்சரிக்கையுடன் நடவடிகைககளை முன்னெடுத்துள்ளோம்.

**கே: அந்நடவடிக்கைகள் தொடர்பில் குறிப்பிட முடியுமா?**

பதில் இந்நாட்டில் இரத்தம் உறைதலுக்கு உள்ளான ஒரிருவரை அவதானித்ததும் அது தொடர்பில் நாம் விழிப்படைந்துள்ளோம். இத்தடுப்பூசியைப் பெற்று 03 நாட்கள் முதல் 3 வாரங்களுக்குள் எந்தவொரு மருத்துவக் காரணத்திற்காகவாவது வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற எவராவது வந்தால் அது தொடர்பில் எமது தொற்று நோயியல் பிரிவுக்கு அறிவிக்குமாறு நாட்டிலுள்ள எல்லா வைத்தியசாலைகளுக்கும் அறிவித்துள்ளோம். இதன் நிமித்தம் 24 மணிநேரமும் செயற்படக்கூடிய அவசர தொலைபேசிச் சேவையையும் நாம் ஆரம்பித்துள்ளோம். இங்கு இரண்டு மருத்துவ நிபுணர்களை பணியில் ஈடுபடுத்தியுள்ளோம். அவர்கள் 24 மணி நேரமும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கின்றனர்.

இதேவேளை இது குறித்து உலக நாடுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளோம். அத்தோடு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆய்வு செய்யும் வகையில் நரம்பியல் மருத்துவ நிபுணர்கள், குருதியியல் நிபுணர்கள், பொது மருத்துவ நிபுணர்கள், தொற்று நோயியல் நிபுணர்கள், நிணநீர் தொகுதி நிபுணர்கள் அடங்கிய விஷேட மருத்துவ நிபுணத்துவ குழுவொன்றை நியமித்துள்ளோம். இது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு சிபாரிசுகளை பெற்றுக் கொள்வதும் அவ்வாறான நிலைமையின் போது எவ்வாறு முகாமைத்துவம் செய்ய வேண்டும் என்பதற்கான வழிகாட்டல் முறைமைகளைத் தயாரித்துக் கொள்வதுமே இதன் நோக்கமாகும். அதேநேரம் பல நோய்கள் தொடர்பில் சிகிச்சை மற்றும் பராமரிப்பு சேவைகளை மேற்கொள்ளக்கூடிய மருத்துவ நிபுணர்களை உள்ளடக்கி மருத்துவ நிபுணத்துவ குழுவை தேசிய வைத்தியசாலையில் அமைக்குமாறும் தீவிர சிகிச்சை பிரிவொன்றைத் தயார்படுத்துமாறும் பிரதிப் பணிப்பாளருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது இவ்வாறான நிலைமைக்கு உள்ளாகின்றவர்களுக்கு எவ்வித பிரச்சினைகளுமின்றி பராமரித்து சிகிச்சை அளிக்கவே இவ்வேற்பாடுகள் மேற்கொள்ளப்படுன்றன. அதனால் இவ்வாறான பாதிப்புக்கு உள்ளானவர்கள் பதிவானார்களாயின் உடனடியாக தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு நாட்டிலுள்ள எல்லா வைத்தியசாலைகளுக்கும் அறிவிக்க உள்ளோம்.

- **கொவிட் 19 தடுப்பூசி தொற்றைத் தடுக்காது**
- **கொவிட் 19 தடுப்பூசி தொற்றின் தீவிரத் தன்மையையும் உயிராபத்து அச்சுறுத்தலையும் குறைக்கும்**

**கே: 'சினோபாம்' தடுப்பூசியை மக்களுக்கு வழங்குதலில் தாமதம் ஏன்?**

பதில் சீன உற்பத்தியான சினோபாம் தடுப்பூசி தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் மதிப்பீடுகளைத் தற்போது மேற்கொண்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு அவசரத் தேவையின் நிமித்தம் அதனைப் பாவிக்க அவர்கள் அனுமதி வழங்குவர். அப்போது எவ்விதப் பிரச்சினையும் இன்றி நாம் அதனை வழங்கலாம். அதேநேரம் பரீட்சார்த்தமாக இத்தடுப்பூசி வழங்கப்பட்ட போது கிடைக்கப்பெற்ற பாதுகாப்பு தரவுகளை நாம் கோரியுள்ளோம். இத்தரவுகள் உலக சுகாதார ஸ்தாபத்தின் அங்கீகாரத்திற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாயின் தேசிய மருந்துப்பொருட்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை அது குறித்து மதிப்பீடுகளை மேற்கொண்டு அவசர தேவையின் நிமித்தம் இத்தடுப்பூசியை பயன்படுத்த வழங்க அனுமதியளிக்கும்.

பொதுவாகத் தடுப்புசியைப் பரீட்சிப்பதற்கு நோயாளர்கள் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிடில் ஒப்பிட்டு பார்க்க முடியாது. சீனாவில் இத்தொற்று பெரிதும் கட்டுப்பாட்டு நிலையில் உள்ளது. அங்கு நோயாளர்கள் இல்லை. அதனால் இத்தடுப்பூசியைப் பாவித்தவர்களின் தரவுகளைப் பெற முடியாத நிலைமை காணப்படுகின்றது. அதனால் நோயாளர்கள் உள்ள வேறு நாடுகளில் தான் இத்தடுப்பூசி பரீட்சிப்புகள் சிலவும் இடம்பெறுகின்றன. அவை கிடைக்கப்பெற்றாலும் அவற்றை மதிப்பீடு செய்யலாம். இதன் விளைவாகவே இத்தடுப்பூசியை மக்களுக்கு வழங்குவதில் இங்கு தாமதம் நிலவுகிறது. ஆனால் இத்தடுப்பூசியை சுமார் இரு வருடங்களுக்கு களஞ்சியசாலைகளில் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும். தடுப்பூசி பாதிப்படையாது.

**கே: வேறு சில நாடுகள் சினோபாம் தடுப்பூசியைத் தம் பிரஜைகளுக்கு வழங்குகின்றனவே?**

பதில் ஒவ்வொரு நாட்டினதும் மருந்துப்பொருட்கள் ஒழுங்குபடுத்தல் விதிமுறைகளுக்கு இடையில் வித்தியாசமுள்ளது. அவற்றின் ஊடாகவே மருந்துப்பொருட்கள் மற்றும் தடுப்பூசிகள் அனைத்தும் மதிப்பீடு செய்யப்பட்டு மக்களுக்கு வழங்க முடியுமா? பாதுகாப்பானதா? என்பது குறித்து தீர்மானம் எடுக்கப்படும். அந்தடிப்படையில் தேசிய மருந்துப்பொருட்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அங்கீகாரமின்றி எந்தவொரு மருந்துப்பொருளையும் இந்நாட்டில் பாவிக்க முடியாது. ஆனால் நோய் நிலையில் இருக்கும் ஒருவருக்கு அவசியப்படுமிடத்து இங்கு பதிவு செய்யப்படாத மற்றும் அங்கீகாரம் அளிக்கப்படாத மருந்துப்பொருள் தேவைப்படுமாயின் அதனைக் கொண்டுவந்து வழங்கலாம். சமூகத்திற்கு வழங்குவதாயின் அங்கீகாரம் அத்தியாவசியமானது. அமெரிக்கா, பிரித்தானியா, சிங்கப்பூர், கனடா, ஐரோக்கிய நாடுகள் போன்ற நாடுகள் மருந்துப்பொருட்கள் தொடர்பில் அனைத்து விடயங்கள் குறித்தும் தீவிர கவனம் செலுத்தியே பாவனைக்கு அங்கீகரிக்கும். அவ்வாறான இறுக்கமான விதிமுறைகளே இங்குமுள்ளது.

ரஷ்யத் தயாரிப்பான 'ஸ்புட்னிக் வீ ' தடுப்பூசி தொடர்பிலான அனைத்து தரவுகளும் கிடைக்கப்பெற்று மருந்துப் பொருட்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை மதிப்பீடுகளை பூர்த்தி செய்து அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கேற்ப அமைச்சரவை அங்கீகாரத்துடன் அரசாங்க மருந்தாக்கட் கூட்டுத்தாபனம் இத்தடுப்பு மருந்தை இறக்குமதி செய்கிறது. இம்மாத இறுதியாகும் போது இத்தடுப்பூசி நாட்டுக்குள் வந்து சேரும். அதனை அஸ்ட்ராசெனகா தடுப்பூசியைப் போன்று பாவிக்கலாம்.

**கே: நிறைவாக மக்களுக்கு நீங்கள் கூறவிரும்புவதென்ன?**

பதில் இது புத்தாண்டு காலம். கொவிட் 19 தொற்று பரவுதல் அச்சுறுத்தல் நிலவும் சூழலியே நாம் இப்புத்தாண்டைஇகபண்டாடுகின்றோம். அதனால் இத்தொற்றின் பரவுதலுக்கு துணை போகாத வகையில் முன்னவதானத்துடன் சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப செயற்படுவது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். உலக சுகாதர ஸ்தாபனத்தின் தெற்காசிய பிராந்தியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளில் ஒன்றான கொரியாவில் தற்போது இத்தொற்று பதிவாவதில்லை. இலங்கையிலும் இந்தோனேசியாவிலும் கடந்த இரு வாரங்களாக இத்தொற்றுக்குள்ளானவர்களாகப் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. இவற்றைத் தவிர பங்களாதேசம் உள்ளிட்ட எல்லா நாடுகளிலும் இத்தொற்றுக்குள்ளவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எமது நாட்டில் சிறந்த பொதுச் சுகாதாரக் கட்டமைப்பு காணப்படுவதன் பயனாகவே இத்தொற்று கட்டுப்பாட்டு நிலையை அ டை ந் து ள் ள து . அதனைத் தொடர்ந்தும் பேணிக்கொள்ள மக்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும்.



பேட்டி கண்டவர்:
**மர்லின் மரிக்கார்...**



**இரத்தம் உறைதல் தொடர்பில் ஆராயவும் சிபாரிசு மற்றும் வழிகாட்டல்களைத் தயாரிக்கவுமென மருத்துவ நிபுணர்கள் அடங்கிய விஷேட குழு**

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

## இலங்கையில் வர்த்தக நிறுவனங்களின் படிமுறை வளர்ச்சி : 09

# குடும்ப வணிக நிறுவனங்கள் சிறப்பு பண்புகளும் சவால்களும்

உலகம் முழுவதும் குடும்ப வணிக முயற்சிகள் பரந்து விரிந்து காணப்படுகின்றன. மொத்தத் தொழில் முயற்சிகளில் மூன்றில் இரண்டு பங்கு குடும்ப முயற்சிகளாகும். உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 70 தொடக்கம் 90 சதவீதம் குடும்ப வணிக முயற்சிகளால் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவ்வணிக முயற்சிகள் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலமும் பதிய உற்பத்திப் பொருள்களையும் சேவைகளையும் அறிமுகப்படுத்துவதன் மூலமும் முயற்சியாளருக்குத் தேவையான ஆரம்ப நிதி வசதிகளை வழங்குவதன் மூலமும் பொருளாதாரத்தை உந்திச் செல்கின்றன.

இலங்கையிலும் கூட அரசாங்கத்தால் உரிமை கொள்ளப்பட்டு நடாத்திச் செல்லப்படும் தொழில் முயற்சிகள் தவிர சிறிய நடுத்தர மற்றும் பெரிய கைத்தொழில்கள் எதுவாயினும் குடும்ப வணிக முயற்சிகளாகவே ஆரம்பிக்கப்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது.

உலகின் வெற்றிகரமான பாரிய வணிகத் தொழில் முயற்சிகள் பலவும் குடும்பத் தொழில் முயற்சிகளாகவே ஆரம்பிக்கப்பட்டன. பொல்க்ஸ் வாஹன் (Volkswagen), கார்கில் (Cargill), ரொபர்ட் பொஸ் (Robert Bosh), மார்ஸ் (MARS), இகேயா (IKEA), லாஓரியால் (L'Oreal), மெரியட் (Marriot) போன்ற சில உலகப் புகழ்பெற்ற வணிக நிறுவனங்கள் வெற்றிகரமான மிகப்பெரிய குடும்ப வணிகங்களாகும். இவை கடந்த நூற்றாண்டில் உலகப்போர்கள், கொடிய தொற்றுநோய்கள், நிதி நெருக்கடிகள் மற்றும் பொருளாதாரப் பின்னடைவுகள் போன்ற சவால்களின் மத்தியிலும் தம்மை நிலைப்படுத்திக் கொண்டன.

உலகின் மிகப் பழைமையான ஜப்பானியக் குடும்ப வணிகமான நிசியாமா ஒன்சென் கெயினுகென் (Nishiyama Onsen Keinuken) நிறுவனம் கிறிஸ்துவிற்குப் பின் 705 ஆம் ஆண்டில் ஒரு வெந்நீரூற்று ஹோட்டலாக ஆரம்பிக்கப்பட்டது. அது 1300 வருடங்களாக 52 குடும்பத் தலைமுறைகளைக் கடந்து செயற்பட்டுள்ளது. அதேபோல இன்னுமொரு பழைய ஜப்பானிய குடும்ப வணிகமான சுடோ ஹோங்கி (Sudo Honke) என்னும் மதுபான வடிசாலை கிபி 1141 இல் ஆரம்பிக்கப்பட்டு சுடோ குடும்பத்தின் 55 ஆவது தலைமுறையினால் நிருவகிக்கப்படுகிறது. ஆனால் உலகம் முழுவதும் ஆரம்பிக்கப்படும் குடும்ப வணிகங்களில் 13 சதவீதமானவை மாத்திரமே மூன்று தலைமுறைகளைக் கடந்து செல்வதாக ஆய்வொன்று கூறுகிறது. ஏனையவை தவிர்க்க முடியாத வகையில் மூடுவிழா காண்கின்றன. வணிகத்தில் எதிர்வுகூறக்கூடிய சமாளித்துச் செல்லத்தக்க விடயங்களை உரிய காலத்தில் முறையாகக் கையாளாமையே இவற்றின் முறிவுக்குக் காரணமென புள்ளிவிபரங்கள் வெளிப்படுத்துகின்றன.

**'ஆய்வுகளின்படி பொருளாதார நெருக்கடிகளின்போது குடும்ப வணிக முயற்சிகள் ஏனையவற்றுடன் ஒப்பிடுமிடத்து அதிக தாக்குப்பிடிக்கும் திறன் வாய்ந்தவையாகும். தீர்மானமெடுத்தலிலும் வணிகத்தில் ஈடுபடுவதிலும் குடும்ப வணிக முயற்சிகளின் தனித்துவமான தன்மை காரணமாக பொருளாதார சரிவுகளின் போதும் அவற்றிலிருந்து மீண்டெழும் ஆற்றலை அவற்றுக்கு வழங்குகின்றன'**

இவ்விடயங்களை உரிய காலத்தில் முறையாகக் கையாண்டு தீர்வுகாணும் குடும்ப வணிக முயற்சிகள் பல தலைமுறைகளைக் கடந்தும் வெற்றிகரமாக இயங்குவதைக் காணமுடியும். சில ஆய்வாளர்களின் கருத்துப்படி இருபத்தோராம் நூற்றாண்டின் உலகப் பொருளாதார நிலைமைகள் மற்றும் போட்டித்தன்மை என்பவற்றை நோக்குமிடத்து இந்நூற்றாண்டு குடும்ப வணிகங்களின் சகாப்தமாக மாறக்கூடிய ஏதுநிலை உள்ளதாகக் கூறப்படுகிறது. ஏனைய வணிகங்களோடு ஒப்பிடுகையில் குடும்ப வணிகங்களில் நன்மைகள் பல காணப்படுகின்றன. குடும்ப உறவுகளுக்கிடையிலான பிணைப்பும் வணிகத்தில் குடும்ப அங்கத்தவர்களின் அர்ப்பணிப்பை அதிகரிக்கின்றன.



ஏனைய வணிக முயற்சிகளில் இத்தகைய அர்ப்பணிப்பைக் காண இயலாது. குடும்பங்களின் பங்களிப்பானது கைத்தொழில்களைச் சரியாகப் புரிந்து கொள்ளவும் வணிக நடவடிக்கைகளில் குடும்ப அங்கத்தவர்களைப் பணிக்கமர்த்தவும் வாடிக்கையாளர்களுடன் உறுதியான உறவுகளை வளர்த்துக் கொள்ளவும் வினைத்திறன்மிக்க விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலை மேற்கொள்ளவும் உதவுகிறது. வணிகத்தில் குடும்ப அங்கத்தவர்களோடு கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவதால் வாடிக்கையாளரும் சௌகரியமான உணர்வைப் பெறக்கூடியதாக இருக்கும்.

ஆய்வுகளின்படி பொருளாதார நெருக்கடிகளின்போது குடும்ப வணிக முயற்சிகள் ஏனையவற்றுடன் ஒப்பிடுமிடத்து அதிக தாக்குப்பிடிக்கும் திறன் வாய்ந்தவையாகும். தீர்மானமெடுத்தலிலும் வணிகத்தில் ஈடுபடுவதிலும் குடும்ப வணிக முயற்சிகளின் தனித்துவமான தன்மை காரணமாக பொருளாதார சரிவுகளின் போதும் அவற்றிலிருந்து மீண்டெழும் ஆற்றலை அவற்றுக்கு வழங்குகின்றன.

வெற்றிகரமான குடும்ப வணிகங்கள் யாவும் தமது குடும்பத்திற்கு தமது கடப்பாடுகளை மனதிற்கொண்டே வளர்ச்சியை அடையவும் அதைத் தக்கவைத்துக் கொள்ளவும் முயற்சிக்கின்றன. அது வித்தியாசமான உபாயரீதியிலான தீர்மானமெடுத்தலுக்கு இட்டுச்செல்லும். நீண்டகால நோக்கின் அடிப்படையிலேயே முதலீடுகளை மேற்கொள்கின்றன. புதிய திட்டங்களில் முதலீடு செய்யமுன் மிகக்கவனமாக ஆய்வுகளை மேற்கொள்கின்றனர். குடும்பத்தின் சொத்தே முதலீடு செய்யப்படுவதால் தீர்மானம் மேற்கொள்வோர் காலம் எடுத்து ஆராய்ந்த பின்னரே தீர்மானங்களை மேற்கொள்கின்றனர். முதலீடானது ஒரு குறித்த தலைமுறைக்கு மட்டுமன்றி அடுத்த தலைமுறைக்கும் பயன்படவேண்டும் என்பதில் மிகக் கவனமாக இருக்கின்றனர். நீண்டகால நோக்கில் கவனமான ஆய்வின் பின்னர் முதலிடப்படுவதால் குடும்ப நிறுவனங்கள் பொருளாதார அதிர்ச்சிகளுக்கு தாக்குப்பிடிக்கவல்லன. வெற்றிகரமான குடும்ப வணிகங்கள் கடன் பெற விரும்புவதில்லை ஆதலால் மிகக் குறைந்த கடன் சுமையைக் கொண்டுள்ளன. கடன் பெற்றாலும் போதியளவு இடர் அபாய விளிம்பினைக் கொண்டிருப்பதை உறுதி செய்து கொள்வர். தாம் வங்கியிலிருந்து கடன் பெறும் பணத்தினாலன்றி சம்பாதிக்கும் பணத்தினாலேயே வளர்ச்சியடைய வேண்டும் என்பதே பிரதான விடயமாகப் பார்க்கப்படும். கடன் பணத்தில் ஏற்படும் குறுகியகால வளர்ச்சியைவிட நீண்டகால நோக்கில் அமைந்த வளர்ச்சியையே குடும்ப வணிகத்தால் விரும்பப்படுகிறது. பொருளாதார அதிர்ச்சிகளுக்கு தாக்குப்பிடிக்க இதுவும் ஒரு காரணமாகும்.

**'குடும்ப வணிகத்தை ஆரம்பிப்பது சுலபம். ஆயினும் அதனை நீண்ட காலத்திற்கு கொண்டு நடத்துவது இலகுவான ஒன்றன்று. சிறந்த முறையில் அதனை நிருவகிப்பதன் மூலமே அதன் செயலாற்றத்தை அதிகரிக்க முடியும். முறையான நிருவாகப் பொறிமுறையொன்றை உருவாக்குவதன் மூலம் குடும்ப வணிகத்தின் தொடர்ச்சியை உறுதி செய்ய முடியும்'**

குடும்ப வணிகங்கள் தமது ஊழியர்களை சிறப்பாக நடத்துவதால் நன்றியுணர்வுமிக்க தொழிலாளர்களை தலைமுறை தலைமுறையாக வேலைக்கமர்த்தி நன்மையடைகின்றன. ஜப்பானிய நிறுவனங்கள் இதற்கு நல்ல உதாரணம். வேலையில் சேரும் நபரின் தனிப்பட்ட விடயங்கள் தொடக்கம் சகல விவகாரங்களையும் குடும்ப வணிகமே கவனித்துக் கொள்வதால் வேலையாட்கள் வேறு நிறுவனங்களை நாடிச்செல்ல வேண்டியதில்லை. நிறுவனத்திற்கு விசுவாசமாக நீண்டகாலம் பணிபுரிவது அங்கு சாதாரணமாக நிகழும் ஒன்றாகும்.

குடும்ப வணிகங்கள் தம்மோடு தொடர்புபட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களுடன் கட்டியெழுப்பும் நீண்டகாலத்தொடர்புகள் அவற்றின் முக்கியமான ஒரு சக்தியாகும். கடினமான காலங்களில் நிலைத்திருக்க இத்தொடர்புகள் முக்கியமானவையாகும். தம்முடன் தொடர்புடையவர்கள் மத்தியில் நன்மதிப்பைப் பேணுவதை இவை முக்கியமாகக் கருதுகின்றன. குடும்ப வணிகம் என்பது ஒரு குடும்பத்தின் பெயரின் நன்மதிப்பில் தங்கியுள்ளது. அதனை இழக்க அக்குடும்பம் விரும்பாது. எனவே நம்பிக்கை நன்மதிப்பு நீண்டகாலத்திற்கு நீடிக்கும் வணிகத்தொடர்பு என்பன வெறுமனே வணிகத்தோடு மட்டும் தொடர்பு பட்டதாக இல்லாமல் முழுக்குடும்பத்துடன் தொடர்புபட்டதாகப் பார்க்கப்படும். இதனால் கடினமான சூழ்நிலைகளின் போது குடும்ப வணிகங்களால் அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும்.

குடும்ப வணிகங்கள் கடினமான சூழ்நிலைகளின் போது தமது குடும்ப அங்கத்தவர்களின் ஆதரவையும் அனுசரணையையும் பெறமுடியும். தமக்கு வரவேண்டிய பங்கிலாபங்களையும் ஏனைய கொடுப்பனவுகளையும் பெறாமால் கடின சூழ்நிலை நீங்கும்வரை உதவமுடியும். குடும்ப வணிகத்தை ஆரம்பிப்பது சுலபம் ஆயினும் அதனை நீண்ட காலத்திற்கு கொண்டு நடத்துவது இலகுவான ஒன்றன்று. சிறந்த முறையில் அதனை நிருவகிப்பதன் மூலமே அதன் செயலாற்றத்தை அதிகரிக்க முடியும். முறையான நிருவாகப் பொறிமுறையொன்றை உருவாக்குவதன் மூலம் குடும்ப வணிகத்தின் தொடர்ச்சியை உறுதி செய்ய முடியும். உதாரணமாக ஜப்பானிய குடும்ப வணிகங்களில் அந்நிருவாகப் பொறிமுறை சிறப்பாகச் செயற்படுகிறது. வணிகத்தை சிறப்பாக நிருவகிக்கக்கூடியவர்களை குடும்பத்திற்கு வெளியிலிருந்தும் அவை தெரிவு செய்கின்றன. அதனால் குடும்பத்தின் அடுத்த தலைமுறையில் நிருவாகத்திறமையற்றவர்களால் அது முறிவடையும் அபாயம் தவிர்க்கப் படுகிறது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

---

எம்.ஜி.ரெட்னகாந்தன்

# குட்டையை குழப்புகின்றாரா எரிக் சொல்ஹெய்ம்?



இலங்கை தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் பல தசாப்தங்களை கொண்ட நீண்ட நெடிய போராட்டமாக இருக்கின்றது. அரசியல் போராட்டம், ஆயுதப்போராட்டம் என எழுபது வருடங்களுக்கு மேலாக தொடர்ந்த போராட்டமானது பல பேச்சு வார்த்தைகள், இராஜதந்திர நகர்வுகள், ஆயுத கையளிப்பு, யுத்தநிறுத்தம், சர்வதேச கண்காணிப்பு, சர்வதேச அனுசரணை என்ற பல நகர்வுகளுடன் ஈழத் தமிழருக்கு அகதி வாழ்க்கையையும், அவலத்தையும் பரிசளித்து முடித்து வைக்கப்பட்டது.

இருந்தும் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் தமிழர்கள் தங்கள் வாழ்க்கையை மெதுவாக கட்டியெழுப்பிவரும் இக்கால கட்டத்தில் அம் மக்களின் அரசியல் அபிலாசையை வைத்து மீண்டும் தமிழர்களை அரசியல் வன்முறைக்குள் தள்ளிவிட சர்வதேச நாடுகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றது என்று சந்தேகம் கொள்ள வைத்துள்ளது இலங்கைக்கான சமாதான தூதுவராக பணியாற்றிய நோர்வே நாட்டைச் சேர்ந்த எரிக் சொல்கெய்மின் பேச்சு இலங்கையில் அரசபடைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற போரை நிறுத்தி 2002 ஆம் ஆண்டு சமாதான தூதுவராக இலங்கையில் நியமிக்கப்பட்டவரே எரிக் சொல்கெய்ம். 2009 ஆம் அண்டு விடுதலைப்புலிகள் அரச படையினரால் முற்றாக அழிக்கப்பட்டு நிரந்தர சமாதானம் இலங்கையில் ஏற்படுத்தப்பட்டது.

அதன் பின்னர் அமைதியாக இருந்த எரிக்சொல்கெய்ம் இப்போது அதே சர்வதேசத்திற்காக அரசியல் நகர்வுகளை செய்ய ஆரம்பித்துள்ளார்.

அதன் ஒரு கட்டமாகவே ஈழத்தமிழர்கள் தங்கள் உரிமைகளை பெற்றுக் கொள்ள போராட வேண்டும். அது ஆயுதப் போராட்டமல்ல, அகிம்சைவழியில் இந்தியாவின் வழிகாட்டலில் போராட வேண்டும் அப்போது சர்வதேசம் தமிழர்களுக்கான தீர்வை பெற்று தரும் எனத் தெரிவித்துள்ளார்.

சர்வதேசம் தங்கள் அரசியல் நகர்வுகளை ஈழத்தமிழர்கள் நோக்கி நகர்த்தி வரும் ஒரு திட்டத்தின் ஆரம்பமே எரிக் சொல்கெய்மின் கூற்றாக, தமிழர்கள் தங்கள் தீர்வுக்கு போராட வேண்டும் என்ற அறிவுரை இருக்கின்றது.

அதாவது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைச் சபையின் 46 வது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக சர்வதேச நாடுகளால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பின்னர் தமிழர் தகவல் நிலையத்தின் ஒருங்கிணைப்பில் (சூம்) ஒன்றுகூடல் ஒன்றினூடாக நோர்வே நாட்டின் இலங்கைக்கான சமாதான தூதுவராக 2002 இல் பணியாற்றிய எரிக்சொல்கெய்ம் பேசும் போதே இவ்வாறான ஒரு கருத்தை முன்வைத்துள்ளார்.

இலங்கையில் ஈழத்தமிழர்களை வைத்து அனைத்து மேற்கத்திய நாடுகளுக்கும் தங்கள் அரசியல் தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்ள தேவைப்படுபவர்களாக தமிழர்கள் இருக்கின்றார்கள். இலங்கையின் அரசியலில் கேந்திர முக்கியத்துவமிக்க பசுபிக் பிராந்திய நாடுகளுக்கும், இந்து சமுத்திர பிராந்திய நாடுகளுக்கும் முக்கியம் மிக்க ஒன்றாக இலங்கை காணப்படுகின்றது.

ஏரிக்சொல்கெய்ம் என்ன சொல்கிறார் என்றால் ஈழத்தமிழர்கள் போராட வேண்டும் அதாவது வன்முறையாக நீங்கள் போராடுவதை நிறுத்திவிட்டு அகிம்சை வழியில் உங்கள் உரிமைகளை பெற்றுக்கொள்ள போராட்டங்களை நடாத்துங்கள். குறிப்பாக இந்தியா உங்கள் உரிமைகளை பெற்றுத்தர வேண்டும் என்றால் காந்தி போராடிய அகிம்சை ரீதியிலான போராட்டங்களை முன்னெடுங்கள் அப்படி போராடினால் தீர்வு கிடைக்கும்.

எவ்வாறெனில் ஆயுதரீதியாக தமிழர்கள் போராடிய காரணத்தால்தான் உரிமைகளை பெற்றுத்தர முடியவில்லை. அகிம்சை ரீதியாக போராடினால் தங்கத் தாம்பாழத்தில் வைத்து உங்கள் உரிமைகளை வழங்க முடியும் என்ற ரீதியில் எரிக் சொல்ஹெய்ம் தமிழர்களுக்கு அறிவுரை கூறியுள்ளார். அத்துடன் தமிழர்கள் தனிநாடு கேட்பதை சர்வதேசம் விரும்பவில்லை, அரசும் விரும்பவில்லை நீங்கள் சமஸ்டி முறையை கோரலாம் அதற்காக அகிம்சை ரீதியில் போராடுங்கள் என தெளிவுபடுத்தியுள்ளார்.

ஈழத்தமிழர்கள் தங்களுக்கு தீர்வு வேண்டுமென்றால் போராட வேண்டும், போராட்டம் அகிம்சை ரீதியில் இருக்கும் போது தீர்வு கிடைக்கும். அந்த தீர்வை யார் தருவர்கள் என்றால் இந்தியா தருமாம், தீர்வை இந்தியாவிடம் எதிர்பாருங்கள். அதாவது இந்தியாவிடம் போய் ஆலோசனை பெற்று வந்து தமிழர்கள் தீர்வை பெற்றுக்கொள்ள அகிம்சை ரீதியில் போராட வேண்டும் வன்முறையில் இறங்கிவிடக்கூடாது என அறிவுரை வழங்கியுள்ளார்.

இப்போது எரிக்சொல்கெய்மின் சிந்தனை எவ்வாறு இருக்கின்றது என்றால் தமிழர்கள் இலங்கையில் தங்கள் உரிமைக்காக போராடினால் இலங்கை அரசு என்ன செய்யும் வன்முறை ரீதியாக அதை ஒடுக்கும். அப்போது இலங்கையில் இரண்டு இனங்களுக்கிடையில் கலவரங்கள் உருவாகி அழிவுகள் ஏற்படும். இலங்கையில் ஒரு கலவரம் ஏற்படும் பட்சத்தில் வன்முறையால் ஒடுக்கப்படும் மக்கள் இரத்தம் சிந்த வேண்டிய நிலைமை ஏற்படும், இலங்கையில் அரசியல் குழப்பம் ஏற்படும் அப்போது பஞ்சாயத்து தலைவர்களாக இலங்கை விவகாரத்தில் தீர்ப்பு சொல்லும் பாணியில் மூக்கை நுழைக்கலாம் இதுதான் சர்வதேச நாடுகளின் திட்டம். இதை மறைமுகமாகவும் நாசுக்காகவும் சொல்கின்றார் சர்வதேச நாடுகளின் அரசியல் புறோக்கர் எரிக் சொல்கெய்ம்.

இந்தியாவிடம் அனுமதி பெற்று போராடுங்கள் அப்போது அமெரிக்காவும், பிரித்தானியாவும் உங்களை ஆதரிக்கும் என சுட்டிக்காட்டுகிறார் எரிக்.

குறிப்பாக தமிழர்கள் போராட்டம் என்று ஆரம்பித்தால் இலங்கை அரசு இரும்புக்கரம் கொண்டு அடக்கும் அப்போது இலங்கையில் இரத்த ஆறு ஒடும் தமிழர்கள் அகதியாக அலைவார்கள் என்பதுடன் இலங்கையில் ஆயுதப்போராட்டம் தேவையில்லை ஆனால் வன்முறை வேண்டும் என்பதனைத்தான் மறைமுகமாக எரிக் சொல்கெய்ம் சொல்கிறார் காந்தி வழியில் போராடுங்கள் ஆனால் ஆயுதப்போராட்டம் தேவையில்லை தமிழர்கள் அகிம்சை ரீதியில் உங்கள் உரிமைக்காக போராடுங்கள். இலங்கையில் தமிழர் போராட்டத்தின் மூலம் வன்முறை உருவாகும் போதுதான் இலங்கையின் உள்விவகாரங்களில் சர்வதேச நாடுகள் தலையிட முடியும். ஆகவே சர்வதேசத்தின் அரசியல் செயற்பாடுகளுக்காக, ஈழத்தமிழர்களை இலங்கை அரசிற்கு எதிராக இவ்வாறு திருப்பிவிட முயற்சிக்கின்றார் எரிக்.

சர்வதேச நாடுகள் எவ்வகையான அரசியல் இலாபங்களை ஈட்டப் போகின்றன என்பதனை அறிந்து, அதற்கு எதிரான அரசியல் வியூகங்களை ஈழத் தமிழர்கள் வகுக்காமல் போனால் இலகுவில் பலிகொள்ளப்பட்டு விடுவார்கள்.

இலங்கை மீது சர்வதேசம் தனது பிடியை கடிவாளம் இட்டு இறுக்கி வைத்திருக்க வேண்டும். அச்செயற்பாடு வெற்றி பெறுவதற்கு ஈழத்தமிழர்களை உரிமைப் போராட்டம் என்ற பெயரில் பகடைக்காயாக வைத்து பயன்படுத்த வேண்டும் என்பதில் தெளிவான ஒரு நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட்டு வருகின்றது சர்வதேசம். அத்துடன் தமிழர்கள் மாத்திரமல்ல, அப்பாவி சிங்கள மக்கள் கூட அரசியல் விழிப்பு பெற்று உசாராகி விடக் கூடாது என்பதில், சர்வதேச நாடுகளும், உள்ளூர் அரசியல்வாதிகளும் மிகக் கவனமாக உள்ளனர். அரசியல் விழிப்புணர்வை இலங்கை மக்கள் பெற்றுவிடக் கூடாது என்பதற்காகவே உள்ளூர் அரசியல்வாதிகளை வைத்து இனவாதம் மற்றும் மதவாத அரசியல் செய்வதற்கு ஊக்குவித்து வருகின்றது சர்வதேசம்.

ஏரிக் சொல்கெய்மின் ஈழத்தமிழருக்கான ஆலோசனையாக உரிமைகளை பெற்றுக்கொள்ள அகிம்சை ரீதியாக போராடுங்கள், ஆனால் இந்தியாவிடம் உங்கள் போராட்டத்தை கையளியுங்கள் என்று கூறியுள்ளார். அத்துடன் இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை அல்ல அது மனித குலத்திற்கு எதிரான ஒரு குற்றமே இனப்படுகொலை என்றால் தமிழ் இனமே அழிந்திருக்க வேண்டும் அவ்வாறான நோக்கம் இலங்கை அரசாங்கத்திற்கு இருக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிடம் சொல்லுங்கள் என்று தமிழர்களுக்கு எரிக் சொல்கெய்ம் அறிவுரை சொல்லும் நோக்கம் என்ன? சீனாவை முடக்குவதுதான். உலக நாடுகளின் மைய அரசியலாக இருக்கின்ற நிலையில். சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் அதிகரித்து வரும் இந்த வேளையில் சர்வதேச நாடுகளுக்கு சீனாவின் இலங்கை மீதான ஆதிக்கம் உவப்பானதாக இல்லை, சர்வதேச நாடுகள் என்று சொல்லப்படுகின்ற அமெரிக்கா தலைமையிலான பிரதான பங்காளி நாடுதான் இந்தியா! சீனாவை முடக்க வேண்டுமென்றால் பிராந்திய வல்லரசாக சொல்லப்படும் இந்தியாவின் ஆதரவு இல்லாமல் அதை செய்ய முடியாது.

இலங்கையில் தமிழர்களை அவர்களின் அரசியல் அறியாமையை பயன்படுத்தி சர்வதேச நாடுகள் தங்களுக்கு சார்பான நிகழ்ச்சி நிரலை செயற்படுத்த முன்வைக்கும் கருத்துதான் இந்தியா உங்களுக்கு பக்கத்திலிருக்கும் நாடு. கலாசார ரீதியாக பல ஒற்றுமைகளை தமிழர்களுடன் கொண்டுள்ளது, அதனால் ஈழத்தமிழர்களுக்கு இலகுவில் தீர்வை பெற்றுத்தரும் என்று ஆசை வார்த்தைகளை கூறி தமிழ் மக்களின் உணர்வுகளை தூண்டி இலங்கையில் ஒரு வன்முறையை உருவாக்க முயற்சிக்கின்றது.

இலங்கையில் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற உள்நாட்டு போருக்கு முக்கிய பங்காற்றிய நாடுகள் இந்த இணைத்தலைமை என்று சொல்லப்பட்ட சர்வதேச நாடுகளே இலங்கையின் இன ரீதியிலான வன்முறைக்கு காரணமாக இருந்துள்ளது. இலங்கையில் மூன்றாம் தரப்பு என்று சொல்லப்படும் இலங்கைக்கு அண்மையில் இல்லாத நாடுகள் எப்பொதெல்லாம் உள்நுழைந்து அரசியல் செய்தனவோ அப்போதெல்லாம் இலங்கை வன்முறையில் பற்றி எரிந்துள்ளது.

இலங்கை தமிழர் பிரச்சினைக்கும் மேற்கத்தை நாடுகளுக்கும் என்ன சம்பந்தம் இருக்கின்றது. மொழியால், பண்பாட்டால், கலாசாரத்தால் தமிழர்களுடன் பின்னிப்பிணைந்த நாடுகளாக இவை உள்ளனவா? அப்படியானால் ஏன் இவை இலங்கை தமிழர்களை போராட தூண்டுவதற்காக அவர்களின் சிந்தனையில் விசத்தை விதைக்கின்றன? என்பதனை தமிழர்கள் சிந்தித்து பார்க்க வேண்டும்.

இலங்கையில் தமிழ் தேசியம் பேசும் தமிழ் அரசியல்வாதிகள் முதலில் உலக அரசியலை கற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களை சர்வதேச அரசியல் நலன்களுக்காக பலி கொடுக்கும் நிகழ்ச்சி நிரல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கக் கூடாது. முக்கியமாக சர்வதேசம் பார்த்துக் கொண்டிருக்கின்றது என்ற சொல்லாடல்கள் கைவிடப்பட வேண்டும்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

தினகரன் வாரமஞ்சரி

# மஞ்சரி மாருதம்

# "பிலவ" புத்தாண்டே வருக...! பிளவுகளை இணைத்துத்தருக...!




தமிழரும் சிங்களவரும் கொண்டாடிக் களிப்போம் பண்டிகைகளில் பிரமாண்டமாகக் கொண்டாடப்படுவது சித்திரைப் புத்தாண்டே என்றால் மிகையாகாது. எனவே, சித்திரை வருடப்பிறப்பானது வெறும் பொழுது போக்கும் பண்டிகையல்ல. அப்பண்டிகையில் தமிழரின் பாரம்பரிய சோதிடம்+ வைத்தியம் + மந்திரம் ஆகிய முக்கலைகளும் கணிசமான பங்கெடுக்கின்றன.

விஜயன் இலங்கைத்தீவிற்கு வரமுன்னரே இங்கே வாழ்ந்த பூர்வீகத்தமிழரால் இப்பெருமைமிக சித்திரை வருடப்பிறப்பு கொண்டாடப்பட்டதாக வண. வல்பொல ராகுல தேரர் ஆக்கிய 'இலங்கையில் பெளத்த வரலாறு' எனும் நூலில் (பக்கம் 44) குறிப்பிட்டுரைத்துள்ளார். விஜயன் வருகைக்குப் பின்னர் இலங்கைத் தீவில் வாழ்ந்த சிங்கள மக்களும் கூட, தமிழரின் சித்திரைப் புத்தாண்டையே தமிழ் சிங்களப்புத்தாண்டெனக் கொண்டாடி இனங்களின் நல்லிணக்கத்தையும், கலாசார உறவுகளையும் தோற்றுவித்தனரென அவ்வாசிரியரே பதிவிடுகிறார்.

பிறந்திருக்கும் "பிலவ" வருடமானது நமக்கு நன்மை நல்கும் நலனோம்புப் புத்தாண்டாக ஒளிரவேண்டுமென 'உலகெலாம் உணர்ந்தோதற்கரிய சிவபெருமானை நாம் அழுதுதொழுது பிரார்த்தித்து வணங்குதல் வேண்டும். "அழுதால் அவனைப் பெறலாம்" என்ற மணிவாசகரின் மணி வாக்கியம் மெய்யாகும்.

சித்திரை வருடப்பிறப்பானது பகலவன் மீனராசியில் இருந்து மேடராசிக்கு மாறும் ஓர் பெளதிக இயற்கைச் சம்பவமாகும். அதை விஞ்ஞானம் விளக்குவதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே வேதாந்த விஞ்ஞானம் விவரணம் செய்தது. ஆதலால், இப் 'பிலவ' வருடப்பிறப்பானது, மறைந்த சார்வரி வருடம் இப்புவி மாந்தரைச் சிறப்பாகத் தமிழரை 'அல்லற்படுத்தி ஆற்றாது அழுந்தச் செய்து அழவைத்த கண்களுக்கு மருந்தாகப் பன்னீர் தெளிக்கத் தோற்றம் பெற்றுள்ளதென்றே நம்பிக்கை கொள்ளவேண்டும். உண்மையும் அதுவே.

தமிழ்ப் பஞ்சாங்கம் கூறும் அறுபதுவகையான சித்திரைப்புத்தாண்டுகளில் இப்பிலவ 35ஆவது இடத்தில் உள்ளது. இது கிட்டத்தட்ட இடைநடுவில் இடம்பிடித்துள்ளதால் மத்திம பலனையே தரும் என்று யோசனை செய்யத் தேவையில்லை. 'பிலவ' புதுவருடப் பலனின் படி நம் சுயவிவசாயம் எழுச்சிபெறவிருப்பதால் விவசாய உற்பத்தி உச்சமடையும். அதனால், நெல்முதலான தானியங்களின் விலைகுறைய, வாழ்க்கைச் செலவு குறையுமல்லவா...? இதற்கு முன் இப் 'பிலவ' வருடம் மலர்ந்தபோதெல்லாம் நம்வீட்டிலும், நாட்டிலும், ஏன் உலகத்திலும் கூட நன்மையே நிகழ்ந்துள்ளதாக நம் மூதாதையோர் கூறக்கேட்டிருக்கின்றோம்.

**'பிலவ' புத்தாண்டுப் பிறப்பு:**

சார்வரி வருடம் பங்குனிமாதம் 31ஆம் நாள் ஆங்கிலக் கலண்டரின்படி 14.04.2021 அன்று புதன்கிழமை நாழிகை 51.16 இல் பின்னிரவு 02.33க்கு "பிலவ" எனும் நாமமுடைய தமிழ்ப் புதுவருடம் பிறக்கிறது. அப்பொழுது நட்சத்திரம் பரணி 2ஆம் பாதம். திதி வளர்பிறை துவிதீயை. தமிழ் மாதங்கள் சூரியமாதங்கள் எனப்படுகின்றன. ஏனென்றால் இம்மாதங்கள் பூமிக் குச்சார் பாகத் தோன்றுகின்ற சூரியனுடைய இயக்கத்தை அடிப்படையாக வைத்தே கணிக்கப்படுகின்றன. இதனால்தான் சித்திரைப் புத்தாண்டை சூரிய விழாவென்றும் அழைத்திருக்கின்றனர். இராசிச் சக்கரத்தில் மேட ராசிக்குள் சூரியன் நுழைவதிலிருந்து அவ்விராசியை விட்டுவெளியேறும் வரையில் உள்ள காலம் சித்திரை மாதமாகும்.

**மேட சங்கிரம விஷு புண்ணியகாலம்**

அன்று இரவு 41.16 நாழிகை இரவு 10.33 முதல் மறுநாள் அதிகாலை 01.16 நாழிகை காலை 06.33 வரை மேடசங்கிரம விஷுபுண்ணிய காலமாகும். வருடம் பிறக்கும் போது உதய லக்கினம் மகரம் ஆகும். இப்புண்ணியகாலத்தை மேஷ சங்கிராந்தி என்றும் சித்திரை விஷு என்றும் சோதிடாச்சாரியார்கள் அழைப்பார்கள். விஷு என்பதற்கு இரவும், பகலும் சமனானது என்று பொருள்.

**மருத்து நீர்**

மேட சங்கிரம காலத்தில் சகலரும் சங்கல்ப பூர்வமாக தலையில் பெற்றோர் பெரியோர் மூலம் மருத்து நீர் தப்பித்தேய்த்து மருத்து நீர் வழங்கும் ஆலயக்குருக்களின் அறிவுரைக் கேற்ப தலையிலும், காலிலும் அவ்வவற்றுக்குரிய இலைகளை வைத்து தலைமுழுகி நீராடல் வேண்டும். ஏலுமானவர்கள் தூய ஆற்றுநீரில், ஊற்று நீராடல் பூரண புண்ணியமாகும்.

**புத்தாடை:**

செந்நிறப்பட்டாயிலும் அல்லது சிவப்புக் கரைவைத்த வெள்ளைப் புதுத்துணிவஸ்திரமாயினும் அணிந்து, மொய்பவளத் தொடுதரளம் சேர்த்திழைக்கப்பட்ட ஆபரணங்களை அணிந்து கொள்ளல் ஆரோக்கியம் தருவதாகும்.

**நன்மை தரும் உணவு:**

வீட்டில் சுற்றஞ்சூழ அமர்ந்திருந்து சுகாதார உபதேசத்திற்கேற்ப கொரோனா அவதானத்துடன், வேப்பம்பூ, புளியோதரை போன்றவற்றுடன் மோதகம், வடை, மாதுளம் பழம், நெல்லிக்காய் துவையலையும் சேர்த்து அறுசுவைப் பதார்த்தங்களையும் போசனம் செய்து மகிழ்ந்து தாம்பூலம் தரித்தல் சுபம் தரும்.

**கைவிசேடம்**

புதன் கிழமை 14.04.2021அன்று காலை 06.15முதல் 07.30வரையுள்ள சுபநேரத்தில் அல்லது மாலை 06.15 முதல் 07.00 வரையற்ற சுப வேளையில் பெரியவர்கள் அல்லது கைராசிக்காரரிடம் கைவிசேடம் பெற்றுக் கொள்வது அவ்வருடம் பூராவும் பணப்புழக்கம் இருக்கும்.

**பெரியோர் தரிசனம்**

15.04.2021 அன்று வியாழக்கிழமை காலை 05.45 தொடக்கம் 07.30 மணிவரை அல்லது 17.04.2021 அன்று வெள்ளிக்கிழமை மாலை 16.10 தொடக்கம் 17.30 மணிவரையுள்ள நல்ல நேரங்களில் பெரியவர்கள், மகான்கள், ஆகியவர்களை நேரில் தரிசித்து கலந்துரையாடல் அறிவு – திறன் – மனப்பாங்கை உச்சத்தில் பேணும். தமிழர் வகுத்த வழி "நல்லோரைக் காண்பதுவும் நன்றே நல்லோர் சொற் கேட்பதுவும் நன்றே, நல்லோரோடு இருப்பதுவும் நன்றே, நல்லோரோடிணங்குவதும் நன்றே என்பதுதானே.

## கொரோனா அவதானத்துடன் புத்தாண்டைக் கொண்டாடுவோம்

இலக்கியவித்தகர், கலாபூஷணம்,
**வேலுப்பிள்ளை புவனேஷ்வரன்...**
மட்டக்களப்பு.



# பிலவ வருடப் பிறப்பு

வானிலை நிகழ்வுகளுக்கும் சோதிடத்திற்கும் அனேக ஒற்றுமைகள் இருக்கின்றன. சோதிடத்தில் 27 நட்சத்திரங்கள் 12 இராசிகளுக்குள் அடங்குகின்றன. மேட இராசி தொடக்கம் மிதுன இராசிவரை அவை பெயரிடப்பட்டிருக்கின்றன. சூரியன் மேடம் தொடக்கம் மிதுனம்வரை பயணிக்கும் காலமே ஒருவருடமாகும். சூரியன் மதுன ராசியிலிருந்து மேட இராசிக்கு வருவதையே உலகில் சித்திரைப் புத்தாண்டாக மக்கள் கொண்டாடுகிறார்கள்.

வானியல் ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் அளவிடப்பட்ட காலமே ஒருவருடமாகும். சூரியன் 12 இராசிகளைக் கடந்து வருவதற்கு ஒரு வருடம் செல்லும். இதன்போது பருவகாலங்கள் தோன்றுகின்றன. சித்திரை, வைகாசி மாதங்கள் "இளவேனில்" பருவகாலமாக கூறப்படுகிறது. அதே வரிசையில் ஆனி, ஆடி மாதங்கள் "முதுவேனில்" காலமாகவும், ஆவணி, புரட்டாதி மாதங்கள் கார்காலமாகவும். ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் கூதிர் காலமாகவும், மார்கழி, தை மாதங்கள் முன்பனிக்காலமாகவும், மாசி,பங்குனி மாதங்கள் பின்பனிக்காலமாகவும் வகுக்கப்பட்டிருக்கின்றன. பருவகாலங்களை அவை அழைக்கப்படுகின்ற பெயர்களைக் கொண்டே அவ்அப் பருவகாலத்தின் சிறப்பம்சங்களை அறிந்து கொள்ள முடியும்.



சித்திரைப் புத்தாண்டை கொண்டாடுவதில் நமது நாட்டில் தமிழ், சிங்கள மக்கள் ஒன்றிணைந்திருக்கிறார்கள். மதத்தாலும், தாய்மொழியாலும் அவ்விரு இனங்களும் வேறுபட்டிருந்தாலும் சித்திரை வருடப்பிறப்பை கொண்டாடுவதில் ஒன்றுபட்டிருப்பதை காணக் கூடியதாக இருக்கிறது. இப் புதுவருடப்பிறப்பை நேபாளம், கம்போயா, பர்மா, மலேசியா ஆகிய நாட்டு மக்களும் கொண்டாடி வருகிறார்கள்



புதுவருடப்பிறப்புக்கான கருமவிதிகள் பற்றி சரசோதி மாலை எனும் சோதிட நால் விளக்குகிறது. இந்நால் கி.பி. 1310 ம் ஆண்டுகளில் தம்பதெனிய அரசை ஆட்சி செய்த மூன்றாம் பராக்கிரமகுவின் வேண்டுகோளுக்கமைய அவ் அரசின் அரச குருவான தேனுரைப் பெருமாள என பெயர் சூட்டப்பட்ட போசராச பண்டிதர் எனும் இயற்பெயர் கொண்டவர் இதனை இயற்றியுள்ளார். இதனை இயற்றுமாறு அவ் அரசனாலேயே அரச குருவுக்கு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது.

இது செய்யுள் வடிவிலும் விருத்தங்கள் வடிவிலும் இருப்பதால் தமிழ் மொழியில் நல்ல புலமையுள்ளோரே படித்து விளங்கிக் கொள்ள முடியும் என இதனை தேடிக்கண்டு பதிப்பித்த யாழ்ப்பான சோதிட பரிபாலன சபையைச் சேர்ந்த இ. வெங்கடேச ஐயர் குறிப்பிடுகிறார்

புதுவருடப்பிறப்புக்கான கருமங்களில் பிரதானமாக விளங்குவது மருத்து நீர் தேய்த்து நீராடல். ஆலய தரிசனம், மூத்தோரையும், குருமார்களையும் வணங்குதல் கைவிசேடம் வழங்கல் என இந் நூலில் விரிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது

மருத்து நீரை மூத்தோரே இளையோருக்கு தேய்த்துவிடுவர். மருத்துநீர் சில குறிப்பிட்ட மூலிகைகளின் கலப்பாகும். இதில் தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம் பூ, விஸ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், பாகல், பீர்க்கு வில்லவம் போன்ற இலைகளும், கோசலம்,கோமயம், கோரோசனை ஆகியனவும் கலந்து கோயிலில் காய்ச்சப்படுவதாகும்

புதுவருடப்பிறப்புக்கு முதல் நாளே வீட்டை கழுவி சுத்தம் செய்து வாயிற் கதவின் நிலைகளுக்கு மஞ்சள் குங்கும் கலந்த கலவையைப் பூசி மாவிலை தோரணம் கட்டிவைப்பர். இப்படிச் செய்யும்போது இந்த வீட்டில் திருமகள் வாசம் செய்வதாக ஒரு வைதீக நம்பிக்கை தொன்று தொட்டு இருந்து வருகிறது

கைவிசேடம் என்பது சுபநேரத்தில் குடும்பத்தின் மூத்தோர்களால் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கப்படம் பணமாகும். அதனை சுப்நேரத்தில் பெறுவதே சிறப்பு.

இந்த புதிய வருடம் பிலவ என்ற பெயரோடு பிறக்கிறது திருக்கணித பஞ்சாங்கத்தின்படி பங்குனி மாதம் 31ம்திகதி செவ்வாயக் கிழமை (1404.2021) ந் திகதி பின் இரவு 2.31 மணிக்கு புது வருடம் பிறக்கிறது நட்சத்திரம் பரணி 2ம் பாதம். திதி பூர்வபட்ச திதி, அமிர்த சித்த யோகம். அன்று இரவு 10.33 முதல் மறுநாள் அதிகாலை 6.33 வரையாகும். மேட சங்கிரமண புண்ணியகாலமாகும் சங்கிரம தோஷ நட்சத்திரங்கள் அச்சுவினி. பரணி, கார்த்திகை 1ம்பாதம், பூரம், உத்தரம் 2,3,4ம்பாதங்கய், அத்தம், சித்திரை 1ம், 2ம்பாதங்கள், பூராடம் என்பனவாகும். வாக்கிய பஞ்சாங்கத்தின் படி பதிய ஆண்டு பிலவ வருடம் என்ற பெயரோடு பங்குனி மாதம் 31ம் திகதி செவ்வாயக்கிழமை(14.04.2021) ந்திகதி பின் இரவு 2.31 மணிக்கு பிறக்கிறது நட்சத்திரம் பரணி 2ம் பாதம். பூரவ பக்க துதியை திதி, மகர லக்கினம், அமிர்த சித்த யோகம். அன்று(13.04.2021) முன் இரவு 9.39 பின் இரவு 5.39 வரை (14.04.2021) விஷு புண்ணிய காலமாகும். சங்கிரம தோஷ நட்சத்திரங்கள் அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம்பாதம், பூரம், உத்தரம் 2,3,4ம்பாதங்கய், அத்தம், சித்திரை 1ம், 2ம்பாதங்கள், பூராடம் என்பனவாகும்.

**எஸ்எஸ்.தவபாலன்...**
புளியந்தீவு குறூப் நிருபர்

## வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி

### பிலவ வருஷம்

**புதுவருடம் பிறக்கும் நேரம்:**
பங்குனி (31) – 14.04.2021 புதன்கிழமை
அதிகாலை 1.39

**விஷு புண்ணிய காலம்:**
13.04.2021 பி. ப. 9.30 முதல் 14.04.2021 காலை 5.39 வரை

**தோஷ நட்சத்திரம்:**
- அஸ்வினி
- பரணி
- கார்த்திகை 1ம் பாதம்
- பூரம்
- உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள்
- அந்தம்
- சித்திரை 1, 2ஆம் பாதம்
- பூராடம்

**கைவிசேடம்:**
- சித்திரை 1- புதன் காலை 9.09 முதல் 9.52 வரை
- சித்திரை 1- புதன் பகல் 2.23 முதல் மாலை 4.11 வரை
- சித்திரை 3-வெள்ளி பின் இரவு (அதிகாலை) 4.16 முதல் 5.07 வரை
- சித்திரை 4- சனி காலை 7.49 முதல் 9.00 வரை
- சித்திரை 4- சனி மாலை 3.04 முதல் 3.59 வரை

**ஆடை நிறம்** : நீலம், சிவப்பு நிற பட்டாடை/ நீலம், சிவப்பு கரை கொண்ட பட்டாடை

**ஆபரணம்** : நீலம், பவளம் இழைத்த ஆபரணங்கள்

## திருக்கணிதப் பஞ்சாங்கத்தின்படி

### பிலவ வருஷம்

**புதுவருடம் பிறக்கும் நேரம்:**
பங்குனி (31) – 14.04.2021 புதன்கிழமை
அதிகாலை 2.31


**விஷு புண்ணிய காலம்:**
13.04.2021, இரவு 10.33 முதல் 14.04.2021 காலை 5.39 வரை

**தோஷ நட்சத்திரம்:**
- அஸ்வினி
- உத்தரம் 2,3,4 ஆம் பாதம்
- பரணி
- அந்தம்
- கார்த்திகை 1ம் பாதம்
- சித்திரை 1, 2ஆம் பாதம்
- பூரம்
- பூராடம்

**கைவிசேடம்:**
- சித்திரை 1– புதன் காலை 6.15 முதல் 7.00 வரை
- சித்திரை 1– புதன் மாலை 6.15 முதல் மாலை 7.00 வரை
- சித்திரை 3– வெள்ளி பின் இரவு (அதிகாலை) 5.15 முதல் 6.00 வரை
- சித்திரை 4– சனி காலை 10.30 முதல் 11.40 வரை

**ஆடை நிறம்** : செந்நிறப் பட்டாடை, சிவப்பு கரை கொண்ட வெள்ளை ஆடை

**ஆபரணம்** : பவளம் கொண்ட ஆபரணங்கள்



கலாநிதி சிவஸ்ரீ
**இராமச்சந்திரகுருக்கள் பாபு சர்மா**
சர்வதேச இந்து மத பீட செயலாளர்



# கவிதை மஞ்சரி

கிருஷா



## சித்திரை வாழ்த்து

சுந்தரராஜ் சுபாஷினி, கொழும்பு

செந்தமிழ் சொல்லெடுத்து...
செங்கமல் வாசம் சேர்த்து...
செங்கதிர் ஒளியூட்டி...
சொந்தங்கள் மனதில்...
பாசஉணர்வூட்டி...
செவ்விதழ்களில் செப்பினேன்
சித்திரை கொண்டாடும்
சிங்கள தமிழ் சொந்தங்களுக்கு
மனமுவந்த வாழ்த்துக்கள்...



## வரவேற்போம்

எம்.செல்வராணி, வோல்ட்றிம்.

பஞ்ச பூதங்களில் மூத்தவனே
உனை உச்சுகுளிர
வணங்கிடுவோம் ஆதிகேசவன்
உச்சம் பெரும்நாளை ஆண்டு
தொடக்கமாய் கொண்டாடுவோம்
கசந்த காலங்கள் இனியில்லா
காலத்தை நாம் கேட்போம்
வறுமைநீக்கி வசந்த காலத்தை
வரவேற்போம்

## சித்திரை மகள் பிறந்தாள்

மணிவேல் பிரபாலேந்திரன், கொட்டகலை.

தமிழர் நம் திருநாளாம்...
சித்திரையின் ஜனன நாளாம்...
தமிழ் மாதத்தின் முதல் பிறப்பாம்
சித்திரை மகள் பிறந்தாள்
சிக்கலின்றி வாழ்ந்திடுவோம்
என்றெண்ணி சிலபேர்...
இன்னும் எத்தனைக்காலம்
இவ்வேதனை தீயில் வெந்து
உழல்வது என்றெண்ணி சிலபேர்...
பிலவ வருடம் உன்நாமத்தில்
பிளவுகள் பிளவுபட்டு...
மனித மனங்கள் பண்பாட்டு...
ஆனந்தம்; மகிழ்ச்சி;
அன்புகொண்டு அயலவர்; உற்றார்
உறவினரோடு உண்டுகளித்து...
சித்திரை மகளின் பிறப்பை
கொண்டாடுவோம்

## சித்திரை பிறக்கட்டும்

பாண்டியூர் பொன். நவநீதன்

குவலையம் முழுவதும்
கொரோனாப்
பீடையில் சிக்கிய மக்கள்
கோடிக்கணக்கில்!
பாவம் பரிதாபம்
பாடையில் போன
பல்லின மக்கள்
லட்சக் கணக்கில்!
பயபீதிகள் கூடி
முக மூடி மனிதர்கள்
வீதிகளெங்கும் நிதம்
வெறிச்சோடி அவலம்!
கொரோனா அசுரனைக்
கொன்றழித்து இந்தக்
குவலையங் காக்கும்
மகராசன் போலே
இத்தரை வந்து புத்துச்
சித்திரை பிறக்கட்டும்!



## அப்பா

சி . மேகவர்ணன் (மாக்கோணி)

அழுக்கான அப்பா என்
அழகான அப்பா
அன்பான அப்பா
ஆவேசப் பேச்சு என்
மேல் கொண்ட அப்பா
அன்பின் மூச்சு அப்பா
தலை முடி வாரி நான்
பார்த்தது இல்லை என்
தலை முடி கோதி
முத்தமிடாமல் அவர்
தூங்கியதுமில்லை
அப்பாவின் மகனாய்
அப்போ நானிருந்தேன்
அப்பாவை நானும்
படிக்கவில்லை
அப்பாவாய் ஆனேன் நானும்
இப்போ அப்பாவை எண்ணி
அப்பாவியானேன் நானும்
உப்பு பூத்த தோளில் மேல்
நான் தூங்க வேணும்
என் விழி நீர்
அவர் தோள் பட் டை
நனைத்திட வேணும்
பெத்த மனம் பித்து அது
என் அப்பாவோட சொத்து
அவர் பட்ட பாட்டை என்
பாட்டில் எப்படி நான் பாட
காலணிக்கு ராஜவில்லை
காலணியும் போட்டதில்லை
மண்ணை தானே அவர்
நம்பியிருந்தார்
மக்கள் உயர்வுக்காய்
நாளும் வியர்வை
சிந்தி வளர்த்தார்
உண்ண ஒரு நேரமில்லை
உறங்க ஒரு நேரமில்லை
ஏன் என்று நானும்
கேட்டதில்லை
தொலைந்த பின்னால்
தான் தேடுகிறேன்
நான் தொலைத்தது
அப்பாவை இல்லை
ஒரு புத்தகத்தை தான்



## ரமழானே வா! வா!

இ.ஷமீலா இஸ்மத்

முஸ்லிம்களது புனித ரமழான்
தலை பிறை எம்மை நோக்கி
எட்டி எட்டிப் பார்க்கிறது
மெல்ல மெல்ல அடி எடுத்து வைக்கின்றது
ஐந்து கடமைகளில் ஒன்றாகும்
ஏழையின் பசியை அறிய
பணக்காரனுக்கு வழி வகுத்த ரமழான்
சிறுவர் முதல் முதியவர் வரை நோற்பர்
இது நோன்பு என்று அழைக்கப்படும்
மனிதன் செய்த பாவங்கள் கழிபடும் மாதம்
ஒரு மாதம் பூராவும் நோன்பு இருக்கின்றது
ரெய்யான் என்ற சொர்க்க வாசல்
திறக்கப்படும் புனித மாதம்
இதை எல்லோரும் ஆவலோடு எதிர்ப்பார்த்து
காத்திருக்கின்றோம்
இம்முறை சந்தோஷமாக ஏழைவரி கொடுக்க
உதவி செய்வானாக எம்மை படைத்தவன்
எந்த ஒரு குறையும் இல்லாமல் நிறைவாக
ஈடேற இரு கரம் ஏந்துகிறோம்
எம் துகக்களை ஆமீன் ஆக்குவாயாக





## றமழானே வாராய்

கலாபூஷணம் ஏ.ஸீ.அப்துல்றகுமான், ஏறாவூர்06

நிறைவான றமழானே வாராய்
நிலையான றகுமத்தைத்தாராய்
இருள்கழையும் றமழானே வாராய்
அருள் மழையை எமக்காகத்தாராய்
உயிரழிக்கும் உயிர்க்கொல்லி
உலகழித்து வரும்வேளை
உயிர்காக்கும் றமழானே வாராய்
உவப்பான நலமெமக்குத் தாராய்
வறுமையினாலேழைகளும்
வதங்கிடுமிவ் வேளையிலே
ஈகைநிறை றமழானே வாராய்
ஈங்கெமது பசிதாகம் தீராய்
உலகமுளமாந்தரெல்லாம்
உறுதுயரம் கொஞ்சமல்ல
துயர்தீர்க்கும்றமழானே வாராய்
துய்யதொரு வாழ்வுநிலைதாராய்
இறைதிருப்தியொன்றே
இகபரத்தின் விடிவாகும்
என்றதொரு உண்மையினை
இயம்புகின்ற றமழானே வாராய்
கறையகற்றிமனித குலம்
கதிபெறவே வழியமைத்துத்தாராய்
அடிவானக்கறுக்கலுக்குள்
அழகு பிறைக்கோலமென
விடிவு தருவோனே வாராய்
மிடி வறுமை பயமில்லா
மிகத்தூய வாழ்வெமக்குத்தாராய்

## மாண்புமிகு புனித ரமழான்

எம். சி. மஹ்மூதா ஏ றஹ்மான், ஒலுவில்

வல்லவனின் அருள் ஜோதியாய்
வாய்த்ததொரு ரமழான் எமக்கு
வேதனைகள் எந்த வடிவில் வந்தாலும்
வேண்டாமென்று விடோம்
அதை ஒரு நாளும்
மாட்சிமை தாங்கிய ரமழான் அது
மானிடர்க்கு என்றும் ஓர் வரப்பிரசாதம்
உடல்நோயும் உளநோயும் நீக்கியே எமை
உத்தமனாய் வாழ வைத்திடுமே!
இல்லங்களில் அருள் நிறைந்திடவும்
இல்லாதோரின் பசி அறிந்திடவும்
'தக்வா' வில் உளம் தளைத்தோங்கவும்
தௌபாவில் உளம் திளைத்திருக்கவும்
தந்தானே இறையவனும்
அருள் மிகு ரமழானை!
சீரியலில் சீரழியும் மாந்தரை
சீர்படுத்த ஏற்ற நல் மாதம்
பொறுமையின் மாதம் அது
வான்மறை இறங்கிய மாதம்
வானவரும் இறங்கிடும் மாதம்
'லைலதுல் கத்ர்' எனும் இரவில்
லயித்திடுமே எம் உள்ளங்கள் அமல்களால்
கொரோனாவில் சிக்குண்டு
கொதித்தெழுகிறது உலகமெலாம்
வல்லரசும் குடை சாய்ந்து
வாய் மூடி மௌனியாய் நிற்கையிலே
படைத்தவன் தருவானே எமக்கு
பன்மடங்கு நன்மைதனை
மாண்புமிகு புனித ரமழானில்!

## மகனே!

கலாபூஷணம், நித்தவூர் மக்கீன் ஹாஜி

வற்றிக்கிடக்கின்றது
என் விழி
ஆற்று நீர்
என்மனக்குளத்துள்
வற்றிவிடவில்லை
இன்னும் ஈரம்
நீயும் நானும்
இன்று
வெகுதூரம்
உனக்காக
சாணைக் கூறை போட்ட
சாந்தியும் கிழவியாகிவிட்ட
கோலம்;
நீயின்றி
நாம்பட்ட
துயரம்,
எப்போது இத்துன்பம்
எம்மை விட்டு
அகலும்
இறைவன்
எழுதிவிட்டானா?
எமக்கு இந்தவரம்
மகனே! தினமும் நான்
ஏந்துகின்றேன் இறைவனிடம்
இருகரம்
நீ... எங்கிருக்கின்றாய்
கனவிலாவது வா மகனே,
ஒரு தரம்

## மரணவாயில்

கே.எல்.ஹில்மி, சம்மாந்துறை

என் ஆத்மா
அழுது கொண்டிரு
க்கிறது...
இரவுகளிருந்தும்
விண் மீன்களில்லா
ததால்...
உறவுகளிருந்தும்
தனிமையாய்
உண்மையறிந்ததும்
என்னவளே!
மறந்திடு எனும் போது
தான் உன்னை
நினைக்க வேயில்லை
நான்
இறந்திடப் போகிறேன்
இப்போதெல்லவா
உன்மேல் கொண்ட
நேசம்...
கண்ணீராய்...
காயங்கள்மீது
விழுகிறது!
கல்லடிபட்டிருந்தால்
ஆறியிருக்குமே!
செல்லடியும்
உன் சொல்லடியும்
பட்டதன் பின்பு
உயிர் ஏனடி இன்னும்
உடலில் நிலைக்கிறது...

## அன்பு

சி. மௌநேஷ், மட்டக்களப்பு

கண்ணீர் விடையாகி
கடலுடன் கலக்கின்றது
கவிதை உயிர்மொழியாகி
மரணித்துக்கொண்டிருக்கின்றது
நெருப்பும் நீரும் காதல்கொண்டு
விதியை வெல்கின்றது...
மின்ஒளி முந்திக்கொள்ள
இடி முழக்கம் கூட
இடம் கொடுக்கின்றது
கடல் கோபம் கொண்டு
தாங்க முடியாமல் சுனாமியாகின்றது
இது இயற்கையா செயற்கையாயென்பதை
அவர் அவர் உள்ளம்
புரிந்து கொள்ள வேண்டும்...
மீண்டும் ஒரு சுனாமியா...
இல்லை உலக அமைதியா என்பதை
உலக தலைவர்களே...
நீங்களே தீர்மானியுங்கள்!
அன்பை விட பெரிய ஆயுதம்
இவ் அகண்ட இப்பிரபஞ்சத்தில்
எதுவும் இல்லை!

## தனிமைச்சிறையும் - சுமையும்

மொழிவரதன்

தனிமைச்சிறை என்னைப் பிடித்து
தனக்குள் ஆட்கொள்கின்ற
வேளைகளிலெல்லாம் உனது ஏக்க
எனும் மேகம் சூழ்ந்தவனம்
என்னுள் தோன்றி எனைக்
கொல்லாம வில்லை
கண்ணுறங்க மறுக்கும் காம இரவுகளில்
கவிதை கண்களில் கற்பனையில்
என்னை யறியாது நானுன்னை
எண்ணி ஏங்குகின்றேன்
என்னைப் போலவே நீயும் இதோ
இந்த இரவிலும் இரவுப் பூச்சி
எழுப்பும் இதய நாதத்தில்
எனது இதயத்துடிப்பை
உணர்ந்து நெகிழ்வாய் என்பதை
உணர்வேன் கண்ணே!
எனது குடும்ப உறவுகளை சுமக்கும்
கடமை வீரன் நானன்றோ?
சுமக்க முடியா சுமையை சிரமத்துடன்
சுமந்து செல்லும் ஓர் சாதாரண
கூலிகளுள் நானுமொருவன்
எனது வாழ்வில் நீ இணைந்தால்
சுமை தூக்கி ஆவாயா
அல்லது இன்னும் ஓர் சுமை ஆவாயா?

தேவை
விற்பனையாளர்கள்
SALES PERSONS

கொழும்பிலுள்ள தலைசிறந்த ஹாட்வெயார் / டூல்ஸ் நிறுவனம். இத்துறைகளில் அனுபவம் உள்ளவர்களை எதிர்பார்க்கின்றது. நல்ல சம்பளத்துடன் ஊக்குவிப்பு ஊதியம் மற்றும் EPF/ETF வழங்கப்படும். பெண்களும் விண்ணப்பிக்கலாம்.

உங்கள் விண்ணப்பங்களை உறவினரல்லாத 2 சிபாரிசுதாரர்களின் பெயர்களுடன் மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்புங்கள்

Email: ismail@generalequipments.lk
GENERAL EQUIPMENTS (PVT) LTD.
400, Sri Sangaraja Mawatha, Colombo 12.

BE BETTER INFORMED!
Dinamina Daily News Thinakaran
News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE

# கல்வி அமைச்சு

## இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (SLIATE)

# பதவி வெற்றிடங்கள்

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திலுள்ள பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்களால் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட நிகழ்நிலை (online) விண்ணப்பங்களை (htpp//www.sliate.ac.lk/app/forms/applications-to-recruit-lecturers/) 2021-05-09ஆம் திகதி அல்லது அதற்கு முன் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திற்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். தயவு செய்து விண்ணப்பத்தில் விருப்பத்தெரிவு இடங்களைக் (ஆகக் குறைந்தது 03) குறிப்பிடவும். (நிறுவனத்தின் சேவைத் தேவைப்பாட்டுடன் ஆட்சேர்ப்பிற்கான இடங்கள் மாறுபடலாம்)

**01) உதவி விரிவுரையாளர் (Assistant Lecturer) – (29 வெற்றிடங்கள்)**

| | பாடப் பரப்பு | அமைவிடங்கள் |
|---|---|---|
| A | பொறியியல் - சிவில் (05 வெற்றிடங்கள்) | காலி - 02<br>கொழும்பு - 03 |
| B | பொறியியல் - QS (01 வெற்றிடம்) | காலி - 01 |
| C | பொறியியல் - மின்சாரம் (03 வெற்றிடங்கள்) | காலி - 01<br>கொழும்பு - 02 |
| D | பொறியியல் - இயந்திரவியல் (02 வெற்றிடங்கள்) | காலி - 02 |
| E | செயற்றிட்ட முகாமைத்துவம் (01 வெற்றிடம்) | கேகாலை - 01 |
| B | ஆங்கிலம் (08 வெற்றிடங்கள்) | நாவலப்பிட்டி - 02<br>வவுனியா - 01<br>மன்னார் - 02<br>சம்மாந்துறை - 01<br>இரத்தினபுரி - 01<br>அனுராதபுரம் - 01 |
| C | தகவல் தொழில்நுட்பம் (07 வெற்றிடங்கள்) | வவுனியா - 01<br>பதுளை - 01<br>மட்டக்களப்பு - 01<br>இரத்தினபுரி - 02<br>திருகோணமலை - 01<br>தங்காலை - 01 |
| D | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் (02 வெற்றிடங்கள்) | மட்டக்களப்பு - 01<br>திருகோணமலை - 01 |

**கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

**1) பொறியியல் - சிவில் / QS / மின்சாரம் / இயந்திரவியல்**

1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பொறியியல் பட்டம் அல்லது அதற்கு சமமான தகைமை
**மற்றும்**
2) ஆங்கிலத்தில் விரிவுரையாற்றும் ஆற்றல்

**1) ஆங்கிலம்/தகவல் தொழில்நுட்பம்/செயற்றிட்ட முகாமைத்துவம்/சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம்**

1) 1ஆம் வகுப்பு அல்லது 2ஆம் வகுப்பு மேற்பிரிவுடன் இயைபுடைய கற்கை நெறியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட பொறியியல் பட்டம்
**அல்லது**
2) உயர் கல்வி நிறுவனமொன்றின் தகைமைக்குப் பின்னரான 2 வருட அனுபவத்துடன் 2ஆம் வகுப்பு கீழ்ப் பிரிவில் இயைபுடைய கற்கைநெறியில் பட்டம் அல்லது அங்கீகரிப்பட்ட துறையில் இடைநிலை முகாமையாளர் மட்டத்திலான கைத்தொழில் அனுபவம்
**மற்றும்**
3) ஆங்கிலத்தில் விரிவுரையாற்றும் ஆற்றல்

**சம்பள அளவு** AR 1-2016 – 53150 – 10x1375 – 15x1910 - 95550

**குறிப்பு:** இதற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**சேவை நிபந்தனைகள்:**

(1) தெரிவு செய்யப்படும் அபேட்சகரால் அவரது உழைப்பின் 10% தொகையை ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் 15% பங்களிப்பு செய்யப்படும் மற்றும் 3% தொகை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) பங்களிப்புச் செய்யப்படும்.

(2) அனைத்து பிரிவுகளுக்குமான வயதெல்லை 45 வயதுக்கு கீழ் இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் பொது/அரச துறையில் நிரந்தர பதவி வகிப்பவர்களுக்கு ஏற்புடையதல்ல.

(3) அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிகள் சட்ட நிறுவனங்களில் சேவையாற்றுபவர்கள் தங்களது அசல் விண்ணப்பப் படிவத்தை நிறுவனத் தலைமையின் சிபாரிசுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) தெரிவு செய்யப்படும் அரச திணைக்களங்களில் ஓய்வூதியம் பெறக்கூடிய பதவி வகிப்பவர்கள் அவர்களது நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக விடுவிப்பைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். எவ்வாறாயினும், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் சேவையாற்றும் போது அவர்களுக்கு ஓய்வூதிய உரிமை கிடைக்காது.

(5) குறும்பட்டியலிடப்பட்ட அபேட்சர்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

(6) நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 06 வருட காலம் வரை நியமனம் வழங்கப்பட்ட இடத்திலிருந்து இடமாற்றம் பெறுவதற்கு ஊழியர்கள் தகுதிபெற மாட்டார்கள்.

நேர்முகத் தேர்வின் போது விண்ணப்பத்தின் மூலப் பிரதியுடன் சான்றிதழ்களில் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்.**
**இல. 320, T.B. ஜயா மாவத்தை,**
**கொழும்பு 10.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

DMC

## தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு

## அனர்த்த முகாமைத்துவ நிலையம்

# பெறுகை அறிவித்தல்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர அனர்த்தங்களுக்கு உதவி செய்யும் நடவடிக்கைகளுக்குத் தேவையான பின்வரும் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்காக 2021ஆம் வருடத்தில் வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோருவதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் பின்வரும் பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கு இயைபான வழங்குநர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

| பெறுகை இலக்கம் | பெறுகை | உருப்படிகள் | கொள்வனவு செய்வதற்கான எண்ணிக்கை |
|---|---|---|---|
| DMC/FIN/2021 (PROCU:05-I) | அவசர அனர்த்தங்களுக்கு உதவி செய்யும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் (தொகுதி I) | 1. Boat Engine (OBM) 25 HP | 40 |
| | | 2. Generator 2.5 KVA | 20 |
| | | 3. Rescue Tube | 100 |
| | | 4. Mega Phone H/H | 55 |
| | | 5. Gum Boot | 1140 |
| | | 6. Throw Bag | 1000 |
| | | 7. Search Light 10W - 15W | 300 |
| DMC/FIN/2021 (PROCU:05-II) | அவசர அனர்த்தங்களுக்கு உதவி செய்யும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் (தொகுதி II) | 1. Fire Broom (Fire Beater) | 1500 |
| | | 2. Concrete Cutter (Power Cutter) | 20 |
| | | 3. Chain Saw | 35 |
| | | 4. Tent (8 Man) | 30 |
| | | 5. Mamoty With Handle | 300 |
| | | 6. Axe With Handle | 300 |
| | | 7. Manna Kethi | 200 |
| | | 8. Rescue Rope (200m) | 17 |
| DMC/FIN/2021 (PROCU:07) | தேடுதல் மற்றும் காப்பாற்றும் பயிற்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | 1. Water Pack (Camel Pack) | 60 |
| | | 2. Hand Gloves | 60 |
| | | 3. Wire Cutter | 60 |
| | | 4. Head Mount Torch | 60 |
| | | 5. Toggle Rope (200m) | 04 |
| | | 6. GPS Garmin Montana 600T Camo | 02 |
| | | 7. Rappelling Rope | 02 |
| | | 8. Full Body Harness | 02 |
| | | 9. Ascension (Right) | 01 |
| | | 10. Footape | 02 |
| | | 11. Standard Locking D Carabineer | 03 |
| | | 12. Figure 8 Climbing | 02 |
| | | 13. Advanced Light Rappel Gloves | 03 |
| | | 14. Kong Robot Descender | 02 |
| | | 15. Spinal Boards | 02 |
| | | 16. Pulley Carrucola Bloccante Ultraleggera | 01 |
| | | 17. Air Pillow (With compressor) 3 Sizes | 03 |

2021 ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி முதல் 2021 மே மாதம் 19ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையில் கொழும்பு-07, வித்யா மாவத்தையில் அமைந்துள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 3ஆம் தளத்திலுள்ள நிதிப் பிரிவில் மீளளிக்கப்படாத கட்டணமாக 1000.00 ரூபாவைச் செலுத்தியதன் பின் பெறுகைப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட பெறுகையின் 03ஆம் தொகுதிக்கு வெவ்வேறான பெறுகைப் படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதன்போது தமது விருப்பத்தின் பிரகாரம் இயைபுடைய தொகுதியின் ஒரு உருப்படிக்கு அல்லது எல்லா உருப்படிகளுக்கும் விலைகளைச் சமர்ப்பிக்கலாம். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விலைகளின் முழுப் பெறுமதிக்கு 1% விலைக்கோரல் பிணை முறியொன்றை அரச பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் சமர்ப்பித்தல் அவசியமாகும்.

மேலும், உங்களால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களின் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைமனுவைச் சமர்ப்பிக்கும் தொகுதியின் பெயர் மற்றும் பெறுகை இலக்கத்தைக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறித்து (நிறுவனத்தின் உள்நாட்டு ஸ்டிக்கர் அல்லது நிறுவனத்தின் இறப்பர் முத்திரை அல்லது அரக்கு முத்திரை) தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பெறுகை அலகு, நிதிப் பிரிவு, அனர்த்த முகாமைத்துவ நிலையம், வித்யா மாவத்தை, கொழும்பு-07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது இந்நிலையத்தின் 3ஆம் தளத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு 2021 மே மாதம் 20ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். இதற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் அனைத்து விலைமனுக்களும் நிராகரிக்கப்படும்.

விலைக்கோரல் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நேரம் முடிவடைந்த உடனடுத்து அவை திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்பதுடன் இதன்பொருட்டு அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் வருகை தரும்போது அதிகாரம் வழங்கப்பட்டதற்கான கடிதத்தையும் கொண்டு வருதல் வேண்டும். மேலும் பெறுகை தருவித்தற் கட்டளை வழங்கப்படும் வேளையில் தேவையான பொருட்களின் அளவை மாற்றுவதற்கு பெறுகைக் குழுவிற்கு உரிமை உண்டு என்பது தயவுடன் அறிவிக்கப்படுகின்றது.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**அனர்த்த முகாமைத்துவ நிலையம்,**
**வித்யா மாவத்தை, கொழும்பு-07.**
**தொ.பே. இல. 011-3668096 / 011-2136270**

## சுற்றுலாத்துறை அமைச்சு

## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA)

# விலைமனு அறிவித்தல் – தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB)

1. கீழ் விபரிக்கப்பட்ட பெறுகைகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | விடயம் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | விலைமனு பிணைத் தேவை (ரூபா) | விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| | | | | திகதி மற்றும் நேரம் | |
| 1. | SLTDA இன் தேசிய விடுமுறை விடுதிக்கு பாதுகாப்பு சேவைகளை வழங்கல் ஒப்பந்த இல.: SLTDA/RM/NC/NCB/Security-NHR/2020/11 | 5,000 | 168,000 | SLTDA தலைவரின் சபை அறையில் 2021 ஏப்ரல் 19 அன்று மு.ப. 10.00 | 2021 மே 3 அன்று பி.ப. 2.00 |

2. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகைமைக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் மேலுள்ள தகைமை அளவுகோலுக்கு அமைவாக தொடர்புடைய துறையில் வர்த்தகப் பதிவை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் உதவிப் பணிப்பாளரின் (பெறுகை) மின்னஞ்சல் முகவரி: amilam@srilanka.travel, தொடர்பு இலக்கம் 0112426800 இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, உதவிப் பணிப்பாளரிடம் (பெறுகை) இருந்து பெறலாம் என்பதோடு SLTDA இணையதளத்தில் (https://sltda.gov.lk/tender) விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
4. 2021 ஏப்ரல் 11 ஆம் திகதி தொடக்கம் 2021 மே 3ஆம் திகதி வரை ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் SLTDA இணையதளத்தில் (https://sltda.gov.lk/tender) இருந்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை தரவிறக்கம் செய்யலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தை மக்கள் வங்கியின், கோர்பரேட் கிளையின், சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை கணக்கு இலக்கம் 7119413 இற்கு வைப்புச் செய்தல் வேண்டும். (குறிப்பு: "மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்" என வைப்பு ரசீதில் வைப்பின் நோக்கம் மற்றும் வைப்பாளர்களின் விபரத்தில் நிரப்பவும். விலைமனுவுடன் மேற்கூறிய அசல் ரசீதை சமர்ப்பிப்பது அவசியமாகும். கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் என்பதோடு ஏனைய கொடுப்பனவு முறைகள் அனுமதிக்கப்படமாட்டாது.)
6. இரு பிரதிகளான விலைமனுக்கள் விலைமனு ஏற்கப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பெறுகை பிரிவு (4ஆவது மாடி), இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, இல. 80, மற்றும் காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது கைகளால் சேர்ப்பதன் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகையின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கத்தை குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.
7. பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் SLTDA, முகப்பு அறை பகுதியில் (தரைத்தளம்) அனைத்து விலைமனுக்களும் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாது திருப்பி தரப்படும்.
8. அனைத்து விலைமனுக்களும் இலங்கை அரசாங்கத்தின் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டம் மற்றும் அடுத்து வந்த வர்த்தமானி அறிவித்தல்களுக்கு (PCA3 இலிருந்து) அமைவாக பொது ஒப்பந்தங்களின் பதிவாளர் மூலம் வழங்கப்பட்ட விலைமனுதாரரின் பதிவுச் சான்றிதழ் ஒன்றை கொண்டதாக இருத்தல் வேண்டும்.
9. விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு விலைமனு செல்லுபடி திகதிக்கு 28 நாட்களுக்கு அப்பால் வரை செல்லுபடி உடையதாக இலங்கை மத்திய வங்கியின் கீழ் இயங்கும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து வழங்கப்பட்டதாக விலைமனு பிணை இருத்தல் வேண்டும்.
10. விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு அமைய விலைமனு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
11. சுற்றுலாத்துறை அமைச்சு, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இந்த அமைச்சின் கீழுள்ள வேறு எந்த நிறுவனங்களின் ஊழியருடன் நெருக்கமான குடும்ப உறவு கொண்ட ஊழியர் அல்லது நிறுவனம் மற்றும்/ அல்லது தனிநபர் ஒருவர் ஒப்பந்தம் வழங்க தகுதி பெற மாட்டார்.
12. திணைக்கள பெறுகைக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும். மேலும், எந்த ஒரு காரணமும் கூறாது எந்த ஒரு விலைமனுவையும் ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை SLTDA வசமானது என்பதோடு விலைமனுக்களை தயாரித்தல் அல்லது சமர்ப்பித்தலுடன் தொடர்புபட்டு எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்கள் மூலம் ஏற்படுகின்ற எந்த ஒரு செலவு அல்லது எந்த ஒரு இழப்பிற்காகவும் SLTDA பொறுப்பேற்காது.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை**

The Housewives' companion
Classifieds on
Daily News

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

கொழும்பு03 5 1/2 பேர்ச் வர்த்தகக் கட்டிடம் கடவத்தை அதிவேக பாலத்திற்கு அண்மையில் மூன்று மாடி புதிய வீடொன்று உரிமையாளர் வெளிநாடு செல்வதனால் விற்பனைக்கு உண்டு. தொ.பே. 0773810404, 0332288303. (தரகர் வேண்டாம்). 026820

### 209 வியாபார ஸ்தலம் வாடகைக்கு/ குத்தகைக்கு

கொழும்பு 02 வொக்ஷோல் வீதியில் கடை கூலிக்கு. அலுவலகம்/ கடை களஞ்சியம்/ தையல் கடை/ வகுப்புகள் நடாத்த உகந்தது. தயவு செய்து அழைக்கவும். 0761233716 028338

### 233 இயந்திராதிகள்/ கை கருவிகள் விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட PIZZA OVEN, GENERATOR, DRILL, அச்சு இயந்திரம் KORD, KORS, KOR, GTO, Folding மெசின். Paper Cutter/ கிளடின் Three kinfe, Gathering, Plate Maker, Plate Baker, Paper Drill, Stapler - 0712417697, 0778 8 69 8 36, 0039 3 29 2 485 1 52 028036

## வேலைவாய்ப்பு

### 313 வெற்றிடங்கள் அச்சடித்தல்

கொழும்பு 14, அமைந்துள்ள அச்சகத்திற்கு KORD MACHINE MAINDER தேவை. தொலைபேசி 0714481244 தொடர்புக்கு பின் சான்றிதழ்களுடன் நேரில் வரவும். 027279

### 315 வெற்றிடங்கள் கல்வி

சர்வதேச மொழித் திறன்கள் புலமையுடைய ஆசிரியர்களை நாம் வரவேற்பதில் மகிழ்வடைகின்றோம். "யூனிவேர்சல் மொழி கல்வி நிறுவனம்"/ நீர்கொழும்பு கொச்சிக்கடை ஆங்கிலம்/ ஜேர்மன்/ பிரஞ்சு / இத்தாலி/ ஜப்பான் / மண்டரின்/ புலமையுடைய போதனாசிரியர்கள்/ தொழில்சார் நிபுணர்கள் மாணவர்களுக்கு ஆற்றலுள்ள மற்றும் ஆர்வமுள்ள ஆசிரியர்களை வாடகைக்கு அமர்த்துகின்றோம். மேலும் அமெரிக்கா, கனடியர்கள் மாதிரியான உச்சரிப்பு, நேரம் தவறாமை, சரளமான பேச்சு, பயமின்மை, முழுமையான கல்வி, பணிப்பாளர் ''யூனிவேர்சல் லாங்வேஜ் எடியுகேசன் இன்ஸ்ரிரியூசன்'' உடன் தொடர்பு கொள்ளவும். 0762250450/ 0312277068/ Zoooom. 2332333839 027856

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

மலை நாட்டிலிருந்து (மலையகம்) வீட்டுப் பணிப்பெண்கள், பெண் உதவியாளர்கள் தேவை. வயது 17 முதல் 45 வரை. நல்ல சம்பளம், தங்கியிருந்து வேலை. நிபந்தனைகள். அனுபவம் தேவையில்லை. தொடர்பு. 75/1, W.A. சில்வா மாவத்த, வெள்ளவத்த, அழையுங்கள். 0112 5 9 1 169, 0755 0 9 1 379, 0112 5 5 5 410 027965

வெள்ளவத்தையில் முஸ்லிம் குடும்பத்திற்கு பணிப்பெண் தேவை. வயது 35 50 0776974826 028088

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

தங்கொட்டுவையில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு தங்கி வேலை செய்யக்கூடிய (30 நபர்களுக்கு) இந்திய உணவு வகைகள் சமைக்கக்கூடிய சமையற்காரர் உடனடியாக தேவை. நேரில் வரவும். இல.18, வெலிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்புகளுக்கு 0772884959/ 077 2217989. 027387

பேக்கரி பாஸ், ரொட்டி பாஸ், சோடிஸ் பாஸ், சைனீஸ் கோக்கி உடன் தேவை. டைனமோ, ஹொடேல்/பேக்கரி, 14/2, திகன. 0773 737 3 44. 027819

### 322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

கண்டி, அக்குறன பிரபல வியாபார நிலையத்தில் சேவைக்கு, தச்சர் மற்றும் தொழில்நுட்ப சான்றிதழ் பெற்ற தச்சு உதவியாளர் தேவை. 077 3616696 026526

பாணந்துறையில் இயங்கி வரும் தளபாட உற்பத்தி நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை. தச்சன், கைஉதவியாளர், Spray Paint செய்பவர்கள், Sofa Upholstery செய்பவர்கள், Sofa Frame செய்பவர்கள், உடனடி வேலைவாய்ப்பு தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கம் 0777772686. 027832

### 325 தொழில்துறை பொது

கணினி இயக்குநர், அலுவலக உதவியாளர் வேலைவாய்ப்புகள் உண்டு பெண். அலுவலக சுத்திகரிப்பாளர் பகுதி நேரம் முழு நேரம் 0774469959. 027803

தொழிற்சாலைக்கு பிளாஸ்டிக் இன்ஜெக்சன் மோல்டிவ் மெசின் வேலைக்கு. பயிற்சி பெற்ற டெக்னீசியன்கள் மற்றும் ஆண்/ பெண்கள் தேவை. கூடுதல் சம்பளம், OT, பகல் உணவு, நிரந்தர வேலைக்காக வருகை தாருங்கள் இல36 பீ, எஸ்தஸ் ஜயசிங்ஹ மாவத்த, களுபோவில. 0777190 907. 027825

பார்மசி விற்பனை உதவியாளர் ஆண்/ பெண் அனுபவத்துடன் நீர்கொழும்பு பிரதேசத்திலிருந்து நல்ல சம்பளம் மேலதிக கொடுப்பனவு. 0717508485 027814

புறக்கோட்டை டயர் சேவை நிலையத்திற்கு தொழிலுக்காக வேலை தெரிந்த/ தெரியாத ஊழியர்கள் தேவை. C.J. Holding, பிட்டகோட்டே, எத்துல்கோட்டே. 0774302664 028087

ஹங்வெல்ல களுஅக்கல தொழிற்சாலை ஒன்றிற்கு வயது 1850 ஊழியர்கள் தேவை. சம்பளம் 36000. 0773077318, 0722273273. 027490

ஹோமாகம, பனாகொட (டெம்பள் பேர்க் கைத்தொழில் பேட்டை) உற்பத்திக் கம்பனிக்கு உற்பத்தி பகுதி ஊழியர்கள் தேவை. வயதெல்லை 18 30/ தங்குமிடம் உண்டு நல்ல சம்பளம் மற்றும் ஊக்குவிப்புக்கள் அழையுங்கள் 0778869803/ a sifplastic508@gmail.com 028092

0718653778 நட்சத்திர வகுப்பு ஹோட்டலுக்கு, சிவில் உடையில் பாதுகாப்பு அதிகாரிகள் உடனடியாக சேர்த்துக் கொள்ளல். உணவு இலவசம். கொழும்பு 0718653780, 0718379981 அலுவலகம் 0718653781, 076 3155331 028081

0718653778 சிங்கள தமிழ் புதுவருட காலத்திற்கு தற்காலிக மற்றும் நீண்டகால அதிகாரிகள் 2021.04.05 முதல் சேர்த்துக் கொள்ளப்படுவர். அனுபவம் 076 3155331, 0718653781, 076 0989129 மொறட்டுவ 0718379981 தெஹிவளை 071 8653780 வத்தளை 0718653779 ஹங்வெல்ல 070 2513418 028079

0718653778 பாதுகாப்பு வெற்றிடங்கள். பாணந்துறை, ஹொரணை, தளுத்துறை, பண்டாரகம, தெஹிவளை, கல்கிசை, இரத்மலானை, வெள்ளவத்தை, பெப்பிலியான, நுகேகொடை, கொஹுவல, மொறட்டுவ, மஹரகம, பிலியந்தல, நாராஹேன்பிட்ட, ராஜகிரிய எம்பிலிபிட்டிய, பாதுக்க, ஹங்வெல்ல, பனாகொட, மருதானை, வத்தளை. தொட்டலந்த, கட்டுநாயக்க அலுவலகம். 0763155331, 0718653781, 076 0989 1 2 9 மொறட்டுவ 0718379981 தெஹிவளை 071 8653780 வத்தளை 07 1 8653779, ஹங்வெல்ல 070 2513418 028069

கொழும்பு எரிபொருள் நிரப்பு நிலையமொன்றிற்கு பயிற்றப்பட்ட/ பயிற்றப்படாத ஊழியர்கள் தேவை. மாலை 4.00 முதல் 7.00 வரை அழைக்கவும். 0723278646. 026819

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

இரண்டு மாடி வீடொன்று விற்பனைக்கு உண்டு. பொரள்ள. 98 இலட்சம் மாத்திரம். தொ.பே. 0718373764. 028192

நுகேகொட, விஜயமாவத்த, அமைதியான சூழலில் 6 பேர்ச் காணியில் அமைந்துள்ள மூன்று மாடி வீடு விற்பனைக்கு. தொடர்பு 0112801012/ 0770025620 028045

வெள்ளவத்தையில் காணி விற்பனைக்கு. இலக்கம் 145/3, காலி வீதி வெள்ளவத்தையில் இலங்கை வங்கிக்கு அருகாமையில் 5.57 பர்ச் அளவிலான சமதரைக் காணி விற்பனைக்கு உண்டு. 20 அடி அகலமான நுழைவுப் பாதையும் சிக்கலற்ற உறுதியும் கொண்டது. வீடு மற்றும் அனைத்து வித கட்டிடங்களுக்கும் மிகவும் பொருத்தமான இடம். மேலதிக தொடர்புகளுக்கு A.Ameer Ali. 0777 63 63 49.027784

ஹோமாகம, கொடகம, ஹைலெவல் வீதிக்கு 250M A/C, புதிய அறைகள் 3 உடன் வீடு 98 இலட்சம். 0783 301 6 59, 07116 518 3 2 028047

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

நீர்கொழும்பு தளுவகொட்டு 75 பேர்ச் காணி வீட்டுடன் பிரதான வீதிக்கு முகப்பாக, வியாபாரத்திற்கு பொருத்தமானது. 0773511060. 027821

### 623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

கித்துல்கல 4 1/2 ஏக்கர் காணி 50100 பேர்ச் லொட்களாக கிடைக்கும் இறப்பர் மாத்திரம். பயிரிடப்பட்ட தோட்டம். தொலைபேசி 077 7602799. 027192

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

பார்க்ரோட் 2 படுக்கையறை அனெக்ஸ். சகல வசதிகளுடன் வாகன நிறுத்திமிடத்துடன் அல்லது இல்லாமல் தொ.பே 0777602799. 027181

வாகன நிறுத்துமிடத்துடன் வீடு வாடகைக்கு, காலி வீதி, பலப்பிட்டிய (சகல வசதிகளுடன்) 0702538122. 027241

## வாரமஞ்சரி திருமண சேவைகள்

### மணமகன்

கேகாலை சோனக 52 வயது தொழில் சார் தகைமை கொண்ட கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு அன்பான, புரிந்துணர்வுள்ள, மார்க்கப்பற்றுள்ள பெண்ணை ஒரு சிறந்த வாழ்க்கைக்காக தேடுகிறார். தயவு செய்து e-mail செய்யுங்கள் t ourserendib@gmail.com அல்லது Send - mail64@yahoo.com G161750

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

# விலைமனுக்களுக்கான அழைப்பில் திருத்தம் (IFB)

**திறமுறை பாதுகாப்பு தொலைத்தொடர்பு வலையமைப்பு (SDCN) திட்டத்திற்கு நுண்அலை வானொலி தொலைத்தொடர்பு அமைப்பினை வடிவமைத்தல், வழங்குதல், வீநியோகித்தல் நிறுவுதல் மற்றும் இயக்குதல்**

**IFB இல. MOD/SDCN/01/2021**

1. மேற்படி ஒப்பந்தம் பற்றி 2021 மார்ச் 14ம் திகதி சன்டே ஒப்சர்வர் பத்திரிகையில் பிரசுரமான விலைமனுக்களுக்கு அழைப்பு பற்றியது
2. மேலே குறிப்பிடப்பட்ட விலைமனுக்கான அழைப்பில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
   - விலைமனு திறத்தல்/மூடப்படும் நேரம் 2021.05.11ம் திகதி 11.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.
   - விலைமனுக்கள் 2021 செப்டம்பர் 6ம் திகதி வரை செல்லுபடியாகும்
   - விலைமனுப்பிணை 2021 ஒக்டோபர் 04ம் திகதி வரை செல்லுபடியாகும்
3. முன்னைய விலைமனு அழைப்பிற்கான ஏனைய எல்லா விதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றி இருக்கும்
4. ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 2021.05.10 மு. ப. 8.30 முதல் பி. ப. 4.30 வரை வேலை நாட்களில் ஹோமாகம, பிட்டிபன, மொரகஹஹேன வீதி, மாஹேனவத்த, பாதுகாப்பு ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையம், திறமுறை பாதுகாப்பு தொலைத்தொடர்பு வலையமைப்புத் திட்டம், திட்ட முகாமைத்துவம், திட்டப் பணிப்பாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

(தொ.பே. (+94) 112421357, பெக்ஸ்: (+94) 112437923/ emil-dg@crd.lk

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 15/5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு -03, இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-2390719**
**பெக்ஸ்: 0094-11-2390720**
**ஈமெயில்: procurement@defence.lk**

---

லங்கா சதொச — தேசத்திற்கு விலை நிர்ணயிப்பவர் — வர்த்தக அமைச்சு

## விலைமனுக்கோரல்

# லங்கா சதொச லிமிடட்டுக்கு வெப்பக் காகிதங்களை (Thermal Paper) வழங்குதல்

லங்கா சதொச லிமிடட்டுக்கு 06 மாத காலத்திற்கு வெப்பக் காகிதங்களை வழங்குவதற்காக லங்கா சதொச லிமிடட் தலைவரினால் உள்நாட்டு வழங்குநர்கள், உள்நாட்டு முகவர்கள், அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்புகள்: விலைமனு ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளவாறு

தேவைப்பாடுகள்:

| Item Description | Quantity |
|---|---|
| விலைகளை அடையாளமிடும் வெப்பக் காகித சுருள்கள் (Price Marking Thermal Paper Rolls) | 4,000 |
| விலைகளை அடையாளமிடும் மை (Price Making Ink) | 1,200 |
| தராசுகளுக்கான விலைகள் அச்சிடப்படும் ஸ்டிக்கர் லேபல் (Sticker Rolls for the weighing Sale) | 72,000 |
| POS இயந்திரங்களுக்கான காகித சுருள்கள் (POS Machine Paper Rolls) | 270,000 |

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களினால் அதிகாரம் வழங்கப்பட்ட கடிதத்தைச் சமர்ப்பிப்பதன் பேரில் குறித்த விலைமனு ஆவணங்களை 5000.00 ரூபா தொகையைச் (மீளளிக்கப்படாதது) செலுத்தி 2021 ஏப்ரல் 12ஆம் திகதி முதல் 2021 மே 04ஆம் திகதி வரையான காலத்தினுள் கொழும்பு-02, இல. 27, வொக்ஷோல் வீதி, சதொச பொதுச் செயலகக் கட்டிடத்தில் அமைந்துள்ள லங்கா சதொச தலைமை அலுவலகத்தின் கொள்வனவுப் பிரிவில் (3ஆம் மாடி) பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2021 ஏப்ரல் 20ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இடம்பெறும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை 2021 மே மாதம் 04ஆம் திகதி பி.ப. 01.00 மணி அல்லது அதற்கு முன் லங்கா சதொச லிமிடட், இல. 27, சதொச செயலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு-02 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும், அல்லது அந்த முகவரியின் கொள்வனவுப் பிரிவில் (3ஆம் மாடி) வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''லங்கா சதொச லிமிட்டிற்கு வெப்பக் காகிதங்களை வழங்குதல்'' எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

சகல விலைமனுதாரர்களாலும் 2% தொகை விலைக்கோரல் பிணை முறி (மீளளிக்கப்படும்) விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2021 மே மாதம் 04ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிவடைந்தவுடன் விலைமனுதாரர்களின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். வெற்றிகரமான விலைமனுதாரரினால் (பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் தவிர) பதிவுக் கட்டணமாக 5,000.00 ரூபா மற்றும் 8% வெட் தொகையை (மீளளிக்கப்படாதது) செலுத்துதல் வேண்டும் என்பதுடன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 10% பணத் தொகை செயலாற்றுகை பிணையாக (மீளளிக்கப்படும்)

மேலதிக தகவல்களுக்கு பின்வரும் உத்தியோகத்தரைத் தொடர்பு கொள்ளவும்.
முகாமையாளர் கொள்வனவு (லசவி) 0703611524

கேள்வியை/ ஒப்பந்தத்தை கையளிப்பதற்கான இறுதித் தீர்மானத்தை, லங்கா சதொச லிமிட்ட் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

லங்கா சதொச லிமிட்ட்
சதொச பொதுச் செயலகக் அலுவலகம்,
இல 27, வொக்ஷோல் வீதி, கொழும்பு - 02

---

## பாதுகாப்பு அமைச்சு

### அக்குரேகொடவிலுள்ள பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத் தொகுதியின் 04ஆம் தொகுதிக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைமையை வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிறுவுதலுக்கான விலைமனு

**Contract No.: DHQC/ DHQC/ITC/04/2021**

# விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாளை மாற்றுதல்

1. மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பில் விலைமனுக்களை முடிவுறுத்தல் / திறக்கப்படுதலில் பின்வருமாறு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
   (அ) விலைமனுக்கள் வழங்குதல் - 2021 மார்ச் 15 முதல் 2021 ஏப்ரல் 27 வரை
   (ஆ) விலைமனுக்கள் திறக்கும் / முடிவுறுத்தும் திகதி 2021 ஏப்ரல் 28ஆம் திகதி மு.ப. 10.00 மணி
2. விலைமனுக்கள் 2021-08-24ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். (விலைமனு திறக்கப்படும் நாள் உட்பட விலைமனுக்கள் திறக்கப்படும் / முடிவுறுத்தப்படும் நாள் முதல் 119 நாட்கள்)
3. விலைமனு பிணை முறியானது 2021-09-21ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். (விலைமனு திறக்கப்படும் நாள் உட்பட விலைமனுக்கள் திறக்கப்படும் / முடிவுறுத்தப்படும் நாள் முதல் 147 நாட்கள்)
4. ஏனைய அனைத்து விபரங்களில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு (MPC),**
**பாதுகாப்பு அமைச்சு,**
**இல.: 15/ 5, பாலதக்ஷ மாவத்தை,**
**கொழும்பு-03, இலங்கை.**
**தொலைபேசி: 0094-077-3766601. தொலைநகல்: 0094-011-2390720.**

---

# MINISTRY OF JUSTICE

## Invitation for Pre-Qualification of Information Systems

### *Design, Supply, Implementation and Maintenance of a Court Automation Solution for the Judicial System of Sri Lanka*

MOJ/AC/26/21/2021

1. The Chairman, Cabinet Appointed Procurement Committee on behalf of ***Ministry of Justice, Sri Lanka*** intends to prequalify Applicants for Design, Supply, Implementation and Maintenance of a Court Automation System covering below key functionalities but not limited to:
   - e-Filing System
   - Court Management System
   - Court Recording and Transcription System
2. Applicant should be capable of Design, Supply, Implementation and Maintenance of a Court Automation System in the selected 100 Court houses within stipulated project timeline. A detailed scope is indicated in Section V, Scope of Purchaser's Requirement of the Pre-Qualification document.
3. Pre-Qualification and the Bidding Process will be conducted through the procedures as specified in the GOSL Procurement Guidelines: Information Systems and the request for proposal (RFP) will be conducted through 'Single Stage Two Envelope Bidding procedure'.
4. Interested eligible applicants may obtain further information and collect the Pre-Qualification document during office hours *(from 0900 hrs to 1600 hrs)* from:

   Mr. D. Thushara F. Suraweera
   Additional Secretary (Reforms)
   Ministry of Justice
   Kaluthota Building,
   No. 19, Sangharaja Mawatha,
   Colombo 10, Sri Lanka
   Email: addlsecreforms@moj.gov.lk| Contact: 0112-446218

   Further, the Pre-Qualification document will be made available on the Ministry of Justice website - www.moj.gov.lk only for the reference purpose.
5. Responses should be delivered to below mentioned address on or before *1500 hrs, 10th May 2021.* Envelope containing the Pre-Qualification documents to be marked on the top left-hand corner ***"Pre-Qualification: Design, Supply, Implementation and Maintenance of a Court Automation System"*** and responses should be sent in two (02) hard copies (original & copy) and one (01) soft copy in PDF format, to the following address:

**Accountant (Procurement)**
**Ministry of Justice**
**3rd Floor, Superior Courts Complex**
**Colombo 12, Sri Lanka**
**Contact: 0112438178**

**Chairman**
**Cabinet Appointed Procurement Committee**
**Court Automation Project - Ministry of Justice**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# இலங்கையில் செம்பனை செய்கையின் பாரிய விளைவை தடுக்க தொடர் போராட்டம் நடத்திய மனித அபிவிருத்தி தாபனம்



செம்பனை (Palm Tree) செம்பனை எண்ணெய் (Palm Oil) இலங்கை மக்களுக்கும் சூழலுக்கும் பாதகமானது மற்றும் அது தொடர்பான செய்திகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்து அவற்றை நிரூபித்து தொடர் தேர்ச்சியாக போராடியவர் மனித அபிவிருத்தி தாபன நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பி. பி சிவப்பிரகாசம் ஆவார். அண்மையில் இலங்கையில் செம்பனை பயிர்ச்செய்கை மற்றும் எண்ணெய் இறக்குமதி என்பவற்றிற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தடை விதித்துள்ளமை தொடர்பில் தினகரன் வாரமஞ்சரிக்கு மனித அபிவிருத்தி தாபன நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி பி.பி.சிவப்பிரகாசம் வழங்கிய செவ்வி.....

செவ்வி கண்டவர்
**இக்பால்அலி**



செம்பனை போராட்டத்தின் முன்னோடி
கலாநிதி பி. பி சிவப்பிரகாசம்

**கேள்வி:- இலங்கையில் செம்பனை பயிர்செய்கை மற்றும் பாம் எண்ணெய் இறக்குமதி என்பவற்றிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.**

**மனித அபிவிருத்தி தாபனத்தின் ஊடாக கடந்த பல வருடங்களாக செம்பனை பயிர்செய்கை மற்றும் பெருந்தோட்டத்துறையின் விஸ்தரிப்பு என்பவற்றின் எதிர்விளைவுகள் சம்பந்தமாக நீங்கள் செயற்பட்டு வருகின்றீர்கள். இதன் பின்னணி தொடர்பில் சில கருத்துக்கள்....**

**பதில்**: மனித அபிவிருத்தி தாபனம் மற்றும் சிவில் அமைப்புகள், மதகுருமார்கள் என்போர் கடந்த காலங்களில் செம்பனைக்கெதிராக மேற்கொண்ட செயற்பாடுகளின் பயனாக, 'சுபீட்சத்தின் நோக்கு' மற்றும் 2021 ஏப்ரல் 5 ஆம் திகதியில் ஜனாதிபதி செயலகத்தின் இல 21/87 அறிக்கையில் இலங்கையில் செம்பனை எண்ணெய் இறக்குமதி மற்றும் செம்பனை பயிர்செய்கைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதையிட்டு, ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இலங்கை பொதுமக்கள் மற்றும் மலையக பெருந்தோட்ட மக்கள் சார்பாக மனித அபிவிருத்தி தாபனம் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது.

**கேள்வி:- அரசாங்கத்தின் இவ்வாறான தீர்மானம் மலையக தோட்டப்புற மக்களை பொறுத்தவரையில் எந்தளவு முக்கியமானது? அல்லது செம்பனை விடயத்தில் இவ்வளவு கரிசனை ஏன் காட்டுகின்றீர்கள்?**

**பதில்**: மலையக மக்களின் வரலாற்றிலே பல்வேறு காலகட்டங்களிலும் பல்வேறு சாதக, பாதக விளைவுகள் இடம்பெற்றுள்ளன. ஆனால் அவ்வாறான பிரச்சினைகளுக்கு சில காலக்கட்டங்களில் அரசியல் வாதிகள், தொழிற்சங்கங்கள், சமூக அமைப்புக்கள் என்பவற்றினால் நியாயமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் மிக அதிகமான சந்தர்ப்பங்களில் மிக மோசமான எதிர் விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளன. இந்த காரணங்களே இன்று மலையக பெருந்தோட்ட மக்களை ஒரு பின்தள்ளிய சமூகமாக இன்றும் அடையாளம் காட்டிக் கொண்டிருக்கின்றன. அந்த வரலாற்று தவறை இந்த தலைமுறையினரும் விட முடியாது. எனவே தான் செம்பனை பயிர் செய்கை கேகாலை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டபோது, அதனால் ஏற்படபோகின்ற சுற்றாடல், சமூக, பொருளாதார பாதக விளைவுகள் குறித்து நாம் குரல் கொடுக்க வேண்டியிருந்தது. இதற்கு கிராமிய மக்கள், சுற்றாடல் அமைப்புக்கள் மற்றும் பௌத்த மதகுருமார்கள் மிக முக்கிய பங்காற்றியுள்ளனர். எனவே இவ்விடயம் பெருந்தோட்ட மக்களின் வரலாற்றிலே மிக முக்கியமானதோர் பதிவாகும்.

**கேள்வி:- இவ்விடயம் மலையக மக்கள் வரலாற்றிலே முக்கியமானதென நீங்கள் குறிப்பிட்டபோதும், ஏன் மத்திய மலைநாட்டில், நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அரசியல், தொழிற்சங்கங்கள், சமூக அமைப்புக்கள் கரிசனை காட்டியதாக அறிய முடியவில்லையே?**

**பதில்**: உண்மைதான். செம்பனை பயிர்செய்கை குறிப்பாக கரையோர அல்லது இடைநிலை மாவட்டங்களான கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை போன்ற மாவட்டங்களை மையப்படுத்தியே இடம்பெறுகின்றது. இங்கும் மலையக பெருந்தோட்டத்துறை மக்கள் வாழுகின்றார்கள். ஆனால் இவர்கள் அரசியல் அநாதைகளாக, சிறுபான்மையிலும், சிறுபான்மையினராக வாழ்கின்றார்கள். தொழிற்சங்க பலம் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. எனவே ஒப்பீட்டு ரீதியில் இவர்கள் குறித்த அக்கறை மேற்குறிப்பிட்டவர்களுக்கு குறைவாக காணப்படலாம். அதேபோல் தேயிலை துறையை மட்டும் பற்றி பேசுகின்றவர்களுக்கு, குறிப்பிடத்தக்க அளவு மலையக பெருந்தோட்ட மக்கள் இறப்பர் தோட்டங்களிலும் வாழுகின்றார்கள் என்பது மறந்த விடயமாக இருக்கலாம். எவ்வாறெனினும் எமது செயற்பாடானது, தேயிலை, இறப்பர், தெங்கு போன்ற அனைத்து பெருந்தோட்ட மக்களையும் கருத்தில் கொள்வதாகும்.

**கேள்வி:- செம்பனை பயிர்செய்கையும், பாம் எண்ணெயும் பொருளாதாரத்திற்கு மற்றும் வர்த்தக துறைக்கு முக்கியமான உற்பத்தி தானே?**

**பதில்**: ஆம். இப்பயிர்செய்கையானது பல்வேறு நாடுகளின் பொருளாதாரத்திற்கு முக்கியமானதாக காணப்படுகின்றது. உதாரணமாக மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் பாம் எண்ணெய் என்கின்ற செம்பனை எண்ணெய் பெரும் இலாபம் ஈட்டும் பெருந்தோட்டப்பயிராக காணப்படுகின்றது. மேலும் உலக சமையல் எண்ணெய் என்ற அடிப்படையில் கிட்டத்தட்ட 50 வீதத்தை செம்பனை எண்ணெய் பிடித்துள்ளது. அதுமட்டுமன்றி சமையல் எண்ணெய் உட்பட பல்வேறு உப உற்பத்திகள், உணவு பொருட்கள், இனிப்புபண்டங்கள், அழகு சாதன உற்பத்திகள், சவர்க்கார வகைகள் போன்றவை தாயாரிக்க உதவுகின்றது.

Palm Tree என்ற ஆங்கில சொல்லுக்கு செம்பனை என்ற பெயரை முதன் முதலில் மனித அபிவிருத்தி ஸ்தாபன நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பி. பி சிவப்பிரகாசம் உருவாக்கியவராவார்

**கேள்வி:- அப்படியென்றால் ஏன் இப்பயிர்செய்கைக்கு எதிராக எதிர்ப்புகள் காட்டப்படுகின்றன?**

**பதில்**: செம்பனை (முள்தேங்காய்) பயிர்செய்கை மற்றும் எண்ணெய் இறக்குமதி தடை என்பது பல்வேறு துறைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தகூடியதுதான். இதனால் பல்வேறு வர்த்தக, பயிர்செய்கை துறை நிறுவனங்கள் பாதிப்படைய கூடும். இவற்றுக்கான மாற்றுவழியை அரசாங்கத்துடன் ஒருங்கிணைந்து கண்டுப்பிடிக்க வேண்டும். அந்த வர்த்தக பயிர்செய்கைத்துறையையும் நாம் பாதுகாக்க வேண்டும். எவ்வாறெனினும் இப்பயிர்செய்கையினால் பல்வேறு பின்விளைவுகள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாக காணப்படுவதாக பல்வேறு ஊடக, ஆய்வு அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. இத்தொழில்துறையில் ஈடுப்படுகின்ற தொழிலாளர்கள், இரசாயன களைக்கொல்லிகள் மற்றும் கிருமிநாசினிகள் பாவிப்பதனால் பல்வேறு உடலியல் பாதிப்புகளையும் அவர்கள் எதிர்க்கொள்கின்றனர். சுற்றுப்புறசூழல் பிரச்சினையை எடுத்து கொண்டால் இப்பயிர்செய்கைக்காக பல இலட்சக்கணக்கான ஏக்கர் காடுகள் அழிக்கப்படுகின்றன அல்லது ஏற்கனவே பண்ணப்பட்டுள்ள பயிர்செய்கைகள் அழிக்கப்படுகின்றன. உதாரணமாக இறப்பர் தோட்டங்களை அழித்து விட்டு செம்பனை செய்கையில் ஈடுப்படுகின்றனர். மேலும் நீர் பற்றாக்குறை, நீர் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. தேயிலை, இறப்பர் செய்கையை விட அதிகமான நீரை இப்பயிர் உறிஞ்சுகின்றது. மறுபுறமாக தொழிலாளர்களை பொறுத்தவரையில் மிக குறைந்தளவிலான தொழிலாளர்களே இதற்கு தேவைப்படுகின்றனர். மற்றும் அதிகளவிலான இரசாயன பூச்சிக்கொல்லிகள், பசளைகள் பயன்படுத்தப்படுகின்றமையால் நீர்வளங்கள் மற்றும் சுற்றுப்புறச்சூழல் போன்றவை மாசடைகின்றன. மேலும் தோட்ட மக்கள் மற்றுமன்றி கிராம, நகர மக்களும் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

**செம்பனை பயிர்செய்கை மற்றும் எண்ணெய் இறக்குமதி தடை என்பது பல்வேறு துறைகளில் பாதிப்பை ஏற்படுத்த கூடியதுதான். இதனால் பல்வேறு வர்த்தக, பயிர்செய்கை துறை நிறுவனங்கள் வீழ்ச்சியடையலாம். இவற்றுக்கான மாற்றுவழியை கண்டுப்பிடிக்க வேண்டும்.**

**கேள்வி:- பாம் எண்ணெய் தடை செய்யப்பட்டால் நுகர்வோர் பெரும் சிரமத்திற்கு உள்ளாகுவார்களே. அது தொடர்பில் உங்கள் கருத்து,....**

இலங்கையில் நீண்டகாலமாக தேங்காய் எண்ணெய்யே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் தற்பொழுது செம்பனை எண்ணெய்க்கு மக்கள் அறியாமலே மாறியுள்ளார்கள். செம்பனையானது ஏனைய பயிர்செய்கைகளுடன் ஒப்பிடும் போது மிகமோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. அத்துடன் பாரம்பரிய பயிர்செய்கைகளான தெங்கு, தேயிலை, இறப்பர் பயிர்களை ஏன் கைவிடவேண்டும் என்ற கேள்வி எழுகின்றது. எனவேதான் பெருந்தோட்டமக்கள் மாத்திரமன்றி கிராமிய மக்களும் இப்பயிர்செய்கைக்கு எதிர்ப்புக்காட்டி வருகின்றனர்.

செம்பனை பயிர்செய்கையின் மூலம் ஏற்படும் சுற்றாடல் மற்றும் சமூக பின்விளைவுகள் சம்பந்தமாக இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அமைக்கப்பட்ட பல்வேறு துறைசார்ந்த நிபுணர்களால் ஆய்வு செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையின்படி செம்பனையானது இலங்கைக்கு பொருத்தமற்ற பயிர் என்பது நிரூபணமாகி வருகின்றது. இவ்வாறாக பல்வேறு மானிட, சமூக, சுற்றாடல் சம்பந்தமான பல்வேறு பாதிப்புக்களையும் பின்விளைவுகளையும் கொண்டுவரக்கூடிய செம்பனை உற்பத்தி சம்பந்தமாக பெருந்தோட்டக் கம்பனிகள் இதற்கு ஆதரவு தெரிவிக்கின்ற அதேவேளை சில தொழிற்சங்கங்கள் பாராமுகமாக இருப்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. பொருளாதார ரீதியாக உற்பத்தியிலும், வெளிநாட்டு செலவாணியிலும் இலாபத்தை இப்பயிர் உற்பத்திகள் மூலம் பெற்றுக்கொண்டாலும், ஒட்டுமொத்தத்தில் பின்விளைவுகளே மிக அதிகமாக காணப்படுவதாக பல்வேறு சர்வதேச அறிக்கைகளும் குறிப்பிடுகின்றன. இப்பின்னணியில் இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அறிக்கையானது, இவ்விடயம் குறித்து அரசாங்கம் ஒரு தீர்க்கமான கொள்கைக்கு வரவேண்டும் என்பதை மனித அபிவிருத்தி தாபனம் வலியுறுத்தியது.

**கேள்வி:- இப்பிரச்சினை குறித்து உங்களுடைய நடவடிக்கைகள் எவ்வாறு காணப்பட்டன?**

**பதில்**: செம்பனை அல்லது முள் தேங்காய் பற்றிய விடயத்தில் மனித அபிவிருத்தி தாபனம் மட்டுமல்ல பௌத்த மதகுருமார், பல்வேறு சுற்றுப்புறசூழல் அமைப்புக்கள், மத்திய சுற்றாடல் அதிகார சபை போன்றன ஈடுப்பட்டு வந்தன. இதனைக் கருத்திற்கொண்டு செம்பனையின் பொருளாதார நிலைப்பாடு மற்றும் எதிர்விளைவுகள் குறித்து நாடளாவிய ரீதியில் பல்வேறு விழிப்புணர்வூட்டும், ஒருங்கிணைப்பு வேலைகளையும், நியாயப் பிரசாரம் என்பவற்றையும் தேசிய ரீதியாக மனித அபிவிருத்தி தாபனம் செயற்படுத்தி வந்தது.

**கேள்வி:- நீங்கள் செம்பனை பற்றி அண்மைக்காலத்தில் பேசியிருப்பது வியப்பிற்குரிய விடயமாகும். ஏனென்றால் பல வருடங்களுக்கு முன்பே காலி பகுதியில் இப்பயிர்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது?**

**பதில்**: காலி பிரதேசத்தில் இப்பயிர் செய்கை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் இப்பயிர்செய்கை குறித்து மக்கள் எந்தவித தெளிவில்லாமல் காணப்பட்டார்கள். செம்பனை மரங்களை, பழங்களை யாரும் கண்டிருப்பார்கள் என்று குறிப்பிடமுடியாது. பலர் செம்பனை கன்றுகளை பாக்குமரம், பனைமரம் என்றே நினைத்தார்கள். எனவே இது பற்றிய தெளிவு இருந்திருக்கும் என்று கருதமுடியாது. மறுபுறமாக காலி பிரதேசத்தில் உள்ள சில சிவில் அமைப்புகள் இதனூடாக எதிர்விளைவுகள் பற்றி குறிப்பிட்டிருந்த போதும் அது பெரும்வாரியாக வெற்றியளிக்கவில்லை.

இவ்வாறான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய செம்பனை பயிர் செய்கை கேகாலை மாவட்டத்தில் பல தோட்டங்களிலும் பயிரிடப்பட்டது. இதன்போது தோட்டத் தொழிலாளர்களும், கிராம மக்களும் இதற்கு எதிர்ப்பை தெரிவித்தனர். இப் பின்னணியில் இம்மக்கள் மனித அபிவிருத்தி தாபனத்தையும் ஏனைய தொழிற்சங்கங்களையும் நாடினர். இவ்வமைப்புகளின் உதவியுடன் மத்திய சுற்றாடல் அதிகார சபை, அரசாங்க அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்தனர்.

இதேவேளை தொடர்ச்சியான விழிப்புணர்வு செயற்பாடுகளின் பயனாக கேகாலை மாவட்டத்தில் செம்பனை உற்பத்தி செய்ய உத்தேசித்திருந்த தோட்ட நிருவாகங்கள் அதனை தவிர்த்து மீண்டும் இறப்பர், அன்னாசி போன்ற பயிர்செய்கைகளை தொடர்கின்றனர். இதனால் பெருந்தொட்ட மக்களின் நிலையான வாழ்வாதாரத்திற்கான உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளதை மக்கள் உணருகின்றனர்.

**கேள்வி:-பாம் எண்ணெய் தடை மற்றும் பயிர்ச்செய்கை தடை செய்த பின்னர் ஊடகங்களில் முரணான கருத்துக்கள் வருவதாகவே தெரிகின்றது. அதாவது பாம் எண்ணெய் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடும் அதேவேளை, சில நிறுவனங்களுக்கு இறக்குமதி செய்யலாம் என்று சில பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டுவருகின்றனர்.**

**பதில்**: உண்மைதான். இவ்வாறான கருத்து வேறுபாடுகள் மக்களிடையே தெளிவின்மையை தோற்றுவிக்கின்றது. எவ்வாறெனினும் ஜனாதிபதியின் ஊடக செய்தியே நமக்கு பிரதானமானதாகும். அதனை அடிப்படையாக கொண்டு நாம் செயற்படமுடியும். எவ்வாறெனினும் அரசாங்கமானது ஒரு நிலைப்பாட்டின் கீழ் மக்கள் சார்பாக தீர்மானம் எடுப்பது மிக முக்கியமான விடயமாகும்.







# விசித்திர அலங்கார இரதத்தில் ஏறி வீதி வலம் வரும் மருதடியான்



யாழ்ப்பாணத்தை தமிழரசர் ஆண்ட காலத்தில் சைவசமயத்தின் மகத்துவங்களை நிலைநாட்டினர். இக்காலத்தில் ஒரு தபசிரேஷ்டரானவர் தமிழரசர் பிற்காலத்திலும் பறங்கியர் யாழ்ப்பாணத்தை தம்வயப்படுத்திச் சொற்ப காலங்களுக்கு முன்னருமாய் மானிப்பாய் மருதடி விநாயகராலயத்தில் நிஷ்டையில் இருந்து சமாதியாய் விட்டார். மேற்படி மகான் சமாதி அடைந்த காலத்தில் பறங்கியர் மருதடி விநாயகர் ஆலயத்தை இடித்துச் சவக்காலையாக்கி விட்டனர்.

இந்நாட்களில் மக்கள் மகான் சமாதியடைந்த இடமும் இப்பொழுது மூலஸ்தானத்திற்குக் கிழக்கில் இருப்பமாகிய மருதமரத்தின் கீழ் இராக் காலங்களிலும் பறங்கியர் கண்களுக்குப் புலப்படாத நேரங்களிலும் பொங்கலிட்டுக் கற்பூரமெரித்து விநாயகரை வழிபட்டு வந்தார்கள். இவ்வாறாக பல இக்கட்டான நிலைகளை கடந்து வரும் கால கட்டத்தில் பறங்கியர் அரசு ஒல்லாந்தர் கைக்கு மாறியது.

ஒல்லாந்தவரசு காலத்தில் பொங்கல் வணக்கங்கள் மருதடியில் விஷேசமாகவும் வெளிபொருளாயும் நடந்து வந்தன. இக்காலத்தில் தொண்டை மண்டலத்தில் இருந்து வந்த தியாகராசக்குருக்கள் நவாலி தூக்கிணி வைரவகோவிலின் பக்கத்தில் வந்து தங்கினார். தூக்கிணி வைரவ கோவிலில் இருந்து ஒருவருஷமாக சிவபூசை வணக்கஞ்செய்து வரும் நாள்களில் அங்கு வேள்வி நடைபெற ஆயத்தமாகின. பெரியவர் இக்கோவிலில் பெருந்தொகையான ஆடுகள் வெட்டப்படுமென்று கேள்விப்பட்டார்.

உடனே அவ்விடத்தை விட்டு மானி நகரிலுள்ள மருதஞ் சோலையை அடைந்தார். பெரியவர் சுவாமிநாத முதலியாரின் உதவியை நாடி நிலம் பெற்று சிறு வீடு கட்டியிருந்தார். அக்காலத்தில் இவ்விடத்தில் மக்கள் பொங்கல் வணக்கஞ்செய்து வந்தமை கண்டு ஓர் விநாயகர் சிலை வைத்துப் பூசாக்கிரமங்கள் செய்து வந்தார். பின்னர் சுவாமிநாத முதலியாரின் உதவியுடன் மருதமரத்தின் மேற்குத் திசையை நோக்கிக் கர்ப்பக் கிரகமும் அமர்ரத்த மண்டபமும் கட்டி முடித்து பங்குனி மாசத்தில் மகோற்சவம் ஆரம்பித்து சித்திரை முதலாம் திகதியில் புதுவருஷம் ஆரம்பம் ஆகும் வேளையில் இரதோற்சவமும் அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடத்தி வந்தார்.

ஆலயம் உற்பத்தியான காலங்களில் ஒல்லாந்தரசு முடித்து ஆங்கிலேயர் காலம் உதயமானது.

ஆங்கிலேயர் காலத்தில் மருதடியாலயம் அதி உன்னத நிலைக்குக் கொண்டுவரப்பட்டது. இரகுநாத முதலியார் சின்னத்தம்பி அவர்கள் ஒருமுறை கொடிய விஷம் தீண்டப் பெற்று அவ்விஷம் சிகிச்சைக்கு மேற்கொண்டதால் அவர் விநாயகருக்கு இரதம் செய்து வைப்பதாகப் பிரார்த்தனை செய்ததாகவும் அதனால் அக் கொடிய விஷம் நீங்கி அவர்கள் சுகம் பெற்றதாகவும் அறிகிறோம். சைவசமயத்தை இம் மருதடி ஆலயமே.

மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையார் திருவுருவம் வடக்கில் நாட்டுக்கோட்டை என்னும் ஊரில் இருந்து அவ்வூர்ச் செட்டியார்களின் மூலமாய் வரவழைக்கப்பட்டு ஏறக்குறைய இருநூறு வருடங்களுக்கு முன் அமர்த்திக் கும்பாபிஷேகஞ் செய்யப்பட்டது.

புதுவருடம் ஆரம்பமாகும் நேரத்தில் விநாயகப் பெருமான் அதி உன்னத விசித்திர அலங்காரம் அமைக்கப்பெற்ற இரதத்தில் ஏறி வீதிவலம் வருகின்ற அற்புதக் காட்சியை எல்லோரும் கண்டு இன்புறுகின்றனர். இத்தகைய சிறப்பு வாய்ந்த மானிப்பாய் மருதடியில் 22.03.2021இல் கொடியேற்றம் ஆரம்பமாகி வருஷப் பிறப்பானது இரதோற்சவம் நடைபெறுகிறது.

**சுவாமிநாதன் தர்மசீலன் ...**
அகில இலங்கை சமாதான நீதவான்

# எடின்பரோ கோமகன்



## ராணி மனைவிக்காக தன் ஆசைகளை துறந்து வாழ்ந்த மனிதர்

“என் கணவர் பாராட்டுகளை எளிதில் பெற்றுக் கொள்ளவிரும்பாதவர். ஆனால் இத்தனை ஆண்டுகளாக எனது பலமாகவும் துணையாகவும் மட்டுமே அவர் இருந்திருக்கிறார். அதற்காக நானும், என் மொத்த குடும்பமும், இந்த நாடும் மிகப் பெரிய அளவுக்கு அவருக்கு நன்றிக் கடன்பட்டுள்ளோம்!”

பிரிட்டிஷ் மகாராணியார் தன் எழுபதாம் திருமண ஆண்டு விழாவை கொண்டாடிய போது தன் கணவரான பிலிப் கோமகனை இவ்வாறு பாராடிப்பேசினார். மகாராணியார் பொதுவாகவே யாரையும், பொதுவில் பாராட்டுவதில்லை. தன் கணவரையும் தான். ஆனால் இப் பாராட்டு மிகவும் உண்மையானது. அவர் அப்படித்தான் தன் திருமண வாழ்க்கையை கழித்தார்.

நேற்று முன்தினம் தான் வசித்த வின்சர் மாளிகையில் தன் 99ம் வயதில் மூப்பின் காரணமாக பிலிப் கோமகனார் மரணமடைந்தார். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் எம்மை ஒரு காலத்தில் ஆட்சி செய்ததால் அந்த ராஜகுடும்பம் நமக்கு ஏதோ ஒரு வகையில் நெருக்கமாக இருந்து வருகிறது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்களின் வீடுகளில் மகாராணியார் அமர்ந்திருக்க கம்பீரமான தோற்றத்துடன் பிலிப் கோமகன் நின்று கொண்டிருக்கும் புகைப்படம் பிரேம்பண்ணி சுவர்களில் தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். பெருந்தோட்ட குடியிருப்புகளில் இப் படத்தை அதிகமாகப் பார்க்க முடிந்ததால்தான், 1971 ஜே.வி.பி. கிளர்ச்சியை நடத்திய றோஹண விஜேவீர, தமிழ்த் தொழிலாளர்கள் இலங்கைக்கு விசுவாசமில்லாதவர்கள் என்றும் அவர்கள் வீடுகளில் காந்தி, நேரு மற்றும் மகாராணியார் படங்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன என்றும் கூறினார்.

இளவரசர் பிலிப் கிரேக்கத்தைச் சேர்ந்தவர். உலகில் சில உயர் அரச குடும்பங்களே உள்ளன. ரஷ்யாவின் ஸார் அரச குடும்பம் (அழிந்துவிட்டது) பிரட்டிஷ் அரச குடும்பம், ஜெர்மனிய, மொனோக்கோ, ஸ்பானிய என சில அரச குடும்பங்களே எஞ்சியுள்ளன. கிரேக்க, ஜெர்மனிய, இங்கிலாந்து மற்றும் ரஷ்ய அரச குடும்பத்தினர் மத்தியில் பெண் எடுப்பது கொடுப்பது வழக்கில் இருந்து வந்திருக்கிறது. இளவசரின் அரச குடும்பம் ஜெர்மனிய பரம்பரை சார்ந்தது. அதை பெட்டன்பேர்க் என அழைப்பார்கள். ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரின் ஆணைப்படி இங்கிலாந்தில் வாழ்ந்த பெட்டன்பேர்க் குடும்பம் அப்பெயரை விடுத்து, மவுண்ட்பேட்டன் என்ற ஆங்கிலப் பெயரை வரிந்து கொண்டது.

இளவரசர் தன் இளமையை பிரான்சில் கழித்தார். அதனால் அவருக்கு பிரெஞ்சு மொழியில் நன்கு பேச வரும். இரண்டாம் உலகப்போர் காலத்தில் ரோயல் கடற்படையில் சேர்ந்தார். கடற்படை பயிற்சிக் கல்லூரியில் மாணவராக இருந்தபோது இரு இளவரசிமார் அக் கல்லூரியை பார்வையிட வந்தனர். அவர்களை அழைத்துச் சென்று சுற்றிக் காண்பிக்கும் பொறுப்பு பிலிப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. வருகை தந்த இளவரசிகளில் ஒருவர் பெயர் எலிசபெத். மற்றவர் மார்கிறட். அப்போது எலிஸபெத்துக்கு 13வயது, தன்னுடன் வந்த வசீகரமான இளைஞனை அவருக்குப் பிடித்துப் போனது. அக்டோபர் 1942இல் கடற்படையின் இளம் லெப்டினன்ட்மார்களில் ஒருவராக பிலிப் விளங்கினார். இதற்கிடையில் இருவருக்கும் இடையிலான நட்பு, காதலாக மாறியது. கடிதத் தொடர்புகள் தொடர்ந்தன. இளவரசியின் அழைப்பில் அரச குடும்ப விருந்துகளில் அவர் கலந்து கொண்டார்.

அரசல்புரசலாக இருந்த காதல் விவகாரம் வெளியே தெரியவந்தபோது எதிர்ப்பும் கிளம்பியது. ஒரு அரச குடும்பத்தவர், ‘பிலிப் ஒரு முரடன், மரியாதை தெரியாதவன்’ எனக் குறிப்பிட்டிருந்தாராம். ஆனால் இளவரசி பிடிவாதமாக அவரைக் காதலித்து வந்தார். முதலில் மறுத்த ஜோர்ஜ் மன்னர் இறுதியில் எலிஸபெத்தின் விருப்பத்துக்கு இணங்கினார்.

அரச பாரம்பரியங்களுக்கு அமைய பிலிப் தன் குடும்பப் பெயரைத் துறந்தார். பிரிட்டிஷ் குடிமகனாக மாறினார். தாயாரின் குடும்பப் பெயரான மவுண்ட்பேட்டனை தன் பெயருடன் இணைத்துக் கொண்டனர். திருமணம் வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயத்தில் 1947 நவம்பர் 29ம் திகதி நடைபெற்றது. அன்று காலை எலிஸபெத் இளவரசரின் அப்பாவான ஆறாம் ஜோர்ஜ் மன்னர் மாட்சிமை பொருந்திய இரு பட்டங்களை அவருக்கு அளித்தார். முதல் பட்டம் எடின்பரோ கோமகன் என்பது. இரண்டாவது மேரியோ நெத்பிரபு என்பதாகும். அதாவது இளவரசரின் திருமணம் செய்து ஜோர்ஜ் மன்னரின் குடும்ப உறுப்பினராவதற்கான தகுதி வழங்கப்பட்டது.

தொடர்ந்தும் கடற்படையில் சேவையாற்றிவந்த எடின்பரோ, இளவரசர், ஜோர்ஜ் மன்னரின் உடல் நிலை மோசமானபோது எலிஸபெத்துக்கு உதவும் வகையில் கடற்படையில் இருந்து ஓய்வு பெற்றார். மன்னர் மறைந்ததும் இரண்டாம் எலிஸபெத் மகாராணியாக முடிசூடப்பட்டார்.

மகாராணியின் கணவர் என்ற அந்தஸ்து கிடைத்த பின்னர் முடியாட்சியை சீர் செய்வது, நவீன மயப்படுத்தல் என்பனவற்றை அவர் மேற்கொள்ள எண்ணிய போதும் எதிர்ப்புகள் கிளம்பியதால் அவர் அவற்றை கைவிட வேண்டியதாயிற்று.

தனது பிள்ளைகளின் பெயருடன் மவுண்ட்பேட்டன் என்ற பெயர் தொடரும் என கோமகன் எதிர்பார்த்திருந்தார். ஆனால் மகாராணி அதற்கு சம்மதிக்கவில்லை. மவுண்ட்பேட்டன் என்பதற்கு பதிலாக வின்ட்ஸர் என்ற பெயரே இருக்கும் என்ற முடிவு அவருக்கு மனக்கசப்பை அளித்தது. ஒரு முறை தன் நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த போது ‘என் பிள்ளைகளுக்கு எனது பெயரை வைக்கும் உரிமைகூட இல்லாதவனாக நான் வாழ்கிறேன் என்றும் நான் எதுவும் இல்லை. ஆனால் ஒரு அமீபா’ என்றும் மனங்கசந்து கூறினாராம் பிலிப் கோமகன்.

கோமகனின் பேரனான ஹெரியும் மேகனும் சமீபத்தில் அமெரிக்க தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அரச குடும்பத்தின் மீது என்னென்ன குற்றச் சாட்டுகளை சுமத்தினார்களோ அவற்றையே பிலிப் கோமகனும் பல ஆண்டுகளுக்கு முன்னரே சுமத்தியிருக்கிறார்.

ஆனால் அவர் அமைதி காத்தார். வெளிப்படையாக குற்றச் சாட்டுகளை சுமத்தவில்லை. அது மனைவியான மகாராணியை சிறுமைப்படுத்தும் என எண்ணி அவமானங்களை பொறுத்துக் கொண்டார். பல சமூக சேவைகளில் ஈடுபடுவதை வழக்கமாக்கிக் கொண்டார். தனக்கும் தன் மூத்த மகன் சார்ள்சுக்கும் இடையில் காணப்பட்ட முறுகல் நிலையைப் பற்றியும் வாய்திறக்கவில்லை. காட்டுயிர்கள் பாதுகாப்புக்காக அவர் பெருமளவில் பணியாற்றியிருக்கிறார். மேலும் தன் வாழ்நாள் முழுவதும் விளையாட்டுகளில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். படகு சவாரி, கிரிக்கெட், போலோ, சாரட் வண்டி யோட்டம் என்பன அவர் விரும்பிய விளையாட்டுகள்.

‘நான் செய்ய வேண்டிய விஷயங்களை ஒட்டு மொத்தமாக திடீரென என்னால் மாற்றிவிட முடியாது. நான் சில விஷயங்களில் எதிர் வினையாற்றுவது போல எனது விரும்பங்களையோ வழிகளையோ என்னால் மாற்ற முடியாது. அதுதான் எனது பாணி’ என அவர் ஒரு முறை கூறியிருந்தார். அவரது வாழ்க்கை அப்படித்தான் ஆதங்கம் மிக்கதாக இருந்தது. கோமகன் 1952ம் ஆண்டு முதல் 22, 219 பொது நிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருந்ததாக ஒரு குறிப்பு உள்ளது. 2017 ஓகஸ்ட் மாதம் அவர் பொது வாழ்வில் இருந்து ஓய்வு பெற்றார்.


பிரபலமான ஆண்களின் மனைவியாக இருப்பது எவ்வளவு சிரமமானதோ அவ்வாறே பிரபலமான ஒரு மகாராணி மனைவிக்கு கணவராக இருப்பதும் சிரமமானபணிதான் என்பதற்கு எடின்பரோ கோமகன் ஒரு நல்ல உதாரணம்.

**ஆனாரூனா**













# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## பதவி வெற்றிடம்

## மயக்க மருந்து மருத்துவ நிபுணர் பதவி

**மேலேயுள்ள பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையிலுள்ள நவீனமயமாக்கப்பட்ட இருதய நிலையமானது இலங்கையிலுள்ள முன்னணி இருதய நிலையங்களில் ஒன்றானதும் வருடமொன்றிற்கு 500 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான வயது வந்தவர்களுக்கான உயர்தரம் மற்றும் பாரிய எண்ணிக்கையான இருதய சத்திரசிகிச்சைகளை நிறைவேற்றிய வைத்தியசாலையாகும். இந்நிலையத்தில் 12 கட்டில்களுள்ள தீவிர கண்காணிப்பு அலகும் (ICU) 06 கட்டில்களையுடைய உயர் சார்பு அலகும் (HDU) அமைந்துள்ளன. வெற்றிகரமான விண்ணப்பதாரியானவர் இருதய மயக்க மருந்து நிபுணராக செயலாற்றுவதுடன் இருதய தொராசிக் ICU/HDU ஆகியவற்றிற்கும் பொறுப்பாளராக செயலாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றார். எனவே, மேலேயுள்ள துறையின் அனுபவமானது சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

**தகைமைகள்** : மயக்க மருந்து வழங்குவதில் PGIM சபை சான்றிதழ்.
அல்லது
: மயக்க மருந்து வழங்குவதில் சபை சான்றிதழின் அனுகூலங்களுக்கான தகுதி.
: ஓய்வு பெற்ற மருத்துவ நிபுணர்களும் விண்ணப்பிக்கலாம்.

**சம்பள அளவுத்திட்டம்** : சம்பளம் பேசிதீர்க்கப்படும்.

**தொழில் வாய்ப்பு நியதிகள்** : ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையில்.

அரசாங்க சேவையில் பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை அவர்கள் சேவையாற்றும் திணைக்களம் அல்லது நிறுவகத்தின் தலைமையூடாகவே அனுப்புதல் வேண்டும்.


நியமனமொன்றை வழங்கும்/ வழங்காமலிருக்கும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையானது தன்னகத்தே கொண்டுள்ளது.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை முழுமையான சுயதரவு மற்றும் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்களுடன் 2021.04.27 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய, நுகேகொட.**
**2021.04.05.**

BE BETTER INFORMED!



News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

VISIT
apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

Repeat Your Ad For Better Offers

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## ஸ்ரீ ஜயவர்தனபர பொது வைத்தியசாலை

## வெற்றிடங்கள்

### மின் தொழில்நுட்பவியலாளர் பதவி (ஒப்பந்த அடிப்படை)

மேற்படி பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்வித் தகைமைகள்** :- க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்த பட்சம் இரண்டு (2) திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல்.

**தொழில்சார் தகைமைகள்** :- பதவியுடன் சம்பந்தப்பட்ட மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் கைத்தொழில்/ தொழில்சார் பயிற்சி நிறுவனத்தினால் விநியோகிக்கப்படும் தேசிய தொழில்சார் தகைமைகளுடன் 4ஆம் மட்டத்தில் (NVQ4) இற்கு குறையாத திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**வயது** : 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** :
I. ரூ. 34,815 - 10 x 365 - 38,468
II. மேற்படி சம்பளத்திற்கு மேலகதிமாக அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

**சேவை நிபந்தனைகள்** : ஒப்பந்த அடிப்படையில் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உரித்துரிமை உண்டு.

அரச சேவையில் பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தாம் கடமையாற்றும் நிறுவன தலைமையின் சான்றிதழ் ஒன்றை விண்ணப்பத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். பதவி ஒன்றிற்கு நியமித்தல் அல்லது நியமிக்காதிருக்கும் உரிமை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் நிர்வாக சபைக்கு உரியது. விண்ணப்பிக்கும் பதவியை இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர்களால் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத பரிந்துரைப்பவர்கள் இருவரின் பெயர்களும் 2021.04.27ம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு கீழ்க் குறிப்பிடுபவர்களுக்கு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**

# கொமர்ஷியல் டெவெலப்மெண்ட் கம்பனி பிஎல்சி

## REG. No.: PQ 114

கொழும்பு பங்குச் சந்தையில் பதிவு பெற்றுள்ள பொது கம்பனியொன்றான கொமர்ஷியல் டெவெலப்மெண்ட் கம்பனி பிஎல்சி ஆனது பின்வரும் பதவிக்காக விண்ணப்பங்களை கோருகின்றது.

**பராமரிப்பு அலுவலர் பதவி - கட்டிட சேவைகள் (யாழ்ப்பாணம்)**

**கடமைகள் மற்றும் பொறுப்புக்கள்**

- இயந்திராதி மற்றும் உபகரணங்களை பரீட்சித்தல் மற்றும் சோதனை செய்தல்.
- பகுப்பாய்வு பூர்த்தி செய்த பின்னர், பரிசோதனை பெறுபேறுகளை ஆவணமாக்கல்.
- மின்னியல்/ பொறிமுறை செயற்பாட்டின்மைக்கான மூலகாரணத்தை கண்டறிதல்.
- தடுப்பு பராமரிப்பு திட்டத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் அமுல்நடாத்துதல்.
- மின்னியல்/ பொறிமுறை முறைமைகளை நிறுவுதல் மற்றும் பழுதுபார்த்தல்.

**பராமரிப்பு அலுவலர் திறன்கள்:**

- பகுப்பாய்வுரீதியிலான திறன்கள்
- விபரங்களுக்கு அவதானம் செலுத்துதல்
- விமர்சன சிந்தனை திறன்கள்
- எழுத்துமூல மற்றும் பேச்சுமூல தொடர்பாடல் திறன்கள்
- மின்சார கைக்கருவிகளில் தேர்ச்சி.

**பொருத்தமான விண்ணப்பதாரி பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- ATI, Ceylon German Technical Institute or NAITA or NVQ 03 or above.
- கபொத சா/த பரீட்சையில் கணிதம் அடங்கலாக ஆகக் குறைந்தது 6 சித்திகள்.
- நிகரான துறையில் 02 வருடங்களுக்கு மேலான அனுபவம்
- வயது 40 இற்கு குறைவாகவிருப்பது விருப்பத்திற்குரியது.

**வேதனம்:**

வெற்றிகரமான விண்ணப்பதாரி கவர்ச்சிகரமான வேதன பொதியொன்றை பெற்றுக் கொள்வார்.

இரு உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் விபரங்களுடனான விண்ணப்பமானது 2021 ஏப்ரல் 25 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் 'மனித வளங்கள் தலைவர், கொமர்ஷியல் டெவெலப்மெண்ட் கம்பனி பிஎல்சி, இல.: 8-4/2, யோர்க் ஆர்கேட் கட்டிடம், லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01' என்ற முகவரிக்கு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பித்துள்ள பதவியைக் குறிப்பிட்டு அனுப்பவும்.



## முகாமையாளர் - மனிதவள மற்றும் நிர்வாகம் (MM 1-1)

### இலங்கையின் பாரிய சில்லறை வலையமைப்பிற்கு

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

(01) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவ/ பொது முகாமைத்துவ/ வியாபார நிர்வாக துறையில் அல்லது பொது நிர்வாக துறையில் பட்டம்
மற்றும்
பதவியுடன் தொடர்புடைய பாடப்பிரிவில் 1 ஆண்டுக்கு மேலான சேவை அனுபவம்

(02) அங்கீகரிக்கப்பட்ட ஏந்தவொரு தொழில்முறை பட்டய கல்வி நிலையத்தில் (இடைநிலை மட்டம்) மனிதவள முகாமைத்துவத்தில் தொழில்முறை தகுதியை பெற்றிருத்தல்
மற்றும்
பதவியுடன் தொடர்புடைய பாடப்பிரிவில் 1 ஆண்டுக்கு மேலான சேவை அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

(01) மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
(02) பதவிக்கு இயைபான விடயத்துறையில் உதவி முகாமையாளர் (JM) மட்டப் பதவியில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்:** MM 1-1 ரூபா [53,175 - 10 x 1375 - 15 x 1910 - 95,575]
ஆரம்பச் சம்பளம்: ரூ. 53,175.00/= (இதற்குப் புறம்பாக பதவிக்கு இயைபாக அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்) (போக்குவரத்துக் கொடுப்பனவு 12,500.00 + கையடக்கத் தொலைபேசி மீளளிப்புக் கொடுப்பனவு 3,000.00 (மாதாந்தம்) இந்தப் பதவிக்கு உரித்தாகும்)

**நியமனத்தின் தன்மை:** நிரந்தரம்

**தகுதி வாய்ந்த விண்ணப்பதாரரிடம்**

- தரவை மதிப்பீடு செய்யும், மதிப்பாய்வு செய்யும், விளக்கமளிக்கும் திறனுடன் சிறந்த பகுப்பாய்வு செய்து சிக்கலைத் தீர்க்கும், திறன்களை ஒழுங்கமைக்கும் மற்றும் ஊக்கமுள்ள தனிநபராக இருக்க வேண்டும்
- வலுவான தலைமைத்துவ பண்புகள், தொடர்பாடல் திறன்களை கொண்டிருத்தல் வேண்டும்.
- நல்ல தகவல் தொழில்நுட்ப திறன்களை வெளிப்படுத்த கூடியவராக இருக்க வேண்டும்.
- பல ஒழுக்கக் குழுக்களை வழிநடத்துவதற்கும், வழிகாட்டுவதற்குமான திறன். மனித மற்றும் பிற வளங்களை முறையாகப் பயன்படுத்துதல் மற்றும் திறமையான நிர்வாகிக்கும் பணிகளில் அனுபவம்

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

I. இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
II. பதவியின் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு மற்றும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
III. சிறந்த ஆளுமையுடைய நபராகவிருத்தல் வேண்டும்.


உங்களுக்கு குறித்த தகைமைகள் மற்றும் அனுபவம் இருக்குமானால், உங்களது சுயதரவு ஆவணம், சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகள் சகிதம் இந்த விளம்பரம் பிரசுரமாகி 14 நாட்களுக்குள் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புங்கள். அல்லாவிடில் vacancies@lankasathosa.org எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.
(விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் / மின்னஞ்சல் செய்தியில 'subject' நிரலில் குறிப்பிடுதல் வேண்டும்)

**(குறும் பட்டியலிடப்பட்ட அபேட்சர்களுக்கு மட்டும் நிறுவனத்தினால் பதிலளிக்கப்படும்)**

தலைவர், லங்கா சதொச லிமிடட்,
சதொச செயலகக் கட்டிடம்,
இல.27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

வர்த்தக அமைச்சு

லங்கா சதொச



## முகாமையாளர் - தகவல் தொழில்நுட்பம் (MM 1-1)

### இலங்கையின் பாரிய சில்லறை வலையமைப்பிற்கு

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

(01) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தகவல் தொழில்நுட்பம் / கணனி விஞ்ஞானம் / தகவல் முறைமை முகாமைத்துவ பாடங்கள் (MIS) தொடர்பான ஆரம்ப பட்டம்.
அத்துடன்
ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின், பதவிக்கு இயைபான துறையொன்றில் ஒரு வருட தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

(02) தகவல் தொழில்நுட்ப பாடம் தொடர்பில், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறன் தகைமை 7ஆம் (NVQ Level 7) நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்
அத்துடன்
சான்றிதழைப் பெற்றுக்கொண்டதன் பின், பதவிக்கு இயைபான துறையொன்றில் ஒரு வருட தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

(01) மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
(02) பதவிக்கு இயைபான விடயத்துறையில் உதவி முகாமையாளர் (JM) மட்டப் பதவியில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்:** MM 1-1 ரூபா [53,175 - 10 x 1375 - 15 x 1910 - 95,575]
ஆரம்பச் சம்பளம்: ரூ. 53,175.00/= (இதற்குப் புறம்பாக பதவிக்கு இயைபாக அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்) (போக்குவரத்துக் கொடுப்பனவு 12,500.00 + கையடக்கத் தொலைபேசி மீளளிப்புக் கொடுப்பனவு 3,000.00 (மாதாந்தம்) இந்தப் பதவிக்கு உரித்தாகும்)

**நியமனத்தின் தன்மை:** நிரந்தரம்

**தகுதி வாய்ந்த விண்ணப்பதாரரிடம்**

- ERP முறைமை, கருத்துக்கள் மற்றும் விதிமுறைகளுடன் வேலை செய்த அனுபவம் இருத்தல் வேண்டும்.
- வலையமைப்பு பாதுகாப்பு தீர்வுகள், **Firewall** மற்றும் வைரஸ் எதிர்ப்பு மென்பொருள்களை நிறுவுதல், நிர்வகித்தல் மற்றும் கோளாறுகளை சீரமைத்தல் தொடர்பான அனுபவம் மற்றும் தரவு, வலையமைப்பு பிரவேசம் மற்றும் **Backup** முறைமைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல் தொடர்பில் அனுபவம் இருத்தல் வேண்டும்.
- முறைமை பராமரிப்பு மற்றும் மேம்படுத்துதல் மற்றும் தற்போதுள்ள முறைமையுடன் புதிய முறைமையை ஒன்றிணைத்தல் தொடர்பில் அனுபவம் இருத்தல் வேண்டும்.
- புதிய பாதுகாப்பு தட்டுகளுக்கு **(Patches)** இயைபாக மென்பொருள்களை தரமேற்றும் **(Update)** செய்தல் மற்றும் வலையமைப்பை முறையாக பாதுகாப்பை உறுதி செய்தல் தொடர்பான அனுபவம்
- சிறந்த பகுப்பாய்வு, சிக்கல்களைத் தீர்த்தல் மற்றும் ஒழுங்கு செய்யும் இயலுமையுடன் தரவு மதிப்பீடு, மீள் நோக்குதல் மற்றும் விளக்கமளிக்கும் இயலுமை இருத்தல் வேண்டும் என்பதுடன் உயர்ந்த சுய முயற்சியுடைய நபராகவிருத்தல் வேண்டும்.
- வலுவான தலைமைத்துவ குணவியல்பு மற்றும் நபர்களுக்கிடையிலான தொடர்பாடல் திறன் இருத்தல் வேண்டும்.
- தகவல் தொழில்நுட்ப திறன்களை வெளிக்காட்டுவதற்கான சிறந்த இயலுமை இருத்தல் வேண்டும்.
- பல்வேறு குழுக்களுக்கு தலைமைத்துவம் வழங்குதல் மற்றும் செயற்பாடுகளை உறுதி செய்யும் ஆற்றல் இருத்தல் வேண்டும். மனிதவளம் மற்றும் ஏனைய வளங்களை முறையாக வரிசைப்படுத்தல் மற்றும் வெற்றிகரமாக முகாமைத்துவம் செய்யும் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

I. இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
II. பதவியின் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு மற்றும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
III. சிறந்த ஆளுமையுடைய நபராகவிருத்தல் வேண்டும்.

உங்களுக்கு குறித்த தகைமைகள் மற்றும் அனுபவம் இருக்குமானால், உங்களது சுயதரவு ஆவணம், சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகள் சகிதம் இந்த விளம்பரம் பிரசுரமாகி 14 நாட்களுக்குள் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புங்கள். அல்லாவிடில் vacancies@lankasathosa.org எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.
(விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் / மின்னஞ்சல் செய்தியில 'subject' நிரலில் குறிப்பிடுதல் வேண்டும்)

(குறும் பட்டியலிடப்பட்ட அபேட்சர்களுக்கு மட்டும் நிறுவனத்தினால் பதிலளிக்கப்படும்)

தலைவர், லங்கா சதொச லிமிடட்,
சதொச செயலகக் கட்டிடம்,
இல.27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

வர்த்தக அமைச்சு

லங்கா சதொச

தினகரன் வாரமஞ்சரி

# BUDGET adz

It suits your budget

COMMERCIAL PROPERTY FOR SALE IN SEEDUWA

15,000 Sq. Ft 3-year-old 4-floor Commercial Building with 2 fully furnished luxurious apartments, 42 perch land, Private car park, 2 floor separate building (can use as staff quarters), 62.5 kVA standby generator, Private 20 ft carpeted road, 10 min drive from Katunayake Airport

For Inquiries
Contact Ralston 0768200098

---

Are you in trouble ?
Unable to pay your leasing?

Don't you like to earn a monthly income by giving us your Vehicle for hiring basis & pay your leasing easily ...!

Call Now - 077 7 194 707

---

HALF BOARD BASIS

ENJOY THIS NEW YEAR SEASON WITH HOTEL TAMARIND TREE at YALA, TISSAMAHARAMA

valid from 1st April to 31st May 2021

PACKAGE INCLUDES:
- WELCOME DRINK
- AIR-CONDITIONED ROOM
- BREAKFAST
- DINNER
- SWIMMING POOL
- HOT WATER
- TELEVISION
- MINI BAR
- COFFEE & TEA MAKING FACILITIES

RS. 4,375/- NET PER PERSON DOUBLE SHARING ONLY

Contact for more information
0472 239 712 / 0761 549 337
+94 71 63 25 958 FACEBOOK/HTAMARIND.COM

---

Sri Lanka's No.1 Factory Outlet
Men's Wear | Women's Wear | Kids Wear

NEWLY OPENED!
- Branded Cotton Clothing
- Export Quality
- 100% Cotton
- Value for Money
- Car Park Available

Avurudu Collections
New Arrivals!

LONDON STORES
/londonstoresnugegoda

319, High Level Road, Nugegoda. | Tel: 011 2812382 (Next to Anula Girls School)

---

சிலோன் மூவர்ஸ்

அனைத்து பொருட்களையும்

இடத்திற்கிடம் எடுத்துச் செல்வதில் நிபுணர்கள். தளபாடம், வீட்டுப்பேணல் பொருட்கள், அலுவலக தளபாடம், இரும்பு பாதுகாப்பு பெட்டகங்கள், பொருட்களை அகற்றல், அனுப்புதல் மற்றும் போக்குவரத்து ஒப்பந்தங்கள்.

35 வருட அனுபவமுள்ள பணியாட்களுடனான மிகச் சிறந்த சேவை

TEL : 075 260 47 53 / 074 0 629 768
FAX : 011 2 447 858
Email : ceylonmovers123@gmail.com

---

Victorian Guest Bandarawela
victorianbungalow.lk

1st floor - 4 double rooms | Rs. 10,000/- 8 Persons
Ground floor - 4 Triple rooms | Rs. 12,000/- 12 Persons
Rs. 20,000/- (Full Bungalow) - - A Cook available

2km Away from Railway Station and Town BANDARAWELA

Weekday
D/ Rooms - 1700/-
Triple Room - 2200/-

077 3 711 196 | 070 2 536 896

---

SAMEERA AUTO TRADERS

Wish our all Clients Prosperous Sinhala & Hindu New Year

BUY WITH CONFIDENCE

| Vehicle | Price |
|---|---|
| KIA PICANTO - 2016 (02 Units Available) - Manual | 30,50/- |
| TOYOTA HILUX VIGO - 2007 | 58,90/- |
| TOYOTA WIGO - 2017 | 41,75/- |
| TOYOTA VITZ - 2018 2 Units Available (Black & Silver) | 51,90/- |
| TOYOTA AQUA - 2015 (02 Units Available) | 48,50/- |
| MERCEDES BENZ E200 - 2005 | 49,90/- |
| KIA SORENTO DIESEL - 2011 (04 Units Available) / Diesel & Petrol | 72,50/- |
| TOYOTA VITZ - 2016 | 48,50/- |
| TOYOTA VITZ - 2007 (02 Units Available) | 36,90/- |
| TOYOTA AXIO WXB - 2018 | 75,50/- |
| TOYOTA AXIO G GRADE - 2014 | 54,90/- |
| HONDA GRACE - 2014 | 55,90/- |
| TOYOTA ALLION - 2011 | 62,90/- |
| HONDA FIT SHUTTLE - 2014 | 45,50/- |
| TOYOTA PRIUS - 2012 | 49,90/- |
| MITSUBISHI OUTLANDER - 2015 | 88,50/- |
| NISSAN X-TRAIL - 2015 | 74,50/- |
| HONDA FIT GP5 - 2015 | 49,50/- |
| NISSAN TEANA 250XV - 2013 | 72,50/- |
| SUZUKI ALTO - 2015 | 22,75/- |
| HONDA GRACE EX - 2015 | 59,50/- |

UDAYA - 076 909 56 05 / ASELA - 0776 562 007
Can be Seen @ 121/A Pagoda Road, Nugegoda.
( Close to Ananda Balika College )
100% ACCIDENT FREE... / 100% RUNNING CONDITION... / 100% INTERIOR CONDITION...

SAMEERA AUTO TRADERS

---

SATURDAY /SUNDAY BUFFET LUNCH

DAY OUTING SPECIAL OFFERS
SPEND YOUR DAY JUST FOR Rs 1550/-

Sea Shine Beach Hotel

- Welcome Drink
- Well Spread Buffet Lunch & Dessert
- Evening Tea with Piece of Cake
- One Rest Room Complimentary for Over 25 Pax
- Swimming Pool with Kids Play Area
- No Corkage for Hard Liquor & Beer

WE UNDERTAKE WEDDINGS, PARTIES, SEMINARS & DAY OUTINGS

10 min. to Colombo Airport
15 min. to Colombo City
Overlooking Colombo Harbour City

212, BOPITIYA ROAD, USWETAKEIYAWA, WATTALA.
Tel: + 94 112 985 555, 0114 328 422 Fax: 2 793 060
HOTLINE : 0773 404 975, 0773 633 979
Email: info@seashinebeach.com Web: www.seashinebeach.com

---

RAIN TREE HOTEL
THISSAMAHARAMA

Special summer offer 60% off
Till end of April 2021

| | R/o | B/B | H/B | F/B |
|---|---|---|---|---|
| Double | 6000 | 7000 | 8000 | 10000 |
| Triple | 8000 | 9000 | 10000 | 12000 |
| Family | 10000 | 11000 | 12000 | 14000 |

- Half an hour to Kataragama
- Half an hour to Yala
- 45 min to Ridiyagama open Zoo
- 45 min to Bundala
- 20 min to Highway (Colombo/Matara)

Contact number - 0715597641/ 0472238125/6

---

Advertise Here

5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,000/- +VAT

Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்

# நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## கொழும்பு நகர மீளுருவாக்கல் திட்ட உதவி – AIIB

## வெற்றிடங்கள் - திட்ட ஊழியர்

பெருநகர பிராந்தியத்தில் முன்னுரிமை முதலீடாக நகர மீளுருவாக்கல் திட்டத்தின் கீழ் கொழும்பு நகர் மற்றும் புறநகரங்களில் காணிகளை மறுசீரமைத்தல் மற்றும் சுமார் 5,500 வீட்டு அலகுகளை நிர்மாணிக்கும் நோக்குடன் ஆசிய அபிவிருத்தி முதலீட்டு வங்கியிடம் (AIIB) இருந்து நிதிப்படுத்தலுக்காக இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. இந்தத் திட்டம் நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA) மூலமும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மூலமும் செயற்படுத்தப்படுகிறது.

SCURP இல் பின்வரும் பதவிகளை நிரப்புவதற்கு தகுதியுடைய மற்றும் அனுபவம் கொண்ட இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆங்கிலத்தில் தேர்ச்சி, அரச ஒழுங்குமுறைகளில் உள்ள பரீட்சயம் மற்றும் கணினி அறிவு ஆகியன இந்த பதவிகளுக்கு அவசியமான முன்நிபந்தனைகளாகும்.

| வரிசை இல. | பதவி | இல. | தேவையான தகைமை மற்றும் அனுபவம் |
|---|---|---|---|
| | | | **01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்திற்கு அமைய, தரம் PS - 3** |
| 1 | பிரதித் திட்ட பணிப்பாளர் (தொழில்நுட்பம்) | 01 | (கீழுள்ள 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4)<br>1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டம் ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.<br>**அல்லது**<br>தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு நிகரான தகைமை ஒன்றுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகைமை.<br>**அல்லது**<br>தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட இணை அங்கத்துவம்/ அதனையொத்த ஒரு தொழில்முறை தகைமை.<br>**அத்துடன்**<br>முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 15 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம். அதில் 07 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் இருத்தல் வேண்டும்.<br>2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டம் ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.<br>**அல்லது**<br>தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு நிகரான தகைமை ஒன்றுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகைமை.<br>**மற்றும்**<br>தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட கூட்டு/ பட்டய அங்கத்துவம் அல்லது அதனை ஒத்த ஒரு தொழில்முறை தகைமை.<br>**அல்லது**<br>தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் ஒன்றுடன் முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 13 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம். அதில் 6 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் இருத்தல் வேண்டும்.<br>3) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டம் ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.<br>**அல்லது**<br>தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு நிகரான தகைமை ஒன்றுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகைமை.<br>**மற்றும்**<br>தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம்.<br>**மற்றும்**<br>தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட கூட்டு/ பட்டய அங்கத்துவம் அல்லது அதனை ஒத்த ஒரு தொழில்முறை தகைமை.<br>**அத்துடன்**<br>முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 11 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம். அதில் 5 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் இருத்தல் வேண்டும்.<br>4) அகில இலங்கை அரச சேவை ஒன்றில் தரம் I உத்தியோகத்தர் அல்லது தொடர்புடைய துறையில் அதனை ஒத்த அந்தஸ்து<br>**அத்துடன்**<br>தரம் I பதவியில் குறைந்தது 06 ஆண்டுகள் அனுபவம். |
| | | | **01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்திற்கு அமைய, தரம் PS - 4** |
| 2 | சிரேஷ்ட முறைமை பகுப்பாளர் | 01 | (கீழுள்ள 1 அல்லது 2)<br>1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டம் அல்லது தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றின் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.<br>**மற்றும்**<br>தொடர்புடைய துறையில் குறைந்தது 09 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.<br>2) அகில இலங்கை அரச சேவை வகுப்பு III/II இன் ஒரு உத்தியோகத்தர் அல்லது தொடர்புடைய துறையில் அதனை ஒத்த அந்தஸ்து.<br>**அத்துடன்**<br>வகுப்பு III/II பதவியில் குறைந்தது 11 ஆண்டுகள் அனுபவம். |
| 3 | திட்டக் கணக்காளர் | 01 | |
| | | | **01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்திற்கு அமைய, தரம் PS - 5** |
| 4 | சிரேஷ்ட கணிய அளவையாளர் | 01 | (கீழுள்ள 1 அல்லது 2 அல்லது 3)<br>1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டம்.<br>**அல்லது**<br>தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு நிகரான தகைமை ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகைமை.<br>**அல்லது**<br>தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட இணை அங்கத்துவம்/ அதனை ஒத்த தொழில்முறை தகைமை.<br>**அல்லது**<br>தொழில்நுட்ப துறைக்கு தொடர்புடைய பதவி ஒன்றுக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்கல்வி பயிற்சி நிறுவனம் ஒன்றின் மூலம் வழங்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமை அளவு 7 இற்குக் குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.<br>**மற்றும்**<br>தேவையான சிறப்புத் தன்மையில் குறைந்தது 06 ஆண்டுகள் அனுபவம்.<br>2) தொழில்நுட்ப துறைக்கு தொடர்புடைய பதவி ஒன்றுக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்கல்வி பயிற்சி நிறுவனம் ஒன்றின் மூலம் வழங்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமை அளவு 6 இற்குக் குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.<br>**மற்றும்**<br>தேவையான சிறப்புத் தன்மையில் குறைந்தது 11 ஆண்டுகள் அனுபவம்.<br>3) தொழில்நுட்ப துறைக்கு தொடர்புடைய பதவி ஒன்றுக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்கல்வி பயிற்சி நிறுவனம் ஒன்றின் மூலம் வழங்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமை அளவு 5 இற்குக் குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.<br>**மற்றும்**<br>தேவையான சிறப்புத் தன்மையில் குறைந்தது 16 ஆண்டுகள் அனுபவம் |
| | | | **01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்திற்கு அமைய, தரம் PS - 6** |
| 5 | உதவி சமூகவியலாளர் | 02 | (கீழுள்ள 1 அல்லது 2 அல்லது 3)<br>1) தொடர்புடை துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப் பட்டம்.<br>**அல்லது**<br>தொழில்நுட்ப துறைக்கு தொடர்புடைய பதவி ஒன்றுக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்கல்வி பயிற்சி நிறுவனம் ஒன்றின் மூலம் வழங்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமை அளவு 7 இற்குக் குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.<br>**அத்துடன்**<br>தேவையான சிறப்புத் தன்மையில் குறைந்தது 04 ஆண்டுகள் அனுபவம்.<br>2) தொழில்நுட்ப துறைக்கு தொடர்புடைய பதவி ஒன்றுக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்கல்வி பயிற்சி நிறுவனம் ஒன்றின் மூலம் வழங்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமை அளவு 6 இற்குக் குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.<br>**அத்துடன்**<br>தேவையான சிறப்புத் தன்மையில் குறைந்தது 09 ஆண்டுகள் அனுபவம்.<br>3) தொழில்நுட்ப துறைக்கு தொடர்புடைய பதவி ஒன்றுக்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்கல்வி பயிற்சி நிறுவனம் ஒன்றின் மூலம் வழங்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமை அளவு 5 இற்குக் குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.<br>**அத்துடன்**<br>தேவையான சிறப்புத் தன்மையில் குறைந்தது 14 ஆண்டுகள் அனுபவம். |

**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:**

2019.03.15 இன் 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் விதிகளின்படி ஊதியம் மற்றும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அமையும்.

**விண்ணப்பங்கள்:**

உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்களுடன் சேர்த்து கல்வி, தொழில்முறை தகைமைகள் மற்றும் அனுபவத்தை உள்ளடக்கிய தமது சுயவிபரக்கோவையை இந்த முகவரிகளுக்கு கிடைக்குமாறு 2021.04.19 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்புவதற்கு விண்ணப்பதாரர்கள் கோரப்படுகின்றனர்.

1. **PS – 3 இற்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி**
   செயலாளர்,
   நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
   17ஆவது மாடி, சுஹுருபாய, சுபுத்திபுர மாவத்தை, பத்தரமுல்லை.

2. **PS – 4, PS – 5, PS – 6 இற்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி**
   திட்டப் பணிப்பாளர்,
   கொழும்பு நகர மீளுருவாக்கல் திட்ட உதவி (AIIB)
   5ஆவது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும். அரச துறையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும் என்பதோடு விண்ணப்பங்கள் நேரத்திற்கு கிடைப்பதை உறுதி செய்வதற்காக முன்கூட்டிய பிரதி ஒன்றை அனுப்புவதற்கு அறிவுறுத்தப்படுகிறது. தேர்வுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**திட்ட பணிப்பாளர்,**
**கொழும்பு நகர மீளுருவாக்கல் திட்ட உதவி (AIIB),**
**5ஆவது மாடி, செத்சிறிபாய,**
**பத்தரமுல்லை.**

# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## பதவி வெற்றிடம்

### உதவி பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு (ஒப்பந்த அடிப்படையில்)

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் இணையதளத்தில் வெளியிடப்பட்ட வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

தயவுசெய்து பதவி வெற்றிடத்திற்கான, தகுதிகள், தொழில் பற்றிய விபரங்கள் மற்றும் ஏனைய தகவல்கள் பற்றிய மேலதிக தகவல்களை தெரிந்துக்கொள்ள **www.trc.gov.lk** எனும் எமது வலைத்தளத்தைப் பார்வையிடவும்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை**

பதவிக்கான ஆட்சேர்ப்பு அளவுகோலின் அடிப்படையில் விண்ணப்பதாரியின் திறன்களை மதிப்பிடுவதற்கான எழுத்து பரீட்சையின் பின்னர் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் பதவிக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகள் தேர்வு செய்யப்படுவார்கள். முதற்கட்ட தேர்வுக்குப் பின்னர், எழுத்து பரீட்சையில் தேர்தெடுக்கப்பட்டவர்கள் மட்டுமே அழைக்கப்படுவார்கள். எழுத்துப் பரீட்சையில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

**ஒப்பந்த காலம் :**

ஒரு வருடம்

**விண்ணப்பிக்கும் முறை :**

- விண்ணப்ப படிவத்தை www.trc.gov.lk எனும் வலைத்தளதிலிருந்து பதிவிறக்கம் செய்ய வேண்டும்.
- முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கல்வி / தொழில்முறை தகுதிகள் மற்றும் தொழில் அனுபவம் பற்றிய விபரங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பம் முழுமையாக பூர்த்தி செய்யப்படதாகவும், தெளிவாகவும் இருக்க வேண்டும் என்பதுடன் முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- அனைத்து விண்ணப்பங்களும் 2021.04.30 அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும் பணிப்பாளர் நாயகம் - இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல-276, எல்விடிகல மாவத்தை கொழும்பு 08. கோரப்படும் வெற்றிடத்தை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

**பொது நிபந்தனைகள் :**

1. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் குடிமகனாக இருக்க வேண்டும், மேலும் பதவியின் கடமைகளை சிறப்பாகச் செய்யவும், நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றும் உடல் மற்றும் மனரீதியான வலிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி திகதிக்குள் தேவையான தகுதிகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்கள் கணக்கில் கருதப்பட மாட்டார்கள்.
3. எந்த வகையிலும் செல்வாக்கு செலுத்துவது பதவிக்கு தேர்வுக்கு தகுதியற்றதாக கருதப்படும்.
4. தேர்வு செய்யப்பட வேண்டிய பதவிகளின் எண்ணிக்கை, தேர்வுக்கான காலதாமதம் மற்றும் நிராகரிப்பு குறித்த தீர்மானங்களை மேற்கொள்ளும் உரிமை இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கு (TRCSL) உண்டு.
5. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவானது ஒரு ஒழுங்குமுறை ஆணைக்குழு என்பதுடன் மற்றும் ஆணைக்குழுவின் பதவிகளுக்கு தேர்வு செய்யும் எந்தவொரு நபரையும் அவன் / அவள் துணை அல்லது குடும்ப உறுப்பினரை ஆணைக்குழுவின் ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஒரு நிறுவனத்தில் நியமிக்க நேரடியாக / மறைமுகமாக ஆதரிக்க / ஊக்குவிக்க கூடாது.
6. அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்ட சபை / நிறுவனத்தில் நிரந்தர பதவியிலிருக்கும் ஊழியர்கள் தங்கள் விண்ணப்பங்களை பணிபுரியும் அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலமாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரர் தேர்வு செய்யப்படும் பட்சத்தில் அவரை பதவியிலிருந்து விடுப்பதற்கான சம்மதத்தை தெரிவிக்க வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
இல.276, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 08.

லங்கா சதொச

LANKA SATHOSA

# தேசத்திற்கு விலை நிர்ணயிப்பவர்

வர்த்தக அமைச்சு

## விண்ணப்பங்களைக் கோருதல்

### லங்கா சதொச லிமிட்டடுக்கு ஷொப்பிங் உறைகளை (Shopping Bag) வழங்குதல்

லங்கா சதொச லிமிட்டடுக்கு 06 மாத காலத்திற்கு ஷொப்பிங் உறைகளை வழங்குவதற்காக உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து லங்கா சதொச லிமிட் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்புகள்: விலைமனு ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளவாறு

தேவைப்பாடுகள்:

| இல. | பொருள் விபரங்கள் | அளவு | அனுமதிக்கப்பட்ட உச்ச நிறை | எண்ணிக்கை | கனவளவு (கேஜ்) | உற்பத்திப் பொருள் | அச்சடிக்கப்பட்டவை / அச்சடிக்கப்படாதவை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஷொப்பிங் உறை (ஷொப்பிங் பேக்) - பெரியவை | (13" + 6" x 21") | கிலோ 10 | 28,000,000 | 33 மைக்ரோன் அல்லது அதற்கு மேற்பட்டது (132 GSM) | குறைந்த கனவளவுள்ள பொலித்தீன் (LDPE) | அச்சடிக்கப்படாதவை |
| 2 | ஷொப்பிங் உறை (ஷொப்பிங் பேக்) – மத்திம அளவு | (10" + 5" x 18") | கிலோ 05 | 47,000,000 | 33 மைக்ரோன் அல்லது அதற்கு மேற்பட்டது (132 GSM) | குறைந்த கனவளவுள்ள பொலித்தீன் (LDPE) | அச்சடிக்கப்படாதவை |
| 3 | ஷொப்பிங் உறை (ஷொப்பிங் பேக்) – சிறியவை | (9" x 12") | கிலோ 02 | 36,000,000 | 28 மைக்ரோன் அல்லது அதற்கு மேற்பட்டது (120 GSM) | குறைந்த கனவளவுள்ள பொலித்தீன் (LDPE) | அச்சடிக்கப்படாதவை |

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களினால் அதிகாரம் வழங்கப்பட்ட கடிதத்தைச் சமர்ப்பிப்பதன் பேரில் குறித்த விலைமனு ஆவணங்களை 5000.00 ரூபா தொகையைச் (மீளளிக்கப்படாதது) செலுத்தி 2021 ஏப்ரல் 12ஆம் திகதி முதல் 2021 மே 05ஆம் திகதி வரையான காலத்தினுள் கொழும்பு-02, இல. 27, வொக்ஷோல் வீதி, சதொச பொதுச் செயலகக் கட்டிடத்தில் அமைந்துள்ள லங்கா சதொச தலைமை அலுவலகத்தின் கொள்வனவுப் பிரிவில் (3ஆம் மாடி) பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2021 ஏப்ரல் 21ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இடம்பெறும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை 2021 மே மாதம் 05ஆம் திகதி பி.ப. 01.00 மணி அல்லது அதற்கு முன் லங்கா சதொச லிமிட், இல. 27, சதொச செயலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு-02 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும், அல்லது அந்த முகவரியின் கொள்வனவுப் பிரிவில் (3ஆம் மாடி) வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "லங்கா சதொச லிமிட்டிற்கு ஷொப்பிங் உறைகளை (ஷொப்பிங் பேக்) வழங்குதல்" எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

சகல விலைமனுதாரரினாலும் 2% தொகை விலைக்கோரல் பிணை முறி (மீளளிக்கப்படும்) விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2021 மே 05 ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிவடைந்தவுடன் விலைமனுதாரர்களின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். வெற்றிகரமான விலைமனுதாரரினால் (பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் தவிர) பதிவுக் கட்டணமாக 5,000.00 ரூபா மற்றும் 8% வெட் தொகையை (மீளளிக்கப்படாதது) செலுத்துதல் வேண்டும் என்பதுடன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 10% பணத் தொகை செயலாற்றுகை பிணையாக (மீளளிக்கப்படும்) செலுத்துதல் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு பின்வரும் உத்தியோகத்தரைத் தொடர்பு கொள்ளவும்.
முகாமையாளர் கொள்வனவு (லசவி) 0703611524

கேள்வியை / ஒப்பந்தத்தை கையளிப்பதற்கான இறுதித் தீர்மானத்தை, லங்கா சதொச லிமிட் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

லங்கா சதொச லிமிடட்
இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

# இலங்கைப் பாராளுமன்றம்

## வெற்றிடங்கள்

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் நிலவும் கீழ்காணும் பதவிகளுக்கு சிறந்த உடலாரோக்கியமும் மற்றும் நல்லொழுக்கமும் உடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. உதவி நூலகர்**

**2. உணவுபான உதவியாளர்**

விண்ணப்பங்களை கோருவதற்கான இந்த அறிவித்தல் **2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதிய** வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அந்த வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள குறித்த மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் **2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு** முன்னர் **"பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே"** எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடிய வகையில் பதிவு தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பம் தாங்கிவரும் உரிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும். இந்த அறிவித்தல் விபரங்களை www.parliament.lk எனும் இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

**பாராளுமன்ற செயலாளர் நாயகம்**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே**
**2021 ஏப்ரல் 11**

---

## வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

# தொழில் வாய்ப்புகள்

வ/ப லங்கா மின்சார (தனியார்) நிறுவனமானது நீர்கொழும்பிலிருந்து காலி வரையிலான கடலோர வழியில் அதனது ஏழு கிளைகளினூடாக 500,000 பாவனையாளர்களுக்கு மின்சாரத்தை விநியோகம் செய்கின்ற அமைப்பாகும். 1500 ஊழியர்கள் பணியாற்றும் நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கு தகுதிவாய்ந்த நபர்களைத் தேடுகின்றனர்.

1. பகுப்பாய்வு நிரலாக்கவியலாளர் **(Analyst Programmer)**

| | |
|---|---|
| கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் | இயைபுடைய துறையில் ஒரு (01) வருட அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட தேசிய பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட தகவல் தொழில்நுட்பம் அல்லது கணனி விஞ்ஞானப் பட்டம் **அல்லது** இயைபுடைய துறையில் இரண்டு (02) வருட அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட தேசிய பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட கணிதம் அல்லது பௌதிகவியல் பட்டம் |
| தொழில் அறிவு | வியாபார செயற்பாடுகளின் திடமான பகுப்பாய்வு சகிதம் ஜாவா, .Net மற்றும் C. நிரலாக்கல் அறிவு (Programming knowledge) |
| ஏனைய தேவைப்பாடுகள் | பயனுள்ள தொடர்பாடல் திறன் (பேசுதல் மற்றும் எழுதுதல் இரண்டிலும்). திடமான தலைமைத்துவம் மற்றும் குழுவாக வேலை செய்யும் ஆற்றல் |
| வயது | 45 வயதிற்குட்பட்டவர்கள் |

தெரிவு செய்யப்படும் அபேட்சர்களுக்கு ஒரு பரந்த அளவிலான சலுகைகளுடன் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

உங்கள் சுயதரவு, சான்றிதழ்களின் பிரதிகள் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பிலக்கங்களை 2021 ஏப்ரல் 19ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் நபருக்குக் கிடைக்கும் வகையில் தயவு செய்து அனுப்பவும்.

தபாலுறையின் இடது பக்க மேல் பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்**
**வ/ப இலங்கை மின்சார தனியார் நிறுவனம்,**
**1ஆம் மாடி, ஈ.எச். குரே கட்டிடம்.**
**411, காலி வீதி, கொழும்பு-03.**

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

---

# பதவி வெற்றிடங்கள்

## அனர்த்த முகாமைத்துவ நிலையம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கீழ்க்காணும் பதவிகளுக்கு காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. பணிப்பாளர் (மனிதவளம் மற்றும் நிர்வாகம்) HM-1-1- பதவி 01

**தகைமைகள்**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் அரச நிர்வாகம், அரச முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், வியாபார முகாமைத்துவம் அல்லது முகாமைத்துவம், வர்த்தகம் பற்றிய பட்டத்தைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**
மேற்படி பாடத்துறையில் பட்டப்பின் படிப்பு பட்டம் (Masters) பெற்றிருத்தல் அல்லது பதவியுடன் சம்பந்தப்பட்ட பாடத்துறையுடன் பொருந்தும் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தில் கிட்டிய அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

**மற்றும்**
அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நிதிகள் நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் 'முகாமைத்துவ மட்டத்திலான' பதவியொன்றில் குறைந்தபட்சம் குறித்த துறையில் பதினைந்து வருட (15) அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

### 02. பணிப்பாளர் (நிதி) HM-1-1- 01 பதவி

**தகைமைகள்**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி, நிதி முகாமைத்துவம், வணிகம், கணக்கியல் வியாபார முகாமைத்துவம். வியாபார நிர்வாகம், முகாமைத்துவம், பற்றிய பட்டத்தைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**
மேற்படி பாடத்துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் (Masters) பெற்றிருத்தல் அல்லது பதவியுடன் சம்பந்தப்பட்ட பாடத்துறையுடன் பொருந்தும் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தில் கிட்டிய அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

**மற்றும்**
அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் 'முகாமைத்துவ மட்டத்தில்' பதவியொன்றில் குறைந்தபட்சம் குறித்த துறையில் பதிணைந்து வருட (15) அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**அல்லது**
பதவியுடன் சம்பந்தப்பட்ட பாடத்துறையுடன் பொருந்தக் கூடிய அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றில் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**
அரசு, அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் 'முகாமைத்துவ மட்டத்தில்' பதவியொன்றில் குறைந்தபட்சம் குறித்த துறையில் பதினைந்து வருட (15) அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

### 01 மற்றும் 02 பதவிகளுக்கு உள்ளக விண்ணப்பதாரிகளை சேர்த்துக் கொள்ளும் தகைமைகள்

அந்தந்த பதவியுடன் சம்பந்தப்பட்ட வெளி விண்ணப்பதாரிகளுக்கான கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் முகாமைத்துவ சேவை வகையில் முதலாம் தரத்திலான பதவியொன்றில் 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல்.

**சம்பள முறை:**
HM-1-1 - 2016 ரூ. 81,670 - 15x2,270 - 115,720.00

**வயது:**
35 வயதிற்கு குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் 1 மற்றும் 2 பதவியுடன் சம்பந்தப்படும் ஏனைய வசதிகள் பதவியுடன் சம்பந்தப்பட்ட 2015.05.25ம் திகதிய அரச வியாபார திணைக்கள சுற்று நிருப இல. PED 01/2015 இன் படி போக்குவரத்து வசதிகள் மற்றும் 2015.05.25ம் திகதிய இல. PE D02/2015 இன் படி தொலைபேசி விலைப்பட்டியல் செலுத்தப்படும்.

### 03. உதவிப் பணிப்பாளர் (குறைத்தல்) - MM-1-1- 01 பதவி

**தகைமைகள்**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் அல்லது புவி பொறியியல்/புவியியல் (விசேட) பட்டம் அல்லது பௌதீக விஞ்ஞானத் துறையில் விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல்

**அல்லது**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் அல்லது புவி பொறியியல்/ புவிச்சரிதவியல் (விசேடம்) பட்டம் அல்லது பௌதிக விஞ்ஞான சாதாரண பட்டத்துடன் துறையுடன் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் படிப்பு பட்டத்தைப் பெற்றிருத்தல்.

பதவியுடன் சம்பந்தப்பட்ட பாடத்துறையில் 03 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள முறை:**
MM 1-1-2016 ரூ. (53,175 - 10x1375 - 15x1910 - 95,575)

**வயது:**
22 வயதிற்குக் குறையாத 45 வருடத்திற்கு மேற்படாது இருத்தல்

### 04. உதவிப் பணிப்பாளர் (ஆய்வு மற்றும் அபிவிருத்தி) MM 1-1- 01 பதவி

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாய விஞ்ஞானம் அல்லது புவியியல் அல்லது புவிச்சரிதவியல் அல்லது சிவில் பொறியியல் அல்லது தொலைத்தொடர்பு பொறியியல் அல்லது தகவல் தொழில்நுட்பவியல் அல்லது சமூக விஞ்ஞானம் அல்லது இயற்கையியல் ஆகிய பாடத்துறையுடன் சம்பந்தப்பட்ட பட்டத்தைப் பெற்றிருத்தல்
**மற்றும்**

மேற்படி எந்த பட்டதாரிப் பாடநெறியுடனும் புவித் தகவல் விஞ்ஞானம் (GIS) மற்றும் தூரநோக்கு (Remote Sensing) பாடமாக பயின்றிருத்தல் வேண்டும். இல்லையெனில் மேற்படி பட்டதாரி பாடநெறியுடன் புவி தகவல் விஞ்ஞானம் (GIS) மற்றும் தூர நோக்கு (Remote Sensing) துறையில் ஒரு வருட அனுபவத்துடன் மூன்று வருட அனுபவம் இருத்தல்.

### 03 மற்றும் 04 பதவிகளுக்கு உள்ளக விண்ணப்பதாரிகளை சேர்த்துக் கொள்ளும் தகைமை

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகையில் முதலாம் தரத்தில் குறித்த துறையிலான பதவியில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள முறை:**
MM -1-1-2016 - ரூ. (53,175 - 10x1375 - 15x1910 - 95,575)

**வயது:**
22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும்

### 05. நூலகர் - MA3 - 01 பதவி

**தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நூலக விஞ்ஞான பாடத்துடன் பெற்றுக் கொண்ட பட்டம்

**அல்லது**
நூலக விஞ்ஞானம் பற்றிய NVQ -05 தரத்திற்கு குறையாத மட்டத்தில் திறன் சான்றிதழுடன் டிப்ளோமாவுடன் 05 வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பள முறை:**
MA 3-2016 ரூ. (32,200 - 10x445 - 11x660 - 10x730 - 5x750 - 54,960

**வயது:**
22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும்

### 06. தொலைத்தொடர்பு தொழில்நுட்பக் கலைஞர் MA -2-1 01 பதவி

**தகைமைகள்**
மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்சார் பயிற்சி நிறுவனமொன்றில் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப கலைஞர் பதவியுடன் சம்பந்தப்பட்ட பாடத் துறையிலிருந்து விநியோகிக்கப்படும் தேசிய தொழில்சார் திறமை (NVQ) ஐந்து (05ஆம் தரத்திற்கு குறையாத தரத்தில் திறன் சான்றிதழை பெற்றிருத்தல்.

**சம்பள முறை:**
MA 2-1-2016 ரூ. 30,310 - 10x300 - 7x350 - 4x495 - 20x660 - 50,940

**வயது:**
18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சேவையின் தேவையைப் பொருத்து பகல்/இரவு சேவை செய்யக் கூடியவர்கள் விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

**நியமனத்தின் தன்மை:**
நிரந்தரமானது, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உரித்துரிமையுடையது.

**வயது:**
உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு இங்கு குறிப்பிடப்படும் கூடிய வயதெல்லை பொருந்தாது

### சகல விண்ணப்தாரிகளும்

(அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல்
(ஆ) பதவிக்கு ஒப்படைக்கப்படும் செயற்பாடுகளை முறையாக நிறைவேற்றுவது போலவே நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு தேவையான உடல் உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
(இ) சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

### விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முறை:-

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2021.04.30ம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன் கிடைக்குமாறு 'பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், வித்யா மாவத்தை, கொழும்பு -07' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'விண்ணப்பிக்கும் பதவியை' தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரியிடம் உள்ள சகல கல்விச் சான்றிதழ்கள், தொழில் சான்றிதழ்கள், சேவை சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை போன்ற பிரதிகளை தம்மாலேயே உண்மைப் பிரதி என உறுதி செய்து அனுப்புதல் கட்டாயமாகும். தபாலில் காணாமல் போகும் அல்லது தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் பற்றி இந்நிலையத்தினால் பொறுப்புக் கூறப்பட மாட்டாது.

தற்போது அரச சேவையில் / மாகாண அரச சேவையில் அல்லது அரச துறையில் ஈடுபட்டு இருப்பினும் தமது விண்ணப்பத்தை நிறுவனத் தலைமையூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் அவ்வாறல்லாத மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியின் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பதவிக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளுடன் மற்றும் நிறுவனத்தினால் குறுகிய பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் குறித்த நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

### பிழையான தகவல்களுக்கு தண்டனை

விண்ணப்பத்தை நிரப்பும் போது மிகவும் கவனமாக உண்மையான தகவல்களை வழங்குதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படும் தகவல் ஒன்று அவர் குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்பு எந்த வேளையிலாவது உண்மையற்றது எனத் தெரியவரின் அவர் அப்பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு ஏதுவாகும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**அனர்த்த முகாமைத்துவ நிலையம்.**

---

### அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின்

.......................................................................

## பதவிக்கான விண்ணப்பப்படிவம்

**(அலுவலக உபயோகத்திற்கு)**

1.1 விண்ணப்பதாரரின் பெயர் முதலெழுத்துக்களுடன்:..................................
(ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்)

1.2 முழுப் பெயர்: ..............................................................................
..............................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

1.3 முழுப்பெயர்: ..............................................................................
..............................................................................
(சிங்களத்தில்/தமிழில்)

2.0 தேசிய அடையாள அட்டை இல.

3.1 நிரந்தர முகவரி:..............................................................................
..............................................................................
(சிங்களத்தில்/தமிழில்)

4.0 தொலைபேசி இலக்கம்:..............................................................................
மின் அஞ்சல் முகவரி இருப்பின் ..............................................................................

5.0 நீங்கள் இலங்கை பிரஜையானது பரம்பரையாலா, பதிவு செய்ததன் மூலமா?
..............................................................................

6.0 திருமணமானவரா/திருமணமாகாதவரா:..............................................................................

7.0 பிறந்த திகதி: ஆண்டு மாதம் திகதி

8.0 விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதியன்று வயது:
வருடங்கள் மாதங்கள் நாட்கள்

9.0 கல்வித் தகைமை:
..............................................................................
..............................................................................

10.0 பட்டப்படிப்பு:..
..............................................................................
..............................................................................

11.0 அனுபவம்:
..............................................................................
..............................................................................

12.0 முன்னைய தொழில் தொடர்பான விபரங்கள்

| நிறுவனம் | பதவி | சேவை புரிந்த காலம் | சேவையிலிருந்து விலகிய காலம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

13.0 நீர் ஏதேனும் குற்றத்திற்கு நீதிமன்றத்தினால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீரா, (குறிப்பிட்ட கூட்டில் ✓ குறியீட்டை இடவும்) ஆமெனில் விபரிக்கவும்.)

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

14.0 விண்ணப்பதாரரின் சான்றிதழ்

(அ) இந்த விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் சரியானவை என்றும் உண்மையானவை என்றும் இங்கு அனைத்து விடயங்களும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கின்றேன்.

திகதி:.... ..............................................
**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (அரச சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி .............................. ................................ நிறுவனத்தில்/ அலுவலகத்தில் .................................... ................ஆந் திகதி தொடக்கம்............................................... ஆக (பதவி நிரந்தரமாக/ தற்காலிகமாக/அமைய அடிப்படையில் (தேவையற்ற சொற்கள் மேல் கீறிடவும்) பணியாற்றுகின்றார் எனவும் அவரது சேவை திருப்திகரமானது என்றும் இந்த நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய நியமனமொன்றுக்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்றும் தெரிவிப்பதுடன் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி:........................ ...............................................
**திணைக்களத் தலைவரின் கையொப்பமும் இலச்சினையும்**

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர்:..................................
பதவி:..............................................................................
முகவரி:..............................................................................

## குறுக்கெழுத்துப் போட்டி இல : 317

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | ■ | 04 | 05 |
| 06 | ■ | 07 | 08 | ■ | 09 |
| 10 | 11 | ■ | 12 | 13 | 14 |
| ■ | 15 | 16 | ■ | ■ | ■ |
| 17 | ■ | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | ■ | ■ | 25 |

பெயர் ..........................................
வகுப்பு ..........................................
பாடசாலை பெயர் ..........................................
பாடசாலை முகவரி ..........................................
..........................................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) நீர்ப் போக்குவரத்து சாதனம்.
(4) தன்மை, ஒருமை பெயர்ச் சொல்.
(7) மயிலின் சிறகுக்கு இவ்வாறான சிறப்புப் பெயர் உண்டு. (தலைகீழான சொல்)
(10) தென்னிலங்கை மாவட்டங்களில் ஒன்று. (தலைகீழான சொல்)
(12) இது கவிஞனால் வடிக்கப்படுவது. இசையும் சேர்ந்தால் காதுக்கு இனிமை. (தலைகீழான சொல்)
(15) எமது பயன் தரும் பயிர்களுக்குள் வளரும் தேவையற்ற இச்செடிகளை பிடுங்கி வீச வேண்டும். ( தலைகீழான சொல்)
(18) இருளை அகற்றி வெளிச்சம் தருவது.
(22) பெற்றோருக்கு இவன் புதல்வன்.

**மேலிருந்து கீழ்**

(1) சுவரில் ஓடித் திரிகின்ற ஊர்வன இனம்.
(3) சிங்கத்தின் வசிப்பிடம்.
(5) யானை பெரிய மிருகமானாலும் இவனுக்கு கட்டுப்பட்டு விடும். (தலைகீழான சொல்)
(8) பெண்களின் காதணி.
(11) மாடுகளில் இது ஆண் இனம்.
(16) அழகு, வனப்பு என்றெல்லாம் கூறக் கூடிய சொல்.
(17) மலையகத்தில் இதனைக் காணலாம். (தலைகீழான சொல்)
(21) வாழை, திராட்சை போன்றவற்றின் காய்த் தொகுதி.

**போட்டி இல. 317**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834.**
**கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 316
### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. மாலை 03. அவணி 06. சுக்கான் 12. வளை
14. அரி 16. காகம் 23. அச்சாணி

**மேலிருந்து கீழ்**

1. மான் 02. அதிகாலை 03. அசுவம் 05. கனி
13. களை 14. கோடரி 18. அக்கா 20. ஏணி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 315
### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**சி. பவதாரணி,**
தரம் 09 சி,
ஊவா விஞ்ஞான கல்லூரி, ஹாலி எல.

**இரண்டாம் பரிசு**
**ஆர். அக் ஷயா,**
தரம் 09, மாத்தளை பாக்கியம் தேசியக்கல்லூரி,
தர்மபால மாவத்தை,மாத்தளை.

**மூன்றாம் பரிசு**
**மு.இ. அஹமத் அரீஜ்,**
தரம் 09,
மட்/மம/வாழைச்சேனை அன்னூர் தேசிய பாடசாலை,
வாழைச்சேனை.

### பாராட்டு பெறுவோர்


1. **நா. அம்சாயினி,**
தரம் 12 பி, தி/ஸ்ரீ சண்முகா வித்தியாலயம்,
திருகோணமலை.

2. **ஹம்தா அஜ்வத்,**
தரம் 11'ஏ', க/கலுகமுவ மத்திய கல்லூரி,
கெலி ஓயா.

3. **எஸ. சவிலக் ஷனா,**
தரம் 09 'ஏ',
பது/தமிழ் மகளிர் மகா வித்தியாலயம்,
பதுளை.

4. **ஸீனத் தஹானி ஸாட்,**
தரம் 09 'பி', பதியுதீன் மகளிர் கல்லூரி,
டி.எஸ். சேனநாயக்க வீதி,
கண்டி.

5. **ரவீந்திரன் சபரீசன்,**
தரம் 04,
மட்/பட்/குருமண்வெளி கனிஷ்ட வித்தியாலயம்,
களுவாஞ்சிக்குடி.




குறளமுதம் :

**அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி.**

***தெளிவுரை :*** *வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும்; அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப் பொருளைத் தனக்குப் பிற் காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.*

## தேங்காய்..!



ஓங்கி வளரும் தென்னை
ஊற்றும் அதிக நீரை
வாங்கி வளரும் தென்னை
வழங்கும் நமக்குத் தேங்காய்!
மட்டை நீக்கி விட்டால்
கெட்டியான இளநீர்
சொட்டும் நல்ல இனிமை
கிட்டும் நமக்குத்தேங்காய்!
ஒட்டியுள்ள நாரை
ஒன்று சேர்த்துத் திரிந்தால்
கட்டுகின்ற கயிறாய்
கைகொடுக்கும் நமக்கு!
ஓடு மூடினாலும்
உள்ளிருக்கும் தண்ணீர்
கூடு போன்ற காயைக்
குலுக்கும் போதும் தெரியும்!
குடுமி வைத்த தேங்காய்
கொழுப்புச் சத்தும் இருக்கும்
உடைக்கும் போது சிரிக்கும்
கிடைக்கும் எந்த நாளும்..!

**ஹிதாயா பாரிஸ்,**
மள்வானை.



## கண்டல் தாவரங்கள்

இலங்கை கரையோரங்களில் சமூக பொருளாதார ரீதியில் முக்கிய அம்சமாக கண்டல் தாவரங்கள் காணப்படுகின்றன. இவை சிறிய புதர்களில் இருந்து பெரிய மரங்கள் வரை வளர்கின்றன. கண்டல் என்ற சொல் களப்புக்களின் கரைகள், பொங்கு முகங்கள், வாவிகள் போன்றவற்றின் அலையடிப்பு பிரதேசங்களுக்கு இடையில் வளரும் வைரம் செறிந்ததும் வித்துக்களின் மிகவும் செறிந்த இசைவாக்கம் கொண்டதுமான தாவர இனங்களைக் குறிக்கிறது.

ஆதிகாலத்தில் இருந்து மனிதன் இந்த சூழல் தொகுதிக்கு தீங்கு விளைவிக்காமல் நிறைய நன்மைகளைப்பெற்று வந்தான். ஆனால் நவீன கால மனிதன் பல்வேறு தீமைகளை இச்சூழல் தொகுதிக்கு செய்து அதன் மூலம் நன்மைகளைப்பெற்று வருகிறான். உணவு மற்றும் உபகரண உற்பத்திகள் ஆக்ரோஸ்ரிக்கத்தின் இளந்தளிர்கள் உணவுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய கண்டல் தாவரங்களின் தளிர்கள் பெருமளவில் கரையோர மக்களால் உணவுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் கண்டல் மரங்கள் கட்டடப் பணிகளுக்கும் கம்பாகவும் றைசோபோறா, புறுகைறா, அபிசினியா போன்றவற்றில் இருந்து பெறப்படும். வெட்டுமரங்கள் படகு கட்டவும் மீன்பிடி உபகரணங்கள் செய்யவும் பயன்படுகின்றன.

உவர் நீரில் மட்டுமன்றி நன்னீரிலும் வளரக்கூடியதாக இருக்கும் இந்த கண்டல் தாவரங்கள் இலங்கையின் கம்பஹா, யாழ்ப்பாணம், திருகோணமலை, புத்தளம், மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன.

கண்டல் தாவரங்கள் சூழலை மாசுபடுத்தும் காரணிகளை உறிஞ்சும் தன்மை உடையதாக காணப்படுகிறது. இதனால் வாவிகளின் மாசுபடலைக் குறைக்கின்றது. கண்டல் காடுகளில் இருக்கும் பறவை, விலங்குகளை இரசித்து பொழுது போக்கும் இடமாகவும் காணப்படுகிறது. அத்துடன் பெருமளவான உல்லாசப் பயணிகளை கவரும் இடமாகவும் பெருமளவில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் காணப்படுகிறது. அத்துடன் உள்நாட்டுப் பறவைகள் விலங்குகள் வெளிநாட்டுப்பறவைகள் விலங்குகளின் புகலிடமாகவும் தொழிற்படுகிறது. இவை உயிரினப் பல்வகமையைப் பேணுவதில் முக்கியத்துவம் பெறுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் அண்ணளவாக 8800 ஹெக்டயர் நிலப்பரப்பில் கண்டல் தாவரங்கள் வளர்ந்து காணப்படுகின்றன. கண்டல் தாவரங்கள் வளிமண்டலத்தில் உள்ள கரியமில வாயுவின் அளவைக் குறைப்பதிலும் மற்றும் சூழலில் அதன் தாக்கத்தைக் குறைப்பதிலும் பாரிய செல்வாக்குச் செலுத்தும் ஒரு தாவர இனமாகும். கண்டல் காடுகள் பல்வேறு வழிகளிலும் மக்களுக்கும் இயற்கைக்கும் உதவுகின்றது. கண்டல் காடுகளை அண்டிய பகுதிகளில் அதிகளாவன மீன் இனங்கள் நண்டு மற்றும் இறால் போன்றவையும் வாழ்கின்றன. இவை அப்பிரதேச மக்களின் வாழ்வாதாரமாக விளங்குவதுடன் கண்டல் தாவரங்களை அண்டி வாழும் மீனினங்கள் பவளப்பாறைகளை உருவாக்கும் செயற்பாட்டிலும் ஈடுபடுவதால் கண்டல் காடுகள் சமூகத்திற்கும் நாட்டிற்கும் மிகப்பெரிய நன்மையாக விளங்குகின்றது.

கண்டல் தாவரங்கள் சூழல் மற்றும் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகக் காணப்படுவதால் அதனைப் பல்வேறுபட்ட அழிவுகளிலிருந்து பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் தலையாய பொறுப்பாகும். இது பற்றி மக்கள் தெளிவு பெறுவதன் மூலமாக இயற்கை பொக்கிஷங்களையும் அழகாகப் பாதுகாத்துக் கொள்ள முடியும். சதுப்பு நில மரங்களை சுத்தம் செய்து பாதுகாத்து பயன்பெற வேண்டும். கண்டல் சூழற்றொகுதி அரிய புத்தகங்கள் நிறைந்த நூலகம் போன்றது. இதனை நாம் பாதுகாத்து எமது சந்ததிகளுக்குக் கொடுப்பது எமது தலையாய கடமைகளில் ஒன்றாகும்.

**என். வினோ மதிவதனி,**
லுணுகலை.









படங்கள்: செ.தி.பெருமாள்

நுவரெலியா கால்டன் பாலர் பாடசாலையில் நடைபெற்ற புதுவருட கொண்டாட்ட நிகழ்வில் பிரதமரின் பாரியார் சிராந்தி ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்துகொண்டார். பாடசாலை சிறுவர்களின் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. விளையாட்டு போட்டிகளில் பங்குபற்றிய சிறுவர்களுக்கு திருமதி சிராந்தி ராஜபக்ஷ மற்றும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பரிசில்களை வழங்கினர். இந்நிகழ்வில் நுவரெலியா மாநகர முதல்வர் சந்தனலால் கருணாரட்ன, மாநகரசபை உறுப்பினர்கள், நுவரெலியா பொலிஸ் உயரதிகாரிகளும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

**மாணவர் கழக அங்கத்துவ இல : 434**



**ஆர். மதுஷிகா,**
தரம் 10,
கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.

**மாணவர் கழக அங்கத்துவ இல : 435**



**ஜி. கிஷோன்,**
தரம் 10,
கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.

## மாணவர் கழக அனுமதி

மாணவர் பெயர் ..........................................
பிறந்த திகதி ..........................................
வகுப்பு ..........................................
பாடசாலை ..........................................
..........................................

..........................................
வகுப்பாசிரியர் கையொப்பம்

**வர்ணப் புகைப்படம்**

**மாணவர் கழகம்**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834 கொழும்பு.**

## இவ்வார சிறுமி



**ஷாபிலா,**
முகம்மட் பைசல் - பாத்திமா மர்யம்,
காலி.

## சிறுவர் சித்திரங்கள்




**ராஜேந்திரன் அம்ரிதா,**
தரம் 04,
கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி,
கொழும்பு 04.



**ரவீந்திரன் சபரீசன்,**
மட்/பட்/ குருமண்வெளி கனிஷ்ட வித்தியாலயம்,
குருமண்வெளி.



**ஆர். பிரசாந்தன்,**
தரம் 10,
கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
கம்மடுவ,மாத்தளை.



**A. டனுஷன்,**
தரம் 10,
கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
கம்மடுவ, மாத்தளை.



**சி. டிலக் ஷன்,**
தரம் 10,
கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
கம்மடுவ, மாத்தளை.







# ஐ.பி.எல். ரி-20: அணிகளின் பலம் பலவீனம்

ஜெயரூபா ஸ்ரீ

உலகெங்கிலும் உள்ள பல கோடி கிரிக்கெட் இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஐ.பி.எல். ரி20 லீக் தொடர், பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஆர்பமானது.

ஐ.பி.எல். ரி-20 லீக் தொடரின் 14ஆவது அத்தியாயம், நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி எதிர்வரும் மே 30ஆம் திகதி வரை இரசிகர்களை கொண்டாட வைக்கவுள்ளது.

முதலாவதாக கிங்ஸ் லெவன் பஞ்சாப் என்ற பெயரை 'பஞ்சாப் கிங்ஸ்' என்று மாற்றிக் கொண்டு புத்துணர்ச்சியுடனும், வலுவான வீரர்கள் வரிசையுடனும் களமிறங்கியுள்ள அணி குறித்த பார்வை இது.

டெத் பௌலிங், நடுத்தர வரிசை துடுப்பாட்டத்தால் கடந்த காலங்களில் தள்ளாட்டத்தை எதிர்கொண்ட பஞ்சாப் அணி, இதுவரை ஐ.பி.எல். தொடரில் சம்பியன் பட்டத்தை வெல்லாத மூன்று அணிகளில் ஒன்றாக திகழ்கின்றது.

கடந்த சீசனை 6ஆவது இடத்துடன் நிறைவு செய்த பஞ்சாப் கிங்ஸ் அணி, முதலில் சற்று தடுமாறினாலும் பின்னர் தொடர்ந்து 5 வெற்றிகளை பதிவு செய்து முன்னேறி வந்தபோதும் குறுகிய இடைவெளியில் பிளேஓஃப் வாய்ப்பை தவறவிட்டது.

இம்முறை கடந்த சீசனில் ஒரஞ்சு தொப்பியை தன் வசமாக்கியிருந்த அணித் தலைவர் லோகேஷ் ராகுல், இம்முறை அணியை கடந்த கால அனுபவத்துடன் சிறந்தமுறையில் வழிநடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மயங்க் அகர்வால், கிறிஸ் கெய்ல், நிகோலஸ் பூரன் என முதல் நான்கு இடங்கள் வலுவாக உள்ளது. மேக்ஸ்வெல் இல்லாத இடத்தை மொய்சஸ் ஹென்ரிக்ஸ், தமிழகத்தின் புதிய வீரர் ஷாருக் கான் ஆகியோர் நிரப்ப முயற்சி செய்வர். அத்துடன் தீபக் ஹூடா, பெபியன் ஆலன் ஆகியோரும் வலு சேர்க்கின்றனர்.

பந்துவீச்சில், மொஹமட் ஷமி, ஜை ரிச்சர்ட்சன், மெரிடித், கிறிஸ் ஜோர்தான் உள்ளிட்டோர் ஆதிக்கம் செலுத்துவர்.

தரமான சுழற்பந்துவீச்சாளர்கள் இல்லாதது பஞ்சாப்புக்கு குறையாக இருக்கிறது. கடந்த சீசனில் சோபிக்காமல் போன கிருஷ்ணப்பா கௌதமை விடுவித்துவிட்டதால், முருகன் அஸ்வின், ரவி பிஷ்னோய் ஆகியோரைக் கொண்டு சுழற்பந்துவீச்சை சரி செய்ய பார்கிறது பஞ்சாப்.

நடப்பு தொடரின் முதல் லீக் போட்டியில் எதிர்வரும் 12ஆம் திகதி ராஜஸ்தான் றோயல்ஸை மும்பையில் எதிர்கொள்கிறது பஞ்சாப் அணி.

அடுத்ததாக இருமுறை சம்பியனான கொல்கத்தா நைட் ரைடரஸ் அணி குறித்து பார்க்கலாம்.

கௌதம் கம்பீர் சென்ற பிறகு தன்னை நிலையான ஒரு அணியாக மாற்றியமைத்துக் கொள்ளும் முயற்சியில் தீவிரம் காட்டும் கொல்கத்தா நைட் ரைடரஸ் அணி, இம்முறை சாதிக்கும் ஆர்வத்தில் உள்ளது.

கடந்த சீசனில் டொப் ஆர்டர் முதல் கடைசி துடுப்பாட்ட வீரர் வரை நிலையான வரிசையை நிர்ணயிக்க அந்த அணியால் இயலவில்லை. பாதியில் அணித்தலைமை மாறியும் அதற்குப் பலனில்லை.

ஆந்ரே ரஸ்ஸெல், சுனில் நரைன் ஆகியோர் சிறந்த நிலையில் இல்லாததும் அணிக்கு பாதிப்பை ஏற்படுத்தியது.

கடந்த சீசனில் தொடர்ந்து 2ஆவது முறையாக பிளேஓஃப் வாய்ப்பை தவறவிட்ட கொல்கத்தா அணிக்கு ஓய்ன் மோர்கன், முழுநேர தலைவராக மாறியிருப்பது அணிக்கு வலுசேர்த்துள்ளது.

தனது பிரதான வீரர்களை தக்க வைத்துக்கொண்டு, சமீபத்திய ஏலத்தில் சில முக்கிய வீரர்களான ஷகிப் அல் ஹசன், பென் கட்டிங் ஆகியோரை எடுத்திருப்பது அணிக்கு பக்க பலமாக இருக்கும். அத்துடன் பெட் கம்மின்ஸ், லொக்கி ஃபெர்குசன் ஆகியோரும் அணிக்கு துணை நிற்பார்கள்.

சுழற்பந்துவீச்சாளர்கள் இல்லாமல் தடுமாறும் கொல்கத்தா அணி, இம்முறை புதுவரவுகளான ஷகிப் அல் ஹசன், ஹர்பஜன் சிங்கை பயன்படுத்திக்கொள்ள முற்படும். வருண் சக்கரவத்தியின் நிலை குறித்து உத்தியோகபூர்வ தகவல் இல்லை.

நடப்பு தொடரின் தனது முதல் போட்டியில் எதிர்வரும் 11ஆம் திகதி சன்ரைசஸ் ஹைதராபாத் அணியை சென்னையில் சந்திக்கிறது.

அடுத்து 2016ஆம் ஆண்டு சம்பியன் பட்டம் வென்ற சன்ரைசஸ் ஹைதராபாத் அணி குறித்து பார்க்கலாம்.

சன்ரைசஸ் ஹைதராபாத் அணி கடந்த 5 ஆண்டுகளில் நிலையான ஒரு இடத்தில் உள்ளது.

நடப்பு தொடரில் வாங்கப்பட்டிருக்கும் கேதர் ஜாதவ், நடுத்தர வரிசையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துவார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

மிட்செல் மார்சுக்கு பதிலாக உள்வாங்கப்பட்டுள்ள ஜேஸன் ரோய்யை, எந்த இடத்தில் களமிறக்குவது என்பது குறித்து அணி ஆலோசித்து வருகின்றது.

அணியின் துடுப்பாட்ட வரிசை வோர்னர், ஜோனி பேயர்ஸ்டொவ், கேன் வில்லியம்சன், மணீஷ் பாண்டே, ரித்திமான் சாஹா என பலமாக உள்ளது.

பந்துவீச்சிலும், புவனேஸ்வர் குமார், சந்தீப் சர்மா, ஜேஸன் ஹோல்டர், ரஷீத் கான், நடராஜன் என வலுவாக உள்ளது.

அடுத்ததாக ஐ.பி.எல். தொடரில் 5 முறை சம்பியன் ஆன ஒரே அணி என்ற பெருமையுடன் வலம் வரும் மும்பை இந்தியன்ஸ் அணி, துடுப்பாட்டம், சகலதுறை மற்றும் பந்துவீச்சு என மூன்றிலும் வலுவாக திகழும் ஒரே அணியாகவும் உள்ளது.

ரோஹித் சர்மா, குயிண்டன் டி கொக், சூர்யகுமார், இஷான் கிசான், பாண்ட்யா சகோதரர்கள் மற்றும் பொல்லார்ட், பும்ரா மற்றும் போல்ட் என மிகப்பெரிய படையணி உள்ளது.

சுழற்பந்துவீச்சில் ஆதிக்கம் செலுத்தும் பந்துவீச்சாளர்கள் இல்லாதது மும்பைக்கு குறையாக உள்ளது. அதிலும், சுழற்பந்துவீச்சுக்கு சாதகமான சென்னை மைதானத்தில் முதல் போட்டியில் மும்பை விளையாடுவது சற்று தடுமாற்றத்தை அளிக்கலாம்.

தனது முதல் லீக் போட்டியில், நடப்புச் சம்பியனான மும்பை அணி, றோயல் செலஞ்சரஸ் பெங்களூர் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

பியூஷ் சாவ்லா, ஜெயந்த் யாதவ் உள்ளிட்டோர் அதை எவ்வாறு ஈடு கட்டுவர் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

அடுத்ததாக 3 முறை சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, முதல் முறையாக கடந்த சீசனில் பிளேஓஃப் சுற்றுக்கு கூட முன்னேற முடியாமல் ஏமாற்றத்துடன் வெளியேறியது.

ஐ.பி.எல். கிரிக்கெட் அணிகளில் 30 வயதுக்கு மேற்பட்ட அதிக வீரர்களை கொண்ட ஒரே அணியாக அந்த அணி திகழ்கின்றது.

நடப்பு தொடரில் அணிக்குத் திரும்பியிருக்கும் சுரேஷ் ரெய்னா துடுப்பாட்டத்தில் வலுசேர்ப்பார். டோனியின் தலைமை கூடுதல் பலம். டு பிளெஸ்ஸிஸ், ராயுடு, பிராவோ, ஜடேஜா, சேம் கர்ரன், மொயீன் அலி, லுங்கி ங்கிடி என பல சிறந்த வீரர்கள் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

அதேவேளை, கடைசி நேரத்தில் ஜோஷ் ஹேஸில்வுட் நடப்பு தொடரில் இருந்து விலகியிருப்பது சென்னைக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

பெரிதும் மாற்றம் செய்யப்பட்டுள்ள ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, முதல் தொடரில் சம்பியன் பட்டம் வென்றதற்கு பிறகு வேறு எந்த தொடரிலும் சோபிக்கவில்லை.

அணியின் தலைவராக சஞ்சு சம்சனும், அணியின் கிரிக்கெட் இயக்குநராக இலங்கையின் குமார் சங்ககாராவும் பொறுப்பேற்றுள்ளனர்.

ஐபிஎல் வரலாற்றிலேயே அதிகபட்ச மதிப்பாக 16.25 கோடி ரூபாய் கொடுத்து தென்னாபிரிக்க சகலதுறை வீரர் கிறிஸ் மோரிஸை ராஜஸ்தான் வாங்கியுள்ளது.

இதுதவிர அணி வலுவான அணியாக உள்ளது. பென் ஸ்டோக்ஸ், ஜோஸ் பட்லர், டேவிட் மில்லர் என பலம் பொருந்திய வீரர்கள் உள்ளனர்.

பந்துவீச்சை பொறுத்தவரை முக்கிய பந்துவீச்சாளரான ஜோஃப்ரா ஆர்ச்சர் காயம் காரணமாக ஆரம்ப போட்டிகளில் விளையாடாதது பாதிப்பை ஏற்படுத்தலாம்.

அணித்தலைவராக முன் அனுவம் இல்லாத சஞ்சு சாம்சனுக்கு, தற்போது அந்தப் பொறுப்பால் ஏற்படும் அழுத்தம் அவரது துடுப்பாட்ட திறனை பாதிக்காமல் இருக்க வேண்டும்.




அடுத்ததாக ரிஷப் பந்த் தலைமையில் களம் காணும் டெல்லி கெபிடல்ஸ் அணி குறித்த பார்வை.

கடந்த முறை இறுதிப் போட்டி வரை முன்னேறி கிண்ணத்தை பறிகொடுத்தது டெல்லி அணி. ஸ்ரேயஸ் ஐயரின் உபாதை காரணமாக அணித்தலைமை பொறுப்பை ஏற்றுள்ள ரிஷப் பந்த், அணியை எவ்வாறு வழிநடத்துவார் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

துடுப்பாட்டம் மற்றும் வேகப்பந்து வீச்சில் நிலையான வீரர்களுடன் திறமையான அணியாக டெல்லி உள்ளது. தவான், பிருத்வி ஷா, ரஹானே, சிம்ரொன் ஹெட்மியர் மற்றும் பந்துவீச்சில் ரபாடா, நோட்ஜே இஷாந்த் சர்மா, அஸ்வின், அக்ஸர் பட்டேல் ஆகியோர் உள்ளனர்.

தற்போது ஸ்டீவ் ஸ்மித், கிறிஸ் வோக்ஸ் ஆகியோர் இணைந்திருப்பது கூடுதல் பலம்.

குறிப்பாக விக்கெட் காப்பு பணியில், ரிஷப் பந்த்துக்கு மாற்று இல்லாத நிலை உள்ளதை அணி கவனத்தில் கொள்ள வேண்டும்.

இம்முறையாவது சம்பியன் கிண்ணத்தை றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி வெல்லுமா என்பதே அனைத்து ஐ.பி.எல். இரசிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது என செல்லி விடலாம்.

கடந்த காலங்களில் பலம் பொருந்திய வீரர்கள் இருந்த போதிலும், றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியால் சிறப்பான பெறுப்பேற்றை வெளிப்படுத்த முடியவில்லை என்பது யாவரும் அறிந்ததே!

இம்முறை அதிரடி துடுப்பாட்ட சகலதுறை வீரர் க்ளென் மேக்ஸ்வெல் மற்றும் வேகப்பந்து வீச்சாளரான கைல் ஜேமிசன் என முக்கியமான வீரர்களை பெங்களூர் அணி ஏலத்தில் எடுத்துள்ளது.

எதிர்வரும் தொடரை முன்னிட்டு அணியிலிருந்த 10 வீரர்களை விடுவித்து, துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சை வலுப்படுத்தும் வீரர்களை சமீபத்தில் நடைபெற்ற சிறிய ஏலத்தில் வாங்கியது.

பெங்களூரின் வேகப்பந்துவீச்சு சற்று கவலை அளிப்பதாகவே இருக்கிறது. நவ்தீப் சைனி, முகமது சிராஜ் ஆகியோர் ஓட்டங்களை வாரி வழங்குவது பிரச்னையாக உள்ளது. இம்முறை அதை அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கேன் ரிச்சட்சனின் செயற்பாடு மற்றும் கைல் ஜேமிசனின் பந்துவீச்சு எப்படி இருக்கும் என பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

## IPL கிரிக்கெட்: சில சாதனைகள்

டெல்லி அணிக்காக ஆடும் சுழற் பந்து வீச்சாளர் அமித் மிஸ்ரா அதிகபட்சமாக 3 முறை ஹெட்ரிக் விக்கெட் வீழ்த்தியுள்ளார்.



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் நடந்துள்ள சில ருசிகர சாதனைகள் பற்றிய விவரம் வருமாறு:

- புனே வாரியர்சுக்கு எதிராக பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ் அணி 2013ம் ஆண்டு 5 விக்கெட்டுக்கு 263 ஓட்டங்கள் குவித்ததே ஒரு அணியின் அதிகபட்சமாகும். இதே பெங்களூர் அணி 2017ம் ஆண்டில் கொல்கத்தாவுக்கு எதிராக 49 ஓட்டங்களுக்கு சுருண்டது மோசமான ஸ்கோராகும்.
- இதுவரை 63 சதங்கள் அடிக்கப்பட்டுள்ளன. அதிக சதங்கள் நொறுக்கியவர்களின் பட்டியலில் கிறிஸ் கெய்ல் (6 சதம்) முதலிடத்தில் உள்ளார். பெங்களூர் தலைவர் விராட் கோலி 5 சதத்துடன் 2வது இடம் வகிக்கிறார்.
- ஐ.பி.எல். வரலாற்றில் முதல் சதத்தை அடித்தவர், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் வீரர் பிரன்டன் மெக்கல்லம். 2008ம் ஆண்டில் நடந்த தொடக்க ஆட்டத்தில் பெங்களூருவுக்கு எதிராக அவர் 158 ஓட்டங்கள் திரட்டினார். அதன் பிறகு இந்த நாள் வரைக்கும் கொல்கத்தா அணி வீரர் யாரும் சதம் அடித்ததில்லை என்பது ஆச்சரியமான உண்மையாகும்.
- தற்போது பஞ்சாப் கிங்சுக்காக ஆடும் கிறிஸ் கெய்ல் முன்பு பெங்களூரு அணிக்காக 175 ஓட்டங்கள் (2013ம் ஆண்டில் புனே வாரியர்சுக்கு எதிராக) விளாசியதே தனிநபர் அதிக பட்சமாகும். இதில் 30 பந்துகளில் 100 ஓட்டங்கள் எடுத்த போது, அதிவேக சதமாகவும் பதிவானது.
- சிக்சர் மன்னனாகவும் 41 வயதான கிறிஸ் கெய்ல் வலம் வருகிறார். அவர் 349 சிக்சருடன் (132 ஆட்டம்) அசைக்க முடியாத இடத்தில் இருக்கிறார். இந்த வகையில் பெங்களூர் அணி வீரர் டிவில்லியர்ஸ் (235 சிக்சர்) 2வது இடத்திலும், சென்னை அணியின் தலைவர் டோனி (216 சிக்சர்) 3வது இடத்திலும் உள்ளனர்.
- விராட் கோலி 2016ம் ஆண்டில் 973 ஓட்டங்கள் குவித்ததே ஒரு ஐ.பி.எல். சீசனில் எடுக்கப்பட்ட தனிநபரின் அதிக பட்ச ஓட்டங்களாகும்.
- இந்த ஆண்டு கொல்கத்தா அணிக்காக விளையாட உள்ள சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் ஓட்டம் விட்டுக்கொடுக்காமல் அதிகமான பந்துகளை வீசியவர் என்ற சிறப்புக்குரியவர் ஆவார். அவர் 1,249 'டொட்போல்' வீசியுள்ளார்.
- 19 'ஹெட்ரிக்' விக்கெட் சாதனை படைக்கப்பட்டுள்ளன. டெல்லி அணிக்காக ஆடும் சுழற்பந்து வீச்சாளர் அமித் மிஸ்ரா அதிகபட்சமாக 3 முறை ஹெட்ரிக் விக்கெட் வீழ்த்தியுள்ளார்.
- கடந்த ஆண்டு கொல்கத்தாவுக்கு எதிரான ஆட்டத்தில் பெங்களூர் வேகப்பந்து வீச்சாளர் முகமது சிராஜ் 2 ஓவர்களில் ஓட்டம் ஏதும் கொடுக்காமல் ஓட்டமற்ற ஓவராக வீசினார். ஐ.பி.எல் வரலாற்றில் ஒரு ஆட்டத்தில் 2 ஓட்டமற்ற ஓவர்கள் வீசிய ஒரே பந்து வீச்சாளர் இவர் தான்.



### 800 மீற்றர் ஓட்டப் போட்டி

## டில்ஷி குமாரசிங்க தேசிய சாதனை

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இடம்பெற்றுவரும் தேசிய தடகள விளையாட்டு தேசிய தகுதி காண் போட்டிகளில் தேசிய சாதனையொன்று நிலைநாட்டப்பட்டுள்ளது. பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் 2.02:52 நிமிடங்களில் எல்லையை கடந்து டில்ஷி குமாரசிங்க இந்த சாதனையை புரிந்துள்ளார்.

தேசிய தகுதிகாண் மெய்வல்லுநர் போட்டியில் ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றரில் பங்குகொண்ட மலையக வீரர்களான குமார் சண்முகேஸ்வரன் மற்றும் விக்னராஜ் வக்ஷான் ஆகிய இருவரும் முறையே தங்கம், வெண்கலப் பதக்கங்களை வெற்றி கொண்டனர். இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த வருடத்தின் முதலாவது தேசிய தகுதிகாண் மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த (07ம் திகதி) கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் ஆரம்பமாகியது.



## அர்ப்பணிப்போடு பயிற்சி செய்தால் வெற்றி கிட்டும்

### -குத்துச்சண்டைவீரர் கிரிதரன்

*யாழ். விளையாட்டு நிருபர்*



வடக்கு மாகாணத்தின் குத்துச்சண்டைவீரானா யோகேஸ்வரன் கிரிதரன் தினகரனின் வாரமஞ்சரிக்காக நேர்கண்டபோது.

**உங்களைப்பற்றி சிறிது கூறுங்கள்?**

எனது பெயர் யோகேஸ்வரன் கிரிதரன்

நான் ஒரு விவசாயி குடும்பத்தில் பிறந்தவன். சாதரணமாக விளையாட்டு என்றால் சிறு வயதில் இருந்தே அதிக பற்று கடுமையாக பயிற்சிகள் செய்வேன் அதன் விளைவாக வெற்றிகளும் சாதாரணமாக பெற்றுள்ளேன்.

**உங்களது குடும்பத்தவரின் ஒத்துழைப்புப் பற்றி?**

நான் ஆரம்பத்தில் கரப்பந்து ஓட்டப்பந்தயம் போன்றவற்றை மட்டும் செய்து வந்தேன் அப்போது உயர்ந்த அளவில் ஆதரவுகள் பணம் ஆகட்டும் காலணி ஆடைகள் ஆகட்டும் உடனே பெற்று தந்தனர் ஆனால் குத்துச் சண்டை பொறுத்தவரை ஆதரவு எனக்கு தரவில்லை ஏனென்றால் அவர்கள் அதை உயிருக்கு ஆபத்தான விளையாட்டு என்று கருதுகின்றனர்

**உங்களது பயிற்றுனர் ஒத்துழைப்புப் பற்றி?**

அந்த விடயத்தில் பயிற்றுநர்கள் எனக்கு கிடைத்தது என்றால் வரம் என்றுதான் கூறுவேன். காரணம் ஏனென்றால் பயிற்சி அளிப்பது மட்டும் இல்லாமல் தேவையான உதவிகள் அனைத்தையும் பெற்றுத் தந்தனர் போசாக்கு உணவு மற்றும் குளிர்பானங்கள் தேவையான பாதணிகள் மற்றும் விளையாட்டு ஆடைகள் அதற்கு மேலாக ஒரு பெற்றாரிடமிருந்து கிடைக்க வேண்டிய அரவணைப்பு எனக்கு கிடைத்தது.

**எப்படி குத்துச் சண்டை துறையில் நுழைந்தீர்கள்?**

நான் ஒரு ஓட்டப்பந்தய வீரர் உயர்தரம் பாடசாலை நான் படித்த பாடசாலையில் இல்லாத நிலையில் வித்யானந்தா கல்லுரியில் சேர்ந்தேன் அப்போது எனக்கு சிறந்த பயியற்விப்பாளர் கிடைக்கவில்லை ,அப்போது புதிய மாணவர்களை குத்துச்சண்டை போட்டிக்கு சேர்த்தனர் எனது ஒட்டப்பயிற்சிக்கு தாங்குதிறனை வளர்பதற்க்கு சேர்ந்தேன் கொஞ்சம் ஆர்வம் வந்தது குத்துச்சண்டையில் முழுமையாக இணைந்துவிட்டேன்

**நீங்கள் பங்குபற்றிய போட்டிகள் பற்றி?**

ஆரம்பத்தில் பயம் இருந்தது பிறகு அந்து ஒருதடவை வெற்றி பெற்ற பின்னர் ஆர்வம் அதிகரிக்க தொடங்கிவிட்டது தேசிய கடலில் இணைய வேண்டும் என்று அது நனவாகும் வேளை உலக கிண்ணம் பங்குபற்ற வேண்டும் என்று கனவு மாறிவிட்டது என்று கூறலாம்..

**நீங்கள் முதன்முறையாகப் பதக்கம் பெற்றபோது உங்களது மனநிலை எப்படியிருந்தது?**

மைதானத்தில் போட்டி ஆரம்பிக்கும்போது ஒருவிதமான பயம்.இருந்தது அதன் பிறகு நமக்கு ஏற்ற விளையாட்டு இதுதான் போல என்று முடிவெடுத்து கொஞ்சம் ஆர்வமாக பயிற்சிகள் செய்வேன்

**உங்களைப்போன்று எதிர்காலத்தில் குத்துச்சண்டையில் ஈடுபடவிருக்கும் வீர வீராங்கனைகளுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?**

விளையாட்டு மைதானம் என்று சொல்லும்போது பரீட்சை மண்டபத்தை உதாரணம் படுத்த இயலும் ஒரு பரீட்சையில் எந்தளவுக் படிக்கிறோமோ அந்தளவிற்கு பரீட்சையில் சித்தி எய்தலாம். அதேபோல் அற்பணிப்போடு எந்தளவிற்கு பயிற்சி செய்கிறீர்களோ அந்தளவிற்கு வெற்றி உங்களுக்கு தலைவணங்க தயாராகும் அதேபோல் எந்தளவிற்கு அற்பணிப்போடு செயற்படுகிறீர்களோ அந்தளவிற்கு போட்டியும் எழிதாகிவிடும்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஏப்ரல் மாதம் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.



# மஞ்சரி களஞ்சியம்
தினகரன் வாரமஞ்சரி



## 'தேவதைகள் கூட்டத்தின்' பரிசளிப்பு விழா





குழந்தைகளின் படைப்பாற்றலை கண்டடைந்து வாய்ப்புகள் வழங்கி வழிகாட்டினால் வருங்காலத்தில் மிகத் திறமையானவர்களாக திகழ்வர்கள் . குழந்தைகளின் திறமைகளை வெளிக்கொண்டு வர வேண்டும் என்பதற்காக கடந்த ஒரு வருடமாக தேவதைகள் கூடம் என்ற அமைப்பை நடத்தி வருகிறார் முப்பதாண்டு கால ஆசிரியர் அனுபவமுள்ள காரைக்குடியைச் சேர்ந்த கவிஞர் பாதென்றல் ஓராண்டில் நடத்தப்பட்ட பல போட்டிகளின் பரிசளிப்பு விழா04.04.2021 அன்று காரைக்குடியில் சிறப்பாக நடைபெற்றது. கொரோனா பரவல் விடுமுறையில் மார்ச் 30 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் வரை தினமும் பல போட்டிகளிலும் செயல்பாடுகளிலும் வாட்ஸ்அப் வழியாகத் தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் இருந்துபங்கேற்ற 42 பள்ளிகளைச் சேர்ந்த 103 குழந்தைகளுக்கும் இவ் விழாவில் பரிசும் சான்றிதழும் வழங்கப்பட்டது

விழாவிற்குத் திருமதி கோ.ஆனந்தா தலைமை தாங்கிடஇனிய நந்தவனம் இதழாசிரியர் கவிஞர் நந்தவனம் சந்திரசேகரன் முன்னிலை வகித்தார். தேவதைகள் கூட்டத்தின் நிறுவனர் கவிஞர் பா. தென்றல், குழந்தைகளுக்காக அவர்களின் தனித்திறன் சார் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காகத் தேவதைகள் கூட்டம் தொடங்கப்பட்டதையும் அது தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் விதத்தினையும் நோக்கவுரையாக நிகழ்த்தினார்.

அழகப்பா பல்கலைக்கழகமேனாள் துணைவேந்தர் பேரா. சொ.சுப்பையா குழந்தைகளுக்குச் சான்றிதழ்களும் நூல் பரிசுகளும் வழங்கி வாழ்த்தினார். அவரது "சிறப்புரையில், ஒரு சிறந்த ஆசிரியர் என்பவர் மாணவர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் பொதிந்து கிடக்கும் ஆற்றலை வெளிக் கொணர வேண்டும். அவர்களின் தனித்திறமைகளைக் கண்டறிந்து அவற்றை வெளிப்படுத்த வாய்ப்புகள் வழங்க வேண்டும். பெற்றோர்கள் தமக்குப் பிடித்ததை எல்லாம் குழந்தைகள் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தக் கூடாது. நன்றாகப் பாடக்கூடிய குழந்தையை நடனமாடச் சொல்லக் கூடாது. அவர்களுக்குப் பிடித்ததைச் செய்யச் சொல்லி ஊக்கப்படுத்த வேண்டும் என்று சிறப்புரையில் தெரிவித்தார்.

# பன்முக ஆளுமை கொண்ட எழுத்தாளர் வாஹிட் குத்தூஸ்

ஆ.புவியரசன்

மீன்பாடும் தேன் நாடு என வர்ணிக்கப்படும் மட்டக்களப்பு மாவட்டத்தின் கோட்டைமுனையில் அப்துல் குத்தூஸ், புவாத் உம்மா தம்பதிகளுக்கு நான்காவது மகனாக பிறந்தவர் வாஹிட் குத்தூஸ், தனது பாடசாலை காலம் முதலே கலை இலக்கிய பணிகளில் ஈடுபாடு கொண்ட இவர் மட்/ அரசடிப் பாடசாலை (மஹஜன கல்லூரி), மட்/ கோட்டைமுனை மகா வித்தியாலயம் என்பவற்றின் பழைய மாணவர் ஆவார். பாடசாலை நாட்களில் மாணவர் மன்றங்கள் இடம்பெறும் போது நாடகங்களில் பாத்திரமேற்று நடித்தும், பாடல்கள் பாடியும் தனது கலையார்வத்தை வளர்த்து கொண்டார். இவருடைய இம்முயற்சிக்கு ஆசிரியர்களான "அமிர்தகழி" சோமரத்தினம், சங்கீத ஆசிரியர்" கல்லடி" தங்கவேலு ஆகியோர் உறுதுணையாக இருந்ததாக நன்றி உணர்வோடு கூறுகின்றார்.

கலையுலக பிரவேசத்தின் ஆரம்ப நாட்களில் இலத்திரனியல் ஊடக துறையில் ஈர்ப்பு கொண்டு அறிப்பாளராக, பாடகராக வர விரும்பினார். இதன்காரணமாக இலங்கை வானொலியின் நிகழ்ச்சிகளுக்கு நேயர் கடிதம் எழுதி, விமர்சனங்களை முன்வைத்து தனது ஈடுபாட்டை அதிகரித்திருந்தார். இவ்வெழுத்தாக்க முயற்சிகளே பத்திரிகைகளிலும் இவரை எழுதத் தூண்டியது.சமூக அக்கறையுணர்வோடு என்றும் செயற்படும் வாஹிட் குத்தூஸ், தான் வாழ்ந்த கோட்டை முனை " கொலட் லேனின்" குறைபாடுகளை சுட்டிக்காட்டி கட்டுரை ஒன்றை தினகரன் பத்திரிகைக்கு எழுதியிருந்தார். தினகரன் பத்திரிகையில் 1980 களில் "கொலட் லேனின் அவலநிலை காணீர்" எனும் தலைப்பில் இக்கட்டுரை பிரசுரமாகி அச்சு ஊடக துறையில் கால்பதிக்க இவருக்கு வழிகோலியது. இயல்பாகவே சிறந்த குரல் வளத்துடன் சினிமா பாடல்களை பாடும் திறன் கொண்ட குத்தூஸ் 1984 இல் கொழும்பில் இடம்பெற்ற " வெல்ல முடிந்தால் வெல்லுங்கள்" வானொலி பாடல் போட்டி நிகழ்ச்சியில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் நேயர்களால் சிறந்த பாடகராக தெரிவு செய்யப்பட்டார். அம்பிகாவின் பாட்டுக்குப் பாட்டு போட்டியிலும் பங்குபற்றி இரண்டாம் இடத்தைப் பெற்றார். கோட்டைமுனை "முத்து மணி" உள்ளிட்ட பல புனைப்பெயர்களில் தேசிய பத்திரிகைகளில் ஆக்கங்களை எழுதத் தொடங்கிய இவர், கவிதை, சிறுகதை எழுதுவதிலும் ஆர்வம் காட்டத் தொடங்கினார்.



'என்னவள்' எனும் தலைப்பில் இவர் எழுதிய கன்னிக் கவிதை சிந்தாமணி வார இதழில் பிரசுரமாகியது. இவரது முதல் சிறுகதை "மாறாத நம்பிக்கை" 1989இல் சிந்தாமணியில் பிரசுரமாகியது. இதனைத் தொடர்ந்து இவரது சிறுகதைகள் நவமணி, சூடாமணி, தினமுரசு மற்றும் ஜனனி போன்ற பத்திரிகைகளில் பிரசுரமாகின. இவரது கவிதைகள் வீரகேசரி, தினகரன், தினக்குரல், விடிவெள்ளி, சுடர்ஒளி, மித்திரன் மற்றும் மெட்ரோ நியூஸ் போன்ற தேசிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.தவிர இவரது கவிதைகள் விழா மலர்களிலும் உள்ளூர் சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன.

கவிஞராக பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி பரிசுகளை இவர் வென்றுள்ளார்.வாஹிட் குத்தூஸ் தனது திருமணத்திற்கு பின்னர் பதுளையில் குடியேறினார். இதன் பின்னர் ஊடகத்தில் கால்பதித்தார். நவமணி பத்திரிகையின் பதுளைக்கான பிராந்திய செய்தியாளராக இணைந்து செய்திகளை அறிக்கையிடத் தொடங்கினார். இது இவரது வாழ்வில் புதிய மாற்றத்தையும், திருப்பத்தையும் ஏற்படுத்தியதாக குத்தூஸ் கூறுகின்றார். பின்னாளில் தினகரன், வீரகேசரி, மெட்ரோ நியூஸ், விடிவெள்ளி மற்றும் தமிழ் மிரர் ஆகிய பத்திரிகைகளிலும் பிராந்திய செய்தியாளராக இணைந்து கொண்டு இன்று வரை ஊடகப் பணி செய்து வருகின்றார். ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம்,பதுளை மாவட்ட ஊடகவியலாளர் சங்கம், ஊவா மாகாண முஸ்லிம் ஊடக சங்கம் ஆகிய ஊடக அமைப்புகளில் இவர் அங்கம் வகிப்பதோடு,பதுளை மாவட்ட முஸ்லிம் மீடியா போரத்தின் செயலாளராக பணியாற்றி வருகின்றார். இலங்கை வானொலி தென்றலின் இணைப்பாளராகவும், பதுளை வை.எம். எம். ஏ அமைப்பின் ஊடக இணைப்பாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார். பதுளை வை.எம்.எம். ஏ, ஊவா மாகாணத் தமிழ் சாகித்திய விழா என்பவற்றில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். தினகரன் வாரமஞ்சரியுடன் "ஊவா மாகாணத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் (யுனி மீடியா) இணைந்து நடத்திய பாராட்டு நிகழ்வில் "செய்திச்சுடர்" என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். 60இலும் இளமை துடிப்புடன் சமூக மேம்பாட்டு எழுத்து பணி புரியும் சேவை இன்னும் பல்லாண்டுகள் தொடர வேண்டுமென ஊவா ஊடகவியலாளர்கள் சார்பில் வாழ்த்துவோம்.

# "ஒற்றை டம்ளர்" ஒரு கண்ணோட்டம்

யாதார்த்தமான கவிதை வடிவில் உருவான ஒரு அழகிய திரைப்படம் "ஒற்றை டம்ளர்". இதனை மார்ச் மாதம் 25ம் திகதி யாழ்ப்பாண காகில்ஸ் திரையரங்கில இடம்பெற்ற சர்வதேச சினிமா காட்சிப்படுத்தல் நிகழ்வின் போது காணக்கிடைத்தது. ஒரு பார்வையாளர் என்ற ரீதியில் ஏனைய எல்லா திரைப்படங்களோடு ஒப்பிடும் போதும் எமது ஈழத் திருநாட்டின் ஒரு கால கட்ட சம்பவத்தை கதை வடிவமாக சித்தரித்த ஒரு படம் என்று கூறுவதில் பெருமைப்படுகின்றேன். முதலாவதாக படத்தின் தயாரிப்பாளர் பேராசிரியர் சுமதி சிவமோகனுக்கு என்னுடைய மனப் பூர்வமான பாராட்டுக்களும் வாழ்த்துக்குளும் நன்றிகளும் உரித்தாகட்டும். நான் ஒரு மலையக பிரஜை. நான் உண்மையில் 1990 களில் நடந்த எந்த ஒரு சம்பவமும் அறிந்ததில்லை ஆனால் " ஒற்றை டம்ளர்" படத்தை பார்த்த போது நான் அந்த காலப்பகுதியில் வாழ்ந்த ஒரு சாதாரண மனிதன் என்பதை உணர்ந்தேன்.

இரண்டு யுகங்களின் தொடர்ச்சியாகவும் இரண்டு யுகங்களின் மாற்றங்களையும் மிக தத்ரூபமாக எடுத்துகாட்டியுள்ளார். நான் யுகங்கள் என்று குறிப்பிடுவது படத்தின் ஆரம்ப காட்சியையும் இறுதியாக வயோதிப தாய் ஜந்தில் ஒரு டம்ளரை எடுத்துகொண்டு பாத்திமா ஆசிரியரை தேடி செல்கின்ற காட்சியுமாகும். உண்மையில் ஆரம்ப காலத்தில் முஸ்லிம்கள் எவ்வளவு துன்பத்தையும் அவலங்களையும் அனுபவித்துள்ளார்கள் என்பதற்கு இந்த திரைப்படமும் ஒரு சாட்சியாகும். திரைப்படத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரையான கதையோட்டம் அடுத்து என்ன நடக்கப்போகிறது என்ன அவாவை மட்டுமன்றி தனிப்பட்ட ரீதியில் எனக்குள் சில வினாக்களையும் தொட்டுக் கொண்டு சென்றது. குறிப்பாக " குறித்த சகோதரர் ஏன் காணாமல் போனார்? என்ன நடந்திருக்கும் " என்றவாறு பல கேள்விகள் பார்வையாளராக எனக்கு தோன்றியது.

படத்தின் கதை முடிச்சுகளை சொல்லியே ஆக வேண்டும், ஒவ்வொரு பகுதிகளுக்குமான தொடர்பு மிக அருமையாக புனையப்பட்டிருந்தது. ஒரு சாதாரண குடும்பத்தில் நிகழும், நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு சம்பவத்தோடு ஆரம்பித்து கதையின் முடிவு " மாற்றம் ஒன்றே மாறாதது" என்ற கூற்றை உணர்த்தியது. அடுத்து பாத்திரவார்ப்பு மிக செம்மையாக அமைந்திருந்தது. அவர்களின் மொழி நடையாக இருக்கட்டும், கதாப்பாத்திரங்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்திய பாணியாக இருக்கட்டும் இவை அனைத்துமே கவரும் தன்மையாக இருந்தது. படத்தின் ஒலிஒளிப்பதிவுகள் காட்சிகளுக்கு ஏற்றால் போல் இசைந்து கொடுத்தன. கதையின் வெற்றி கதாபாத்திரங்களிலும், எழுத்தாளரின் எழுத்து வன்மையிலும், தாயாரிப்பாளரின் சமயோகித ஆற்றலாலும் தங்கி இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

இறுதியாக ஒரு பார்வையாளர் என்பதை விட ஆரம்ப கால வடுக்கள் தெரியாத எனக்கு இந்த படம் ஒரு முன்னுதாரணமாகவும் ஆரம்ப கால வாழ்க்கையை மீட்டுப்பார்க்கும் கருவியாகவும் அமைந்தது எனலாம்.










## தனித்துவமான கவிநடையில்
# ஊற்றெடுத்த உணர்வுகள்

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேசத்தைப் பூர்வீகமாகவும், பிறப்பிடமாகவும் கொண்ட திரு. பாலகிருஷ்ணன் ஹம்சபாலன், திருகோணமலை இராமகிருஷ்ண மிஷன் இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார். தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணிபுரியும் இவர், இயற்கையிலேயே கலையிலும், இலக்கியத்திலும் நாட்டம் கொண்டவர். கவிதை எழுதுவது இவருக்கு கைவந்த கலை. ஒவ்வொரு கவிதைகளும் யதார்த்த உண்மைகளைச் சொல்லி நிற்பது இவருக்குள்ள எழுத்தாண்மையின் சிறப்புகளில் ஒன்றாகும்.

தனித்துவமான கவிநடை, கவிஞருக்குரிய பண்பு, சொல்லாற்றல், செயற்திறன் என்பன போன்ற பல்வேறு இயல்புகள் நிறையப்பெற்ற ஹம்சபாலன் கவியுலகில் தனக்கென ஒரு தனியிடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளார். சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகள், அசைவியக்கம் போன்றவை கவிதைகளில் ஆழ ஊடுருவி நிற்பதானது ஹம்சபாலனின் கவிதை எழுதும் திறனையும், அவருக்குள் இருக்கும் கவி ஆற்றலையும் வெளிப்படுத்திக் காட்டுகின்றது.

சமயக் கிரிகைகளில் அதிகம் முனைப்புடன் செயற்படும் இவர், தனது முதலாவது நூலாக கப்பல் துறை கண்ணகி அம்மன் ஆலயத்தின் மீது இவரால் பாடப்பட்ட பாடல்களைத் தொகுத்து 2011 ஆம் ஆண்டு 'சிலம்புத்தாய்" எனும் பாமாலை நூலினை வெளியிட்டார். இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று சகோதர நட்புறவுடன், சிறப்பான புரிதல்கள் உடையவராகத் திகழ்கின்ற ஹம்சபாலன் கலை இலக்கியத்தின் மூலமாக முற்போக்கான சமுதாயக் கட்டமைப்பினை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையில் செயற்படுகின்றார். வளரும் தலைமுறையினருக்கு இவரது கொள்கைகளும், எழுத்துக்களும் வழிகாட்டும், முன்னுதாரணமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் கைக்கடக்கமாக அழகிய அட்டைப் படத்துடன் கண் கவர் வண்ணம் வடிவமைப்புச் செய்யப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இதனை வெளியீடு செய்துள்ளது குறிப்பிடத் தக்கது.

இனி கவிதைகளின் மீதான விவரணத்தைப் பார்ப்போம்.

நூலாசிரியர் ஒரு இளைஞர் துடிப்பான செயற்பாடும் தூர நோக்கும் கொண்டவர். அவரது சமுதாயம் சார் சிந்தனைகள் 'துடிப்பு" எனும் கவிதை மூலம் துல்லியமாக வெளிப்படுத்தப் படுகிறது. இவர் இளமை ததும்பும் உணர்வுகளுடன் சாதாரண பிரஜையாக சாதனை படைக்க விரும்புகிறார்.






வறுமையின் ஓர்
வாய்ப்பாக
எழுதுகோலை
உயர்த்தி
வாழ்வில் உயர்ந்திட
பணிவென்ற பேனா
முனையால்
துணிவு கொண்டு
சுயமாக கவிதை
புனைகின்றேன்.
கவிதை வரிகள்
எனது எழுச்சியை
நாடி நிற்கின்றது
தத்துவப் பொறிகளாய்
சமுதாயத்தில் சிலவற்றை
தேடிப் பார்க்கின்றது!

துடிப்போடு தொடக்கமிட்டு நமக்கோர் விடியல் என்பதுடன் நிறைவு பெறும் இவரது 78 கவிதைகளும் பல்வேறு படிப்பினைகளையும் வழி காட்டல்களையும் நமக்குப் பாடமாக சொல்லி நிற்கிறது.

'சீர்கல்வியினை சிறப்பாகக் கற்றவர் என்றைக்கும் கண்ணியம் பெறுவர்" என்ற பொருள்பட கல்வியைக் கண்ணுக்கு ஒப்பிட்டு உயிரோட்டமாக அதனைக் கற்று வாழ்வில் உயர்நிலை அடைய வேண்டுமென பக்கம் 07 இல் அமைந்துள்ள தனது கண்ணியம் செய்திட எனும் கவிதை மூலமாக உள்ளத்தால் உணர்கின்றார் கவிஞர்.

கண்ணியம் செய்திட
கல்வி என்ற கண்ணிருக்க
கலை என்ற உயிர் வேண்டும்
பட்டம் பெற வழியிருக்க
படிப்பதற்கு ஆர்வம் வேண்டும்!
கற்பதற்கு அறிவிருக்க
கல்வியோடு போராட வேண்டும்
கற்றதை மீண்டும் கற்க
சிந்தனை வளர்ச்சி பெருக
வேண்டும்!

கல்வியை யாசித்தாயினும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் கற்றுக் கொடுத்த ஆசான்களை காலமெல்லாம் கண்ணியத்தோடு மதித்து, அவருக்குரிய மதிப்பினை அளிப்பதன் மூலம் நமக்கும் அந்த சிறப்பினை அடைந்து கொள்ளலாம் என்ற கருத்தியலையும் இந்தக் கவிதையில் வலியுறுத்தி நிற்கின்றார் கவிஞர்.

துன்பம் நிறைந்த வாழ்க்கையை எப்படி வெற்றி கொள்வதென்பதை 'கலையும் துன்பப் புழுதி" எனும் கவிதை சொல்லி நிற்கிறது. தோல்வியைக் கண்டு துவளாமல் தொடராக முயற்சி செய்யும்போது அது திருவினையாவதுடன், வாழ்வில் மகிழ்வும் சந்தோசமும் ஏற்படும் என்பது கவிஞரின் எதிர்பார்ப்பாக அமைகின்றது.

களையும் துன்பப்புழுதி
துன்பப் நிறைந்த
வாழ்க்கை
தானே தொடர்கின்றது
சிவந்த சூரிய கதிர்
களாய்
சிதறிக் கிடக்
கின்றது!
தோல்வி என்ற
விம்பம்பட்டு
உடைந்து
போனதோ
வண்ணக் கனவுகள்
துடைத்தெழு துயரை
படைத்திடு புதுயு
கத்தை!

எம்மை எதிர்நோக்கி வரும் தடைகளைத் தாண்டி செல்லுகின்ற போது வெற்றிப் பாதைகள் தானே திறந்து கொள்ளும் என்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது.

ஒவ்வொருவரும் தமக்கான விடியல் நல்லதாக, நன்மைகள் நிறைந்ததாக அமைவதையும் அதில் தமது எண்ணங்கள், ஆசைகள், கனவுகள் நிறைவேற்றப்பட்டு சந்தோசம் மலர்வதையும் பெரும்பாலும் விரும்புவர். இங்கு வாழ்வில் புதுவசந்தம் பூத்துக்குலுங்க புது நம்பிக்கையோடு காத்திருக்கின்றார் கவிஞர் ஹம்சபாலன்.

மனதில் உன் நினைவுகள்
நெருங்கி வர வலிகளைக்
களைந்து
வலிமை நிறைந்து உனக்காக
ஓர் கவிதை எண்ணத்தில் சிறகடித்து..
கவி வரிகளின் சிந்தனை
மனதைத் தொட்டு சிந்தித்து
செதுக்கிய சிற்பமாய் என்னுள்ளே!
எழுகின்ற புகழ் ஓங்க..

கவியாளுமை, கவித்திறன் என்பவற்றில் இவர் வெற்றி பெற்றுள்ளார். எனது இதயம் நிறைந்த வாழ்த்துகள்!!!

கலாபூஷணம்
பீ.ரீ. அஸீஸ், கிண்ணியா

# SeylanPay QR கொடுப்பனவு தீர்வுகள் அறிமுகம்



செலான் வங்கி தனது டிஜிட்டல் தயாரிப்பு தெரிவுகளில் புதிய உள்ளடக்கமாக 'SeylanPay' QR குறியீட்டின் பிரகாரம் அமைந்த கொடுப்பனவு தீர்வை அன்புடன் அரவணைக்கும் வங்கியான செலான் வங்கி அறிமுகம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

வங்கியின் பயணத்தில் இந்த அறிமுகம் மிகவும் முக்கிய மைல்கல்லாக அமைந்திருப்பதுடன், பணப்பாவனை இல்லாத, கடதாசி பாவனை இல்லாத மற்றும் கிளைகளின் பாவனை இல்லாத வங்கியியல் மாதிரியை நோக்கிய வங்கியின் தந்திரோபாயப் பயணத்துக்கு வலுச் சேர்ப்பதாகவும், இலங்கையின் கொடுப்பனவு கட்டமைப்புக்கு வளமூட்டுவதாகவும் அமைந்துள்ளது.

SeylanPay அறிமுகம் தொடர்பில் செலான் வங்கியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "வங்கியியல் மற்றும் நிதியியல் துறையின் எதிர்காலமாக டிஜிட்டல் வங்கியியல் அமைந்துள்ளது. SeylanPay QR வசதியை பல்வேறு நிலைகளில் சௌகரியமாகவும், பாவனையாளருக்கு நட்பான வகையிலும் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதுடன், துறைக்கு சிறந்த உள்ளடக்கமாகவும் அமைந்துள்ளது. ஸ்மார்ட்ஃபோன்களைப் பயன்படுத்தி பாதுகாப்பான முறையில் கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுக்கக்கூடியதாக அமைந்திருக்கும். இலங்கையில் டிஜிட்டல் வங்கியியல் துறையில் முன்னோடியாக செலான் வங்கி அமைந்துள்ளதுடன், இணைய மற்றும் மொபைல் வங்கிச் சேவை, இணையக் கொடுப்பனவு கட்டமைப்புகள் மற்றும் விற்பனையாளர் போர்டல் சேவைகள் போன்றவற்றை அறிமுகம் செய்வதில் முன்னோடியாகத் திகழ்ந்து, சகல செலான் வாடிக்கையாளர்களுக்கு சௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது. SeylanPay கொடுப்பனவுத் தீர்வு எமது வாடிக்கையாளர்களின் வேலைப்பளு நிறைந்த வாழ்க்கைக்கு சௌகரியத்தை ஏற்படுத்தும் என்பதுடன், இந்த வாய்ப்பை வழங்குவதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்." என்றார்.

செலான் வங்கியில் நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தற்போது, தமது ஸ்மார்ட்ஃபோன் ஊடாக LANKAQR சான்று பெற்ற விற்பனை நிலையங்களில் டிஜிட்டல் முறையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும்.

# HNB யின் புதிய 'சிங்கிதி ஜம்போ 'Avurudu' சலுகைகள் அறிமுகம்



இவ்வாண்டு புதுவருட கொண்டாட்டத்தில், இலங்கையின் சிறந்த வாடிக்கையாளர் வங்கியான HNB PLC தனது சிறுவர் சேமிப்புக்காக 'சிங்கிதி ஜம்போ அவுருது' என்ற புதிய சலுகைகளை அறிவித்துள்ளது. இதில் பலவிதமான பரிசுகள் மற்றும் வவுச்சர்களும் இவற்றில் அடங்கும்.

இவ்வருடம் மார்ச் 23 முதல் ஏப்ரல் 30 வரை, 16 வயதிற்கு உட்பட்ட அனைத்து HNB சிங்கிதி மற்றும் Teen கணக்கு வைத்திருப்பவர்களுக்கும் பல நன்மைகளை வழங்குகின்றது.

'எங்கள் இளம் சேமிப்பாளர்களுக்கு சிங்கிதி சேமிப்பு திட்டத்தை முன்னேற்றுவதன் மூலம் புது வருடத்தின் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வதையிட்டு நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். இந்த புதிய திட்டங்களின் மூலம் இளம் வயதினரை நிதி ரீதியாக பாதுகாப்பான எதிர்காலத்தை நோக்கி வழிநடத்த முடியும். அதேசமயம் அவர்களின் கல்விப் பயணத்தை முன்னேற்றுவிக்கும் வகையிலான பரிசுகளையும் வழங்குகின்றோம். எதிர்வரும் வருடங்களில் இந்த திட்டங்களின் நோக்கங்களை விரிவுப்படுத்துவதன் மூலம் இளம் சேமிப்பாளர்களுக்கு தொடர்ந்து ஆதரவளிக்க முடியும் என நம்புகின்றோம்.' என HNB சேமிப்பு நடவடிக்கைகள் பிரதானி விரங்க கமகே தெரிவித்தார்.

சிங்கிதி கணக்கு வைத்திருப்பவர்களின் தொடர்ச்சியான கல்வி முன்னேற்றத்தை ஊக்கவிப்பதோடு தனது இளம் சேமிப்பாளர்களுக்கும் பரிசுகளையும் வழங்குகிறது. 5,000 ரூபா வைப்பிலிடுபவர்களுக்கு தொப்பிகள் அல்லது பேனா ஹோல்டர்கள், 10,000 ரூபா வைப்பிலிடுபவர்களுக்கு குடைகள் அல்லது பாடசாலை பைகள், 25,000 ரூபா வைப்பிலிடுபவர்களுக்கு முழுமையான பொருட்களுடன் வெண் பலகைகளும் வழங்கப்படும்.

மேலும் சிங்கிதி சேமிப்பாளர்கள் 50,000 ரூபா வைப்பிலிடும் போது ஒரு விளையாட்டு பை (Sports Bag) அல்லது 1,500 ரூபா பெறுமதியான வவுச்சர்களும், சிங்கிதி கணக்கு வைத்திருப்பவர்கள் 100,000 ரூபா வைப்பிலிடும் போது 5,000 ரூபா பெறுமதியான வவுச்சர்களும் 500,000 ரூபா வைப்பிலிடும் போது 20,000 ரூபா பெறுமதியான வவுச்சர்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

# தெங்கு செய்கையாளர்களுக்கு காப்புறுதி



இலங்கை தெங்கு உற்பத்தியாளர் சங்கம் மற்றும் செலின்கோ காப்புறுதி நிறுவனம் (சிஜசி) ஆகியவை இணைந்து தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் (சிடிஏ) வழிகாட்டுதலின் கீழ் இந்தத் துறைக்கான சிறப்பு காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளன. இதன் அறிமுக நிகழ்வு வெள்ளவத்தை சபையர் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தெங்கு உற்பத்தியாளர் சங்கம் மற்றும் செலின்கோ காப்புறுதி நிறுவன ஆகியவற்றின் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இலங்கையில் இவ்வாறான காப்புறுதி அறிமுகப்படுத்தப்படுவது இதுவே முதல் முறையாகும். இந்த விசேட காப்புறுதித் திட்டத்தின் கீழ், தென்னைச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு அவர்களின் விளைச்சலுக்கு பல்வேறு வழிகளிலும் ஏற்படும் சேதங்களுக்கு ஒரு நிலையான காப்புறுதித் தீர்வை வழங்க செலிங்கோ இன்சூரன்ஸ் முன்வந்துள்ளது.

இத்திட்டம் அதிகபட்ச தரமான அறுவடையை உறுதி செய்வதற்கும் அதன்மூலம் உள்ளூர் தேங்காய் உற்பத்தியாளரின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் உதவும் எனவும் இது உள்ளூர் விவசாயத் துறைக்கும் ஒரு வலுவான திருப்புமுனையாக அமையும் என்றும் சிலின்கோ காப்புறுதி நிறுவன உதவிப் பொது முகாமையாளர் தேசப்பிரியா விக்ரமரத்ன கூறினார்.

இப்புதிய திட்டத்தின் கீழ் தென்னை மரங்கள் சூறாவளி, வறட்சி, பூச்சிகள், குரங்குகள் மற்றும் நோய்கள் போன்றவற்றின் தாக்கங்களின்போது காப்புறுதியைப் பெறும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். ஆரம்ப காப்புறுதிக் கட்டணமாக மரமொன்றுக்கு 60 ரூபாவும், மேலும் இழப்பீட்டுக்காக 1000 ரூபாவும் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் கீழ் இழப்பீடு பெறும்போது செலின்கோ இன்ஷூரன்ஸ் ஒரு உத்தரவாதத்தையும் தருகின்றது. "இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன நிபுணர்களின் ஆலோசனைப்படி, இந்த காப்பீட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது, இது பொருத்தமான தொழில்நுட்ப அறிவை வழங்குகிறது, என்று செலின்கோ இன்சூரன்ஸ் கூட்டாண்மைக் கணக்குகள் சிரேஷ்ட முகாமையாளர் லியோனார்ட் சொலமன் கூறினார்.

இப்புதிய திட்டம் தென்னந் தோட்டக்காரர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் பெரும் ஊக்கமளிக்கும் என்று இலங்கை தெங்கு விவசாயிகள் சங்கத் தலைவர் ஜெயந்த சமரக்கோன் தெரிவித்தார்.

# கொவிட் –19 நோய்க்கான துரிதமான பொறுப்புக்கூறலில் லிற்ரோ கேஸ்

ஒரு வருடத்திற்கு முன்னர் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கான முதன்மை பணிகள் செய்யப்பட்டபோது கொவிட் 19 நோய்க்கான துரிதமான பொறுப்புக்கூறல் மேற்கொள்ளப்பட்டது.

ஒரு வருடத்துக்கு முன்னர் முதலாவது கொவிட் 19 முடக்கல் நிலை ஏற்பட்டபோது இது அரசாங்கத்துக்கு ஒரு சவாலான நிலைமையாக காணப்பட்டதுடன் முக்கிய சேவைகளுக்கான வழங்குநர்கள் மக்களுக்கான தடையற்ற விநியோகத்தை உறுதிப்படுத்தினர்.

கொவிட் 19 முடக்கல் நிலைமையின்போது முக்கிய சேவைகளை வழங்குவதற்கான பசில் ராஜபக்ஸவின் தலைமையிலான ஜனாதிபதி செயலணி மக்களுக்கு தினமும் அத்தியாவசிய சேவைகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் முகமாக துரிதமான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக உருவாக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலணியின் வழிகாட்டலின்கீழ், லிற்ரோ கேஸ் லங்காவானது முடக்கல் காலத்தின்போது தமது உற்பத்திகளும் சேவைகளும் நுகர்வோருக்கு கிடைப்பதைஉறுதிப்படுத்தும் சவாலை ஏற்று முக்கிய சேவை வழங்குநராக செயற்பட்டது. தேசிய LPG வழங்குநர் என்ற நிலையில் அது ஒரு விதிவிலக்கான தலைமை மற்றும் செயல்பாடு திறன் என பொறுப்பேற்கப்பட்டது என லிற்ரோ கேஸின் தலைவரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான அனில் கொஸ்வத்த தெரிவித்தார்.

கொவிட் 19 பாதுகாப்பு நெறிமுறைகளின் கீழ் தடையற்ற விநியோகச் சங்கிலியை மீண்டும் செயல்படுத்துவதற்காக 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி விசேட கூட்டம் ஒன்று செயற்பாடுகளை முன்னெடுத்த நிலையில் இந்த செயற்பாடானது மிக உன்னிப்பான திட்டமிடல், பேராற்றல் வாய்ந்த முயற்சி ஆகியவற்றை உள்ளடக்கியநிலையில் முக்கியமான விநியோகங்கள் பாரிய அளவில் மக்களை அடைவதை உறுதிப்படுத்தும் வகையில் இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருந்தது.

ஒவ்வொரு முக்கியமான சேவை வழங்குனருக்கும் இது கடுமையான கொவிட் 19 பாதுகாப்பு செயற்பாடுகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடாக இருந்தது. கவனமாக பாதுகாப்பு அலகுகள் பின்பற்றப்படும் அதே வேளை ஊழியர்களும் விநியோகஸ்தர்களும் ஒன்றிணைக்கப்பட்டனர்.

## கொவிட்-19க்கு எதிராக

# போராடும் வைத்தியசாலைகளுக்கு பிரண்டிக்ஸ் ஊழியர்களின் பங்களிப்பு



இலங்கையில் கொவிட்19 சிகிச்சைகளை வழங்கும் வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களைச் சேர்ந்த முன்னிலை சுகாதார பணியாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், நாடு முழுவதையும் சேர்ந்த பிரண்டிக்ஸ் ஊழியர்கள் ஒன்றுசேர்ந்து, அவர்கள் பாதுகாப்புக்காக ஏற்றுமதித் தரம்வாய்ந்த பாதுகாப்பு அங்கிகள் மற்றும் முகக் கவசங்கள் (PPE) போன்றவற்றை தயாரித்து வழங்க முன்வந்துள்ளனர்.

இந்த PPE அங்கிகளை வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களுக்கு பிரண்டிக்ஸ் ஊழியர்களால் கையளிக்கும் நிகழ்வுகள் கடந்த சில வாரங்களாக நடைபெற்றன.

கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சைகளை வழங்குவதற்கு தமது சுகாதாரத்தை ஆபத்துக்குட்படுத்தி இயங்கும் சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்களுக்கு நன்றிக் கடன் செலுத்தி ஆதரவளிக்கும் வகையில், பிரண்டிக்ஸ் ஊழியர்கள் இந்த ஏற்றுமதித் தரம் வாய்ந்த பாதுகாப்பு அங்கிகள் 490,000 மற்றும் 250,000 முகக் கவசங்கள் போன்றவற்றை தயாரித்து வழங்கினர்.

இந்த அங்கிகள் விநியோகிக்கப்படும் முன்னர் தொற்று நோய்களுக்கான சிகிச்சை வைத்தியசாலையின் சகல நியம பரிசோதனைகளையும் நிவர்த்தி செய்திருந்தன. 23 வைத்தியசாலைகளுக்கு பாதுகாப்பு அங்கிகள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், பிரண்டிக்ஸ் ஊழியர்களால் 9 வைத்தியசாலைகளுக்கு முகக் கவசங்கள் வழங்கப்பட்டன.

கொழும்பில் தொற்றுநோய் சிகிச்சை வைத்தியசாலை, ஹோமகம வைத்தியசாலை மற்றும் நெவில் பெர்னான்டோ வைத்தியசாலை, மட்டக்களப்பு புனானி வைத்தியசாலை மற்றும் கேகாலை ரம்புக்கனை வைத்தியசாலை போன்றவற்றுக்கு பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், இரத்தினபுரியின் கஹவத்த மற்றும் நிவிதிகல வைத்தியசாலைகள், கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த கேகாலை போதனா வைத்தியசாலை மற்றும் வரகாபொல வைத்தியசாலை ஆகியவற்றுக்கும் ராகம கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலைக்கும் முகக் கவசங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 'கிராமத்திற்கு தொலைத்தொடர்பு' முன்னோடி வேலைத்திட்டத்துடன் இணையும் எயார்டெல்



எயார்டெல் லங்கா நிறுவனம் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவுடன் (TRCSL) இணைந்து நாடு முழுவதிலும் தமது வலைத்தளத்தில் காணப்படும் இடையூறுகளை தவிர்த்துக் கொள்வதற்காக 'கிராமத்திற்கு தொலைத்தொடர்பு' வேலைத்திட்டத்திற்காக தமது ஒத்துழைப்புக்களை வழங்குகிறது.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவினால் இரத்தினபுரி மாவட்டத்தில் புதிய 37 கவரேஜ் வலையங்களை நிறுவும் முன்னேற்றகரமான வேலைத்திட்டங்களுடன் இந்த வேலைத்திட்டத்தின் முதலாவது கட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பின்தங்கிய கிராமிய பிரதேசங்களை டிஜிட்டல் மயமாக்கலால் மேம்படுத்துவதன் மூலம் அனைத்து நபர்களுக்கும் அவர்களது அன்றாட வேலைகளுடன் தொடர்புபடுத்தும் வகையில் மிகவும் சிறந்த விதத்தில் அதனை மேற்கொள்வதற்கும் மற்றும் எவ்வித இடையூறுகளும் இன்றி தொடர்ச்சியாக தொலைத்தூர கற்றல் மற்றும் நெகிழ்வான சேவை தேவைகளுக்கும் இது உதவியாக அமையும்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் இணைந்து கருத்து தெரிவித்த இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஒஷத சேனாநாயக்க, 'கிராமத்திற்கு தொலைத்தொடர்பு' அங்குரார்ப்பண வேலைத்திடத்தின் கீழ் இலங்கை எதிர்காலத்தில் தொழில்நுட்பம், தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் அதற்குரிய சேவைகளுக்காக டிஜிட்டல் மயமாக்கப்பட்ட வலய கேந்திரமாக வேகமாக முன்னேற்றுவதற்கு தேவையான அடித்தளத்தை அமைக்கும் வகையில் நாம் இன்று தைரியமான முடிவொன்றை எடுத்துள்ளோம். இதனூடாக பின்தங்கிய கிராமப்புற பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு இடையிலுள்ள டிஜிட்டல் இடைவெளியையும் குறைக்க முடிந்துள்ளது. 2021 நிறைவடையும் போது இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக 10 மாவட்டங்களை நிர்வகிப்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளதுடன் 2022 இறுதிக்குள் நாடு முழுவதிலும் 100%க்கு வரை கவரேஜைப் பெற்றுக் கொடுப்பதற்கு எம்மால் முடியுமென நாம் நம்புகின்றோம்.' என தெரிவித்தார்.

# EVA அறிமுகப்படுத்தும் புதிய பக்டீரியா எதிர்ப்பு வலு கொண்ட சுகாதார அணையாடை



இலங்கையின் முன்னணி சுகாதார அணையாடை வர்த்தகநாமமான Eva, பெண்களுக்கு அவர்களின் மாதவிடாய் காலத்தின் போது பாதுகாப்பான, விரும்பத்தகாத வாடையற்ற மற்றும் தொற்று அல்லாத அனுபவத்தை வழங்குவதற்காக கிரீன் டீ சாரம் சேர்க்கப்பட்ட, பக்டீரியா எதிர்ப்பு வலு அடுக்கினைக் கொண்டு மேம்படுத்தப்பட்ட புத்தம்புதிய அடையாணை உற்பத்தி வரிசையை அண்மையில் அறிமுகம் செய்துள்ளது. பக்டீரியா எதிர்ப்பு அடுக்கானது தொழிற்துறையில் முதன்முதலாக அறிமுகமாக்கப்பட்டுள்ளதுடன், நாட்டில் பெண்களின் சுகாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதில் புரட்சிகரமான மாற்றத்திற்கு வழிகோலியுள்ளது.

உலகெங்கிலும் மாதவிடாய் வயதில் பல பில்லியன் கணக்கான பெண்களும், பெண் பிள்ளைகளும் உள்ள நிலையில், 75 ஆனோர் தமது வாழ்நாளில் யோனி நுரைமம், பக்டீரியா தொற்றுக்கள் அல்லது மாதவிடாய் வாடை போன்றவற்றால் பாதிக்கப்படுகின்றனர்.

Eva சுகாதார அணையாடை உற்பத்திகள் கொண்டுள்ள புதிய பக்டீரியா எதிர்ப்பு அடுக்கு பக்டீரியா மற்றும் பூஞ்சை போன்ற நுண்ணுயிரிகளை ஈர்க்கவும், கொல்லவும் அதிநவீன நுண்ணுயிர் எதிர்ப்பு செயற்பாட்டு தொழில்நுட்பத்தை உபயோகிக்கின்றன.

உயிர் வளியேற்ற எதிர்ப்பாற்றல் நிரம்பிய கிரீன் டீ சாரமானது மாதவிடாய் வாடையை இல்லாமல் செய்ய உதவ, பக்டீரியா எதிர்ப்பு அடுக்கினுள் உட்செலுத்தப்பட்டுள்ளது.

மிகவும் உறிஞ்சக்கூடிய பாதுகாப்பு மூலப்பொருளின் 6 அடுக்குகள் மற்றும் மிகவும் கூடுதலான திரவ உறிஞ்சல் முறைமை, உயர்த்தப்பட்ட மையம் மற்றும் வேகமாக உறிஞ்சும் மேற்தாள் ஆகியவற்றைக் கொண்ட இப்புதிய பக்டீரியா எதிர்ப்பு அடுக்கானது 100% மேம்பட்ட உறிஞ்சும் ஆற்றலைக் கொண்டுள்ளதால் பெண்கள் எந்த வேலைகளையும் சௌகரியத்துடனும், நம்பிக்கையுடனும் முன்னெடுக்கும் ஆற்றலை அவர்களுக்கு வழங்குகின்றது.



# வாரபலன்

11.04.2021 - 17.04.2021

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா

ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

ஏப்ரல் 13ஆம் திகதி, மிதுன ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிநாதனாகவும், அஷ்டமாதிபதியாகவும் விளங்கும் செவ்வாய், சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது இழப்புக்களை ஈடு செய்ய வழிபிறக்கும். என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம்,இப்பொழுது பலமடங்கு விலை உயரும். நீதிமன்ற வழக்குகள் சாதகமாக முடியும். பணிநீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு, மீண்டும் பணியில் சேர வாய்ப்பு வந்து சேரும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கக்கூடும்.

## ரிஷபம்

ஏப்ரல் 13ஆம் திகதி, மிதுன ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். ஓரளவு நன்மை செய்யும் காலமாகவே இது அமையப் போகின்றது. விரயாதிபதி செவ்வாய் தன ஸ்தானத்திற்கு வரும் பொழுது விராயத்திற்கு ஏற்ப தனலாபம் வந்துகொண்டே இருக்கும். வெளிநாட்டில் இருந்து அனுகூலமான தகவல் வந்து சேரும். உத்தியோகத்தில் மாறுபட்ட சலுகைகள் கிடைக்கப்பெறலாம்.

## மிதுனம்

ஏப்ரல் 13ஆம் திகதி, மிதுன ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிக்கு 6,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் விரய ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது பூமி விற்பனையால் இலாபம் கிடைக்கும் . உத்தியோக மாற்றம் உறுதியாகும். சகோதரர்கள், உங்கள் எண்ணங்களைப் பூர்த்தி செய்ய முன்வருவர். மாற்று மருத்துவம் கைகொடுக்கும். திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள்.

## கடகம்

ஏப்ரல் 13ஆம் திகதி, மிதுன ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிக்கு 5,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் விரயஸ்தானத்திற்கு வரும் பொழுது தொழில் மாற்றம், உத்தியோக மாற்றம் ஏற்படலாம்.புதிய சொத்துக்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புக்கள் கைகூடும்.

## சிம்மம்

ஏப்ரல் 13ஆம் திகதி, மிதுன ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிக்கு யோகம் செய்யும் கிரகம் செவ்வாய் ஆகும். 4,9 க்கு அதிபதியான செவ்வாய் லாப ஸ்தானத்திற்கு வரும் பொழுது மிகுந்த நன்மைகளை வழங்கும். தொழில் வியாபாரம் சூடுபிடிக்கும். அரசாங்க ஆதரவு தேடி வரும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வும், பதவி உயர்வும் வரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். பெற்றோர்களின் ஆதரவு எதிர்பார்த்த அளவு கிடைக்கும். பிள்ளைகளின் கல்விநிலை சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும்.

## கன்னி

ஏப்ரல் 13ஆம் திகதி, மிதுன ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிக்கு 3,8ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் 10 ஆம் இடத்திற்கு வரும் பொழுது தொழில் மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் வரலாம். வரும் மாற்றங்களை எதிர்கொள்ளும் சூழ்நிலையும் அமையும். குறிப்பாக இக் காலத்தில் சம்பந்தப்பட்ட வகையில் சில பிரச்சினைகள் உருவாகலாம். மிகுந்த கவனத்துடன் நடந்துகொள்ளவேண்டிய நேரமிது.

## துலாம்

ஏப்ரல் 13ஆம் திகதி, மிதுன ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிக்கு 2,7ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் அஷ்டமத்தில் இருந்து விலகுவது நன்மை தான். இப்பொழுது பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். சொத்துக்கள்,வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டு. தந்தைவழி உறவிற்கு தடைவிதித்தவர்கள் தானாக விலகுவர். தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்துகொள்வார்கள்.

## விருச்சிகம்

ஏப்ரல் 13ஆம் திகதி, மிதுன ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிநாதன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் எதைச்செய்தாலும் கொஞ்சம் யோசித்து செய்ய வேண்டும். பார்க்கும் தொழிலில் தேவை. குடும்பத்தில் உள்ளவர்களின் கருத்து அறிந்து செயல்படுவது சிறந்தது. பணிபுரியும் இடத்தில் சகப்பணியாளர்களின் அனுசரிப்பு குறைத்தாலும், மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். ஒருசிலருக்கு உத்தியோக மாற்றங்கள் ஏற்படலாம்.

## தனுசு

ஏப்ரல் 13ஆம் திகதி, மிதுன ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிக்கு 5,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். புத்திர ஸ்தானாதிபதி, சப்தம ஸ்தானத்திற்கு வரும் பொழுது பிள்ளைகளின் கல்வி, கல்யாண முயற்சி வெற்றிபெறும். புதிய சொத்துக்கள் வாங்குவது பற்றி சிந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். வாகனம் வாங்க மற்றும் வீடு கட்ட விண்ணப்பித்து இருந்தால் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

## மகரம்


ஏப்ரல் 13ஆம் திகதி, மிதுன ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிக்கு 6ஆம் இடத்திற்கு செல்லும் செவ்வாய், ஆரோக்கிய தொல்லைகளை ஏற்படுத்தலாம். உடன்பிறப்புகளுக்கு ஏற்பாடு செய்த உத்தியோகம் கிடைத்து உதிரி வருமானம் கிடைக்கலாம். வழக்குகள் முடிவுக்கு வரும். கட்டிடப்பணியில் இருந்த தொய்வு அகலும். பொதுநலனில் ஈடுபடுபவர்களுக்கு புதிய பொறுப்புகள் தேடி வரலாம்.

## கும்பம்

ஏப்ரல் 13ஆம் திகதி, மிதுன ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிக்கு 3,10ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். சகாய ஸ்தானம், தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாய். பஞ்சம ஸ்தானத்திற்கு வரும் பொழுது தொழில் வளம் சிறக்கும். தொடர்கதையாக கடன் சுமை குறையும். அதிகாரபதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு பொதுவாழ்வில் ஈடுபடுவீர்கள். புதிய முயற்சிகளுக்கு வெற்றி நிச்சயம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உன்னதமான நேரம் இது.

## மீனம்

ஏப்ரல் 13ஆம் திகதி, மிதுன ராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் ராசிக்கு 4ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் செவ்வாயால் வசதி வாய்ப்புக்கள் அதிகரிக்கும். பயணங்களால் நன்மை உண்டு. பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். வெளிநாடு சம்பந்தப்பட்ட வகையில் செய்த முயற்சிகள் அனுகூலமாக அமையும். வீட்டிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும்.



# சாதனையாளர் டொமினிக் ஜீவா

அந்த நாட்கள் இன்றும் எனக்கு ஞாபகத்திலுண்டு. எனக்கு அப்போது பதினைந்து வயதிருக்கும்.

கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியில் படிக்கச் சேர்ந்த காலம். மூத்த சகோதரர் நாவேந்தன் அக்கல்லூரியில்தான் அப்போது ஆசிரியராகக் கடமையாற்றினார்.

அந்தக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய திருமதி சற்குணசிங்கம் வீட்டிலிருந்து கல்லூரிக்குச் சென்றுவந்தேன். வெள்ளிக்கிழமை மாலை கல்லூரி முடிந்ததும் எனது ஊரான புங்குடுதீவு செல்வதற்காக யாழ்ப்பாணம் வருவேன். நாவேந்தன் அண்ணரும் உடன் வருவார்.

அவருடன் பூபாலசிங்கம் புத்தகக்கடை செல்வேன். அங்கு அவர் இலக்கிய அரசியல் நண்பர்களைச் சந்தித்துப் பேசிக்கொள்வார். இன்றைய யாழ் நவீன சந்தைக் கட்டிடம் அப்போது கட்டப்படவில்லை. அவ்விடத்தில்தான் பஸ் நிலையம் இருந்தது.

பஸ் நிலையத்திற்கு மேற்குப்புறமாகக் கஸ்தூரியார் வீதியின் தொடக்கத்தில் அமைந்துள்ள தகரக்கூரைக் கடைகளின் நடுவில் பூபாலசிங்கம் புத்தகசாலை இருந்தது.

பூபாலசிங்கம் யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர். நாவேந்தன் தமிழரசுக்கட்சியின் முக்கிய பிரமுகர். ஆனாலும் இருவரும் நண்பர்கள்.

பூபாலசிங்கம் புத்தகசாலையில் பல அரசியல் கருத்துக்கொண்ட பிரமுகர்கள் எழுத்தாளர்களை மாலை வேளையில் காணலாம்.

அப்படி ஒருநாள் தூய வெள்ளை 'நாசனல்"; உடையில் வந்தஇ பார்வைக்கு ஓர் ஆசிரியர் போன்ற ஒருவருடன் நாவேந்தன் உரையாடிக்கொண்டிருந்தார். பின்னர் இருவரும் அருகில் ஆஸ்பத்திரி வீதியிலிருந்தஇ எங்கள் ஊரைச் சேர்ந்தவரின் 'பிருந்தாவனம்" உணவகத்திற்கு சென்றனர். நானும் உடன் சென்றேன்.

அவர்கள் இருவரும் தேநீர் குடித்தவாறு 'சுதந்திரன்" பத்திரிகையில் வந்த கட்டுரை சம்பந்தமாகப் பேசிக்கொண்டமை ஞாபகம்.

என்னைத் தம்பியென்று ஜீவாவிடம் நாவேந்தன் கூறிக்கொண்டார்.

அந்தக் காலத்தில் முற்போக்கு எழுத்தாளர்களைக் காரசாரமாகத் தாக்கி நாவேந்தன் வாரந்தோறும் தொடர்ந்து சுதந்திரனில் எழுதிவந்தார்.

பின்னர் யாழ்நகரில் காணும்போதெல்லாம் ஜீவாவுடன் ஒருசில வார்த்தைகள் பேசிக்கொள்வேன். அவரும் தம்பி என்று சொல்லிக் கதைப்பார்.

அவர் சைக்கிளில் வரும்போதுஇ என்னை எங்கு கண்டாலும் இறங்கி இரண்டொரு வார்த்தைகள் பேசுவார். சைக்கிளில் கொழுவியிருக்கும் 'பிளாஸ்ரிக்" பையிலிருந்து 'மல்லிகை"யை எடுத்துத் தருவார். பணம் கொடுத்து வாங்குவேன். மல்லிகைக்கு ஏதும் எழுதும் எனச் சொல்வார்.

கோப்பாயில் படிக்கின்ற காலத்திலிருந்தே அண்ணரிடம் இருந்த முற்போக்கு எழுத்தாளர்களின் நூல்கள் பத்திரிகைகளில் வெளிவந்த படைப்புகள் பலவும் தொடர்ந்து படித்துவந்தேன்.

கல்லூரியில் எனது ஆசிரியர்கள் இருவர் இடதுசாரிகள். லங்கா சம சமாஜக் கட்சியின் ஆதரவாளர்கள்.

அவர்களோடு கொஞ்சம் அரசியல் பேசிக்கொள்வேன். அவர்கள் தமது சக ஆசிரியரான நாவேந்தனின் தமிழரசுப் பாதை பிழையெனவும் என்னை மார்க்சிஸம் கற்க வேண்டுமெனக் கூறியதெல்லாம் ஞாபகத்திலுண்டு.




அக்காலத்தில் வடபகுதியை உலுக்கிய தீண்டாமைக் கொடுமைக் கெதிரான போராட்டங்கள் குறித்த செய்திகளை உற்றுக் கவனித்துவந்தேன்.

சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சி வழிகாட்டுதல்களில் நடைபெற்ற போராட்டங்களும் அக்கட்சி ஏடான 'தொழிலாளி" பத்திரிகை தந்த போதமும் என்னை அந்தப் பாதைக்கு இட்டுச்சென்றது.

அந்தப் பாதையில் இயங்கிய போராளியும் எழுத்தாளருமான கே. டானியலுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டேன்.

கம்யூனிஸ்ட் கட்சி பிளவடைந்தபின் டொமினிக் ஜீவா சோவியத் சார்பான நிலையெடுத்திருந்தார்.

இந்தப் பிளவு இரு பிரிவினரிடையேயும் மோதல் போக்கையும் ஏற்படுத்தியிருந்தது.

சோவியத் சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியினர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசில் இணைந்து மந்திரிப் பதவியும் பெற்றிருந்தனர்.

முன்னர்; வடபகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியை அறிமுகப்படுத்தவென கட்சியின்; தலைமைப்பீடத்தால் பணிக்கப்பட்டுஇ யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்பட்ட 'கல்வியாளர"; மு. கார்த்திகேசன் யாழ் விக்ரோறியா வீதியில் ஒரு வாடகை வீட்டில் வசித்துவந்தார். அந்த வீடே கட்சி அலுவலகமாகவிருந்தது.

அந்தக் காலத்தில் திராவிடக் கழக கொள்கையில் ஈடுபாடுகொண்டிருந்த டொமினிக், டானியல், பொன்னுத்துரை ஆகிய வாலிபர்கள் கார்த்திகேசனின் அறிவாற்றலால் கவரப்பட்டார்கள்.

அவ்வேளை இந்தியாவில் அரசின் தேடுதலுக்குள்ளான நிலையில் தமிழகத்திலிருந்து தலைமறைவாக இலங்கைவந்து கார்த்திகேசன் வீட்டில் தங்கியிருந்தஇ கம்யூனிஸ்ட் தலைவரும் இலக்கியவாதியுமான ஜீவானந்தம் தொடர்பு இந்த வாலிபர்களுக்கு ஏற்பட்டது.

ஜீவானந்தத்தின்; அரசியல்இ இலக்கியக் கருத்துகள்இ அறிவுரைகள் இந்த வாலிபர்களை மார்க்சிஸ வழியில் சிந்திக்கத் தூண்டியது. நிறைய மார்க்சிஸ நூல்களின் மொழிபெயர்ப்புகள்இ இலக்கிய நூல்களைத் தேடிக் கற்றார்கள்.

ஜீவாவின் பற்றுதலினால் டொமினிக் தன் பெயரையே டொமினிக் ஜீவா என மாற்றிக் கொண்டார்.

அந்தக் காலத்தில் ஈழகேசரிஇ; சுதந்திரன் பத்திரிகைகள் சிறுகதைகளைப் பிரசுரித்து எழுத்தாளர்களுக்கு ஊக்கமளித்து வந்தன.

டானியல் அதிக கதைகளை ஈழகேசரியில் எழுதிவந்தார். சுதந்திரனிலும் எழுதினார்.

டொமினிக் ஜீவா சுதந்திரனில் எழுதிவந்தார்.

இலங்கை சாகித்திய மண்டலத்தின் சிறுகதைக்கான பரிசு முதன்முதலில் ஜீவாவுக்குக் கிடைத்தது.

முற்போக்கு சக்திகளுக்கு எதிரானஇ சாதிவெறி கொண்டவர்களின் நச்சரிப்புக்கும் ஜீவா ஆளானார்.

யான் டானியலுடன் இணைந்து அரசியல்இ இலக்கியப் பாதையில் இயங்கியதால் ஜீவாவுடன் அரசியல்இ இலக்கியம் குறித்து அதிகம் பேசிக்கொள்வதில்லை.

மல்லிகையைத் தரும்போது வாங்கிக்கொள்வேன். ஒருசில வார்த்தைகள் சுகநலன் விசாரிப்பு அவ்வளவுதான்..!

யாழ் சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளரும்இ அகில இலங்கைச் சித்த ஆயுர்வேத வைத்திய சங்கச் செயலாளருமானஇ எனது மருத்துவ ஆசானும் நண்பருமான டாக்டர் வி. N;க. விஸ்வலிங்கம் (விஸ்வபாரதி) தீவிர இலக்கிய வாசகர். தமிழகத்திலிருந்து வெளிவந்த 'கலைக்கதிர்" அறிவியல் சஞ்சிகைஇ ஈழநாடு மற்றும் பல சஞ்சிகைஇ பத்திரிகைகளுக்கு ஆய்வுக் கட்டுரைகள் எழுதிவந்தவர்.

யாழ் கன்னாதிட்டி வீதியிலுள்ள அவரது வைத்தியசாலையில்இ என் கையிலிருந்த மல்லிகையை வாங்கிப் பார்த்தார். நல்ல இலக்கிய முயற்சி என்று பாராட்டினார். தொடர்ந்து மல்லிகை வாங்க விருப்பமா எனக் கேட்டேன். ஆமாம் என்றார்.


புதிய பஸ் நிலையம் முன்பாகஇ மூலைக் கடையாகஇ ஆஸ்பத்திரி வீதி நோக்கி அமைந்துள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையில் அதிகமாக டொமினிக் ஜீவாவைக் காண்பதுண்டு;.

அவ்வாறு ஒரு நாள் முற்பகல் அவரைக் கண்டபோதுஇ கன்னாதிட்டியிலுள்ள 'விஸ்வபாரதி" வைத்தியசாலை டாக்டர் மல்லிகை பெற்றுக்கொள்ள விரும்புகிறாரெனச் சொன்னேன்.

பக்கத்தில் உள்ள வைத்தியசாலை தானே போய்ச் சந்திக்கிறேன் என்றார்.

அன்று மாலை விஸ்வபாரதி வைத்தியசாலையில் நான் டாக்டரோடு பேசிக்கொண்டிருந்தபோது ஜீவா அங்கு வந்தார். நான் ஜீவாவை டாக்டருக்கு அறிமுகஞ் செய்தேன்.

ஜீவா மல்லிகையைக் கொடுத்தார். மேலதிகமாகப் பணம் கொடுத்து டாக்டர் வாங்கினார்.



'ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு உதவும் நல்ல முயற்சி. தொடர்ந்து வெளியிடுங்கள். மாதந்தோறும் கொண்டுவந்து தருவீர்களா..? எனக்குப் புத்தகசாலை போய்வாங்க நேரங்கிடைப்பது அரிது." என டாக்டர் சொன்னார்.

'தவறாமல் கொண்டுவருவேன்.." எனச் சொல்லியவாறு ஜீவா மகிழ்ச்சியுடன் புறப்பட்டுச் சென்றார்.

பின்னர்இ ஜீவா சொல்லியவாறே மல்லிகையை டாக்டருக்குத் தவறாது கொடுத்து வந்தார். டாக்டரும் பார்த்துப் பாராது அதிகளவு பணம் கொடுத்து வாங்கி ஜீவாவைக் கௌரவித்து வந்தார்.

சில வருடங்களுக்குப்பின் டாக்டர் இளவயதில் மரணமாகியமை எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தியது.

டாக்டரின் இறுதிக்கிரிகைகள் யாழ் வில்லூன்றி மயானத்தில் நடைபெற்றபோதுஇ அங்கு கவலை தோய்ந்த முகத்துடன் ஜீவா கலந்துகொண்டு அஞ்சலியுரையாற்றியமை ஞாபகத்திலுண்டு;.

அன்றுஇ டாக்டரைப்பற்றி சிறு குறிப்பு மல்லிகைக்கு எழுதித் தருமாறு கேட்டார். நான் யோசிப்பதைப் பார்த்துவிட்டு உமது நண்பரைப்பற்றித்தானே புனைபெயரிலாவது எழுதித் தாருமெனக் கேட்டார்.

— வி.ரி.இளங்கோவன்

என் ஆசான் நண்பன் விஸ்பாரதி என்னைப் 'பேப்பர்" என்றுதான் அழைப்பதுண்டு. பத்திரிகை வானொலி செய்தியாளராக யான் செயற்பட்டதால் அப்படி அழைப்பார்.

'நண்பன் பேப்பர்" என்ற புனைபெயரில் டாக்டரைப் பற்றி சிறு கட்டுரை எழுதிக் கொடுத்தேன். என்னிடமிருந்த டாக்டரின் படத்தை 'புளக்" செய்தும் கொடுத்தேன்.

அழகாகப் படத்துடன் அக்கட்டுரையைப் பிரசுரித்தார். ஓர் இலக்கிய வாசகனுக்குஇ தமிழ் மருத்துவ ஆய்வாளனுக்குரிய கௌரவத்தை மல்லிகை வழங்கியது.

எழுபதுகளின் முற்பகுதிஇ கொழும்பு பொரளைச் சந்தியில் 'வாட் பிளேஸ்" வீதியிலுள்ள பிரபல பிடவைக் கடையில் மனேஜராகவுள்ள எனது அக்கா மகனுடன் உரையாடிக்கொண்டிருந்தேன். அவனும் ஓர் இலக்கியப் பித்தன். தீவிர வாசகன்.

அவ்வேளை அக்கடை முன்பாக ஜீவா வந்தார்.

'எங்கே இந்தப் பக்கம்" என விசாரித்தேன். பக்கத்திலுள்ள உறவினர் ஒருவருக்கு மல்லிகை கொடுக்க வந்ததாகச் சொன்னார்.

இதற்குள் அக்கா மகன் வந்து தன்னைத்தானே அறிமுகப்படுத்திக்கொண்டான். 'வாங்கோ.. தேத்தண்ணி குடிப்போம்.." என அழைத்தான்.

'உங்கள் குடும்பம் எல்லோரும் இலக்கிய வாசனையுள்ளவர்களாக இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது" என்றார்.

(29 ஆம் பக்கம் பார்க்க)

## வாழ்வாதாரமா சேதாரமா 173



தமிழ்க் கவி பேசுகின்றார்

# பொதுமக்கள் முன்னிலையில் விசிறப்படும் புலுடாக்கள்

உலகம் முழுதுக்குமான சகல அரசாங்கங்களும் எந்த அபிவிருத்தி வேலைகளை செய்தாலும் நாட்டின் முன்னேற்றத்துக்காக பாடுபட்டாலும், அவர்களுக்கு கீழுள்ள அதிகாரிகளின் ஒத்துழைப்பு இல்லாது போனால் மக்களின் செல்வாக்கை பெறவே முடியாது. எல்லோரும் சொல்வதுதான் 'ஊழல் அற்ற அரசாங்கத்தை நிறுவுவோம்'. என்பது

ஆனால் என்ன முயன்றாலும் அது மட்டும் முடியாது. 'அது எப்பிடிங்க தேனில கைய விட்டவன் புறங்கைய நக்காம இருப்பான்' அதுவும் இப்போதுள்ள இடியப்ப சிக்கலில் மக்களுக்கான புனர்வாழ்வுப்பணிகள் வீட்டுத்திட்டம், வாழ்வாதார உதவி, அபிவிருத்தி திட்டங்கள் வீதி திருத்தம், சந்தை, குளம் பூங்கா போதாதற்கு சமூகநல வேலைகள் என்று எதை எடுத்தாலும். பணம்புழங்கும் வேலைகள் தானே. எமது மக்கள் சாமிக்கும் பூதத்துக்குமே புலுடா காட்டும் திறமைசாலிகள். இந்த புலுடா என்ற சொல் எங்கிருந்து வந்தது என்றால் அது ஒரு தப்பான மதக்கருத்தாக எழுதப்பட்டதாம்.அதற்கு பொலுடா என பெயரிட்டிருந்தார்கள். அது விரைவிலேயே அழிந்தும் விட்டது. அன்றிலிருந்து பொய்க்கதை புனைவதை புலுடா என்று சொல்லும் வழக்கம் வந்தது. நான் சொல்ல வருவது என்ன வென்றால் இந்த அரச அதிகாரிகளின் நடவடிக்கைகள் பொதுமக்கள் முன்னிலையில் விசிறப்படும் புலுடாக்கள்தான்.

ஒரு பிள்ளையை அப்பா ஆசிரியர் என்போர் பாராட்டலாம். ஆனால் தந்தையை மகனோ ஆசிரியரை மாணவனோ விருது வழங்கி கவுரவிக்க முடியுமா? கவுரவிக்க முடியும். விருது வழங்கும் தகுதி அந்தமாணவனுக்கு அல்லது மகனுக்கு உண்டா. அப்படி வழங்கினால் அதற்கு என்ன பெறுமதி வடிகட்டப்பட்ட லஞ்சம் என்றுதான் சொல்வேன். கீழோர் மேலோரை பூசித்தால் அவர்களிடமிருந்து எதாவது வரத்தை யாசிக்கிறார்கள் அல்லது யாசித்தார்கள் என்பது கண்கூடு.

இதுதான் இதேதான் மேலதிகாரிகள் தமக்கு கீழுள்ளவர்களை கண்டுக்காமல் தடவிச் செல்வதும் குற்றம் வெளிப்படும்போது தன் கீழுள்ள அதிகாரிகளை காப்பாற்றி முடிந்தால் பதவி உயர்வை வழங்கி வேறிடத்துக்கு அனுப்புவதும் தாராளமாக நடக்கிறது. டிக்கற் போடாமல். பயணிகளை ஏற்றிச் சென்றதால் வேலையை இழந்த ஒரு மாஜி நடத்துநர் சொன்னார். நான் மட்டுமா அனுபவித்தேன் மேலுள்ள எல்லாருக்கும்தான் கமிசன் குடுத்தேன் கடைசியில காலவாரி விட்டாங்கள்." என்று. எனக்கு தெரிந்த ஒரு சமூக சேவையாளர் ஒருவர் அவசரமாக வந்து முக்கியமான வேலைத்திட்டம் வருகிறது. இப்பதான் கச்சேரியில இருந்து எனது நண்பர் ஒருவர் போன் செய்தாh.; ஒரு மணிக்கு முதல் ஒப்பம் போடோணும். என்று சங்க செயலாளரை கூட்டிக்கொண்டு ஓடினார். ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. அதே சமயம் இன்னுமொரு ஓப்பந்த வேலையையும் அவர்களை செய்யும்படி கேட்டார் அந்த ஒப்பந்தத்துக்கு பொறுப்பானவர். இவர் மறுத்தார். " அட சங்கத்துக்கு கமிசன் வரும் தானே என்று கூறவே இவர்கள் அதற்கும் ஒப்பமிட்டார்கள். ஆனால் ஆறுமாதம் கடந்தும் அது என்ன வேலை என்பது சங்கத்து தலைவருக்கோ செயலருக்கோ தெரியாது. அவர்கள் கேட்கும் போதெல்லாம். 'இருங்க சொல்லுவம் தானே' என்ற பதிலே வந்தது. காசோலை வந்தது. அதை சங்கத்தின் கணக்கில் வரவு வைத்தார்கள். எல்லாமே எங்கட ஆபீஸர் தானே என்றுதானே. அத்தோடு பணம் பத்திரமாக வங்கியில் கிடந்தது. வருடமுடிவில்தான் அந்த பணம் அதிகாரிகளின் துஷ்பிரயோகம் என்பது தெரிய வந்தது. சங்க தலைவரை மிக மோசமாக அதிகாரிகள் திட்டினார்கள். வேலை தெரியாமல் ஒப்பந்தம் செய்தது தப்புதானே . அவர்கள் பொறுத்துக் கொண்டார்கள் .



ஆனால் எந்த வேலைத்திட்டத்தையும் அதுபற்றி முன்னோக்கி, பலகோண ங்களில் படம் எடுத்து, அதிகாரிகள் பார்த்து அங்கீகரித்து அதன்பின்னரே அதை வழங்குவதற்கான ஆணையை வழங்கும் அதிகாரி என்ன செய்தார். புரியவில்லை. சங்கம் கேட்ட உடன் கொடுப்பாங்களா என்ன. ஆத்தில போறதண்ணி அண்ணகுடி தம்பிகுடி" அவ்வளவுதான். எந்த குற்றமும் செய்யாமல் திட்டு வாங்கிய சங்க உறுப்பினர்கள் என்ன செய்ய முடியும். இப்படி அனுபவம் இன்னும் ஏராளமானவர்களிடம் இருக்கும்.

ஆனால் விசயம் வெளியான உடனேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இருவரும் பதவி உயர்வு பெற்றுயர்ந்தனர். சம்பளமேயில்லாத சங்க உறுப்பினர்கள். தமது பதவியை விட்டுவிலகினர். சங்கம் மூடிக்கிடக்கிறது.

இந்த வகையிலான நற்பணிகளை செய்பவர்கள். தமது பெயரை காப்பாற்றிக் கொள்ள தமது மேலதிகாரிகளுக்கு விருது வழங்கி கையில் வைத்துக் கொள்வதும் நடக்கிறது. இவர்களது பெரும் ஆதரவில், பெரும் பெரும் பணமுடையோர் குளங்களை ஆக்கிரமித்து மாடிக்கட்டடங்களை கட்டியிருப்பதும். அடைமழை காலத்தில் அவசரப்பட்டு குளத்து நீரை வெளியேற்றி (வெள்ளத்தை தடுக்கிறார்களாம்) தமது வீடுகள் வெள்ளத்துள் மூழ்காவண்ணம் காத்தலும் நடக்கிறது.

எங்காவது ஒரு குளத்திற்குள்ளாவது உண்மையிலேயே வீடற்ற நிலமற்றவர்கள் ஆக்கிரமித்திருக்கிறார்களா? என்றால் கிடையவே கிடையாது ஆனால் இந்த ஆக்கிரமிப்பாளர்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்களே உண்டு. என்பதுதான் அரச அதிகாரிகளின் திறமைக்கு சான்று.

வாரிசே இல்லாத ஒரு காணியை ஒருவர் ஆக்கிரமித்து வைத்துள்ளார். அதே ஊரில் பொது காரியங்களுக்காக அந்த நிலத்தை பலதடவை பல சங்கங்கள் கேட்டுமுள்ளன. அதிகாரிகளின் காது செவிடாகவே இருந்தது. அண்மையில் அதன் முன்பாக குடியிருந்தவர் தனக்கு சொந்தமான நிலத்தை துண்டு துண்டாக விற்றுவிட்டுத்தான் அந்த முன்காணியை ஆக்கிரமித்துள்ளார்.அந்தக்காணியை அவருக்கே பாத்தியதை செய்து தருவதாக அடிமட்ட அதிகாரியொருவர் கணிசமான தொகையை பெறும்போது கையுங்களவுமாக மாட்டியுள்ளார். அவருக்கு அந்த காணியை மாற்றும் அதிகாரம் கிடையாது. அப்போ, அவர் யாரை நம்பி அதை செய்திருப்பார். கடவுளுக்கே வெளிச்சம்.

அதே ஊரில் ஐம்பத்தாறு காணிகள் விற்பனையாகியிருக்க ஒரு அப்பாவி க்கெதிராக காணியை விற்றதாக குற்றம்சாட்டி நிலத்தின் பத்திரத்தை ரத்துச்செய்ததற்கு இடையிலும் பல பூசாரிகளும் (ஆ)சாமிகளும் இருப்பார்கள் என்பது இப்போது துலக்கமாகிறது.. சட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானது. சட்டத்தின்முன் சகலரும் சமம் என்பதும் வெளிப்படை ஆனால் இந்த வகை அதிகாரிகள் தம்மை நம்பியுள்ள தேசத்தின் அரசாங்கத்தையே ஏமாற்றி வருவதை என்னென்பது.

மிக அருமையான திட்டங்களை எமது அரசாங்கம் எடுத்து வருகிறது. திட்டங்கள் செயற்படுமாயின். அதாவது சட்டப்படி செயற்படுமாயின் நாடு வசந்தத்தை வரவேற்கும். காலம் வெகு தொலைவில் இல்லை. அதேசமயம் இந்த ஊழல்களின் வேரை அறுத்தாகவேண்டும்.

## நினைவின் தாழ்வாரங்கள்

– நபீல்

# பூணாரம்



மரங்களில் மிச்சமிருந்த மழை அதிகாலையின் பொன்னிற ஒளியில் வெள்ளி மணிகளாக மினுங்கியது. அவ்வப்போது கிளர்ந்து அடங்கும் காற்றில் சிணுங்கி உதிரும் மழைத் துளிகளைப் பார்த்தபடியிருந்தேன். உறவுக்காரக் கல்யாணம் ஒன்றுக்கு அணிந்து கொண்டு செல்ல அவசர அவசரமாக நகை சேகரிப்பதில் உம்மா ஆர்வம் கொண்டிருந்தார். பக்கத்து வீட்டு கைறுன் லாத்தாவிடம் கை நீட்டி வாங்கும் நகைகளைக் கண்டு விட்டால் வாப்பா கொதித்தெழுவார். அந்நேரம் உம்மா 'இனிமே என்னை எங்கேயும் கூப்பிட வேணாம்; நான் வரலைன்னா வரல்ல.." அறைக்குள் புகுந்து கதவடைத்துக் கொள்வார். அறை என்பது அவரளவில் தனக்குத் தானே புடம் போடும் மிகப்பெரிய கூடமாக உணர்ந்திருக்க வேண்டும். அதற்குள் நிறையப் புத்தகங்கள் இருந்தன; பெண் புத்தி மாலை, நல்லதங்காள் கதை, ஆத்திசூடி, ஸலவாத்து மாலை, குணங்குடி மஸ்தார் பாடல்கள், தொழுகவுடை, வெள்ளக் காவியம், அரபுத் தமிழ் நூல்கள் என இரண்டு மூன்று றைஹான் பலகைகளில் குவிந்திருக்கும். சற்றே உயரத்தில் அல்குர்ஆன் வீற்றிருக்கும். அங்கேதான் முழங்காலில் முண்டி முண்டித் தவழும் பெரியம்மா இருப்பார். தட்டுப்படும் யாவற்றின் மீதும் நெருடிக் கொண்டிருந்த அவர் கரங்களைப் பற்றி அழுது தீர்ப்பார். உம்மாவின் கண்ணீர் வாப்பாவை மீள வரவழைக்கும். "நான் சம்மதிக்கிறேன். என்ற அவரின் குரலுக்கு குளிர் காற்றுச் சிலுசிலுவென்று உள்ளே வருவதுபோல் உம்மா கதவின் வழியாக வெளியே வருவார்..

யாராவது வந்தால் பேசிக் கொண்டிருக்கலாம் என்று தோன்றுகின்ற போதெல்லாம் வீட்டுக்குக் கிளிமா மாமி வந்து சேருவார். அவர்களோடு அருகில் அமர்ந்து பார்க்கும் போது நான் பெரியவனாக மனதுக்குள் நினைத்துக் கொள்வேன். உம்மாவின் மடிக்குள் வட்டா ஏறினால் இறங்காது. உதடுகள் சிவக்க சிவக்கப் படிக்கமும் உமிழ்நீரால் நிறைந்து ததும்பும் மூலைச் சுவரோடு சாய்ந்து "இழுக்கும்வரை காலறியாது புதைகுழி" என்று யாருக்கோ நடந்து முடிந்த திருமணத்தில் நம்பிக்கை இழந்து உடலில் தண்ணீர் மொத்தமும் வற்றிவிட்டாற்போல் தொண்டை காய்ந்து கதைத்திருப்பார்கள். அவரது நீண்ட கழுத்தில் சவடி தொங்கும். "மாமா திரவுவெட்டி உழைச்ச காசியில வாங்கின.." என்று பெருமையாகச் சொல்லுவார். கிளிமா மாமியின் காதுகளில் தொங்கட்டான் கிடந்து ஆடிக் களிக்கும். "ஓமா ஓமா" என்பார். ஒவ்வொரு 'ஓமா'வுக்கும் காட்டுக்குள் கருஞ் சோலைக்குள் மஞ்சள் குருவிகள் இரண்டு ஊஞ்சல் போட்டு ஆடுவதாக எண்ணிக் கொள்வேன்..

யன்னல் வழியாக மழையைப் பார்த்துக்கொண்டிருப்பேன். முன்வீட்டுக் குழந்தைகள் மழையில் நனைந்தபடி கப்பல் வீட்டுக் கொண்டிருப்பர்; அது தள்ளாடித் தள்ளாடி நகர்ந்து விசுக்கென்று கவிழ்ந்தது. தாய் உள்ளே இருந்து அழைத்தபடி இருந்தார். "இங்கு வந்து உட்காரேன்.." அவர் அருகில் அமர்ந்து பார்க்கும்போதுதான் தெரிந்தது கையில் தங்க மாலையுடன் நின்றிருந்தது. அணைத்துக் கையில் காப்பு, கழுத்தில் மாலை, காலில் கறணை அணிவித்து என்னை ஒரு பெண்ணாகப் பார்ப்பதில் அலாதி பிரியப்படுவார். சில நேரங்களில் ஆடைகளில் கூட மாற்றம் செய்து சாரி உடுத்தி அழகு பருகுவார். அதுவரை பெண் பிள்ளை இல்லாத குறையையும் நான்தான் நிவர்த்தி செய்தேன்..

எங்கள் வீட்டின் அடுத்தாற்போல் லெக்கும்மா வசித்து வந்தார். எப்போது பார்த்தாலும் யாரையோ பழி வாங்குவதுபோல் கைகளில் வெற்றிலை உரலும் உலக்கையும் ஆவேசத்தோடு இயங்க ஆரம்பிக்கும். தன்மேல் படர்ந்து பரவும் மூர்க்கத்தனத்துக்கு மாற்றமாக நகைகள் அவரை மூடியிருக்கும். இருபத்து நான்கு முழ வெள்ளைச் சேலை உடுத்தித்தான் வெளியேறுவார். அல்லுக் குத்தும் பூட்டுக் காப்பும் இளம் சிவப்பு நிறத்தில் பளபளவென்றிருக்கும். கண்ணிமை ரோமங்கள் சுருண்டிருந்தன. அவர் மறைந்த பிறகு குடும்பத்தில் ஏதோவொன்று குறைவதுபோல தோன்றியது. தவற விடப்பட்ட குழந்தையாய் மனம் அந்தரித்து அலைந்ததை இப்போது நினைத்தாலும் மேனி சிலிர்க்கிறது...

செழுமை பூசிய கன்னங்கள், உயிர்ப்பின் ஒளி சிந்தும் கண்கள், சற்றே பெரிதான சுருக்கங்கள் நிறைந்த கீழுதடு மிக மென்மையாக அளவெடுத்துக் கொடுத்தாற்போல் எப்போதும் சிரிப்பாள். மூத்தம்மா இலந்தை வடை சுடுகின்ற நேரமெல்லாம் அவரோடு ஒட்டியவாறு அடுப்படியில் அமர்ந்திருப்பாள்; வயிறு கொஞ்சம் பெருத்திருக்கும். மேலே இடுப்பை அண்டாத அத்திராசிச் சீத்தையால் சட்டை போட்டிருப்பாள். கீழாடைக்குப் பதிலாக அரைஞாண் கயிற்றில் அரச இலை வடிவில் ஓர் அலமடி தொங்கும். நாளாக நாளாக என்னோடு ஈச்சங்கொட்டை விளையாடும் தோழியாகவரும் சுலைகா, பின்னாளில் பெரியவளானபின் சந்திப்பைக் குறைத்துக் கொண்டாள். ஒருநாள் வாப்பாவின் திட்டும் அடியும் எனக்குப் பலமாக விழுந்த செய்தியை எவ்வாறோ அறிந்து என்னைத் தேடிவந்து விசாரித்தாள்; சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் பகல் 'மெட்னி சோ' படம் பார்ப்பதே பொழுதான எனக்கு, தான் சிறு வயதில் அணிந்திருந்த அலமடியைக் காண்பித்து "இதனைக் கடையில் விற்றுக் காசை எடுத்துக்கொள்.." எனறு தந்துவிட்டுப்போனாள். அது சுத்தமான வெள்ளியினால் ஆனது. நூறு ரூபாய்க்குக் கொடுத்து எம்.ஜி. ஆரின் 'ராமன் தேடிய சீதை' படத்தை நண்பர்களுடன் சேர்ந்து நான்குமுறை பார்த்த அனுபவம் இன்றுபோல் இருக்கிறது...

சுங்கடி எங்கடி என்ற சத்தம் மூத்தப்பாவின் வாயிலிருந்து இடையிடையே ஒலிக்கும். அவர் சுங்கடி என்று சொல்வது கழுத்து நகைகளைத்தான். உட்கட்டு தாவத்துக் கொடியென்று நகை அணிந்து உம்மா கறுத்தப்பாதிப் புடவையும் உடுப்பார். இது ஒரே நிறத்தில் சோடி சோடியாகவே விற்பனைக்குக் கிடைக்கும். ஒருமுறை உம்மா மூத்தம்மா இருவரும் ஒரே கறுத்தப்பாதியை உடுத்தி வீட்டில் இருக்கின்றபோது வாப்பா ஏதோ ஓர் ஆத்திரத்தில் கையை ஓங்கியிருக்கிறார். அந்நேரம் மூத்தம்மாதான் பின்புறம் காட்டி நின்றிருந்தார். வாப்பாவின் கை அவர் கொண்டையில் பட்டுச் சறுகியிருக்க வேண்டும். மூத்தம்மாவின் கோபம் தணிய ஆறு வருடங்களானதாம்...

பலதடவை அந்தக் கிளுவை வேலிக்குள் நுழைந்து ஒளித்து விளையாடியிருக்கிறோம். புற வளவில் சோத்தும்மாவின் குடிசை இருக்கும். சக தோழர்கள் கண்டு கொள்ளும்வரை அவரின் குடிசைக்குள் புகுந்து கொண்டு நின்றிருக்கிறேன். அந்நேரம் சோத்தும்மா ஜெக ஜோதியாகத் தெரிவார். அவரிடம் ஒரு நகைப் பெட்டியிருந்தது. என்னைக் கண்டதும் தாழ் வாரக் கட்டி அவைகளை ஒவ்வொன்றாய்க் காட்டித் துடைத்துத் தருமாறு கேட்பார். நான் ஒளித்து விளையாடியதை மறந்து அந்த நகைகளில் மூழ்கி விடுவேன். இந்தா சவுக்குமணி என்பார். நான் துடைத்து அவரிடம் கொடுப்பேன். இது கீரமணி, இது மணிக்கோர்வை, இது சரடு அதில் பதக்கம் பதிந்திருக்கும். காசுமாலை, கொடிப்பூ இதில் பவுண்கள் சேர்ந்து கொடிபோல் ஆடும். இது வைரமணிக்கோர்வை, இது தாலிக் கொடி என ஒவ்வொன்றாய் எடுத்துவைப்பார்...


சாயங்கால வெயில் அத்திண்ணை மீது விழுந்து கொண்டிருந்தது, நாலு மூலையும் சுண்ணாம்பால் கரை கட்டி வழிக்கப்பட்டிருந்தது. காதில் அணியும் நகைகளென்று ஒரு கசனா அதுவும் தகரத்தில்வரும் பிஸ்கட் டின்னில் அடைத்து வைத்திருந்தார்; அரசிலை, வாளி, சிமிக்கி, கொத்த மல்லிப் பூ, குடைத்தொங்கு, தட்டுவாளி, கொப்புவாளி, கொச்சிக் காய், மரவட்டை, கம்பி என நீட்டித் தந்து "சரியா எடுத்துவை.." என்பார். கொழிமணலில் பாம்புத்தாரை போயிருப்பதுபோல் காப்புகளும் முறுக்கிய மீசை போலும் குத்தும் வளையல்களும் பல காப்புகள் இணைந்து கொலிசமாகவும் திரண்டிருக்கும்...

சோத்தும்மா குரல் வெளி வராமல் உள் ஒடுங்கியதுபோல் பேசுவார். 'முப்பாட்டனார்ர நகடா, எங்கம்மா வழி வந்ததுகள்.." என்று அள்ளி ஒருமுறை கண்களில் ஒற்றிக் கொள்வார். அவ்விடத்தில் சிதிலமடைந்த மண்குதிரைகள் இரண்டு கால்தூக்கி நிற்கின்ற மாதிரி ஒரு பெட்டகம் கிடக்கிறது. அதனடியிலிருந்து இன்னுமொரு புதையல் நகைகளை இழுத்தெடுப்பார். அவை ஒளிர்கின்ற தீட்சண்யம் கண்டு திடுக்கிடுவேன். ஓர் அகலமான பூட்டுக் காப்பு நீரின் நெளிவுகள்போல் தெரிந்தது. பட்டணத்துக் காப்பு, சரிக்காப்பு, கொம்பு, உருட்டன், கைக்கட்டு, முகப்பணி, ருக்குமணி என்றான காப்புகளும் கலகலக்கும்; "அடிவானம் கருக்கிக்கிட்டு வருகுது மின்னிக்கண்ணா போதும் மனே.." நெருஞ்சிக்கொடி குறுக்கே படர்ந்து வாசலில் குறுக்காகக் காலில் சிக்க மூன்று படல்களைத் தாண்டி வீட்டை அடைவேன்...

குருமிணியான் அரித்தால், சிலவேளை தென்னம் குருத்தோலை மடங்கி வாசலில் விழும்; ஓலையைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு உம்மாவிடம் ஓடுவேன்; காப்பு, மணிக்கூடு, அடுக்கு மோதிரம், திருகுப்பூ, சங்கிலி, தப்பித் துணையான், தண்டை என்றெல்லாம் சூதானமாகப் பூணாரம் சமைப்பார். இவைகளை ஒவ்வொரு உறுப்பிலும் அணிந்து கொண்டு கூடும் தோழர்களோடு என்றுமில்லாத தன்மையுடன் பறந்து திரிவேன். கிளிக் குஞ்சு, புறா, குதிரை, பம்பரம் என்றும் செய்வார்; கண்ணிமை வெட்டாமல் அசந்துபோய் நிற்பேன்.

## நூல் அறிமுகம்

பன்னூலாசிரியர் ஹாதிபுல்ஹுதா மர்ஹூம் எம்.எம்.எம்.நூறுல்ஹக் நினைவோலையாக வெளிவந்துள்ளது." ஒளியின் இறுதி ஒப்பம்" கவிதைத் தொகுப்பு நூல். இதை தொகுத்து வழங்கியுள்ளார்."விழிகள் சுவாசிக்கும் இரவுகள்' எனும் கவிதை நூலின் ஆசிரியர் ஏ.எம்.எம்.ஜாபீர். இவர் மருதம் கலை இலக்கிய வட்டத்தின் பொருளாளருமாவார். இத்தொகுதியில் முப்பத்துமூன்று கவிதைகள் இடம்பெற்றுள்ளன. அக்கவிஞர்கள் எஸ்.யூ.கமர்ஜான்பீபி, மிஸ்பாஹு{ல்ஹக், எம்.எம்.எம். நகீபு, அப்துல் சியாம், பி.எம்.எம்.ஏ. காதர், மருதூர் ஜமால்டீன், ஏ.எம். எம். நஸீர், எம்.எம். நயிமா, எம். என்.எம். ஆஷிக், யூ.கே. பஸ்மியா, யூ.கே.ஜெஸ்மீன், ஏ.எம்.எம்.ஜாபீர், ஹஸீனா ஸஹு{ர், அய்த்சாதின், எம்.எஸ்.எம்.றின்ஸான், நவாஸ் சௌபி, றொபினா நபீல், பாத்திமா நஸீரா, எம்.எஸ்.ஹமீதா, விஜிலி, ஐ.எம்.அஜ்வத், ஏ.பீர்முஹம்மட், ஏ.எம்.நியாஸ், எம்.எச்.எம். நஜாயித் ஸதீல், ஏ.சீ. நஜீமா, எஸ்.சிறாஜுதீன், மாளிகா அஸ்ஹர், ஆர். எம்.நௌஷாத், உ.லெ.றியாழ், ஏ.எச்.எம். ஹலீம் அக்மல், யூ.கே. றின்ஸாப், இராணி பௌசியா, எம்.சி.நாபிலா ஆகியோர் அடங்குகின்றனர்.



அட்டை அழகிய வடிவில் அமைந்துள்ளதுடன் அட்டையின் பின்புறத்தில் ஏ.எம்.எம்.ஜாபீரின் கவிதையில் வரும் ஒரு அடி இடம்பெற்றுள்ளது. இது மர்ஹூம் எம்.எம்.எம்.நூறுல்ஹக் இவ்வுலகில் உதித்த இலக்கை அடைந்துவிட்டே சென்றுள்ளார் என்பதை புலப்படுத்துகின்றது.

ஆசை தீர
இருளை கொன்று தீர்த்தது
பிறைக்குள் உருவிய
ஒரு பௌர்ணமி

60 ஆம் பக்கத்தில் அமைந்துள்ள இந்நூலில் நூறுல்ஹக் பற்றிய குறிப்பை அவரது சகோதரர் எம்.எம்.எம்.நகீபு "பித்தப்பை இல்லாத பேனா" எனும் தலைப்பில் வரைந்துள்ளார். நீட்சியான எழுத்தாளுமையின் குறியீடாக இது அமைந்துள்ளது. நூல் தொகுப்பாசிரியரான ஏ.எம்.எம்.ஜாபீர், நூறுல் ஹக்கிற்கு மிகவும் விருப்பமானது நூல்கள். எனவே அவரது குடும்பம் இணைந்து நூலால் அவரது ஆன்மாவை நெருங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார். மருதம் கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் ஏ.எம்.எம்.நஸீரின் பதிப்புரையோடு இந்நூல் வெளிவந்துள்ளது.

ஒளியொன்று
தன்சிறகை விரித்து
பறந்தது
அதன் மூலவேரை சந்
திக்க

எனும் ஆத்மீக வரியோடு ஆரம்பிக்கும் இக்கவிதைத் தொகுப்பில் ஒவ்வொரு கவிதைக்குள்ளும் எம்.எம்.எம்.நூறுல்ஹக்கின் பல்வேறு பரிமானங்களை உணரமுடிகிறது. அவர் எவ்வாறான குணவியல்புகளைக் கொண்டிருந்தார்? அவரின் கடந்த காலங்கள், முன்மாதிரியான அவரது கல்விநிலை, ஆத்மீகதேடல், வரலாற்றாய்வு, அவரது எழுத்தாளுமை, அவரது தேடல், நண்பர்களுடன் கொண்டுள்ள நட்பு, நிரப்ப முடியாத அவரின் வெற்றிடம், நூல்களின் சேமிப்பு, ஊடகத்துறை நினைவுகள், பத்திரிகையின் கவனங்கள், மறைவின் போது அவர் உடல் இருந்த நிலை, நேர்மையான அவரின் கொள்கையும் எழுத்தும் என்றவாறாக ஒவ்வொரு எழுத்துக்குள்ளும் நூறுல் ஹக் வாழ்ந்து கொண்டிருக்கிறார். உயிர்த்தன்மையான உணர்வுகளின் வெளிப்பாடாக வெளிவந்துள்ளது ஒளியின் இறுதி ஒப்பம் .

நூலின் பெயர் : ஒளியின் இறுதி ஒப்பம்
தொகுப்பாசிரியர் : ஏ.எம்.எம்.ஜாபீர்
நினைவோலை : பன்னூலாசிரியர் காதிபுல்ஹு{தா மர்ஹு{ம் எம்.எம்.எம். நூறுல்ஹக்
வெளியீடு : மருதம் கலை இலக்கிய வட்டம்,
எழுத்துக்களின் கண்ணீர் பிரவாகம் : ஒளியின் இறுதி ஒப்பம்"

எடுத்துக்காட்டாக சில வரிகள்மறையொளியை மனதிலேற்றி /மெய்யொளியாய் உம்மையுயர்த்தி / அறிவொளிக்கு அயராதுழைத்து அகம் மகிழ்ந்த என்னவனே!|| (மனைவி எஸ்.யூ.கமர்ஜான்பீபி)

அகாதத்தில் பத்திரப்படுத்தவும், / கேட்பவருக்கு அள்ளிக் கொடுக்கவும் அவரிடம் எஞ்சி இருந்ததெல்லாம் ஃ தேடிய அறிவும், அவை செறிந்த புத்தகங்களும்தான்|| (மகன் மிஸ்பாஹு{ல் ஹக்) நதி எனும் குறியீட்டை எடையாகக் கொண்டு தனக்கேயுரிய வெளிப்பாட்டு முறையில் எழுந்துள்ளன இசைச்சித்திரம் இக் கவிதை.

நீ பிறந்த போது அழுதது / உம்மாவிடம் / பேனை கேட்டா?" (சகோதரர் எம்.எம்.எம். நகீபு)

உன் கதை சொல்ல / பத்து பனைமரத்து ஓலைகள் போதாது ஃ சொல்வதற்கு முடியவில்லை ஃ எழுதுவதற்கும் முடியவில்லை(சகோதரி எம்.எம். நயீமா)

எம்.என்.எம். ஆஷிக்கின் கவிதையில் இழையோடும் இழப்பின் துடிப்பு "உன்னை இழந்த / கவலை படிக்கட்டுக்களில் / உன் பலநூறு புத்தகக் கட்டுகளாய் இன்னும்/ சரிந்து விழும் / என் உம்மா வாப்பா தங்கை தம்பி /என் துணைவி அனா / எப்படி நான் அழகாக அடிக்கி வைப்பேன்.

அய்த்சாதின் கவிதையின் தவிப்பு 'உனது குரலை கேட்பதற்கு /என் நீர்த்தொட்டியின் / மீன்களும் ஆசைப்பட்டு துடிக்கிறது"


றொபினா நபீலின் கவிதையில், "என்னை இரவு முழுவதும் இறுகப்பிடித்து / வைத்திருக்கும் என் அன்பாளன்/எங்கே என்று அழுகிறது உன் பேனா"

எம்.சி.நாபிலாவின் கவிதையில் எழும் அலைகள் முடிவுறாத துயரத்தின் நிலையை பிறபிக்கிறது. சாய்ந்தமருது ஃ உன் உடலை சுமக்காத / வலியோடும்./ஒரு கடலை சுமந்து வந்தேன். இவரின் கவிதையின் தலைப்பும் ஒரு கவிதையாகும். அது அலைகள் நிறுத்திக் கொள்ளும் தூரம்"

இன்னும் குறிப்பிடாத கவிதையின் ஆழம் இத் தொகுதியில் இடம்பெற்றுள்ளன. ஒரு ஆழ்கடலை கரைக்கு கொண்டு வந்து வெளிப்படுத்திய உணர்வொளி ஒளியின் இறுதி ஒப்பம்" நூறுல் ஹக்கைப் போன்றே இந்நூலும் காலத்தால் பேசப்படும். இந்நூல் அன்னாரின் குடும்பத்தினரால் அன்பளிப்பாகவே வழங்கப்பட்டது. மேலும் தேவைப்படுவோர். தொடர்பு கொள்ள வேண்டியது.

மருதம் கலை இலக்கிய வட்டம், 129, ஒஸ்மன் வீதி, சாய்ந்தமருது – 05.

யூ.எல்.சர்மிலா...




# 'எமது சமூகத்தவர்களுக்கு சிம்மசொப்பனமாக இருந்த அரச பணிகளில் இணைந்த இரண்டாமவர் நான்'

## கல்விமான், 'குன்றிலிருந்து கோட்டைக்கு' நூலின் ஆசிரியர் எம்.வாமதேவன்

கொட்டகலை யதன்சைட் தோட்டத்தில் பிறந்த மெய்யன் வாமதேவன் தனது ஆரம்ப கல்வி முதல் உயர்தரம் வரை ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் கற்றுத் தேர்ந்து பல்கலைகழக அனுமதியும் பெற்றவர். 1969 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொருளியல்துறையில் கலைமாணி பட்டம்பெற்ற இவர் 1973ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் டிப்ளோமாவையும் 1975 ஆம் ஆண்டு ஐக்கிய ராச்சியத்தின் லீட்ஸ் பல்கலைக் கழகத்தில் அபிவிருத்தி பொருளியலில் முதுகலைமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார். தொடர்ந்து 1987 ஆம் ஆண்டு இந்தியா, டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலை கழகத்தில் பிரயோகப் பொருளியலில் தத்துவ மாணி பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். தாய் நாட்டுக்காக உன்னத பணியாற்றிவர்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் தேசிய விருதை கல்வியியலாளர் எம். வாமதேவன் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் 2019 ஆம் ஆண்டு 'லங்காதிலகம்'எனும் தேசிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவராவர். தனது ஆசான் இர. சிவலிங்கம் மீது அதிகம் மதிப்பு கொண்ட இவர் அவரது மறைவின் பின்னர் ' இர. சிவலிங்கம் ஞாபகார்த்த குழு' எனும் அமைப்பின் தலைவராக செயற்பட்டு ஆண்டுதோறும் நினைவுப் பேருரைகளை பல ஆளுமைகள் ஊடாக நிகழ்த்தி, அவற்றைத் தொகுப்பாக்கி நூலாக வெளிக் கொணர்வதிலும் தமது குழுவுடன் இணைந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார். மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் ஆலோசகராகவும் செயற்படும் இலக்கிய ஆய்வாளரும் விமர்சகருமான இவர் மலையகத்தின் மூத்த கல்விமான். இதுவரை மூன்று நூல்களை வெளியிட்டுள்ள நிலையில் மூன்றாவது நூலாக குன்றிலிருந்து கோட்டைக்கு என்ற சுயசரிதமாக ஒரு நினைவுப்பகிர்வு நூலாக வெளியிட்டுள்ளார்.

இது பற்றி அவரிடம் கேட்ட போது ...... சுயசரிதம் அல்லது நினைவுப்பகிர்வு ஒன்றை எழுதி வெளியிடுவதற்கு பெரும்பாலானவர்கள் முன்வருவது அரிது. இருப்பினும் நீங்கள் இவ்வாறான நூலை வெளியிட்டிருப்பதற்கான காரணம்? அரசதுறைக்குள் மலையகத்தவரின் பிரவேசம் மிக மிக குறைவாகவே காணப்பட்டது. பிரஜா உரிமை இல்லாமை, போதியளவு கல்வித்தகைமை இல்லாமையே இதற்கு பிரதான காரணமாக அமைந்தது. ஆங்கில மொழியிலேயே கற்க வேண்டியிருந்தமையினால் சாதாரண தரம் சித்தி பெறுவோரின் எண்ணிக்கையும் அக்காலகட்டத்தில் மிக குறைவாகவே காணப்பட்டது. மலையகத் தமிழர் சமூகம் 'அமைச்சு செயலாளர்' எனும் உயர் அரச பதவியை அடைவது சாதாரணமானதல்ல. ஏனெனில் இலங்கை பிரஜை அந்தஸ்திலிருந்து விலக்கி வைக்கப்பட்ட மலையகத் தமிழர் சமூகம் அரசாங்க பாடசாலைக் கல்வி மறுக்கப்பட்டு, தோட்டப் பாடசாலைகளில் கற்று, அரச பணிகளில் சேர்வதே சிம்மசொப்பனமாக இருந்த நிலையில், அத்தகைய பதவியைப் பெற்ற இரண்டாமவராக நான் இருந்தேன். மற்றையவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ராமானுஜத்தின் புதல்வாரன பிரதாப் ராமானுஜம். இவ்வாறான நிலையில் அரச துறைக்கு தோட்டப்பகுதியில் இருந்து சென்ற நான் , உச்சம் தொட்டேன். இவ்விடயங்களை சுயசரிதையாக எழுத நினைதேன். எழுதினேன். வெளியிட்டேன்.

நீங்கள் கல்வி கற்ற காலத்தில் எதிர்கொண்ட சவால்களை எவ்வாறு சமாளித்தீர்கள்?



நாம் கல்வி கற்ற காலத்தை விட தற்போதைய காலகட்டத்தில் வசதி வாய்ப்புக்கள் நிரம்பியுள்ளன. நிலைமையே உள்ளது. அதனை உரிய வகையில் பயன்படுத்தி கொண்டு முன்னோக்கி செல்ல வேண்டிய தேவை மாத்திரமே இந்தத் தலைமுறையினருக்கு இருக்கின்றது. எனது சாதனைகளை மாத்திரம் பட்டியல் நூலில் இடாமல், நான் சந்தித்த சவால்களை, அடைந்த தோல்விகளையும் பதிவு செய்துள்ளேன். ஐம்பதாண்டுகால வரலாற்று அனுபவங்களை அந்தந்த காலகட்ட அரசியல், தொழிற்சங்க, கல்விப் பின்புல, கலை இலக்கிய ஆளுமைகளையும் சம்பவங்களையும் கூட தொட்டுக் காட்டியுள்ளேன்.

நீங்கள் இது வரை வந்த வாழ்க்கையுடன் இணைந்த பயணங்கள் பற்றி?

பல்கலைக்கழக கல்வியின் பின்னர் விஷேட பயிற்சிகளுக்காக அவ்வப்போது வெளிநாடுகளுக்கு சென்ற நான் 1989 மலேசியாவில் இரண்டு மாதங்களும் 1992இல் ஐக்கிய அமெரிக்காவில் மூன்று மாதங்களும் திட்டமிடல் முகாமைத்துவம் தொடர்பில் பயிற்சி பெற்றேன். ஆசிரியராக தொழிலை ஆரம்பித்தபோதிலும் 1970 ஆம் ஆண்டு, திட்டமிடல் சேவை பொதுப் பரீட்சையில் தோற்றி சித்திபெற்று நுவரெலியா கச்சேரியில் திட்டமிடல் அலுவலராக நியமனம் பெற்றேன். 1976 ம் ஆண்டு நிதித் திட்டமிடல் அமைச்சின் உதவி இயக்குனராக பதவி பெற்றேன். பின்னர் 1980ஆம் ஆண்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பிரதி பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றதுடன் 1990 இல் மேலதிக பணிப்பாளராகவும் 1991 முதல் 1998 வரை பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளேன். 1998 இல் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் உசாத்துணைவராக பணிபுரிந்தநிலையில் மீண்டும் 2004 ஆம் ஆண்டுவரை தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றினேன். 2004 ஆம் ஆண்டு மறைந்த அமைச்சர் பெ. சந்திரசேகரன் அமைச்சராகவிருந்த சமுதாய அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக நியமனம் பெற்று 2005 ஆம் ஆண்டு அதே அமைச்சில் மேலதிக செயலாளராகவும் மீண்டும் தோட்டப்பகுதி வீடமைப்பு உட்கட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக செயற்பட்டேன். 2005 முதல் 2009 வரை மீள் குடியேற்ற அமைச்சரின் ஆலோசகராக செயற்பட்டதுடன் 2009 ஆம் ஆண்டு மீள்குடியேற்ற, இடர்முகாமைத்துவ அமைச்சின் கீழ் ஐக்கிய நாடுகள் அகதிகள் புனர்வாழ்வு திட்டத்தின் தேசிய திட்டமிடல் பணிப்பாளராகவும், 2010 ஆம் ஆண்டு தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உள்கட்டமைப்பு அமைச்சு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளின் கீழ் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் தேசிய திட்டமிடல் ஆலோசகராகவும் பணியாற்றியதோடு 2011 முதல் 2014 வரை கைத்தொழில் வாணிப அமைச்சராகவிருந்த ரிஷாட் பதியுத்தீனின் ஆலோசகராக பணியாற்றி பின்னர் மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரத்தின் ஆலோசகராக பணியாற்றினேன். இவ்வாறு தொடர்ச்சியான பதவிகளூடே பல சபைகளில் பணிப்பாளராகவும் செயற்பட்டேன்.

உரையாடல்:
நோட்டன் பிரிட்ஜ் நிருபர் எம்.இராமச்சந்திரன்

# ஊருக்கே ஒளியேற்றிய இரு பெண்கள்



மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் வைய வாழ்வு தன்னில் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாகவாழ்வோம். அயலார் கையை எதிர் நோக்குவது அவச்செயல் ஆகும் என காந்தி கூறியதுபோல, மட்பாண்டங்கள் செய்தல், எண்ணெய் எடுத்தல், பாய் முடைதல், கூடை முடைதல், ஆடு, மாடு, கோழி வளர்த்தல், தேன் எடுத்தல் போன்ற சிறுகுடிசைத் தொழில்களை செய்து அந்த காலத்தில் தங்களது பொருளாதாரத்தை ஓரளவிற்கு பெண்கள் உயர்த்திக்கொள்ள வேண்டும். வவுனியாவில் கடின உழைப்பால் தமது வீட்டில் மட்டுமன்றி 10 குடும்பங்களின் வீட்டிலும் ஒளியேற்றிய இரு பெண்கள் பற்றிய கதையே இது



பெண் தாயாக, மனைவியாக, மகளாக மட்டுமன்றி இன்று அரசியல், கல்வி, பொருளாதாரம் என பல துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக வளர்ச்சியடைந்துள்ளார்கள்.

அந்தவகையில், கடந்த 10 வருடங்களாக தளராது செக்கு மூலம் வருமானம் ஈட்டி வரும் இரு பெண்கள் பற்றிய கதையே இது.



வவுனியா, தவசியாகுளம் பகுதியில் வசிக்கும் ..தட்சிணாமூர்த்தி கிரியா. விவேகானந்தராசா புஸ்பகலா.... என்னும் இரு பெண்களும் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இரு நல்லெண்ணை செக்குகளை நடத்தி வருகின்றனர்.

2011ஆம் ஆண்டில் தமது வீட்டில் சிறிய முதலீட்டுடன் ஆரம்பித்த நல்லெண்ணை செக்கு இன்று அவர்களது குடும்ப வருமானத்தை போக்குவதுடன், அப்பகுதியில் 10 பேருக்கு வேலை வாய்ப்பையும் பெற்றுக் கொடுத்துள்ளது.



மக்களிடம் இருந்து எள்ளு, கொப்பரா, இலுப்பை என்பவற்றை கொள்வனவு செய்து அதனை உலர வைத்து செக்கில் போட்டு எண்ணையாக எடுத்து விற்பனை செய்து வருகின்றனர்.

நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், தேங்காய் எண்ணெய் போன்றவற்றை பிரித்தெடுத்து எடுப்பதற்கு தற்போது பலரும் நவீன இயந்திரங்கள் பயன்படுத்துகின்றபோதும் போதும், பாரம்பரிய முறையில் பிரித்தெடுத்து தமது வாழ்வாதாரத்தை நடத்துவதுடன் மட்டுமன்றி, அதனை வாங்கும் மக்களுக்கும் சுவை, போசணை, முக்கியமான விற்றமின்கள், தாதுப்பொருட்கள் என்பவை அடங்கியதாக எண்ணெய் விற்பனை செய்து வருகின்றனர். மரத்தில் செய்யப்பட்ட செக்கினை இலகுவாகச் சுழலச் செய்வதற்கு ஆரம்பத்தில் மாடுகளைப் பயன்படுத்திய போதும், உற்பத்தியை அதிகரிப்பதற்காக அவர்கள் தற்போது லான்மாஸ்டரை பயன்படுத்தி வருகின்றனர்.

இருவரும் ஒருவொருக்கொருவர் உதவியாக கலந்து பேசி தமது செக்குகளை இயக்கி வருவதுடன், எண்ணெய் பிரித்தெடுத்த பின் எண்ணெய் சக்கினை கால்நடைகளுக்கான உணவாகவும் விற்று வருகின்றனர்.

தமது கடின உழைப்பால் தமது குடும்ப செலவை ஈடுசெய்யும் அவர்கள் 10 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கியதன் மூலம் அவர்களது வீட்டிலும் ஒளியேற்றி சமூகத்தில் இன்று முன்மாதிரியான பெண்களாக விளங்குகின்றார்கள்.

'மங்கையராய் பிறப்பதற்கே நல்லமாதவம் செய்திட வேண்டும் அம்மா' என்ற கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையின் பாடல் பெண்களின் பிறப்பினை பெருமையாகவே இச்சமூகத்திற்கு எடுத்துக்காட்டுகிறது எனலாம்.

இன்று படித்த பெண்கள் சமுதாயத்தில் தலை நிமிர்ந்து நிற்கின்றனர்.'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம். எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி...ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார் வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டிவைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்' என பெண் விடுதலைக்கு கும்மியில் பாரதி பாடியவை நனவாயிற்று.

பெண்கள் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என்பதை நன்கறிந்து வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டு தாங்களும் வாழ்ந்து, பிறரும் வாழ பெண்கள் வழிவகை செய்கிறார்கள். முன்னேற்றப் பாதையில் முனைந்து சென்று நாடு உயர, மேன்மையுற தங்களை அர்ப்பணிக்கின்றனர்.' கட்டமைக்கப்பட்டவற்றில் கட்டுப்பட்டு இருந்தோம் வீறுகொண்டு எழுந்தோம் விண் உயர முயற்சி செய்தோம் அன்று முடியவில்லை

இன்று 21ம் நூற்றாண்டில் சாதிக்க முடிந்தது வீரப் பெண்களால்!'எனவே பெண்களை நாளெல்லாம் போற்றுவோம்

திவியா சிவகுமார்...

## சாதனையாளர்... (27 ஆம் பக்கத்தொடர்)

தேநீர் அருந்தியபின் மல்லிகையை அதிக பணம் கொடுத்து வாங்கிக் கொண்டான்.

'கொழும்பு வரும்போது தவறாது மல்லிகை கொண்டுவந்து தாங்கோ.." எனக் கேட்டுக்கொண்; டான்.

பக்கத்துக் கடையிலுள்ள ஒரு நண்பனையும் அறிமுகப்படுத்தி அவனுக்கும் மல்லிகை கொடுக்கச் செய்தான்.

மாதந்தோறும் பெற்ற மல்லிகையை அக்கா மகன் பத்திரமாகச் சேர்த்து ஆண்டுவாரியாகக் கட்டி வைத்திருந்தான்.

1983 ம் ஆண்டு இன வன்செயலின்போது எல்லாம் இழந்து உடுத்த உடையுடன் உயிர்தப்பி அவன் யாழ் வந்து சேர்ந்தது சோகக்கதை.

அவன் இப்போது ஜேர்மனியில் 'கவிவாணன்". இரண்டு கவிதைத் தொகுதிகளும் வெளியிட்டுவிட்டான். தன் இலக்கிய ஆர்வத்தை வளர்த்தது 'மல்லிகை" தானென இப்போதும் சொல்வான்.

1980 ம் ஆண்டு இறுதிப் பகுதி.. ஓர் நாள் பூபாலசிங்கம் புத்தகசாலையில் என்னைக் கண்ட ஜீவா 'தம்பி.. சென்னை 'சி. எல். எஸ்." இம்முறை நடாத்தும் இலக்கியக் கருத்தரங்கில் டானியலின் 'பஞ்சமர்" நாவலை விசேடமாக எடுத்திருக்கிறார்கள். 'வறுமையும் சாதியமும்" என்ற பொருளில் இரண்டு நாள் கருத்தரங்கு. டானியலைக் கட்டாயம் வரச்சொல்லும்.." என்றார்.

'டானியலுக்கு அழைப்பு வந்ததைப் பார்த்தேன். அவருக்குப்போக விருப்பமில்லை..." என்றேன்.

'அப்படிச் சொல்லக்கூடாது.. அவங்க பெரிதா கவனமெடுத்துஇ மரியாதை கொடுத்து அழைக்கிறாங்க... சிவத்தம்பி வருகிறார். நானும் போகிறேன். கட்டாயம் டானியலை அழைத்துவாரும்.." என வலியுறுத்திக் கூறினார்.

பின்னர் எமது வலியுறுத்தலின் பேரில் 'மக்கள் கலை இலக்கியப் பெருமன்றத்தின் செயலாளர்" என்ற வகையில் நானும் உடன்வர வேண்டுமென அவர்களுக்கு அறிவித்து எனக்கும் அழைப்பிதழ் பெறப்பட்டது.

இருவரும் அக்கருத்தரங்கில் கலந்துகொண்டோம். 'பஞ்சமர்" முதல் பாகம் பேராசிரியர் சிவத்தம்பி தலைமையில் விசேட அமர்வில் அறிமுகஞ்செய்ப்பட்டது. அது குறித்தும்இ டானியலின் சமூகப் பணி குறித்தும் யான் உரையாற்றினேன்.

அரசியல் முரண்பாடு காரணமாகஇ டானியலும் ஜீவாவும் பேசிக் கொள்ளாதுவிட்டாலும் இருவரும் நேருக்குநேர் பார்க்கையில் ஓர் புன்னகையுடன் கடந்து செல்வர்.

கட்சிப் பிளவுக்கு முன்னர் அவர்கள் நெருங்கிய தோழர்கள்..!

அவர்கள் மனதுக்குள் அந்தத் தோழமை உணர்வு என்றும் இருந்தது.

1984 ம் ஆண்டு இறுதிப் பகுதி.. யாழ் பஸ் நிலையம் முன்பாகஇ ஆஸ்பத்திரி வீதி வழியாகப் பூபாலசிங்கம் புத்தகசாலை நோக்கி வந்து கொண்டிருந்தேன்.

அந்தக் காலத்தில் யாழ் நகரில் இராணுவம்இ பொலிஸ் சுற்றிவளைப்புச் செய்து இளைஞர்களைக் கைதுசெய்வதுண்டு.

வீதியில் என்னைக் கண்ட ஜீவா சைக்கிளிலிருந்து குதித்து இறங்கினார்.

'தம்பி... எங்க கனநாள் காணல்ல.." என்று கேட்டார்.

'நான்... ஐ. நா. தொண்டராகப் பிலிப்பைன்ஸ் நாட்டில மூலிகை மருத்துவ சேவைக்குப் போயிற்று வந்தனான்.." என்றேன்.

'எவ்வளவு காலம்.. "

'ஒரு வருசத்துக்கு மேலா.."

'அப்படியா.. சந்தோசம்.. நான்.. நாட்டு நிலைமையில பொலிஸ் பிடிச்சுக்கொண்டு போயிட்டுதோ.. எண்டு யோசிச்சன்.. " என்று கூறிய ஜீவாஇ ஒரு கையால் சைக்கிளைப் பிடித்தவாறு மறுகையால் என் முதுகை ஒரு தந்தை மகனைத் தடவுவதுபோல் தடவினார்.

என் மனம் அந்தப் பாசத்தில் நெகிழ்ந்தது.

மல்லிகை அட்டையில் டானியலின் படம் பிரசுரித்துக் கௌரவிக்கவென பலமுறை முயற்சித்தும் டானியல் அதற்குச் சம்மதிக்கவில்லை.

இருவருடனும் நெருங்கிப் பழகும் 'முரசொலி" ஆசிரியர் திருச்செல்வம் மற்றும் தெணியான் ஆகியோர் முயற்சியில் டானியல் படம் மல்லிகையில் பிரசுரமானது. பேராசிரியர் சிவத்தம்பி அவர் குறித்து எழுதியிருந்தார்.

ஜீவாவின் பிறந்த நாளின்போது திருச்செல்வம் டானியலை ஜீவாவின் அலுவலகத்திற்கும் அழைத்துச் சென்றார். யான் அவ்வேளை பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்தேன்.

1986 மார்ச் மாதம் டானியல் தஞ்சாவூரில் காலமாகியதை அறிந்ததும் ஜீவா மிகவும் வருந்தினார். மல்லிகையில் தன் வருத்தத்தைப் பதிவுசெய்தார்.

தீண்டாமைக் கொடுமைக்கெதிராகத் தீவிரமாகப் போராடிய போராளி டானியல் எனப் பதிவுசெய்தார்.

யாழ்ப்பாணத்தில் டானியலுக்குச் சிலை வைக்கவேண்டுமென எழுதினார். கூட்டங்களில் வலியுறுத்திப் பேசினார்.

டானியல் குறித்துப் பலர் எழுதிய நினைவுக் குறிப்புகளை மல்லிகையில் பிரசுரித்தார்.

டானியலின் இறுதி நிகழ்வுகள் முடிந்து யான் யாழ்ப்பாணம் திரும்பியதுமஇ; என்னைக் கண்ட ஜீவா 'அங்கு என்ன நடந்தது.. அந்த மனிசன் உடம்பைக் கவனிக்காமல் சனத்தின்ர வேலை பார்த்துகொண்டு திரிஞ்சு இப்படியாப் போச்சு.." என வேதனைப்பட்டார்.

அவரது தோழமையை நட்பை என்னால்; உணர முடிந்தது.

பின்னர் ஒருமுறைஜீவா தமிழகம் சென்றபோது தஞ்சாவூர் சென்று தன் தோழர் டானியலின் கல்லறையையும் பார்த்து அஞ்சலி செலுத்தி வந்துள்ளார்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசியல் முரண்பாடுகள் இருப்பினுமஇ; அவர் எம்மைப் 'புதுச் சிவப்புக் கூட்டம்"என எழுதிய போதிலும் இடதுசாரிகள்இ இலக்கியவாதிகள் என்ற வகையில் நாம் தோழமையுடன் பழக நேர்ந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்இ முன்னர் டானியலுக்குக் 'கௌரவ கலாநிதிப்" பட்டம் வழங்கப்பட வேண்டுமெனக் குரல் எழுந்தபோது அதிகார மட்டத்தில் அது அமுக்கப்பட்டது.

பின்னர் ஜீவாவுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட வேண்டுமெனக் குரல் எழுந்தபோதுஇ அதனைச் சகிக்க முடியாத 'சாதி ஆணவப் பெருந்தகைகள்" அதனை விடுத்து 'முதுகலைமாணி"ப் பட்டம் வழங்கப்படுமென அறிவித்தனர்.

ஜீவா அதனை நிராகரித்தார். இதனையொட்டிப் பல சர்ச்சைகள் எழுந்தன. படைப்பாளிகள் பலரும் யாழ் பல்கலைக்கழகத்தின் சின்னத்தனத்தைக் கண்டித்தனர்.

யான் புலம்பெயர்ந்து பிரான்ஸ் வந்த பின்னர் சில கட்டுரைகள் மல்லிகையில் எழுதியுள்ளேன்.

இலங்கையில் அவரது நூல்கள் யாவும் என்னிடமிருந்தன. புலப்பெயர்வில் அவற்றையெல்லாம் இழந்தேன். இங்கு மீண்டும் எனது புத்தகத் தேட்டத்தில் அவரது நூல்களைச் சேகரித்து வைத்துள்ளேன்.

2011 ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டின்போது அவரைக்கண்டு நிறையப் பேசமுடிந்தது. பின்னர் இறுதியாக 2014 ம் ஆண்டு மல்லிகை அலுவலத்திற்குச் சென்று அவரைச் சந்தித்து நிறையவே பேசினேன்.

ஈழத்து இலக்கியத்துறைச் சாதனையாளர்களில் ஒருவர் டொமினிக் ஜீவா.

47 வருட காலம் இலக்கியச் சஞ்சிகையை நடாத்திக் காத்திரமான ஆண்டு மலர்களையும் வெளியிட்ட சாதனையாளர்.

இலங்கை சாகித்திய மண்டலப் பரிசை முதலில் பெற்றவர்.

சாகித்திய ரத்னாஇ தேசத்தின் கண்இ கனடா இலக்கியத் தோட்டத்தின் இயல் விருது ஆகியவற்றைப் பெற்றவர்.

சோவியத் யூனியனுக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர்.

அவரது கதைகள் ஆங்கிலமஇ; சிங்களமஇ; ரஸ்ய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

படைப்பாளிகளின் படங்களை மல்லிகை அட்டையில் பிரசுரித்துக் கௌரவித்தவர். அவர்களைப் பற்றிய குறிப்புகளை நான்கு நூல்களாகவும் வெளியிட்டவர்.

'மல்லிகைப் பந்தல்" பதிப்பகம் மூலம் பல படைப்பாளிகளின் நூல்களை வெளியிட்டவர்.

புதிய எழுத்தாளர்களை இனங்கண்டு அவர்களது படைப்புகளை மல்லிகையில் பிரசுரித்து ஊக்கமளித்தவர்.

தமிழகத்தில் சரஸ்வதி (1958)இ தாமரை (1968) ஆகிய இலக்கிய சஞ்சிகைகளின் அட்டையில் இடம் பெற்று கௌரவிக்கப்பட்டவர்.

இலங்கையில் இலக்கியத்துறை மூலம் இன ஒருமைப்பாட்டை வளர்த்தெடுக்க ஜீவா பெரும் முயற்சி செய்துள்ளார்.

முஸ்லீம் சமூக எழுத்தாளர்கள் பலருக்கு மல்லிகை களமாக அமைந்தது. சிறந்த சிங்களப் படைப்பாளிகளது படைப்புகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு மல்லிகையில் வெளியாகியுள்ளன. மல்லிகை அட்டையிலும் அவர்களது படங்கள் பிரசுரிக்கப் பட்டுள்ளன.

இத்தகைய பெருமைகளுக்குரிய சாதனையாளர் டொமினிக் ஜீவா இலங்கை இலக்கிய வரலாற்றில் அழியா இடம்பெற்றுள்ளார். அவர் நாமம் என்றும் நீடித்து நிலைக்கும்..!

# பெரிய குற்றம்

தேவநேசன் திருமலை சவேரியார் பாடசாலையில் தலைமை ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். பிள்ளைகள் உத்தியோகமாகவும் வெளிநாடாகவும் இருந்து செல்வாக்குடனேதான் வாழ்ந்து வருகின்றனர்! இவர் இனசனத்துள் நிறைவாக வாழ்ந்து வருபவர் என்றும் சொல்லலாம். இதனால் பலரின் எரிச்சல் பொறாமைக்கும் ஆளானவர் என்றும் சொல்லலாம். கஷ்டப்பட்டவர்களுக்கு உதவிசெய்வதால்தான் ஆண்டவன் இந்த நல்வாழ்வை எனக்கருளினார் என்று நினைத்துக் கொள்வார்! ஆனாலும், உதவி பெறுவதற்காக பல்லித்துக்கொண்டு வருவோரிடம் இவர்களுக்கொரு அழிவுவராதா என்ற மனப்பாங்கே நிலைத்திருக்கும்!.... தேவநேசன் பாட நூல்களை மட்டுமல்ல அறிவு ஞானம் சார்ந்த பல புத்தகங்களை வாசித்து அறிவுபெற்றவர். எல்லாம் விளங்கும் அவருக்கு! யாரையும் வெறுப்பதில்லை. புன்னகையை மட்டும் உதிர்ப்பார்.

அன்று ஒரு சாவீட்டுக்குப் போயிருந்தார் மனைவியோடு. பாலையூற்றுக்கு போய் சாவீட்டை அடைந்தார்கள். இறந்தவர் இவருக்கு ஒன்றுவிட்ட சகோதரி பெரியம்மாவின் மகள். இன்னும் எழுபதாகவில்லை. சாகும் வயதில்லை. இவரை விட பத்து வயது குறைவாய் இருக்கும். அவ்வளவாக நோய்வாய்ப்பட்டிருக்கவில்லை. திடீரென்று இறப்பு ஏன் ஏற்பட்டது?.... இவளுடைய கணவன் ஏற்கனவே இறந்துவிட்டான். மகள் ஒருத்திதான். அவளை கஷ்டப்பட்டு வளர்த்தெடுத்து ஆளாக்கி மணமாக்கியும் வைத்தாள். அவளுக்குப் பிறந்த பெண்பிள்ளையையும் (பேத்தி) பாசநேசத்தோடு வளர்த்தெடுத்திருந்தாள். ஒரு நிறுவனமொன்றில் நல்ல வேலையில் சேர்ந்து நல்ல சம்பளமும் பெற்றுவந்தாள். முதல்மாதச் சம்பளப்பணத்தை தன் அம்மம்மாவிடமே கொடுத்தாள்! இவ்வாறு அந்நியோன்யமாக இருக்கையில் தான் அந்தப் பேரதிர்ச்சி நடந்துவிட்டது..... வேலை செய்த இடத்தில் யாரோ ஒரு விடுகாவாலியோடு பேத்தி ஓடிவிட்டாளாம்! அந்த அதிர்ச்சியை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை உண்ணவோ உறங்கவோ மனமில்லாமல் யோசித்து யோசித்து மனதையும் உடலையும் வருத்தி உயிரையே விட்டுவிட்டாள். பேத்தியின் செயலால் இவள் பரிதாபத்துக்குரிய நிலையில் இருக்கிறாள் என்பதை அறிந்து தேவனேசன் ஆறுதல் வார்த்தகைள் கூற வந்திருக்கிறார். இதற்கு முன்னமும் துன்பங்களுக்கு உதவியிருக்கிறார். தன் சகோதரி மரித்ததை கேள்வியுற்றதும் அதிர்ந்துபோனார்.!

இப்போது சவப் பெட்டியில் கிடக்கும் அவளைப் பார்த்து மௌனமாக அழுதுகொண்டிருந்தார். அவர் அறிந்தவரையில் வாழ்வுபூராகவும் கஷ்டசீவியம் நடத்துபவள்தான் அவள்! இறுதிக்காலத்திலயாவது மன ஆறுதல் பெற்று வாழ வழி தெரியவிலலையே இவளுக்கு!... இப்போதுதான் நித்திய நித்திரையில் நிம்மதியாக உறங்குகிறாள்! இவ்வளவு அழகாக அமைதியாக தெளிவான தோற்றம் காட்டியதை இதற்குமுன் அவர் பார்த்ததே இல்லை! பெரும்பாலான மனிதரின் வாழ்வின் முடிவு இப்படித்தானா? காலம் முழுக்க அவலப்படுவது, மரணத்தில்தான் நிம்மதி காண்பதா?

மகள் அருகில் நின்று கண்ணீரோடு ஒப்பாரி பாடினாள். புலம்பிக் கொண்டே இருந்தாள் அவள். தேவனேசன் கலங்கிய கண்களுடன் அவள் அருகில் சென்று அவள் தலையைக் கொடுத்தார். சொன்னார் இப்படி, 'பிள்ள அழுதழுது உன்ர உடலையும் வாழ்க்கையையும் பழுதாக்கிப் போடாத! உன்னை நம்பி பிள்ளைகள் குடும்பம் இருக்கு. இதே கவலையில கிடந்து எல்லார்ர வாழ்க்கையையும் பாழாக்கிப்போடாத!... மரணம் மட்டும்தான் நிச்சயமானது! மற்றெல்லாம் நிச்சயமில்லாதது. ஆனால் என்ன நடக்கிறது என்றால், நிச்சயமான மரணத்தைப்பற்றி ஒருவரும் சிந்திப்பதில்லை! இறப்பு எப்போதும் வரும், ஆறிலும் சாவு நூறிலும் சாவு இதை உணர்ந்து எல்லோரோடும் நல்லுறவுபூண்டு சமாதானமாய் வாழவேண்டும்... இனியாவது சமாதான வழியில் செல்லப்பார்!'என்று சொல்லிவிட்டு வெளியேறினார். மனைவி பெறாமகளை அணைத்தபடி அங்கேயே நின்றுகொண்டிருந்தாள்.

வெளிப்பந்தலுக்கு வந்தார் அவர். கண்களை துழாவி ஒரு பார்வை பார்த்தார் எல்லோரையும். அனேகமானோர் நெருங்கிய உறவினராயும் அயல்வீட்டுக்காரராயுமே இருந்தனர். ஓடியாடி அலுவலாயிருந்தனர். பெரும்பான்மையார் வட்டமாக இருந்து கதைபேசிக் கொண்டிருந்தனர். குசுகுசுப்பாய், ஏன் வெடிச் சிரிப்பாயுமே பெரும்பாலும் உரையாடிக்கொண்டிருந்தனர். நடிப்புக்காகவேனும் சோகத்தைக் காட்டவில்லை யாரும்! அவர்களுக்கென்ன முகத்தைக் காட்டியாச்சு, இனி ஒருபிடி மண்ணைப் போட்டால் சரி . தங்கள் கடமை முடிந்தது என்ற நிலைப்பாடுதான்! நமக்கும் இந்த நிலைவருமே என்று எண்ணுவார் யாருமில்லை! தனக்குள் சிரித்துக் கொண்டே காலியாக இருந்த நாற்காலியில் போயமர்ந்து கொண்டார்.

மரித்துக்கிடக்கும் சகோதரியைத்தான் கண்களை மூடி தியானித்துக் கொண்டிருந்தார். ஏன்தான்சிலருக்கு மட்டும் வாழ்வுபூராவும் துன்பமாகவே இருக்கிறது?! அவருக்கு விளங்கும் அதைச் சொன்னால் கல்லாலடிப்பார்! யாருக்கும் சொல்லாமல் மனதுள் இருக்கும் கருத்து இதுதான்.

மனம் போல்வாழ்வு என்பதே சரி. எப்போதும் நல்ல நினைவோடு இருந்தால் வாழ்வில் நல்லதுதான் நடக்கும்! எதிரிகளில் கவலை கஷ்டங்களில் எரிச்சல் பொறாமையில் மனதை விட்டார்க்கு நல்லவரானாலும் வீழ்ச்சிப்படலம்தான்!

மீண்டும் சுற்று வட்டாரத்தை நோட்டமிட்டார். அங்கே இன்னொரு ஒன்றுவிட்ட சகோதரியைக் கண்டார். இவள் இறந்தவளின் கூடப்பிறந்த அக்கா. ஆணும் பெண்ணுமாக பத்துப்பிள்ளைகளை பெற்று வளர்த்து ஆளாக்கிவிட்டு பெருவாழ்வு கண்டவள் இவள். தன்கூடப் பிறந்தவளின் பிரிவு அவ்வளவாக அவள் முகத்தில் தென்படவே இல்லை! பக்கத்திலிருக்கும் பெண்டுகளோடு குசுகுசுப்பாய் பேசிக் கொண்டிருந்தாள்.இடைக்கிடை இளநகையும் வந்தபடியிருந்தது.

அவளை உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தார். தான் முன்னால் இருப்பது அவளுக்கு நன்றாகவே தெரியும் வேண்டுமென்றே இப்படிச் செய்கிறாளே வெறுப்பை புறக்கணிப்பை காட்டுகிறாளே என்று மனதுள் சிரித்துக் கொண்டார்தேவநேசன். இவள்இன்று மட்டுமல்ல, பல சந்தர்ப்பங்களில் தன் வெறுப்பை கக்கியே வந்திருக்கிறாள். ஏன் இப்படி ஆனாள்? அதுவும் ஒரு தனிக் கதைதான்:.............

மூன்று வருசத்துக்கு முன்னார் இவருக்கு எண்பதாவது பிறந்தநாள் வந்தது. வெளிநாட்டிலிருந்து மகள் சொன்னாள்: இதைச் சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று தேவநேசன் தனிநபருக்கான விழாக்களை விரும்புவதில்லை. ஆனாலும் மகளின் வற்புறுத்தலால் எளிமையாக இதைச் செய்வதற்கு ஒருவாறு சம்மதித்தார். என்ன இருந்தாலும் பிள்ளைகளையும் சமாதானப் படுத்தத்தானே வேண்டும்.

சின்னதாக ஒரு ஹோல் எடுத்து ஐம்பது பேருக்கு மட்டாக இதைச் செய்வோம் என்பது அவர் ஏற்பாடு. அயலுக்கு மிக நெருக்கிய உறவினருக்கும் மட்டாய் சொல்லி ஏதோ சிறப்பாய்த்தான் பிறந்தநாள் கொண்டாடி முடிந்தது. மிகநெருங்கிய உறவாக சகோதரியாக இருந்தும் இவளுக்குச் சொல்லவில்லை! ஏனென்றால் பத்துப்பிள்ளைகளும் மணமாகி பெரும் குடும்பஸ்தர் ஆகிவிட்டார்கள். கொடி கோத்திரங்கள் கூட. இவவுக்கு சொன்னால் ஐம்பதைத்தாண்டி பெரும் கூட்டமாகிவிடும்! ஆகையால் இவளுக்கு அழைப்புவிடுவதை தவிர்த்தார். இதைப் பெரிய குற்றமாக எடுத்துக்கொண்டு ஏன் எனக்குச் சொல்லவில்லை என்று பேசித்திரிந்தாளாம்!

அன்றிலிருந்து எங்கு கண்டாலும் முகத்தை திருப்பிக்கொண்டு போவாள் வெறுப்பைக் காட்டுவாள்! முன்னரெல்லாம் இவர் உந்துருளியில் போகும்போது பேருந்துதரிப்பிடத்தில் இவளைக் கண்டால் இறங்கி சுகநலன் விசாரித்துத்தான் செல்வார். உடம்புக்கு அவ்வளவு நல்லாயில்லை, ஆசுபத்திரிக்கு போகலாமென்டால் கனனேரமா நிற்கிறன் இன்னும் பஸ் வருகுதில்லை! என்பார். இவர் ஏற்றிக்கொண்டு அங்கே இறக்கிவிடுவார்...... இவளோ கணவனோ சுகவீனமாக இருப்பதாக அறிந்தால் போதும், உடனேயே அங்கு புறப்பட்டு பார்வையிட்டு ஆறுதல்கூறி கைக்குள் ஆயிரம் ரூபாயாவது திணித்துவிட்டுத்தான் வருவார். நத்தார் வருசம் என்று கொண்டாட்டங்களிலும் இருபகுதி வீடுகளுக்குச் சென்று கொண்டாடி மகிழ்வர்! வருடப்பிறப்புக்கு பெரியண்ணாச்சியிட்ட கைவியளம் வாங்கவேணும் என்று வருபவர்களில் இவளும் ஒருவர். இப்படியாக பாசநேசத்தோடு பழகிவந்த அருமைச் சகோதரி அற்பாதி அற்ப விசயத்துக்காக வேண்டாவெறுப்பாக நடக்கிறாளே என்று மனம் நொந்தார்!

இப்போது சகோதரி என்று இவள் ஒருத்திதான் இருக்கிறாள்!

இரண்டு வருடங்களுக்கு முன்னம் தேவனேசன் தம்பதிகளுக்கு ஐம்பதாவது கல்யாண பொன்விழா. மகள் வெளிநாட்டிலிருந்து வந்து சிறப்பாய் கொண்டாடினார். அழைப்புக் கொடாதவர்களும் வந்து சிறப்பித்தார்கள். ஆனால் இவளுக்கு முறைப்படி வீடு தேடிப்போய் அழைப்புக் கொடுத்தும் இவள் மட்டும் வரவேயில்லை!.... இப்படியே சகோரியின் குணபேதங்களை சிந்தித்து நொந்துகொண்டிருந்தார்! செய்கிறார்கள் இவர்கள் பாவங்களை மன்னியும் என்று இயேசு சொன்னதுபோல் இந்தப்பேதைகள் அறியாமல் செய்வதை பொறுத்துக்கொண்டு, அறிவு பெற்ற நான் அவர்கள்போல் வீண் அகம்பாவம் பாராட்டாமல் சமாதானமாகும் வழியைக் காண்போம் என்று எழுந்தார்.

சகோதரியண்டை சென்றார் பக்கத்தில் அமர்ந்துகொண்டார். அவளையே புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்தார். அவள் மறுவளமாக திரும்பிக்கொண்டு வேண்டாவெறுப்பைக் காட்டிக்கொண்டு இருந்தாள்! இவர் அவள் கையைத் தொட்டு பெயரைச்சொல்லி அன்பாக அழைத்தார். இவள் கையை உதறிவிட்டு கண்களை அகலவிரித்துக் கொண்டு 'என்ன?' என்று அதட்டுவது போல ஏதோ அந்நியன் தொட்டுவிட்டதுபோல கேட்டாள்! "ஏன் கோபிக்கிறாய்? இன்னும் உன் கோபம் தீரவில்லையா? ஒரு சின்னத் தவறுக்காக இவ்வளவு பெரிய கோபத்தைக் காட்டுறியே இது சரியா?" "என்ன சின்னப்பிழை! எத்தனையோ பேருக்கு சொல்லியிருக்கிறீங்க என்னோட கூடப்பிறந்த சகோதரம் மாதிரி உறவாடிவந்தனீங்க! ஏன் என்ன மட்டும் விலக்கினனீங்க? சொல்லுங்கபார்ப்பம்!" "அது தற்செயலாக நடந்த ஒரு சின்னப்பிழை, இதுக்குப்போய் பெரிய கோபத்த வெறுப்ப புறக்கணிப்ப காட்டுறியே!" "இது சின்னப் பிழை இல்லை, பெரிய குற்றம்,!"


"பெரிய குற்றமா? சாவான பாவமா!.... சரி நீ பைபுளும் கையுமா, கோவிலும் நடையுமா நெடுகத்திரியுற பெரிய பக்தசிகாமணி! எங்கள் வேதத்தில் சாவான பாவங்களாக பத்துக்கட்டளைகளை படைத்துள்ளார். நான் புரிந்தது எத்தனையாவது கட்டளைக்கு விரோதமான பாவம் என்று சொல்லு பார்க்கலாம்!?"

இந்தக் கேள்விக்கு அவளால் பதில் சொல்ல இயலவில்லை. தன் முட்டாள்தனத்தை ஒத்துக் கொள்ள இயலவில்லை! ஏன் தோல்வியை தாங்கிக் கொள்ள இயலவில்லை! கையையும் காலையும் உதறிக்கொண்டு எழுந்தமு வேகமாக உள்ளே போனாள். அழுது ஒப்பாரி பாடுவாரோடு அவள் குரலும் சேர்ந்தொலித்துக்கொண்டிருந்தது!

**சூசை எட்வேட்**
திருகோணமலை



## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல : 39



திரு/திருமதி/செல்வி ..........................................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..........................................................
..........................................................
..........................................................

............................ ............................
திகதி கையொப்பம்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 39

### கேள்விகள்

**இடமிருந்து வலம்**

1. வளத்துடனும் குளிர்ச்சியுடனும் காணப்படும் நிலை.
3. ஆற்றல்.
5. நஞ்சு. (குழம்பியுள்ளது)
7. பூமி.
8. பரம்பரை.
9. மகாபாரதக் கதையில் வரும் கதாபாத்திரங்களில் ஒன்று.
11. பகைவன்.
12. உலகம் குழம்பிக் கிடக்கிறது.
14. உடம்பு.
16. துவாரம்.
18. இளம் குழந்தை.
19. ஒரு பறவை.
20. பெண்.
21. வானூர்தியின் சாரதி குழம்பிவிட்டார்.

**மேலிருந்து கீழ்**

1. ஒருவகை உலோகம். இந்தப் பெயரில் சிறு பாத்திரமும் உண்டு.
2. புலமையுடையவர். செய்யுள் இயற்றுவதிலும் திறமையுடையவர்.
3. துறவறம். (குழம்பியுள்ளது)
4. ஒருவகை தானியம்.
6. மற்றவரை மதிக்காத தன்மை. (குழம்பியுள்ளது)
9. நாற்காலி.
10. தமிழ் மாதங்களுள் ஒன்று.
11. விதை.
13. நெருப்பு.
15. பிரமாண்டமான இல்லம். (தலைகீழ்)
17. ஆண்மாடு. இளைஞனையும் இப்படிச் சொல்வர்.
18. தலைமுடி.
22. ரதம்.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 38

### விடைகள்

**இடமிருந்து வலம்**

1. எழுச்சி 3. சந்து 6. ஆறு 7. சகி 8. வள்ளல் 11. தையல் 12. கடன் 13. சேவல் 14. ஆசாரம் 17. கருணை 19. பசி 20. தடை 22. தேன் 23. காவல் 24. எத்தர்

**மேலிருந்து கீழ்**

1. எழில் 2. சிறுவன் 4. சந்தை 5. துகில் 9. களம் 10. கடவுள் 11. சாயல் 13. கூந்தல் 14. ஆணை 15. பரதன் 16. சிம் 18. ருசி 21. வடை 22. தேர்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 37

### பரிசுபெறுவோர்

முதலாம் பரிசு
**ஏ. ஆர். பாக்கியராஜா,**
இல. 88/1/1, பஸல்ஸ் லேன்,
கொழும்பு 06.

இரண்டாம் பரிசு
**எம்.ஏ.எஸ். பஸ்மிலா,**
இல. 712/A, ஆலிம் வீதி,
வாழைச்சேனை.

மூன்றாம் பரிசு
**ஏ.வி. அப்துர் ரஹ்மான்,**
207/2, கல்பொக்க,
வெலிகம.

### பாராட்டு பெறுவோர்

**1. கோபிநாத் ஜெரிஸ்,**
209/2, மார்கண்டு வீதி,
கல்முனை.

**2. ஆர். ஜெயந்திமாலா,**
இல. 228, வஹுபிட்டிய,
புசல்லாவை.

**3. ஏ.எல்.ஏ. அஸீஸ்,**
17/ஏ, சிறிமல் அவனியூ,
தெஹிவளை.

**4. ஏ. செபஸ்தியன்,**
24/2, உடுப்பிட்டிய,
உக்குவளை.

**5. கே. புண்ணியநேசன்,**
151, சாரதா வீதி,
காரைதீவு 05.




# கசப்பும்... இனிப்பும்...

– தமிழ்மணி மானா மக்கீன்

## கசப்பு–1

கடந்த ஞாயிறு இலங்கை அபிமானிகள் அவரவர் வார இதழ்களை வாசித்துக் கொண்டிருக்கை




யில், தமிழ்நாட்டின் வாசகர்களும் அதைச் செய்து கொண்டிருக்க -

அவர்களுக்கு அதிர்ச்சி! 'ஒன்னும் புரியலையே சாமி' என்கிற மலைப்பு! **ஒரே தலைப்பில்** முதல் பக்கத்திலிருந்து நான்கு பக்கம் வரையில் 'பொய்ப் புராணம்' போடப்பட்ட நீண்ட செய்தி ஒன்று!

"தி.மு.க. ஆட்சியில் 14,523 ஏக்கர் நிலங்கள் அபகரிப்பு.

இப்படி ஆகப் பெரிய எழுத்துக்களில் ஆறு இதழ்களில்.

தமிழகத் தேசிய இதழ்கள் மூத்த இதழ்கள் எனச் சொல்லிக் கொள்கிற 'தினத்தந்தி' – 'தினமணி' – 'தினமலர்' – 'இந்து தமிழ்' – **'THE HINDU' "D NEXT'** ஆகிய அனைத்து இதழ்களிலும் ஒரே மாதிரியாக தலைப்புச் செய்தி! இதை ஆங்கிலத்தில் 'LEAD NEWS' என்பார்கள்.

இந்த ஆறு இதழ்களுடன் ஏழாவதாகச் சேரவேண்டிய **'தினகரன்'** (ஆம்! நம் மூத்த இதழின் பெயர் களவாடல்)! அணியில் சேரவில்லை!

மாபெரும் அதிசயம்! ஆங்கில ஏடுகளான 'THE HINDU' – 'D NEXT' தமிழில் முன் பக்கச் செய்தி போட்டது!

இங்கே பிரசுரமாகியுள்ள படம் பார்த்து ரசியுங்கள்!

உண்மையில் 04.04.2021 ஞாயிறு தமிழக ஏடுகளுக்கு என்ன தான் நடந்தது?

ஒன்றும் நடக்கவில்லை! பெரிய வியாபாரம்! அவர்களது பண வைப்புப் பெட்டியில் லட்சம் லட்சமாக கோடி வரை பணம் கொட்டப்பட்டது.

ஏடுகள் விலை போயின! விளம்பர விபசாரம்' பகிரங்கமாக நடந்தேறியது.

தமிழகத் தேர்தலின் இறுதி நாள் பிரசாரத்தன்று இப்படியொரு நூதனப் 'பொய்ப் புளுகு' ஒரு கட்சியினால் இன்னொரு கட்சிக்குப் புனையப்பட்டது – இதழ்களை விலைக்கு வாங்கி.

ஞாயிறு காலை இளம் பொழுதில் கோப்பி, தேநீர் பருகி வார இதழ்களைக் கையிலெடுத்தவர்கள், 'இது ஒரு விளம்பரம்' என அறியாதவர்களாக பரபரப்புடன் படித்தார்கள் பின் முகத்தைச் சுளித்தார்கள். காரித் துப்பினார்கள். அன்று எவற்றையுமே பார்க்காமல் வாசிக்காமல் சுருட்டி குப்பைத் தொட்டியில்



போட்டார்கள்.

என் தமிழக வாசக அன்பர், நாகர் கோவில் பகுதி **குளச்சல் அஸீம்,** தான் பெற்ற இதழ்களை எப்படி சித்திர வதைக்குள்ளாக்கி உள்ளார் என்பதை படத்தில் பாருங்கள்.

மற்றொரு வாசகர் திருநெல்வேலி **கே.எம். ரஹ்மத்துல்லா,** ஒரு சிற்றிதழ் ஆசிரியருங்கூட, எனக்கு இட்டிருக்கும் இடுகை, 'பணம், பதவிக்காக



எதையும் செய்யும் ஆளும் அரசின் அடிமைகளுடன் ஜனநாயகத்தைத் தூக்கி நிறுத்த வேண்டிய தூண்களான இதழ்களும் விலை போயினவே!"

கையில் எடுத்தவர்கள், சரி, சரி! இன்றையப் பொழுதில் ஜீரணிக்க முயற்சிப்போம். நாளையப் பொழுதில், எதிர்வரும் மே 02ல், உதய சூரியன் உதிர்த்தெழுகையில், தேர்தல் முடிவுகள் நமக்குத் தெரிவிக்கப்படும். தகவல்களுக்காகக் காத்திருப்போம்.காலமகளே, காத்திருப்பு போதுமம்மா தமிழ்நாட்டவருக்கு நல்ல மாற்றம். கொடுத்தருள் அம்மா!

## கசப்பு–2

கசப்பு 1ஐ வழங்கி விட்டு சற்றே இந்தியத் தொ.கா.களை ஒரு பறவை பார்வை பார்த்தால் மனம் மிகவும் கசந்து போகிறது.

நடந்து முடிந்த தமிழகத் தேர்தலில் வாக்குகள் புதியப்பட்ட இயந்திரங்களின் திருகுதாளங்களை எக்கச் சக்கமாகக் காட்டுகிறார்கள்.

- **சில இடங்களில் இடை நடுவில் பழுது பட்டு இயங்கவில்லை..**
- **இன்னும் சில இடங்களில் எந்தக் கட்சிச் சின்னத்தைப் பதிந்தாலும் அதில் பதிவாவது 'தாமரை மொட்டு'! (பிஜேபி ஆகிய பாஜக. சின்னம்)**
- **வேறு சில இடங்களில் நள்ளிரவில் இயந்திரங்களைத் தூக்கிக் கொண்டு ஓடுகிறார்கள்! பிடிபடுகிறார்கள்!**

இந்த இயந்திரங்களைக் கண்டுபிடித்த நாடுகளே 'சனியனே' என்று கைவிட்டு விட்டன.

இந்த இயந்திரத்திற்கு 'மைக்ரோசிப்' கண்டுபிடித்த ஜப்பானே அதனைப் பயன்படுத்தவில்லை.

இப்போதைக்கு இந்தியாவும் நைஜீரியாவுமே இயந்திரங்களைப் பயன்படுத்துகின்றன.

இதையெல்லாம் அறிந்து புரிந்த, சென்னை, திருவெற்றியூர் தொகுதி 03, வேட்பாளர் **சீமான்,** (நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர்) "வாக்குப் பதிவு இயந்திரங்கள் பழுதாகும் நிலையிலும், ஒரு கட்சிச் சின்னத்தை மட்டும் பதிவிடும் கேவலத்தைச் செய்வதாலும் இந்த முறையைக் கைவிடக்காட்டுக் கூச்சலிடுகிறேன்" என்கிறார்.

என் பேனைக்கு ஓர் அச்சம். எதிர்காலத்தில் இலங்கையில் நடக்கும் தேர்தல்களுக்கு, முக்கியமாக, எதிர்பார்க்கப்படும் மாகாண சபைத் தேர்தல், இந்த இயந்திரங்களை இந்தியா இலவசமாக அனுப்புகிறது என்று வைத்துக் கொண்டால்....? முடிவுகள் இப்போதே கண்கள் முன் காட்சியோ காட்சி!

## கசப்பு–3

'எவன்' ஆண்டால் எனக்கென்ன? எந்தக் குடி கெட்டால் எனக்கு என்ன கவலை, நான் தினமும் குடித்து வெறித்துக் கும்மாளமிட்டு, என் குடும்பத்தைச் சீரழிக்க, டாஸ்மார்க் கடைகளில் குடி தர ஆட்சியாளன் அனுமதிக்க வேண்டும். நான் மடக் மடக்கென்று குடித்து தெருவில் விழுந்து புரள வேண்டும்" என்று ஒரு கும்பல் தமிழகத்தில்!

தேர்தலையொட்டி மூன்று நாட்கள் டாஸ்மார்க் கடைகளில் மது விற்பனையில்லை என்றதும் கடந்த ஞாயிற்றுக்கிழமை விற்றுத் தீர்த்த மது வகைகளின் **மொத்த விற்பனைத் தொகை 260 கோடி!**

கிழிஞ்சிது போ!

## இனிப்பு

படத்தில் ஓர் அருமையான உருளி. (சைக்கிள்) அழகான தம்பி! ஆளை எங்கேயோ பார்த்த மாதிரி...? கேள்விக்குறி எதற்கு, இளைய தலைமுறைகளின் இனிய சினிமா நாயகன்.



இந்த விஜய், நடந்து முடிந்த தமிழகத் தேர்தலுக்கு வாக்களிக்கச் சென்ற விதமே பலர் வாய் மெல்ல வைத்து விட்டது. தன் நீலாங்கரை பங்களாவிலிருந்து வாக்குச் சாவடிவரை உருளியில் உருண்டு போய் பதிவு போட்ட அவர், படித்தவர்களுக்கும் பாமரர்களுக்கும் இந்த உருளி மூலமே தன் வாக்கு யாரைச் சேரும் என் பதை உணர்த்திவிட்டார்.

உருளியை நன்றாகப் பார்த்தீர்களானால் அதன் முக்கியப் பாகங்கள் கறுப்பாலும் சிவப்பாலும் கலக்குகின்றன.

அது, தி.மு.க.வின் உதயசூரியன் கொடியில் காணப்படும் முக்கிய நிறங்கள்.

உருளியில் சென்ற நோக்கம், இந்திய அரசின் சமீபத்திய பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு மறைமுகமான எதிர்ப்பைத் தெரிவிக்க அவர் கையாண்ட நடிப்புக்கலை!

ஆஹா! விஜய் தம்பி, அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பெயர் பெற்றுக் கொடுக்க பிறந்த பிள்ளை நீங்க. நல்லா சவாரி செய்யுங்க....!

---




# கண்கள் அருகே இமை இருந்தும் கண்கள் இமையை பார்த்ததில்லை தாமரை மலரில் தேன் இருந்தும் தவளை அதனை சுவைத்ததில்லை!

அமைச்சர் அமைதியாக இருந்ததைப் பார்த்து விட்டு,

"சில சமயம் இது யாராவது கட்டிவிட்ட கதையாகக் கூட இருக்கலாம் – அதுவுமில்லாமல் அரசியலில் உள்ளவர்களை பொறுத்தவரையில் இது ஒன்றும் அவ்வளவு பெரிய விஷயமும் இல்லையே..." மீண்டும் அமைச்சரின் மாமனாரே பேசினார்.

அப்போதும்,

அமைச்சர் எதுவும் பேசாமல்,

இதழ்களால் சிரித்த படியே அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"அதேநேரம் ... எனது மகள் செய்யும் காரியங்கள், எல்லாமே சரி என்றும் நான் சொல்லவில்லை... ஒரு மனைவி என்ற முறையில் தனது கணவனுக்கு செய்ய வேண்டி பணிவிடைகளை அவள் செய்யவில்லை என்பதும் எனக்குத் தெரியும். இதனால் உங்கள் செயலில் எந்த விதமான தவறும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

ஆனாலும் தம்பி நாங்கள் இந்த விஷயத்தில் இன்னும் கொஞ்சம் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். இறைச்சி திங்கிறேன் என்று சொல்லிக் கொண்டு தோளில் போட்டுக் கொண்டு திங்கக் கூடாது... எவ்வளவு காசு கொடுத்தாவது அந்த பெண்ணை ஒதுக்கி வைச்சிருங்க.... இல்லாட்டி பின்னாளில் உங்களுக்குதான் அது பிரச்சினையாகிவிடும்!"

தனது சொந்த விஷயத்தில் தனது மாமனார் தலையிடுவதைப்பற்றி நினைக்கும் போது,

அமைச்சருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது!

இறைச்சியை தோளில் சுமந்து கொண்டு செல்வது தான் அல்ல அவருடைய மகள்தான்.

உண்மை இப்படி இருக்கும் போது,

அவர் தனக்கு உபதேசம் செய்வதைத்தான் அவரால் ஜீரணித்துக் கொள்ளமுடியவில்லை.

"ஒரு பெண்ணினால் எனது பயணத்தை நிறுத்திக் கொள்ளும் அளவுக்கு நான் ஒன்றும் முட்டாள் கிடையாது!"

மருமகனின் வார்த்தைகள் தன்னைத் தாக்குவதாக இருந்தாலும்,

அந்த பதிலில்,

அவர் திருப்தியடைந்தார்.

உண்மையைச் சொல்லப்போனால்,

அமைச்சரின் மனைவி,

ஏற்கனவே சங்கர் என்ற ஒருவனைக் காதலித்து வந்ததும்,

அவளது அப்பாவின் வேண்டுகோளுக்காகத்தான் தன்னைத் திருமணம் செய்து கொண்டாள் என்பதும்,

அந்த தொடர்பு இன்னும் இருக்கிறதென்றும்,

அவனுடன் தினமும் ஊர் சுற்றித்திரிகிறாள் என்ற விபரமும் அமைச்சரின் செவிகளுக்கு எப்போதோ எட்டிவிட்டது.

ஆனாலும்,

அன்றிருந்த சூழ்நிலையில், அவளைத் திருமணம் செய்து கொள்வதைத் தவிர அவருக்கு வேறு எந்த வழியும் தெரிந்திருக்கவில்லை.

மருமகனின் வார்த்தைகளில் அவருக்கு நம்பிக்கை இருப்பதைப் போல் காட்டிக் கொண்டலும்,

அந்த பெண்ணைப்பற்றி விசாரித்துப்பார்க்க வேண்டுமென்று அவர் முடிவு செய்து கொண்டார்.

அமைச்சரின் வாழ்வில் அவள் குறுக்கிடுவதை உடனடியாகவே தடுத்து நிறுத்த வேண்டும்.

அவள் கேட்கவில்லையென்றால்,

அவள் கதையை முடித்து விடுவதற்கும் அவர் முடிவு செய்து விட்டார்.

அதற்கு காரணமும் இருந்தது. மருமகனை தேர்தலில் வெல்ல வைப்பதற்காக அவர் தான் முன்னின்று உழைத்தார்.

கள்ள ஓட்டு போடுவதற்காக பணம் கொடுத்தவரும் அவர்தான். அமைச்சர் பதவி கிடைப்பதற்காக பல முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்தித்தார். அவருக்கு இருந்த பண பலத்தினால்தான் இவருக்கு அமைச்சர் பதவி கூடகிடைத்தது.

அவருக்கு கிடைத்த அந்த அமைச்சர் பதவியை.

தனக்கு ஒரு மிகப்பெரிய பலமாகவே இவர் கருதிக் கொண்டிருந்தார்.

தனது மாமனார் தனக்கு சொன்ன கருத்துக்களை சுலபமாக எடுத்துக் கொள்ள முடியாதென்பது அமைச்சருக்குத் தெரியும்.

கடந்த சில மாதங்களில் அவரிடம் ஏற்பட்டிருந்த மாற்றத்தை,

அமைச்சர் அறிவழகன் அவதானித்துக் கொண்டுதான் இருந்தார்.

இது மிகவும் ஆபத்தானது என்பது அவருக்குத் தெரியும்.

அரசியலில் மிகுந்த செல்வாக்குள்ளவர் அவர்.

அதேபோல்,

பாதாள உலகக் குழுவினருக்கும் அவருக்கு நிறையவே தொடர்பு இருக்கிறது என்பதும் அவருக்குத்தெரியும்.

இதனால்,

மலர்விழியினுடைய உயிருக்கு ஏதும் ஆபத்து வந்து விடக் கூடும் என்று கூட அவர் அஞ்சினார்.

திருமணம் கூட செய்து கொள்ளாமல்,

தனக்காகவே வாழ்ந்துகொண்டிருக்கும் அவளை இழப்பதற்கு அவர் தயாராக இல்லை.

எல்லோரையும் விட அவள் தனக்குத்தான் மிகவும் முக்கியமானவள் என்பது அவருக்கு மட்டும்தான் தெரியும்.

இதனால்,

அவளை எப்படியும் காப்பாற்றியாக வேண்டும்!

இந்த எண்ணம் வந்ததும் பத்தரமுல்லை பகுதியில், அமைதியான ஒரு சுற்றுப்புறத்தில்,

பாதுகாப்பான ஓர் இடத்தில்,

மலர்விழியின் பெயருக்கு வீடொன்றை வாங்கினார்.

இரண்டு அறைகளைக் கொண்ட வீடு,

நவீன வசதிகளுடன் அமைந்திருந்தது.

அந்தப் பகுதியில்

அதிக வீடுகள் எதுவுமில்லை.



எல்லா வீடுகளையும் சுற்றி, மதில் சுவர் கட்டப்பட்டிருந்தது.

பக்கத்து வீடுகளில் யார் யார் இருக்கிறார்கள் என்பது கூடதெரியாது.

காலையில் வேலைக்குப்போனால்,

மலையில் வீடுவந்து சேரும் நிலையில் உள்ளவர்கள்தான் அங்கு வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

மலர்விழிக்கும் அந்த வீடு நிறையவே பிடித்திருந்தது.

அங்கே வந்து குடியேறுவதற்கு,

மலர்விழியும் விருப்பம் தெரிவித்தாள். வீட்டில் இருந்து,

பஸ்சில போய் வருவதற்கு சிரமமாக இருப்பதால்,

அலுவலகத்திற்கு அருகிலேயே வீடொன்றைப் பார்த்திருப்பதாக அம்மாவிடம் சொன்னாள் மாலர்விழி.

அமைச்சரின் டிரைவர் வந்து, மலர்விழியின் பொருட்களை எல்லாம் அமைச்சரின் ஜீப்பில் ஏற்றினார்.

எதிரில்வந்த அம்மாவைப் பார்த்து,

"அம்மா நான் போயிட்டு வாறேன்...!" கரகரத்த குரலில் சென்னாள்.

அவளைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அம்மா அழுதாள்.

மலர் விழி அனுராதபுரத்துக்கு வேலைக்குப் போகும் போதும் அம்மா இப்படித்தான் அழுதாள்.

ஆனால்,

அந்த அழுகைக்கும் இந்த அழுகைக்கும் வித்தியாசம் இருந்தது. அது அவளுடைய வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக சென்ற பயணம்

இப்போது அவள் போவதோ தற்கொலை செய்து கொள்வதற்கான ஒரு பயணம்.

அதனை அவள் உணர்ந்து கொண்டதினால் ஏற்பட்ட அழுகைதான் இது.

மலர்விழியை ஏற்றிச்சென்ற அமைச்சரின் ஜீப்பை,

விழியில் வடிந்தோடும் நீர்த்துளிகளுடன்,

பார்த்துக் கொண்டே இருந்தாள்.

எல்லா உறவுகளையும் மறந்து, அந்த வீட்டில் தனியாகவே தனது வாழ்க்கை பயணத்தை ஆரம்பித்தாள்.

அவளது துணைக்கு,

உறவென்றே சொல்லிக் கொள்ள எவருமே இல்லாத ஒரு பெண்ணை,

மலர் விழிக்கு துணையாக அமைச்சர் ஏற்பாடு செய்திருந்தார்.

இப்போதெல்லாம்,

எவ்வித தடையும் இல்லாமல்,

நினைத்து நேரத்தில் எல்லாம் அமைச்சர் அங்கே வந்து போனார்.

தினமும் சமையல் செய்து வைத்து,

கவர்ச்சியாக உடுத்திக் கொண்டு அவர் வருகைக்காகவே மலர்ந்த முகத்துடன் காத்திருப்பாள் மலர்விழி.

ஒரு மாலைப் பொழுது,

அமைச்சர் மலர்விழியைப் பார்க்க வந்திருந்தார்.

வாசலில் அமர்ந்து,

இருவரும் தேநீர் அருந்தி கொண்டிருந்தார்கள்.

அதேநேரம்,

அமைச்சரின் அலைபேசிஅலறியது.

எடுத்தார்.

பேசியது, ஒரு பத்திரிகையின் நிருபர்.

அதுவும் தன்னை கடந்த காலங்களில் திட்டி எழுதிய ஒரு பத்திரிகை நிருபர் ஆனாலும்,

அவர் பரபரப்படையவில்லை.

பத்திரிகையாளர்களை பகைத்துக் கொள்ளக் கூடாது என்பது தான் அவர் படித்த முதலாவது,

அரிச்சுவடி

"என்ன.... ஜீவா?" அமைதியாகக் கேட்டார்.

"சேர், உங்களை பேட்டி ஒன்று எடுக்க வேண்டும்.... உங்களுக்கு வசதி இருந்தால் நேரில் வந்து எடுக்கலாம். அல்லது போனிலேயே எடுக்கலாம்!"

"ம்.... ஜீவா நான் இப்போது முக்கியமான மீட்டிங் ஒன்றில் இருக்கிறேன்..."

அமைச்சர் இப்படிச் சொன்னதும்

பக்கத்தில் அமர்ந்திருந்த மலர்விழி,

வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தாள்.

"ம்.... நீங்க ஒன்று செய்ங்க இன்னும் இரண்டு மணித்தியாலத்திற்கும் பிறகு பேசுங்க... போகும் வழியிலேயே பேட்டியை எடுக்கலாம்...!"

போனை மேசை மீது வைத்து விட்டு,

மலர்விழியைப் பார்த்தார்.

"இந்த பத்திரிகை காரங்க மோப்பம் பிடிப்பதில் கெட்டிக்காரங்க..." அதனால் இவங்களை கைக்கெட்டிய தூரத்திலேயே வைச்சுக்கணும்!" என்று சொன்ன அமைச்சர் இப்படியும் சொன்னார்.

"இந்த பத்திரிகை காரங்களும் பெண்ணுங்களைப் போலத்தான் இருந்தாலும் பிரச்சினை இல்லாட்டிலும் பிரச்சினைதான்!" இப்படிச் சொல்ல விட்டு,

அமைச்சர் சிரித்தார்.

"அது சரி அந்த மீட்டிங் எங்க நடக்குது...!" அமைச்சரை ஒருமாதியாகப் பார்த்தபடியே கேட்டாள் மலர்விழி.

"ம்... இப்போது தான் மீட்டிங் ஆரம்பமாகப் போகிறது" என்று சொல்லியபடியே,

அவள் அருகில் வந்தார்.

(தொடரும்)



# யாவரும் கேளீர்

## பல்சுவை இலக்கியத் திரட்டு 36

**தமிழறிஞர், டாக்டர் தி.ஞானசேகரன்**

*('யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது கணியன் பூங்குன்றனது வரிகள். இதில் கேளிர் என்பது உறவினர் எனப் பொருள்படும். இந்த உறவினருக்கு நான் தரும் பத்தி யாவரும் கேளீர்)*

### பத்திரிகைத் துறையிலும் படைப்பிலக்கியத் துறையிலும் தடம்பதித்த கே.விஜயன்



பத்திரிகைத் துறையில் நீண்டகாலம் பணியாற்றிய கே.விஜயன், ஏப்ரல் மாதத்தில் அமரத்துவம் அடைந்தவர். அவரை நினைவு கூரும் ஐந்தாவது அமரத்துவ ஆண்டு அஞ்சலிக் குறிப்பாக இப்பத்தி அமைகிறது.

1943இல் கொழும்பில் பிறந்த விஜயன், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவர். கரிப்பாறன் கிருஷ்ண குஞ்சு விஜயன்| என்ற முழுப்பெயர் கொண்ட இவர், மலையாள சமூகத்தைச் சேர்ந்தவர். முஸ்லிம் மங்கையைக் காதலித்து மணந்தவர்.

60களில் யாழ். இளம் எழுத்தாளர் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் இரு கைகள் என்ற சிறுகதையை எழுதிப் பரிசுபெற்றதன் மூலம் இலக்கியப் பிரவேசம் செய்தவர்.

முன்னணிப் பத்திரிகையாளர்களில் ஒருவராக விளங்கிய விஜயன் வீரகேசரி, சுடரொளி ஆகிய பத்திரிகைகளில் ஆசிரிய பீடங்களில் நீண்ட காலமாகப் பணியாற்றியவர். 2010முதல் நமது தூது என்னும் பத்திரிகையில் பிரதம ஆசிரியராக இருந்தார்.



வீரகேசரியில் இருந்த காலத்தில் இலக்கியச் சாரல், இலக்கிய உலகு, கலாசாரம், கலையமுதம், என்ற இலக்கியப் பகுதிகளையும் உலகத்திரை, உபகண்ட அரசியல், வெளிநாட்டுச் செய்திகள், எனவும் உலக, உள்நாட்டு அரசியல் பக்கங்களை எழுதியும் தொகுத்தும் வழங்கியுள்ளார். வீரகேசரியின் விவரணப்பகுதி, மற்றும் ஆசிரியர் தலையங்கம் போன்றவற்றையும் நீண்டகாலம் எழுதியும் தொகுத்தும் வந்தவர்.

தமிழக கணையாழி சஞ்சிகையில் தொடர்ச்சியாக இலங்கை இலக்கிய மடல் என்ற தலைப்பில் எழுதியவர்.


இவர், ஆந்தையின் பார்வையில், அக்கினிக் குஞ்சு, இளவேனில், மேகவர்ணன், ஸ்ரீமான் சஞ்சாரி, கே.வி. ஆகிய புனைப்பெயர்களில் பல்வேறு பத்திரிகைகளிலும் பத்திகள் எழுதியவர். அவரது மனநதியின் சிறுநதிகள், விடிவுகால நட்சத்திரம், ஆகிய இரு நாவல்களும் அன்னையின் நிழல் என்னும் சிறுகதைத் தொகுதியும், பலே வைத்தியர் என்னும் சிறுவர் இலக்கியமும் நூலுருப் பெற்றுள்ளன. மனிதநிழல் வீரகேசரி பிரசுரம் நடத்திய அகில இலங்கை பிரதேச நாவல் போட்டியில் கொழும்பு பிரதேசத்திற்கான முதலாம் பரிசினைப் பெற்றது. அந்த நாவலின் பிரதி 83 கலவரத்தின்போது தீக்கிரையாகி விட்டதாக அறிய முடிகிறது.

இலங்கை வானொலி, சூரியன் ஒலிபரப்பு, சுயாதீனத் தொலைக்காட்சி சேவை என்வற்றிலும் பங்களிப்புச் செய்துள்ளார். காலமும் கருத்தும், கதம்பம், சிறுவர்மலர், கலைச்சோலை போன்ற நிகழ்ச்சிகள் இவற்றுள் அடங்கும்.

மனநதியின் சிறு அலைகள்| வடமாகாண இலக்கியப் பேரவையின் பரிசினையும் தமிழக நாமக்கல் கு. சின்னப்பபாரதி விருதினையும் பெற்றவை.

பிற்பட்ட காலத்தில், நீரிழிவு நோய்வாய்ப்பட்டு கால் நரம்பு பாதிப்பாலும் கண் பார்வைக் குறைவினாலும் சிரமப்பட்டு எழுதுவதைக் குறைத்துக் கொண்டார். இவர் 07.04.2016 அன்று அமரரானார்.

### முருகபூபதி எழுதிய நடந்தாய்வாழி களனி கங்கை...|



முருகபூபதி பல்துறை எழுத்தாளர். இதுவரை ஆறு சிறுகதைத் தொகுதிகள், ஏழு கட்டுரை இலக்கியத் தொகுதிகள், மூன்று புனைவுசாரா இலக்கிய நூல்கள், ஒரு நாவல், ஒரு ஆய்வு நூல், சிறுவர் இலக்கிய நூல், கடித இலக்கியம், ஒரு சிங்கள மொழி பெயர்ப்பு நூல் என 23 நூல்களை வெளியிட்டுள்ளார். இவற்றுள், சுமையின் பங்காளிகள் என்ற சிறுகதைத் தொகுதியும், பறவைகள் என்ற நாவலும் இலங்கை தேசிய சாகித்திய விருது பெற்றவை. நடந்தாய் வாழி களனி கங்கை என்ற இந்த நூல் ஒரு வரலாற்றுக் குறிப்பு நூலாகும். கிழக்கிலங்கையிலிருந்து வெளிவரும் அரங்கம் இதழில் முன்னர் வெளிவந்த கட்டுரைகளே தற்போது தொகுக்கப்பட்டு நூலாக வெளிவந்துள்ளது. கொழும்பு நகரை அடுத்துள்ள களனி கங்கையின் தீரத்தில் காலாகாலத்தில் நடந்த சம்பவங்களை மீட்டு 17 அத்தியாயங்களில் சுவைபடத் தந்துள்ளார் ஆசிரியர். அங்கு வாழ்ந்த மக்களின் வரலாறு, உழைப்பு, உயர்வு இன்ப துன்பங்கள், மகிழ்சி, சோகம் எனப் பலதும் பத்தும் விவரணமாகின்றன. அரசியல், சமூக பொருளாதார விடயங்கள் சுவைபடத் தரப்பட்டுள்ளன. பல அத்தியாயங்கள் சினிமாப் பாடல்களின் வரிகளோடு வாசகனை உள்ளீர்க்கின்றன. 1949இல் கொழும்பைத் திகிலடையச்செய்த கொள்ளை பின்னர் திரைப்படமாக எடுக்கப்பட்டமை, களனி கங்கைக் கரையில் குடிசைகள் அமைத்து வாழும் மக்களின் கதை களனிபாலம என்ற நாடகமாகியமை, இந்தியாவில் சுட்டுக் கொல்லப்பட்ட மகாத்மா காந்தியின் அஸ்தி களனி கங்கையில் கரைக்கப்பட்டமை, கௌதம புத்தர் இலங்கை வந்த சமயத்தில் அவர் நீராடிய களனி கங்கையின் அருகில் ரஜமஹா விகாரை அமைக்கப்பட்டமை, களனிப் பிதேசத்திலிருந்து தெரிவான அரசியல்வாதிகளின் முக்கியத்துவம், களனிகங்கை கடலுடன் சங்கமிக்கும் முகத்துவாரத்தில் அமைந்துள்ள தேவஸ்தானங்களின் முக்கியத்துவம், களனி கங்கையிலிருந்து கட்டிடங்கள் வீடுகள் அமைப்பதற்குத் தேவையான பொருட்கள் கிடைத்தல், பிரிட்டிஷாரால் இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட தமிழர்கள், தெலுங்கர்கள், கன்னடர், மலையாளிகள் என வேலைதேடி வந்தவர்களுக்கு முதலில் புகலிடம் வழங்கிய பிரதேசம் களனிகங்கை தீரம்தான், களனி கங்கை தீரத்தில் நடைபெற்ற அரசியல் கொலைகள், இப்படி பல சுவாரஸ்யமானதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததுமான பல விடங்கள் இந்நூலில் பதிவாகியுள்ளன. படித்துப் பயன்பெறவும் பாதுகாத்துப் பேணுவதற்கும் ஏற்ற இந்த நூலினைத் தந்த முருகபூபதி பாராட்டுக்குரியவர். குமரன் பதிப்பகம் 39, 36ஆவது ஒழுங்கை, கொழும்பு 06 என்ற முகவரியில் இந்நூலினைப் பெற்றுக் கொள்ளலாம் நூலின் விலை ரூபா 300

### டென்மார்க் நாட்டில் நாம் பார்த்த கடற்கன்னி



கடற்கன்னி பற்றிய செய்திகளைப் பலரும் அறிந்திருக்கக் கூடும். கடற்கன்னி என்பது, மேற்பகுதி பெண்ணாகவும் கீழ்ப்பகுதி மீன்வாலும் கொண்ட ஒரு நீர்வாழ் உயிரினம் என்பதாகவே சித்தரிக்கப்படுகிறது.

கடற்கன்னி பற்றிய கதைகள் ஈராக் நாட்டிலேயே தோன்றியதாகக் கூறுவர். அக்கதை, ஷஅட்டாகடிசு| என்னும் தேவதை தனது மனிதக் காதலனைத் தவறாகக் கொன்றதால் அவமானமடைந்து கடற்கன்னியாக மாறினாள் என விபரிக்கிறது.



உலகின் பல பாகங்களிலும் கடற்கன்னி பற்றிய கதைகள், இலக்கியங்கள், ஓவியங்கள் வெளிவந்துள்ளன. ஆனாலும் இற்றைவரை உலகில் ஒருவரேனும் கடற்கன்னியைக் கண்ணால் கண்டவர் இலர். வித்தியாசமான மீன்களை மீனவர்கள் தமது வலைகளில் காணும்போது அவற்றைக் கடற்கன்னி என நம்புவதும் அதுவே வதந்தியாகி பத்திரிகைச் செய்தியாவதும் நிகழ்வதுண்டு.

டென்மார்க் நாட்டைக் குறிப்பாக அதன் தலைநகர் கொப்பன்ஹேகனைக் குறிக்கும் ஒரு குறியீடாக அந்நகரத்தின் கடற்கரையில் உள்ள ஒரு பாறையின்மேல் கடற்கன்னியின் சிலை எழுப்பப்பட்டுள்ளது.

டென்மார்க் நாட்டின் எழுத்தாளர் ஆன்சு கிறித்தியன் ஆன்டர்சன் குட்டிக் கடற்கன்னி| என்னும் புனைகதையில் வருகின்ற கடற்கன்னியை உருவகிக்கும் வகையில் இச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிலை உருவாக்கம் பெறுவதற்று ஒரு வரலாறு உண்டு. கொப்பன் ஹேகன் அரச நாடக மேடையில் அக் காலத்தில் குட்டிக்கடற்கன்னி நாடகம் நடைபெறுவது வழக்கம். கடற் கன்னியாக நடித்த எல்லென் பிறைஸ் என்ற நடிகையின் அபார நடிப்பாலும் அழகாலும் கவரப்பட்ட அந்நாட்டுச் செல்வந்தர் ஒருவர் அவளைப்போன்ற ஒரு சிலையை வடிக்க வேண்டும் என எண்ணி அந்த நாட்டின் பிரபல சிற்பி ஒருவனிடம் அந்த வேலையை ஒப்படைத்தார். அத்தோடு அந்த நடிகையை அணுகி அந்தச்சிலைக்கு முன்னுரு (ஆழன நட) கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்தார். ஆனால் அந்தச் சிலை நிர்வாணமாக இருக்கப்போகிறது என்று அறிந்ததும் அந்த நடிகை மறுத்து விட்டாள். ஆனாலும் அவளது முகச்சாயலே சிலைக்கு முன்னுருவாகக் கொள்ளப்பட்டு சிலை வடிக்கப்பட்டது.

இச்சிலை நாட்டின் அடையாளமாக உள்ளதால் அஞ்சல் தலையாகவும் அது வெளியிடப்பட்டது.

கடற்கன்னியை யாரும் காணமுடியாத நிலையில் மனிதர்கள் கடற்கன்னிபோல் வேடமணிந்து சுற்றுலாப்பயணிகளைக் கவர்வதுண்டு. சில பெண்கள் இதனை ஒரு தொழிலாகவும் நடத்தி வருகிறார்கள். சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் இத்தகைய தொழில் புரியும் பெண்கள் இருப்பதாக அறியமுடிகிறது. சிலிக்கன்| உலோகத்தினால் தயாரிக்கப்பட்ட 15 கிலோ நிறைகொண்ட கடற்கன்னி வால்பகுதியை அணிந்து தண்ணீரிலே நீந்தி கடற்கன்னியாகத் தோன்றுவார்களாம். சிறுவர்களின் பிறந்தநாள் விழாக்கள், மற்றும் வர்த்தக நிறுவனங்களின் நிகழ்வுகள் போன்றவற்றிற்கு இவர்கள் அழைக்கப்படுகிறார்கள். கடற்கன்னியாகத் தோன்றும் ஒரு நிகழ்வுக்கு அவர்கள் ஒரு மணி நேரத்துக்கு 500 டொலர்களை ஊதியமாகப் பெறுகிறார்கள் எனவும் அறிய முடிகிறது.

*(இனிஅடுத்த இதழில்)*

---



# படித்ததும் பகர்வதும் 40





**சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்**

## நல்லதை சொல்கிறோம்

### வாகனங்களை சீராக செலுத்துவோம்



இலங்கையில் வீதி விபத்துகள் நாளுக்குநாள் அதிகரித்து வருவதை காணக்கூடியதாக உள்ளது. தினசரி பல உயிர்கள் பலியாகி வருகின்றன. விபத்துகளுக்கு பெரும்பாலும் காரணமாக இருப்பது வாகனங்களை செலுத்துவோரின் தவறுகளாகவே உள்ளதை மறுக்க முடியாது.

பல சாரதிகள் எந்தவித பொறுப்புமின்றி தாம் நினைத்தபடி, மிக விரைவாக செல்லும் நோக்கில் வேகமாக வாகனங்களை செலுத்துகின்றனர். இத்தகையவர்கள் ஒருவித அதீத நம்பிக்கையினால் 'என்னால் முடியும்' என்ற இறுமாப்பில் வண்டிகளை செலுத்துவதனால் எதிர்பாராத ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. மற்றும் சிலர் மது போதையில், சிந்திக்கும் திறன் இழந்தவர்களாக வாகனத்தை செலுத்துகின்றனர். வேறும் சில சாரதிகள் தம்மை முன்னோக்கி செல்வோரை விட தாமே முந்திச்செல்ல வேண்டும் என்ற ஒருவித மனநோயினால் தான்தோன்றித்தனமாக வாகனத்தை செலுத்துகின்றனர்.

இவ்வாறு செயல்படும் அனைவரும் வீதி ஒழுங்குகளை முறையாக பின்பற்ற தவறிவிடுகின்றனர். கட்டாயமாக பின்பற்ற வேண்டிய போக்குவரத்து எச்சரிக்கை அடையாள சின்னங்களை மதிக்காது செயல்படுகின்றனர். வாகனங்களுக்கு எவ்வாறு இடமளிக்க வேண்டும், வாகனங்களை எவ்வாறு முந்திச்செல்ல வேண்டும், பாதசாரிகளுக்கு எந்தவகையில் அனுசரணையாக வாகனத்தை செலுத்த வேண்டும் போன்ற விடயங்களை கவனிக்காது விடுகின்றனர். இதனால் கவனமாக, முறையாக வாகனங்களை செலுத்துவோரும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

வாகனத்தை செலுத்துவோர் தமது உயிரை மட்டுமன்றி தமது வாகனத்தில் செல்வோரின் உயிர்களையும் பாதையில் செல்வோரின் உயிர்களையும் தனது வாகனத்திற்கு முன்னாலும் பின்னாலும் பக்கங்களிலும் செல்லும் வாகனங்களில் இருப்பவர்களின் உயிர்களையும் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்புடையவர்கள். இதனை அனைத்து சாரதிகளும் கட்டாயமாக கவனத்தில் கொண்டு, எப்போதும் சீராகவும், சரியாகவும், முறையாகவும் வாகனங்களை செலுத்த திட உறுதி கொள்ள வேண்டும்.

## நெஞ்சுக்கு நீதி

**இன்று வரும் துன்பங்களையும் துயரங்களையும் கண்டு துவண்டுவிடாதே. நாளை வரும் இன்பங்களை வரவேற்கத் தயாராக இரு!**

## நொறுக்குத் தீனி

### 'மாட்டு' அரசியல்!



அரசியல் சித்தாந்தங்களை பாவேந்தர் பாரதிதாசன் மாடுகளை வைத்து இவ்வாறு விளக்குகிறார். எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது சிந்தியுங்கள்.

இரண்டு மாடுகள் வைத்திருப்பவன் ஒன்றை அடுத்தவனுக்கு கொடுத்தால் அது சோஷலிசம்.

இரண்டு மாடுகள் வைத்திருப்பவன் இரண்டையும் அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டு தேவையான பாலை மட்டும் வாங்கி கொண்டால் அது கம்யூனிசம்.

இரண்டு மாடுகளிலும் பால் கரந்து தானே பயன்படுத்தினால் அது ஜனநாயகம்.

ஒரு மாட்டை விற்று காளை வாங்கி குட்டி போட வைத்து பண்ணையாக மாற்றினால் அது முதலாளித்துவம். அதே இரண்டு மாடுகளையும் பிடுங்கி கொண்டு வைத்திருந்த ஒன்றை கொன்று விட்டால் அது நாசிசம்.

இரண்டு மாடுகளையும் பிடுங்கி கொண்டு அவனிடமே அந்த பாலை விற்றால் அது பாசிசம்.

அரசியல் சித்தாந்தங்கள் பற்றி பாவேந்தர் பாரதிதாசன் தந்துள்ள விளக்கம் எப்படி இருக்கிறது?.


## சிந்தனை செய் மனமே

### சிரித்து வாழ வேண்டும்

***சிரிப்பு எத்தகைய நோய்களையும் நீக்கவல்லது***
***என்கின்றனர் மருத்துவம் பயின்றவர்கள்***
***சிரிப்பு மனக்கவலையைப் போக்கும்***
***என்கின்றனர் அதனை உணர்ந்தவர்கள்***
***சிரிப்புக்குத்தான் எத்தனை சிறப்பு!***
***சிந்தித்து பார்த்தால் எத்தனை மலைப்பு!***
***சிரிக்கும் முகத்தில்தான் எத்தனை மலர்ச்சி!***
***சிரித்து வாழ்கிற வாழ்வே செழிப்பு!***
***குழந்தையின் சிரிப்பில் குடும்பமே சிலிர்க்கும்***
***தாயின் சிரிப்பில்தான் பிள்ளைகள் மகிழ்சசி.***
***மனைவியின் சிரிப்பு, கணவன் களிப்பு!***
***காதலியின் சிரிப்பு, காதலனின் சொர்க்கம்!***
***உலகில் மனிதனுக்கு மட்டுமே***
***இறைவன் கொடுத்த வரம் சிரிப்பு!***
***சிரித்து வாழ வேண்டும் பிறர்***
***சிரிக்க வாழ்ந்திடக் கூடாது***

## புது வரவு

### ராம்ஜி உலகநாதனின் "இவன்"



கோவுஸ்ஸ கே, ராம்ஜி உலகநாதன் எழுதி வெளியிட்டுள்ள புதிய நூல் "இவன், இது சாமான்யனின் சரிதம்". இது அவரது சுய அனுபவங்களை வெளிப்படுத்தும் கவிதைகளின் தொகுப்பு. மலையக மண்ணின் நாற்பதாண்டு கால வரலாறை தன்கதையோடு இணைத்து கவிதையில் சொல்லும் வித்தியாசமான படைப்பாக 'இவன்' வெளிவந்துள்ளது. இது ராம்ஜி உலகநாதன் என்ற ஒரு சாமானியனின் சரிதமாக மட்டும் தெரியவில்லை. அதற்கும் மேலாக ஒரு சமுதாயத்தின் சரிதையாகவும் இருப்பதைக் காண முடியும்.

தான் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து வருகின்ற மலையகத்தின் மீது கவிஞர் கொண்டுள்ள பற்றையும், பாசத்தையும் இந்த நூல் சிறப்பாக வெளிப்படுத்துகிறது. தன்னை சூழ நடைபெறும் விடயங்கள் நூலாசிரியரை எவ்வாறு பாதித்துள்ளது என்பதற்கு 'இவன்' தரும் நான்கு வரிகள் இதோ:

இன, மத, மொழி பேதம்
வளர்ப்பதே சிலருக்கு வேலை,
கணமிகு இதயத்தோடு, இவனும்
கலங்காத நாட்கள் இல்லை!

***நூலின் பெயர் : இவன், இது சாமான்யனின் சரிதம், ஆசிரியர் : கோவுஸ்ஸ கே, ராம்ஜி உலகநாதன் வகை : கவிதை, பக்கங்கள்: 90, முதற்பதிப்பு: பெப்ரவரி 2021 விலை: ரூபா. 250/=***

## சரித்திரத்தில் ஒரு சம்பவம்

### தந்தையரை மதிப்போம்!

ஓர் இளைஞன் மிகுந்த கோபத்துடன் நபிகள் நாயகம் அவர்களிடம் வந்தான். "இறைதூதர் அவர்களே, அந்தக் கிழவனின் தொல்லை தாங்க முடியவில்லை. ரொம்பவும் தொல்லைப் படுத்துகிறார்" என்று முறையிட்டான்.

நபிகளார் மிக அமைதியாக, "நீ யாரைப் பற்றிச் சொல்கிறாய்?" என்று விசாரித்தார்கள்.

"வேறு யார்? என் தந்தைபற்றித்தான். நான் சம்பாதிப்பதில் தேவையானதையெல்லாம் அவர் எடுத்துக் கொள்கிறார். அடிக்கடிப் பணம் கேட்கிறார். என் சட்டைப் பையில் காசு இருந்தால் ஒரு வார்த்தைக் கூடச் சொல்லாமல் எடுத்துக்கொள்கிறார்." என்று முறையிட்டான்.

நபிகள் நாயகம், இளைஞனின் தந்தையை அழைத்துவர ஆள் அனுப்பினார்கள். சற்றுநேரத்தில் வயதான மனிதர் ஒருவர் தள்ளாடித் தள்ளாடி வந்தார். அவரால் சரியாக நடக்கக்கூட முடியவில்லை. முகத்தில் வரிவரியாய் முதுமையின் முத்திரைகள் தெரிந்தன. பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தார்

நபிகளார் அந்த முதியவரை அமரச் சொன்னார்கள். பிறகு கேட்டார்கள்: "பெரியவரே, உங்களைப் பற்றி உங்கள் மகன் சொன்னதெல்லாம் உண்மைதானா?


இறைத்தூதரை ஏறிட்டு நோக்கிய அந்தப் பெரியவர் அமைதியான குரலில், ஆனால் உறுதியாகப் பேசத் தொடங்கினார். "நாயகம் அவர்களே, இவன் என் மகன். இவனை வளர்த்து ஆளாக்க நான் பட்ட சிரமங்கள் ஏராளம். இவன் நிம்மதியாகத் தூங்க வேண்டும் என்பதற்காக நான் தூங்காமல் விழித்த இரவுகள் எத்தனை எத்தனையோ. இவனை என் மார்பிலும் தோளிலும் போட்டு மிகச் செல்லமாக வளர்த்தேன். இவன் பலவீனமாக இருந்தபோது நான் பலசாலியாக இருந்தேன். இவன் ஒன்றுமில்லாதவனாய் இருந்தபோது நான் பணக்காரனாய் இருந்தேன். அப்பொழுதெல்லாம் என் பொருள்களை இவன் எடுத்துப் பயன்படுத்துவதை நான் தடுக்கவில்லை. இவன் கேட்காமலேயே இவனுக்கு எல்லாமே செய்தேன்.

இன்று நான் பலவீனன் ஆகிவிட்டேன். இவன் பலசாலியாக இருக்கிறான். நான் ஒன்றுமில்லாதவனாய் ஆகிவிட்டேன். இவன் பணக்காரன் ஆகிவிட்டான். ஆனாலும் இவன் எனக்கு எதையும் தருவதில்லை. நானாக எடுத்துக் கொண்டாலும் தடுக்கிறான். இது நியாயமா இறைத்தூதர் அவர்களே?" முதியவர் பேசப் பேச நபிகளாரின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது.

இறைத்தூதர் அந்த இளைஞனை அழைத்து, "நீயும் உன்னுடைய சம்பாத்தியம், பொருள்கள் அனைத்தும் உன் தந்தைக்குரியவையே. இதை புரிந்து நடந்து கொள்." என்று அவனை எச்சரித்து அனுப்பினார்கள்.

பெற்று வளர்த்து ஆளாக்கிய தாய் தந்தையரை மதிக்காத இளைஞர்கள் சிந்திப்பார்களா?

## இயற்கையும் செயற்கையும்



**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஏப்ரல் மாதம் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
# செந்தூரம்

2021 ஏப்ரல் 11 ஞாயிற்றுக்கிழமை



## இலக்கியப் புரவலர்
## ஹாசிம் உமர்



# தாடி வளர்த்தவனுக்கு தாடியால் சாவு

ஹான்ஸ் லாங்செத் அமெரிக்காவுக்கு புலம்பெயர்ந்த நோர்வே நாட்டவர். 1846 ஆம் ஆண்டு பிறந்த அவர் கின்னஸ் புத்தகம் இல்லாத காலத்தில் வாழ்ந்தாலும் உலகில் மிக நீண்ட தாடி வளர்த்தவர் என்ற அவரது இடத்தை இன்னும் ஒருவராலும் நெருங்க முடியவில்லை. அவர் 5.33 மீற்றர்கள் (17.5 அடி) நீளத்திற்கு தாடி வளர்த்தார் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். ஊர் ஊராக சென்று தனது தாடியை காட்டித் தான் பிழைப்பு நடத்தினார். ஒருநாள் தனது தாடி மிதிபட்டு கழுத்து முறிந்து உயிரிழந்தார். அமெரிக்க தேசிய அருங்காட்சியகத்தில் அவரது தாடியை இன்று போனாலும் பார்க்கலாம்.

# ஒரு நிமிடம் சிறை அனுபவித்தவர்

உலகத்திலேயே மிக குறுகிய காலம் சிறை தண்டனை பெற்றவராக ஜோ முன்சினின் சாதனையை யாராலும் இலகுவில் முறியடிக்க முடியாது. அவர் குடித்து விட்டு அட்டகாசம் செய்ததற்கு தண்டனை கொடுக்க முடியாது ஆனால் அவருக்கு பாடம் கற்பிக்க வேண்டும் என்று நிதிபதி நினைத்தார். எனவே, ஒரு நிமிட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 1906 ஆம் ஆண்டு இந்த தண்டனை வழங்கப்பட்டது. அப்போது இது பெரிய பிரச்சினையாக இருக்காது. ஆனால் இன்று ஒரு நிமிடம் சிறை தண்டனை பெற்றாலும் அது சிறை தான். வேலை விண்ணப்பத்தில் சிறை இருந்திருக்கிறீரா என்ற கேள்விக்கு, 'ஆம்' என்றுதான் பதில் கூற வேண்டும்




பூகோள சஞ்சாரம்
பிர்தௌஸ்

# என்ஜின் இலக்கம் 47,216



1983 ஆம் ஆண்டு பெண் ஒருவர் தான் எதிர்காலத்தில் நடக்கப்போவதை கண்டதாக பிரிட்டிஷ் ரயில்வே அதிகார சபையை எச்சரித்தார். 47,216 இலக்கம் கொண்ட ஒரு என்ஜின் பயங்கரமாக விபத்துக்குள்ளாகி பலர் கொல்லப்படுவதை கண்டதாக அந்த பெண் கூறினார். அந்த பெண் கூறியது போல் 1983, டிசம்பர் 9 ஆம் திகதி ரயில் விபத்தொன்று நிகழ்ந்தது. ஒருவர் பலியானார். ஆனால் பெண் சொன்ன என்ஜின் இலக்கம் இருக்கவில்லை. விபத்துக்குள்ளான என்ஜின் இலக்கம் 47,299. விபத்து பற்றி விசாரணை நடத்தியபோது என்ஜின் இலக்கம் மாற்றப்பட்டிருப்பது கண்டறிப்பட்டது. அதாவது அந்த பெண் கூறியதை கேட்டு பயந்துபோன ரயில்வே அதிகாரிகள் 47,216 என்ஜின் இலக்கத்தை மாற்றியிருக்கிறார்கள்.

# மர்மமாகிப்போன ஐன்ஸ்டீனின் கடைசி வார்த்தைகள்



ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் 1955 ஏப்ரல் 18 ஆம் திகதி அமெரிக்காவின் நியூ ஜெர்சி நகரில் இருக்கும் பிரின்ஸ்டன் மருத்துவமனையில் தனது 76ஆவது வயதில் மரணித்தார். நள்ளிரவு தாண்டி அதிகாலை 1.15 மணிக்கு அவரது மரணம் நேர்ந்தது. அந்த நேரத்தில் தாதி ஒருவர் மாத்திரமே அவரது அருகில் இருந்தார். ஐன்ஸ்டீன் கடைசி நேரத்தில் சில வார்த்தைகளை முணுமுணுத்ததாக அந்த தாதி சொல்கிறார். என்ன துரதிருஷ்டம் என்றால் ஐன்ஸ்டீன் பேசும் ஜெர்மனி மொழி அந்த தாதிக்கு தெரியவில்லை.

ஐன்ஸ்டீன் சொன்ன சில கோட்பாடுகள் சாதாரணமாக புரிவதில்லை என்பது வேறு கதை. ஆனால், அவர் கடைசியாக கூறிய வார்த்தைகள் மொழி தெரியாததால் புரியாமல் போனதுதான் உலகமே கவலைப்படும் ஒன்று.

# தம்பி உடையான் படைக்கு அஞ்சான்



கொம்ராடஸ் மரதனோட்டப்போட்டி தென்னாபிரிக்காவில் அதிக பிரபலம். ஏனேன்றால் அதில் வென்றால் பணம் கொட்டும். 1999 ஆம் ஆண்டு போட்டியிலே 24 வயது மொட்சொயெனெங் என்ற வீரரும் பங்குபற்றினார். அவசரம் என்பதால் ஓட்டத்தின் பாதியில் நடமாடும் கழிப்பறைக்கு சென்றார். மரதன் ஓட்டப்போட்டிகளில் இதற்கு அனுமதி உண்டு. அப்போது வெளியே வந்தவர் அவரது தம்பி. களைப்பு இல்லை என்பதால் 19 வயது தம்பிக்கு போட்டியில் 9 ஆவது இடத்தை பிடிக்க முடிந்தது. 980 டொலர் பணப்பரிசும் கிடைத்தது. பெரிதாக யாரும் கண்டுகொள்ளவில்லை. இந்த மோசடியை பத்திரிகை ஒன்று படம்போட்டு அம்பலப்படுத்தியது. அதாவது இருவரது உடை, நடை, பாவனை எல்லாம் சரியாகத் தான் இருந்தது. ஆனால் இருவரும் கைக்கடிகாரத்தை மாத்தி கட்டி வசமாக மாட்டிக்கொண்டார்கள்.

# வைட்டமின் டி: கொரோனா பாதிப்பில் இருந்து காத்துக்கொள்ள உதவுமா?

**மனிதர்களின் எலும்புகள், பற்கள் மற்றும் தசைகள் திடமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்க வைட்டமின்டி உதவும் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. ஆனால், நமது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்வதில் அதற்கு ஒரு முக்கிய பங்கு உள்ளது என்று விஞ்ஞானிகள் நினைக்கிறார்கள். எனவே, கோவிட்19 நோயை எதிர்த்துப் போராட இதுவும் உதவலாம்.**



"வெயில் மூலம் கிடைக்கும் சக்தி" என்று பொதுவாக அறியப்படுகிறது வைட்டமின்டி. ஏனென்றால், நம் உடலில் வெப்பம் படும்போது, அது சுறக்கும் ஒரே வைட்டமின் இதுவே.

ஆய்வுகளின் அடிப்படையில், இந்த வைட்டமின் நம் உடலுக்குள் சென்றவுடன், உடல் அதிகமாக கால்சியம், பாஸ்பேட் ஆகியவற்றை உள்வாங்க பெருமளவில் உதவுவதாகவும், இந்த சத்துகள் பற்கள், தசைகள் மற்றும் எலும்புகள் வலுவாக இருக்க உதவுகின்றன என்றும் கூறப்படுகிறது. எலும்புகள் மிருதுவாகி, வலுவிழக்கும் சூழலுக்கு தள்ளக்கூடிய ரிக்கெட்ஸ், ஆஸ்டியோமலாசியா உள்ளிட்ட நோய்கள் வருவதற்கு வைட்டமின் டி குறைபாட்டே காரணம் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

இந்த ஊட்டச்சத்தில் இதைவிட அதிகமான நலன்கள் இருப்பதாக கூறுகிறார், அயர்லாந்திலுள்ள கோர்க் பல்கலைக்கழகத்தின் ஊட்டசத்து மற்றும் எலும்புகள் ஆரோக்கியம் குறித்த பேராசிரியரான கெவின் கேஷ்மேன். இந்த ஊட்டச்சத்தில் குறைபாடு ஏற்பட்டால், இந்த ஆண்டு அதிகம் பேசப்பட்ட, நோய்த்தொற்று, வீக்கம் உள்ளிட்டவற்றால், மக்கள் பாதிக்கப்படும் வாய்ப்பை அதிகரிக்கும் ஆற்றல் கொண்டது" என்கிறார் அவர்.

"கடந்த 20 ஆண்டுகளில், மனிதர்களின் எலும்புப்பகுதியையும் தாண்டி, வைட்டமின்டி உடல்நலனில் முக்கிய பங்கு வகிக்கிறது என்று மக்கள் புரிந்து கொள்ள வேண்டிய தேவை உள்ளது. இது நம் நோய் எதிர்ப்பு சக்தியை சீராக வைத்துக் கொள்ள உதவுகிறது."

மிகவும் குறைவான அளவு வைட்டமின்டி குறைபாடு ஏற்பட்டாலும், "நம் உடலில், இதயநோய், நீரிழிவு நோய், சில வகை புற்றுநோய்கள், தொற்று மூலம் வரும் நோய்கள் ஆகியவை உருவாகும் வாய்ப்பை அதிகப்படுத்தும்" என்று விஞ்ஞானிகள் ஒப்புக்கொள்வதாக கூறுகிறார் பேராசிரியர் கெவின்.

"வைட்டமின்டி குறைபாட்டிற்கும், கோவிட்19 தாக்கத்தால் உடல்நலன் எவ்வாறு செல்கிறது என்ற பாதைக்கும் நிச்சயமாக ஒரு தொடர்பு உள்ளது என்பதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன," என்று சில அறிவியல் ஆய்வுகள் தெரிவிப்பதாக பேராசிரியர் கெவின் தெரிவிக்கிறார். ஆனால், "நோயிலிருந்து தற்காத்துக்கொள்ளவோ, நோய்கான சிகிச்சையின் போதோ, வைட்டமின் டி குறைப்பாட்டை சரிசெய்வதற்கான மருந்துகளை பரிந்துரைக்கும் அளவிற்கு இந்த ஆதாரங்கள் இல்லை என்பதையும் அவர் கூறுகிறார்.

ஆனால், இந்த ஆய்வு சரியான பாதையில்தான் செல்கிறது என்றும், "உலகில் வைட்டமின்டி குறைபாடு எவ்வளவு பெரிய விஷயமாக உள்ளது என்பதை பெருந்தொற்று வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது" என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

"பொதுவான எண்ணம் என்னவென்றால், இதை நிரூபிக்கும் உறுதியான ஆதாரம் இல்லை என்பதே. ஆனால் இதுகுறித்து தொடர்ந்து ஆய்வுகள் நடந்து வருகின்றன. புது ஆதாரங்கள் வெளிவந்துகொண்டே இருக்கின்றன. கோவிட் 19 வந்து ஒரு வருடம் மட்டுமே ஆகிறது. அதிக தரவுகள் கிடைக்க இன்னும் நாட்கள் ஆகும்."

"இது எங்கு சுவாரஸ்யம் ஆகிறது என்றால், சுவாச நோய், சளி உள்ளிட்ட நோய்கள் உருவாக, வைட்டமின் டி குறைபாடும் காரணம் ஆகிறது என்று எடுத்துகொள்ளும்போது தான். எலும்பு பிரச்னைகளுக்கு வைட்டமின் டி தேவை என்பது நம் எல்லோருக்குமே தெரியும். ஆனால், இது, சுவாசம் சம்மந்தமான நோய்களிலிருந்து நம்மை பாதுகாக்கவும் நேர்மறையான தாக்கத்தை அளிக்கவோ உதவுகிறது என்னும்போது, இது நமக்கு கூடுதல் லாபம் தானே."

பேராசிரியர் கெவினை பொறுத்தவரையில், வைட்டமின் டி கிடைக்க முக்கிய காரணம் சூரியன். ஆனால், அதன் முழு தரம் என்பது, உங்களில் தோலைச் சார்ந்தும் உள்ளது. இது, நீங்கள் பூமியில், எந்த பகுதியில் எந்த சூழலில் வாழ்கிறீர்கள் என்பதைப் பொருத்தும் மாறும். ஐரோப்பியன் ஜர்னல் ஆஃப் கிளினிக்கல் நியூட்ரிஷன் வெளியிட்ட தரவுகளில், ஐரோப்பாவில் வாழும் 12% பேருக்கு வைட்டமின் குறைபாடு உள்ளது தெரியவந்துள்ளது.

மீன், சிவப்பு இறைச்சி, முட்டைக்கரு மற்றும் பால் வகை பொருடகளிலிருந்து நமக்கு வைட்டமின்–டி கிடைக்கிறது. ஆனால், பெரும்பாலான மக்களுக்கு, உணவின் மூலமாக, வைட்டமின்–டி பெறுவது சிரமமான விஷயமாகும்.

"வைட்டமின்–டி சத்துள்ள உணவுகள் பெரும்பாலும், மிருகங்கள் மூலம் கிடைக்கும்



கிடைக்கின்றன, பயிர்கள் மூலம் அவை கிடைப்பதில்லை என்ற பொதுவான கருத்து உள்ளது. அப்படியென்றால், காய்கறிகளை மட்டும் சாப்பிடும் பழக்கமுள்ள மக்களுக்கு, குறிப்பிட்ட வகையான உணவுகள் கிடைப்பதற்கான வாய்ப்பு இல்லாத மக்களுக்கும், வைட்டமின்–டி குறைபாடு ஏற்படும் ஆபத்து அதிகம் உள்ளது." என்கிறார் அவர்.

இதுதான் மங்கோலியாவின் நிலை. பிபிசியின் தி ஃபுட் செயின் நிகழ்ச்சி மூலம் பெறப்பட்ட தரவில், அந்நாட்டில் 70 முதல் 80% பெரியவர்களும் 90% குழந்தைகளும் வைட்டமின்–டி குறைபாடுடன் இருப்பது தெரியவந்துள்ளது.

"பலவீனமான சமூகத்தில் வாழும் மக்களுக்கு, வைட்டமின்–டி சத்துள்ள உணவுகள் மிகவும் விலை உயர்ந்தவையாக உள்ளன" என்கிறார், மங்கோலியாவில் கிரிஸ்டீனா நோபல் குழந்தைகளுக்கான அறக்கட்டளையை நிர்வகிக்கும் அமாரா போர்.

அரசு, நாட்டில் உணவில் பெரும்பாலும் சேர்க்கப்படும் கோதுமை மாவில் வைட்டமின் – டி –யை சேர்க்க முடிவு செய்துள்ளது. இதன் மூலம், அனைத்து மக்களுக்கு ஊட்டச்சத்து போய் சேர்வதை உறுதி செய்ய முடியும் என்கிறது.

தினமும் 10 மைக்ரோ கிராம் அளவு வைட்டமின் டி நம் உடலுக்கு தேவை என்பதை பெரும்பாலான பொது சுகாதார அமைப்புகள் கூறுகின்றன. ஆனால், 100 மைக்ரோ கிராம்களுக்கு மேல் இது போனால், உடலுக்கு ஆபத்தாக அமையும். இவ்வாறு வைட்டமின்–டி அதிகமானால், உடலில் எலும்புகள் பாதிக்கப்படும், கிட்னி மற்றும் இதயத்தில் பாதிப்புகள் ஏற்படக்கூடும்.

"வைட்டமின்–டி ஊட்டச்சத்தை அளிக்கக்கூடிய சப்ளிமெண்ட் உணவுகளை நீங்கள் எடுத்துக்கொண்டாலோ, அத்தகைய மாத்திரைகளை நீங்கள் அதிகம் உண்டாலோ இவ்வாறு ஆகலாம்." என்கிறார் பேராசிரியர் கெவின்.

ஆனால், உணவின் மூலம் இவ்வாறு நடப்பது கடினம், ஏனென்றால், உணவில் இதன் அளவு மிகவும் மிதமாகவே இருக்கும்."

வைட்டமின் மாத்திரைகள் அல்லது சப்ளிமெண்ட் பொடிகளை எடுத்துக்கொள்வது ஒரு வழி என்றாலும், அது உலகில் உள்ள லட்சக்கணக்கான மக்களுக்கு விலை உயர்ந்த ஒரு வழியாகும்.

"வைட்டமின்–டி கிடைக்க மாற்றுவழி நம் உணவில்தான் உள்ளது. நாம் தினமும் சாப்பிடும் உணவில் அதை சேர்த்துக்கொள்ள வேண்டும்." என்கிறார் கெவின்.

இந்த முறைக்கு ஃபோர்ட்டிபிகேஷன் என்று பெயர். கடந்த 80 ஆண்டுகளாக பல நாடுகளில் இது கடைபிடிக்கப்படிகிறது. ஊட்டச்சத்து குறைப்பாடு குறித்த நிபுணர்கள் பலரும், வைட்டமின்–டி குறைபாட்டை கையாள உலகளவில் இதை ஒரு சிறந்த வழியாக பார்க்கிறார்கள்.

நாம் வாழும் ஊருக்கு ஏற்றதுபோல உணவில் மாற்றம் இருக்கலாம் என்றாலும், உணவில் பால் அல்லது பயிர்களின் அடிப்படையில் கிடைக்கும் பால், பழச்சாறுகள், தயிர், கோதுமை மாவு, எண்ணெய், முட்டை உள்ளிட்டவற்றை எடுத்துக்கொள்ளலாம். நாட்டில் உள்ள வைட்டமின்–டி குறைபாட்டின் அடிப்படையில், எந்த அளவிற்கு உணவில் வைட்டமின் –டி சேர்க்கப்பட வேண்டும் என்பதை உணவு நிறுவனங்களே முடிவு செய்துகொள்ள அரசு கூட அனுமதி அளிக்கலாம் அல்லது, அரசே அதற்கான திட்டத்தை உருவாக்கிக் கொடுக்கலாம். தற்போது, குறைவான சூரிய வெளிச்சம் கிடைக்கும் நாடுகளில், கனடா மற்றும் ஃபின்லாந்து உள்ளிட்ட நாடுகள் மட்டுமே இத்தகைய வைட்டமின்–டி ஃபோர்ட்டிபிகேஷன் திட்டத்துடன் செயல்படுகிறது.

"நாம் என்ன சாப்பிடுகிறோம் என்ற கவலை இல்லாமல், உணவின் மூலமாக, மக்களுக்கு வைட்டமின்–டி சத்து பெரும்பான்மையான மக்களுக்கு சென்று சேர வேண்டும் என்பதே எங்களின் எண்ணம்." என்கிறார் ஃபின்லாந்தில் உள்ள ஹெல்சின்கி பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் கிரிஸ்டெல் லாம்பெர்க் என்ற பேராசிரியர். இவர், அந்நாட்டு அரசுடன் இணைந்து வைட்டமின்–டி சத்தை மக்களிடையே அதிகப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளார். இந்த பெருந்தொற்று, ஃபின்லாந்து போன்ற நாடுகள் பயன்படுத்தும் திட்டத்தை மற்ற நாடுகளும் எடுத்து நடத்தும் எண்ணத்தை ஊக்குவிக்கும் என்று பேராசிரியர் கெவின் நினைக்கிறார்.

கோதுமை மாவில் வைட்டமின்–டியை சேர்ப்பது அவ்வளவு விலை உயர்ந்த விஷயமல்ல என்கிறார் அவர். ஆனால், மிகவும் வலுவான ஊட்டச்சத்துடன் வாழும் ஒரு பெரிய மக்கள் சமுதாயம் இதன் மூலம் பலன் பெறும் என்று அவர் குறிப்பிடுகிறார். 2015ஆம் ஆண்டு, ஜெர்மனியில் இந்த ஃபோர்ட்டிபிகேஷன் முறை குறித்து எடுக்கப்பட்ட தரவில், ரொட்டியில் வைட்டமின்–டி சேர்க்கப்படுவதன் மூலம், 65 வயதிற்கும் மேற்பட்ட பெண்களிடையே எலும்பு முறிவதை 10 சதவிகிதத்திற்கு மேல் குறைக்க இது உதவியதாகவும், சுகாதாரத்துறைக்கு இதன் மூலம் ஆண்டென்றிற்கு 380 மில்லியன் டாலர்களும் லாபம் கிடைப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

## பிறந்த நாள் வாழ்த்து

உங்கள் அபிமான செந்தூரம் இதழில் உங்கள் அன்புச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை பிரசுரிக்க தீர்மானித்திருக்கிறோம். குழந்தைகளின் அழகிய நிழற்படம் ஒன்றை மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்தால் களமமைத்துக் கொடுக்க தயாராக இருக்கிறோம். குழந்தையின் முழுப் பெயர், பெற்றோரின் பெயர், விலாசம் என்பவற்றுடன் குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் பிரதி ஒன்றையும் இணைத்து அனுப்ப வேண்டும்.



அனுப்ப வேண்டிய முகவரி:

**பிறந்தநாள் வாழ்த்து, செந்தூரம், தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல. 834, கொழும்பு.**
**Senthooramtkn@gmail.com**

செந்தூரம் பிறந்த நாள் பகுதிக்கான உங்கள் அன்புச் செல்வங்களின் படங்களை எமது மின்னஞ்சல் முகவரிக்கோ 0714901181 எனும் வட்ஸ் அப் இலக்கத்திற்கோ அனுப்பலாம்.

உமர் ரிம்ஸான்
(07.04.2012)
ரிம்ஸான் முபஸ்ஷிரா
பேருவளை



அம்ரா பாஹிம்
(06.04.2003)
பாஹிம் புஷ்ரா
காலி





"நாய்க்கு கோபம் வந்தால் என்ன செய்யும் ?"
"நாய்கிட்டதான் கேக்கணும் "
"அதாண்டா கேட்கிறேன் பதில் சொல்லு!!"



ஆசிரியர்: உன் பெயர் என்னப்பா?
மாணவர்: பசுவுக்கு உடம்பு சரியில்லை சார்.
ஆசிரியர்: என்னப்பா சொல்றே? ஒன்னுமே புரியலையே.
மாணவர்: என் பெயர் "கௌ" சிக்" சார். அதைத் தான் தமிழில் சொன்னேன்.
ஆசிரியர்: எப்பா தூய தமிழில் பேசி கொல்லாதே. ஆங்கிலத்துலேயே பேசு.
மாணவர்: சரிங்க சார்.
ஆசிரியர்: உங்க அப்பா பேரு என்ன?
மாணவர்: எங்க அப்பா பேரு "கிங்" "கௌ" "மில்க்" சார்.
ஆசிரியர்: ஏண்டா மறுபடியும் கொல்ற? தமிழ்ல சொல்லேண்டா.
மாணவர்: எங்க அப்பா பேரு "ராஜ" "கோ" "பால்" சார்.
ஆசிரியர்: ஆள விடுடா சாமி! இனிமே சத்தியமா உங்கிட்ட எதுவுமே கேட்க மாட்டேன்!



# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



"சார், என்ன இது ?"
"கொஸ்டன் பேப்பர்"
"சார், இது என்ன?"
"ஆன்சர் பேப்பர்"
"என்ன ஒரு அக்கிரமம் சார்,
கொஸ்டன் பேப்பர்லே கொஸ்டன் இருக்கு, ஆன்சர் பேப்பர்லே ஒண்ணுமே காணுமே !!



அலுவலகம் ஒன்றில் டைப்பிஸ்ட்டுக்கும், குமாஸ்தாவிற்கும் இடையே சண்டை ஏற்படுகிறது.
டைப்பிஸ்ட் : நீ ஒரு முட்டாள் !
குமாஸ்தா : போடா, நீ முட்டாள் !
டைப்பிஸ்ட்: போடா, நீ தான்டா முட்டாள் !
மேனேஜர்: என்ன அங்கே கூச்சல்? நான் ஒருத்தன் இங்கே இருப்பது உங்களுக்கு தெரியலையா ?
டைப்பிஸ்ட்: ஹா ஹா ஹா...
குமாஸ்தா : ஹா ஹா ஹா...



"நம்ம டீச்சருக்கு என்ன ஆச்சு ?"
"ஏன் கேக்கறே"
"திருக்குறளை போட்டுலே எழுதிட்டு, அவங்களே இதை எழுதினது யார்'ன்னு கேக்கறாங்க



"நேற்று ஒரு கல்யாணத்துக்கு போயிருந்தேன், ஜோடின்னா அப்படி ஒரு ஜோடி, என் லைப்ஃ லே பார்த்ததேயில்லை. அப்படி ஒரு அழகு.
"அப்புறம்"
அப்புறம் என்ன........ காலிலே மாட்டிட்டு வந்திட்டேன் !!



"வாங்க ... வாங்க, இந்தத் துணி கிழியவே கிழியாது .... வாங்கிப் பாருங்க"
"அப்போ எனக்கு இரண்டு மீட்டர் துணி வேணுமே .... எப்படி கிழிப்பே ?"

# புரவலருக்கொரு புகழ் மாலை

**கோடியில் ஒருவர். கோடீஸ்வரர்களில் தனித்துவமானவர். அவர்தான் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர்! மேமன் சமூகத்தைச் சேர்ந்தவர் என்றாலும் தமிழ் மொழி மீது கொண்ட பற்றால் தமிழ் இலக்கியத் துறைக்கு தன்னிகரில்லாச் சேவைகளைச் செய்தவர். எழுத்தாளர்களின் கனவுகளை நிதர்சனமாக்குபவர்.**







நூற்றுக்கணக்கான நூல்கள் பற்றிய கண்ணோட்டங்களை எழுதி பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வலைத்தளங்களிலும் நான் பிரசுரித்துள்ளேன். அதுபோல ஒரு சில வானொலி நிகழ்ச்சிகள் பற்றி எழுதிய குறிப்புகளும் ஊடகங்களில் களம் கண்டுள்ளன. இதுவரை நான் 13 நூல்களையும், 10 வருடங்களாக பூங்காவனம் (கலை இலக்கிய, சமூக) சஞ்சிகைகளையும் தொடர்ந்து வெளியீடு செய்து வந்துள்ளேன். எனது 13 நூல்களில் பெரும்பாலான நூல்களின் முதல் மற்றும் சிறப்புப் பிரதிகளையும் பூங்காவனம் சஞ்சிகையின் ஒரு சில முதல் பிரதிகளையும் பெற்று எங்களை ஊக்குவித்தவர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர். அவர் பற்றி எழுத வேண்டும் என்ற எனது நீண்ட நாள் எண்ணம் இன்று நிறைவேறுகிறது.

இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் குட்டியானா என்ற பிரதேசத்தில் அமைந்துள்ள பாடலியா என்ற தனித்துவமான நகரில் 1947 ஆம் ஆண்டு நவம்பர் 10 இல் பிறந்த புரவலர் இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையின்போது 06 மாதக் குழந்தையாக தனது குடும்பத்தினருடன் இலங்கைக்கு குடிபெயர்ந்து வந்து சேர்ந்தார். இவருடைய தந்தையின் பெயரே உமர். தாயாரின் பெயர் ஹவ்வா உம்மா என்பதாகும். நான்கு சகோதரர்களுடனும் இரண்டு சகோதரிகளுடனும் பிறந்த இவரே குடும்பத்தில் தலைப்பிள்ளை. இலங்கை வந்த இவர், ஆரம்ப காலங்களில் கேகாலைப் பகுதியில் வாழ்ந்து வந்தார். அரிவரி முதல் பத்தாம் வகுப்பு வரை இவர் கேகாலையில் உள்ள சென்மேரீஸ் கல்லூரியில் தமிழ் மொழி மூலம் கல்வி கற்றுள்ளார். தனது ஆரம்ப வகுப்பில் தமிழ்ப் பாடம் கற்றுத் தந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி. தயாநிதி செல்வநாயகம் ஆசிரியரை இவர் இன்னமும் நினைவில் வைத்திருக்கிறார். பாடசாலைக் காலங்களிலிருந்தே வாசிப்பில் மிகவும் ஆர்வங்கொண்ட புரவலர் தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் கல்கண்டு மற்றும் தினகரன் பத்திரிகை போன்றவற்றை தொடர்ந்தும் வாசித்து வந்தார்.

1970க்குப் பிற்பட்ட காலங்களிலிருந்து கொழும்பிலேயே தொடர்ந்தும் வசித்து வருகின்றார். இவர் ஒரு கடுமையான உழைப்பாளி. ஆரம்பத்தில் துணி வியாபாரம் செய்த இவர், பின்னர் பல்வேறு வகையான வியாபாரங்களையும் செய்து, அவற்றை விருத்தி செய்தார். மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து, உருவாக்கிய பல வியாபார நிறுவனங்களை தற்போது மேற்பார்வை செய்து வருகின்றார். எவ்வளவு தான் பணம் இருந்தாலும் அதனைச் செலவு செய்து, மக்களுக்குச் சேவை செய்ய ஒரு அலாதியான நல்ல மனம் வேண்டும். அந்த நல்ல மனம் இந்த இலக்கியப் புரவலருக்கு வாய்த்திருக்கிறது. 1978 ஆம் ஆண்டில் தென்னிந்திய நடிகர் மறைந்த முத்துராமன் இலங்கை வந்த போதிலிருந்தே புரவலருக்கு கலை இலக்கியம் மீது ஆர்வம் ஏற்பட்டதாக அறிய முடிகிறது. ஆரம்ப காலங்களில் கலை இலக்கிய ஆர்வலராக இருந்த இவர், பின்னாட்களில் கலை இலக்கியக் கூட்டங்களில், கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில், அதிதிகளைச் சந்திக்கும் நிகழ்வுகளில் என்று பல்வேறு வகையான ஒன்று கூடல்களில் மிகவும் ஆர்வமாகக் கலந்து சிறப்பித்துள்ளார்.

ஓர் எழுத்தாளன் நூல் ஒன்றை எழுதி, மிகவும் கஷ்டப்பட்டு அதனை அச்சிட்டு, அதற்கு ஒரு வெளியீட்டு விழாவும் ஏற்பாடு செய்து, இதற்காகவெனச் செலவிட்ட பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள முடியாமல் திண்டாடும் போது, அந்த நிலையில் இருக்கும் குறிப்பிட்ட எழுத்தாளருக்கு, தமிழையும் இலக்கியத்தையும் ஆழமாக நேசிக்கும் ஒருவரால் மட்டுமே கைகொடுத்து உதவ முடியுமாக இருக்கும். நூலாசிரியர்களின் முதல் பிரதிகளை வாங்குவதில் ஓர் ஆத்ம திருப்தி இருப்பதால்தான் தனது நேரம் மற்றும் பொருளாதாரத்தைச் செலவு செய்து, பல நூறு மைல்கள் கடந்தும் புத்தக வெளியீட்டு விழாக்களுக்குச் சென்று புரவலர் ஹாசிம் உமர் அவர்களால் பல முதல் பிரதிகளைப் பெற்று எழுத்தாளர்களுக்கு கரம் கொடுக்க முடிகின்றது. இந்த அடிப்படையில் நூல் வெளியீடு செய்பவர்களுக்கு மத்தியில் உச்சரிக்கப்படும் ஒரு பெயரே இலக்கியப் புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் அவர்களின் பெயராகும். இதனால்தான் நூல்களை அச்சிட்ட படைப்பாளர்கள் அதன் வெளியீட்டு விழாவைச் செய்யும்போது எழுத்தாளர்களுக்கு கரங்கொடுக்கும் புரவலர் ஹாசிம் உமருக்கே முதல் பிரதியை வழங்க வேண்டும் என்று விரும்புகின்றனர்.

ஹாசிம் என்ற பெயரை உடைய இவர், தனது தந்தையின் உமர் என்ற பெயரையும் தனது பெயருக்குப் பின்னால் சேர்த்து, ஹாசிம் உமர் என்ற பெயரிலேயே தன்னை இலக்கிய உலகில் அறிமுகப்படுத்திக் கொண்டார். 1994 ஆம் ஆண்டிலிருந்து நூல்களின் முதற் பிரதிகளை வாங்க ஆரம்பித்தார். தொடர்ந்தும் சளைக்காமல் 2021 ஆம் ஆண்டில் 1000 நூல்களுக்கும் மேற்பட்ட நூல்களின் முதல் பிரதிகளை வாங்கி இலக்கிய உலகில் தனது பெயரைப் பொன் எழுத்துக்களால் பதித்துக்கொண்டார் இந்த மாபெரும் சாதனையாளர். 1994 ஆம் ஆண்டில் பிரபல்யமான மூத்த எழுத்தாளரான மானா மக்கீனின் பல்சுவைப் பத்தி எழுத்துக்களின் தொகுப்பான, ''லைட்ரீடிங்'' முதலாவது பாகத்தையே இவர் முதன் முதலில், முதலாவது பிரதியாகப் பெற்றுக்கொண்டார். இந்த நூலுக்கான வைபவச் செலவு, புத்தக அச்சிடல் செலவு மற்றும் முதல் பிரதிக்கான அன்பளிப்பு ஆகிய அனைத்தையும் இந்த இலக்கியப் புரவலர் ஏற்றுக்கொண்டதாக மூத்த இலக்கியவாதி பன்னூலாசிரியர் மானா மக்கீன் மூலம் தெரிந்துகொண்டு, மிகவும் நெகிழ்ந்து போனேன்.

2019.11.30 இல் பெற்றுக்கொண்ட இவரது 1000 ஆவது முதல் பிரதி, கொழும்பு ஸாஹிராக் கல்லூரியைச் சேர்ந்த சஹன் நெத்மின என்ற மாணவரின், 'சிறகொடிந்த பறவை' எனும் காவியத்தின் முதல் பிரதியாகும்.

இலங்கையில் மட்டுமல்லாது இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, துபாய் போன்ற பல்வேறு நாடுகளில் நடைபெற்ற புத்தக வெளியீடுகளில் கலந்துகொண்டு பல முதல் பிரதிகளைப் பெற்று









எழுத்தாளர்களுக்கு கரங்கொடுக்கும் உயரிய பண்பைக் கொண்டவர் இவர். இந்தியாவின் தமிழ் நாட்டில் வருடாந்தம் நடைபெறுகின்ற மணிமேகலைப் பிரசுரத்தின் 40 க்கும் அதிகமான நூல்களின் முதல் பிரதிகளை ஒரே மேடையில் அதுவும் ஒரே நாளில் பெற்று நூல் வெளியீட்டாளர்களுடனும் கைகோர்த்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மணிமேகலைப் பிரசுரத்தின் வெளியீடுகள் என்று பார்க்கும் போது 15 வருடங்களில் சுமார் 300 க்கும் அதிகமான நூல்களின் முதற் பிரதிகளை வாங்கியிருப்பது தமிழ்நாட்டு எழுத்தாளர்களுக்கு மகிழ்ச்சியான ஒரு செய்தியாகும். கவிதை நூல்கள், சிறுகதை நூல்கள், நாவல்கள், நாடகப் பிரதிகள், கட்டுரை நூல்கள், ஆய்வு நூல்கள்,

ஆன்மீக நூல்கள், அழகுக் கலை நூல்கள், சமூக நூல்கள், சஞ்சிகைகள் என்று இவர் முதல் பிரதிகள் வாங்காத துறையே இல்லை என்று சொல்லலாம். இலங்கையிலும் சரி, வெளிநாடுகளிலும் சரி இவரைத் தெரியாத படைப்பாளர்கள் இருக்க முடியாது.

எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் பாராட்டி, முதல் பிரதிகளைப் பெற்று அவர்களை ஊக்குவித்து, அவர்களது மகிழ்ச்சியில் பங்கெடுக்கும் புரவலர் இதுவரை நூல்களை வெளியிட்டுக்கொள்ள முடியாமல் சிரமப்படும் எழுத்தாளர்களுக்கும் உதவ வேண்டும் என்ற நோக்கில் புரவலர் புத்தகப் பூங்கா என்ற அமைப்பை உருவாக்கி அதன் மூலம் இதுவரை சுமார் 40 நூல்களை வெளியிட்டுக் கொடுத்து எழுத்தாளர்களை, நூலாசிரியர்களாக பரிணமிக்கச் செய்துள்ளார். இந்த நூல்களை தனது சொந்தச் செலவிலேயே அச்சிட்டுக் கொடுத்தது மட்டுமல்லாமல் அதற்கான வெளியீட்டு விழாக்களையும் சிறப்பாகச் செய்து கொடுத்து, எழுத்தாளர்கள் பலரையும் கௌரவப்படுத்தியுள்ளார். படைப்பாளர்களை உருவாக்க இவர் மேற்கொண்ட மற்றுமொரு சேவையாக இது அமைகிறது. இந்த ''இலவச நூல் வெளியீட்டுத் திட்டம்'' மூலம் பயனடைந்தோர் பலர். புரவலர் நூல் வெளியீட்டு விழாக்களில் கலந்துகொள்கின்ற போது நிகழ்வின் இடையில் எழுந்து செல்லாமல் குறிப்பிட்ட நிகழ்வு நிறைவடையும் வரை அந்த நிகழ்வை அவதானித்துக்கொண்டிருப்பார். இதுவும் அவரது உயர்ந்த பண்பாகும்.

இலங்கை வரலாற்றில் இலக்கியத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றி இவர் செய்து வருகின்ற இந்தப் பணியானது இலங்கையில் வேறு எந்தவொரு முஸ்லிம், தமிழ், சிங்கள நபர்களாலும் செய்யப்படாத ஒரு காரியமாகவே உள்ளது. கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் விழாவில் இஸ்லாமிய, தமிழ் இலக்கியப் போட்டிகளை நடத்தி அதில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசில்கள் மற்றும் விருதுகளை வழங்குவதற்காக பெருந்தொகைப் பணத்தை 'ஹாசிம் உமர் அறக்கட்டளை' மூலம் வழங்கி வைத்துள்ளார் என்பதும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய விடயமாகும். இஸ்லாமிய தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பதற்காவும் வளர்ந்துவரும் இளம் படைப்பாளிகளுக்கு



களம் அமைத்துக் கொடுப்பதற்காகவும் இந்த ஏற்பாடு புரவலரினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளுக்கு மேலதிகமாக புரவலர் ஹாசிம் உமரது ஏனைய பொதுப் பணிகள் என்று நோக்கும் போது பல்வேறு வகையான பொதுப் பணிகளை இவர் செய்து வருவதைப் பற்றி அறிந்துகொள்ள முடிந்தது. அந்நாட்களில் சுமார் 16 மணித்தியாலங்கள் வரை கடுமையாக உழைத்துள்ளார். தொழில் துறையில் போதிய முன்னேற்றமடைந்த இவர் இந்நாட்களில் சுமார் 04 மணித்தியாலங்களையே தொழில் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துகின்றார். மிகுதி நேரங்களில் பெரும்பாலான நேரங்களை சமூகப் பணி மற்றும் பொதுப் பணிகளுக்கே ஈடுபடுத்தி வருகின்றார். அந்தவகையில் கல்வி நடவடிக்கைகளுக்கான அனுசரணை வழங்குதல், ஆன்மீக நிகழ்வுகளுக்காக அனுசரணை வழங்குதல், தனிப்பட்ட எழுத்தாளர்களுக்கான பாராட்டு நிகழ்வு, கலைஞர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு, பத்திரிகையாளருக்கான கௌரவிப்பு நிகழ்வு, நாடக அரங்கேற்ற நிகழ்வு, பட்டிமன்ற நிகழ்வு, நடன அரங்கேற்ற நிகழ்ச்சி போன்றவற்றை நடத்துவதற்கான நிதிப் பங்களிப்பு, ஏழைக் குமர்களின் திருமண நிகழ்வுக்கான நிதிப் பங்களிப்பு மற்றும் ஏழைப் பெண்களுக்கான தையல் இயந்திரங்களை வழங்குதல், பத்திரிகையாளர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்குதல், பாடசாலைக்கு தொழுகை அறை கட்டிக் கொடுத்தல், சுனாமி, ஏனைய அனர்த்தங்கள் மற்றும் கொரோனாக் காலங்களில் நிவாரணப் பொருட்கள் வழங்குதல், நிதியுதவி செய்தல், அகதிகளுக்கு உதவி செய்தல், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் நலிவடைந்த கலைஞர்களுக்கு நிதிப் பங்களிப்பு செய்தல், நோன்பு காலங்களில் ஊடகவியலாளர்களுக்காக ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்ச்சி இவைதவிர இரகசியமான அமைப்பில் இன்னும் பலருக்கு தேவையான சந்தர்ப்பங்களில் நிதிப் பங்களிப்புகளையும் உதவிகளையும் செய்து பலருக்கும் பல்வேறு வழிவகைகளில் கரங்கொடுத்துள்ளார்.

புரவலர் முதற்பிரதி பெறுனராக, பிரதம அதிதியாக, சிறப்பு அதிதியாக, விசேட அதிதியாக என்று கலந்துகொண்ட பல்வேறு வகையான கலை, இலக்கிய நிகழ்வுகள், விழாக்களின் போது ஊடகவியலாளர்களால் பிடிக்கப்படுகின்ற புகைப்படங்கள் மற்றும் செய்திகள் பரவலாக எல்லாப் பத்திரிகைகளிலும் பிரசுரமாகும். அந்தவகையில் இன்றைய காலங்களில் புரவலரின் புகைப்படங்கள் பத்திரிகைளில் பிரசுரம் பெறாமல் இருந்தால் தான் அதிசயப்பட வேண்டும். அந்தளவுக்கு இவரது பரந்துபட்ட சேவைகள் தினந்தோறும் நடைபெறும். இதனை கலை இலக்கியவாதிகளுக்குக் கிடைத்த ஒரு வரம் என்றுதான் பார்க்க வேண்டியுள்ளது.

கலைமுத்து சஞ்சிகை 2002 ஜுலை - செப்டெம்பர் இதழின் அட்டைப் படத்தில் இவரது புகைப்படத்தைப் பிரசுரித்து, இவர் பற்றிய கட்டுரையொன்றையும் பிரசுரித்து கௌரவித்துள்ளது. அமரர் டொமினிக் ஜீவாவால் வெளியிடப்பட்டு வந்த மல்லிகை சஞ்சிகையின் 2005 பெப்ரவரி மாதம் வெளிவந்த 310 ஆவது இதழானது இவரை அட்டைப்பட அதிதியாக அலங்கரித்து, இவர் பற்றிய குறிப்புகளையும் பிரசுரித்து, இவரை கௌரவித்துள்ளது. அதுபோல இவரை கௌரவிக்குமுகமாக 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாத ஞானம் சஞ்சிகையும் தனது 235 ஆவது இதழில் இவரது புகைப்படத்தை அட்டையில் பிரசுரித்து, ஆசிரியர் பக்கத்தில் சஞ்சிகையாசிரியர் டாக்டர் ஞானசேகரன் இவர் பற்றிய குறிப்பையும் எழுதியுள்ளார். தொடர்ந்து தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் இனிய நந்தவனம் சஞ்சிகையின் 2020 மார்ச் மாத இதழ் '1000 முதல் பிரதிகள் பெற்ற கின்னஸ் சாதனையாளர்' என்ற தலைப்பில் இவர் பற்றிய கட்டுரையொன்றைப் பிரசுரித்து கௌரவித்துள்ளது.

மனிதநேய மாமணி, கலை வள்ளல், கொடை வள்ளல், கலை இலக்கியவாதிகளின் காவலர், இலக்கியக் காவலன், மொழிக் காவலர், கலாநிதி (டாக்டர்), புரவலர் என்ற அடைமொழிகளுக்குப் பாத்திரமான இவருக்கு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தலைவர் மர்ஹூம் எம். எச்.எம். அஷ்ரப் ''இலங்கை இலக்கிய உலகின் ஆயுட்காலப் புலவலர்'' என்று சான்றிதழ் வார்த்தைகளை முன்மொழிந்துள்ளார். தென்கிழக்காசியாவிலேயே இவர் போன்று தனது சொந்தப் பணத்தினால் இலக்கிய மற்றும் பொதுப் பணிகள் செய்பவர் ஒருவரும் இல்லை என்று சொல்லுமளவுக்கு இவரது சேவைகள் இடம்பெற்றுள்ளன. இவரது இந்தச் சேவை இலக்கிய உலகுக்குத் தேவை. முதற் பிரதிகள் வாங்குவதில் முதல்வராக இருக்கும் இவருக்கான உயர்ந்த கௌரவம் கிடைத்து, இவரது நாமம் கின்னஸில் இடம்பெற வாழ்த்துகின்றேன். அத்துடன் இவரது நீண்ட ஆயுளுக்கு அல்லாஹ்விடம் இருகரமேந்தி நாம் அனைவரும் துஆக்களைக் கேட்போம்!!!









# மகளுடன் பஸ்சில் சென்ற சிவகார்த்திகேயன்

நடிகர், தயாரிப்பாளர் என பல வகைகளில் உயர்ந்து வரும் நடிகர் சிவகார்த்திகேயன், கடைசியாக பி.எஸ்.மித்ரன் இயக்கிய 'ஹீரோ' படத்தில் நடித்திருந்தார். அதற்கு பிறகு கொரோனாவால் இவரது படங்களின் ரிலீஸ், சூட்டிங் தாமதமாகின. 'இன்று நேற்று நாளை' இயக்குனர் ரவிகுமாருடன் 'அயலான்','கோலமாவு கோகிலா' இயக்குனர் நெல்சன் திலீப்குமாருடன் 'டாக்டர்' உள்ளிட்ட படங்களில் நடித்து வந்தார்.இந்த இரண்டு படங்களின் ஃபர்ஸ்ட்லுக்கும் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றுள்ளன.

இந்த இரண்டு படங்களின் ஷூட்டிங்கையுமே சமீபத்தில் முடித்துள்ளார் சிவகார்த்திகேயன். அடுத்ததாக புதுமுக இயக்குனர் சிபி இயக்கத்தில் தயாராகி வரும் 'டான்' படத்தில் நடித்து வருகிறார். இவர் நடித்துள்ள 'டாக்டர்' திரைப்படம் ரம்ஜான் அன்று ரிலீசாக உள்ளது.

இந்நிலையில் சன் டிவியில் ஒளிபரப்பாகும் 'சும்மா கிழி' என்ற நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சிவகார்த்திகேயன் கலந்து கொண்டுள்ளார். இந்த நிகழ்ச்சிக்காக தான் சிவகார்த்திகேயன் தனது மகள் ஆராதனாவுடன் பஸ்சில் சென்றுள்ளார். இந்த போட்டோக்கள் சமூக வலைதளங்களில் தற்போது வைரலாகி வருகின்றன.



# ரொமான்ஸ் பியூட்டி ரஜிஷா விஜயன்

கர்ணன் பட நாயகி ரஜிஷா விஜயன் அளித்துள்ள பேட்டி வைரலாகி வருகிறது. மலையாள நடிகையான இவர், முதன் முறையாக கர்ணன் படம் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமாகிறார்.

இயக்குநர் மாரி செல்வராஜ் இயக்கத்தில் தனுஷ் நடிப்பில் உருவாகி உள்ள கர்ணன் திரைப்படம் கடந்த 9ம் திகதி திரைக்கு வந்துள்ளது.

கலைப்புலி எஸ். தாணு தயாரிப்பில் இயக்குநர் மாரி செல்வராஜ் இயக்கத்தில் தனுஷ் நடிப்பில் உருவாகி உள்ள கர்ணன் திரைப்படத்தில் திரெளபதி எனும் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார் நடிகை ரஜிஷா விஜயன். தமிழில் இப்படியொரு பெரிய படத்தின் மூலம் அறிமுகமாவது தனக்கு கிடைத்த பாக்கியம் என்கிறார்.

கொலிவுட்,பொலிவுட் மற்றும் ஹாலிவுட் என கலக்கி வரும் நடிகர் தனுஷ் உடன் நடிக்கக் கிடைத்த வாய்ப்பு மிகவும் மகிழ்ச்சியை அளித்தது. தனுஷ் உடன் நடிக்கும் நடிகர்களின் நடிப்பையும் சர்வ சாதாரணமாக நல்ல நடிப்பாக மாற்றிவிடும் ஆற்றல் அவருக்கு இயல்பாகவே உள்ளது.

கர்ணன் படத்தில் அந்த கதைக்குத் தேவையான கொஸ்ட்யூம் அணிந்து தான் படம் முழுக்க நடித்திருக்கிறேன். என்னை ரஜிஷாவாக ரசிகர்கள் பார்ப்பதை விட அந்த கதாபாத்திரமாக பார்ப்பார்கள் என நினைக்கிறேன். அதிகமாக பாவாடை தாவணி உடையணிந்து தான் படம் முழுக்க நடித்துள்ளேன்.

கர்ணன் படத்தில் நடிகர் தனுஷ் உடன் நல்லாவே ரொமான்ஸ் செய்து நடித்துள்ள ரஜிஷாவுக்கு முத்தக் காட்சி ஒன்று அதிக டேக் எடுத்ததாகவும், நடிகர் தனுஷே, போதும் மாரி சார் என்று சொன்னதாகவும் தகவல்கள் வெளியானதே அது குறித்து என்ன றில் நடிக்க சொல்றீங்க என்கிற கேள்விக்கு, அந்த காட்சியை படத்தில் பாருங்க அப்போது தான் புரியும். இப்பவே சொல்லிட்டா சுவாரஸ்யம் போயிடும் என சிரித்துக் கொண்டே எதையுமே ரிவீல் செய்யவில்லை.

கடந்த 2019ம் ஆண்டு மலையாளத்தில் வெளியான ஃபைனல்ஸ் எனும் படத்தில் ஒலிம்பிக் போட்டிக்காக சைக்கிள் வீராங்கனையாக நடித்திருந்தேன். அதற்கு முன்பு வரை சைக்கிள் ஓட்டி எனக்கு பழக்கமில்லை. அந்த படத்திற்காக சைக்கிள் பயிற்சி எடுத்து நடித்த போது, ஒரு ரிஸ்க்கான காட்சியின் போது விழுந்து அடிபட்டு விட்டது. ஆனால், அதை பொருட்படுத்தாமல் தான் மற்ற படங்களில் நடனம் உள்ளிட்ட காட்சிகளில் நடித்து வருகிறேன் என்றார்.

எனக்கு ஏற்கனவே ஆஸ்மா பிரச்சினை இருக்கிறது. ஆனால், இயக்குநர் மாரி செல்வராஜுக்கு அது தெரியாது. கர்ணன் படத்தில் ஒரு முக்கியமான காட்சியில் நிஜ மிளகாய் பொடியை வைத்து விட அது, என் மூக்கில் ஏறி ஆஸ்மா பிரச்சினையை வரவழைத்து விட்டது. ஒரு சில மணி துளிகள் போராட்டத்திற்கு பிறகு மீண்டும் நடிக்க ஆரம்பித்து விட்டேன். அந்த தகவல் திடீரென வைரலாகி என்னால் ஒரு நாள் படப்பிடிப்பே ரத்தானதாக வதந்திகள் பரவின என்றும் அவர் கூறினார்.





# செம க்யூட் கிங் ராஷ்மிகா மந்தனா

சுல்தான் படம் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமாகி உள்ள நடிகை ராஷ்மிகா மந்தனாவின் பேட்டி வெளியாகி உள்ளது.

இயக்குநர் பாக்கியராஜ் கண்ணன் இயக்கத்தில் கார்த்தி, ராஷ்மிகா நடிப்பில் ஏப்ரல் 2ம் திகதி வெளியான படம் சுல்தான். கொமர்ஷியல் படமாக வெளியாகி உள்ள சுல்தான் படம் தியேட்டர்களில் வசூல் மழையை குவித்து வருகிறது.

பெங்களூரைச் சேர்ந்த ராஷ்மிகா மந்தனா கன்னடம், தெலுங்கு, இந்தி மற்றும் தமிழ் என 4 மொழிகளிலும் நடித்து வருகிறார். சுல்தான் படம் மூலமாக தமிழ் சினிமாவில் அறிமுகமாகி உள்ள ராஷ்மிகா, பிறந்தது பெங்களூராக இருந்தாலும், வளர்ந்தது சென்னையில் தான் என்றும் மேலும், அப்பாவுடன் அதிகமாக தமிழ் படங்களையே பார்த்து உள்ளேன் என கொஞ்சம் தமிழில் கஷ்டப்பட்டு பேசினார்.

திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் சுல்தான் படப்பிடிப்பு நடைபெற்று வந்தது. காய்ச்சல் வந்தாலும், என்னால் படப்பிடிப்பு தடைபடக் கூடாது என்பதற்காக எந்தவொரு நிலையிலும் சமாளித்து நடித்து விடுவேன். அப்படி நடித்துக் கொண்டிருக்கும் போது இயக்குநர் பாக்கியராஜ் மற்றும் நடிகர் கார்த்தி என் உடம்பு நடுங்குவதை கண்டு பிடித்துவிட்டனர். மருத்துவமனைக்கு சென்று பார்த்தால், எனக்கு டெங்கு ஜுரம் வந்துடுச்சுன்னு மருத்துவர்கள் சொன்னார்கள். இரண்டு, மூன்று நாட்கள் ஓய்வுக்குப் பின் மீண்டும் நடிக்க வந்துட்டேன் என செம க்யூட்டாக பேசியுள்ளார்.

நடிகர் கார்த்தி போன்ற நடிகர்களை காண்பது மிகவும் அரிது. நடிகரை தாண்டி மனிதராகவும் அவர் ஒரு ஜெம் தான். இவரை போன்றவர்கள் உலகம் முழுக்க இருக்க வேண்டும் என்பது தான் எனது ஆசையும் என்ற ராஷ்மிகா, நிறைய விஷயங்களை எனக்கு கார்த்தி கற்றுக் கொடுத்தார் என்றும் கூறியுள்ளார்

கர்நாடகாவை சேர்ந்த ராஷ்மிகா மந்தனா இன்னும் சிங்கிளாகத் தான் உள்ளாராம். எந்த மாநிலத்தில் மாப்பிள்ளையை தேட போறீங்க என்கிற கேள்விக்கு, தமிழ்நாட்டு மருமகளாக மாறத் தான் தனக்கு ஆசை என்று சிரித்துக் கொண்டே கூறியுள்ளார். மேலும், நல்ல பையன், தன்னுடன் நல்லா மிங்கிளாகும் ஒரு இளைஞர் கிடைத்தால் கட்டிக்க ரெடி என்றும் பகிரங்கமாக கூறினார்.

கார்த்தி உடன் நடித்து விட்டீர்கள். அடுத்ததாக நடிகர் சூர்யாவுடன் நடிக்க வாய்ப்பு வந்தால் நடிப்பீர்களா? என்கிற கேள்விக்கு யாரு சார் வேண்டாம்னு சொல்வாங்க, கண்டிப்பா பண்ணுவாங்க, மீண்டும் கார்த்தியுடனே ஒரு படத்திலும் நடிக்கவும் ஆசை என்றும் கூறியுள்ளார் ராஷ்மிகா.

ஆண்டுக்கு அயராது உழைத்து 5 படங்களுக்கு மேல் நடித்து வரும் ராஷ்மிகா மந்தனாவுக்கு சமீபத்தில் நேஷனல் கிரஷ் என்கிற பட்டம் ரசிகர்களால் கொடுக்கப்பட்டது. உங்களுக்கு சுப்பர் ஸ்டார் பட்டம் கொடுத்தால் என்ன சொல்வீங்க என்கிற கேள்விக்கு, பெரிய கும்பிடு போடும் ராஷ்மிகா, ஏதோ நான் பாட்டுக்கு நடிச்சிட்டு இருக்கேன் அதுவே போதும்.



# நயன் பாணியில் பிரியா பவானி

தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் இளம் நடிகையான பிரியா பவானி சங்கர், முதன்முறையாக கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள படத்தில் நடிக்கிறாராம்.

சின்னத்திரை சீரியல் மூலம் பிரபலமான நடிகை பிரியா பவானி சங்கர், மேயாத மான் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானார். பின்னர் இவர் நடித்த கடைக்குட்டி சிங்கம், மான்ஸ்டர் போன்ற படங்களும் நல்ல வரவேற்பை பெற்றன.

நடிகை பிரியா பவானி சங்கர் தற்போது, அதர்வாவுடன் குருதி ஆட்டம், எஸ்.ஜே.சூர்யாவுடன் பொம்மை, ஹரிஷ் கல்யாணுக்கு ஜோடியாக ஓமணப்பெண்ணே போன்ற படங்களில் நடித்து முடித்துள்ளார். இப்படங்கள் ரிலீசுக்கு தயாராகி வருகின்றன.

ராகவா லாரன்ஸ் உடன் ருத்ரன், கமல்ஷங்கர் கூட்டணியில் உருவாகும் இந்தியன் 2, சிம்புவின் பத்து தல, அருண் விஜய்யின் 33வது படம் என ஏராளமான படங்களை கைவசம் வைத்துள்ளார். இந்நிலையில், மேலும் ஒரு படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளார். அதன்படி இப்படத்தை நயன்தாராவின் ஐரா படத்தை இயக்கிய சர்ஜூன் இயக்குகிறார். திரில்லர் கதையம்சம் கொண்ட படமாக இது உருவாகிறதாம். கதாநாயகியை மையமாக வைத்து உருவாகும் இப்படத்தில் நடிகை பிரியா பவானி சங்கர் டிவி ரிப்போர்ட்டராக நடிக்கிறாராம்.

மேலும் இந்த படத்தில் மெட்ரோ சிரிஷும் முக்கிய கதாபாத்திரத்தில் வருகிறாராம். யுவன் சங்கர் ராஜா இசையமைக்கும் இந்த படத்தை இர்பான் மாலிக் என்பவர் தயாரித்து வருகிறார்.



# சார்லி சாப்ளினும் நான்கு மனைவிகளும்

**வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டு போகும் என்பார்கள் அப்படிப் பார்த்தால் நம்மை வாய்விட்டு சிரிக்க வைப்பவர்களை மருத்துவர்களுக்கு சமம் என்று சொல்லலாம். உலகில் அதிக மக்களை சிரிக்க வைத்த நபர் யார் என்று கேட்டால் ஒரே ஒரு நபரைத்தான் வரலாறு புன்னகையுடன் உதிர்க்கும். அவர்தான் ஈடு இணையற்ற ஆங்கில நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின் . இன்று திரைப்படங்களில் வசனங்களை கேட்டு சிரிக்கிறோம் ஆனால் ஊமைப்படங்கள் மட்டுமே வெளிவந்த ஒரு கால கட்டத்தில் மொழியின் துணையின்றி வசனம் எதுவும் பேசாமல் தன் அங்க அசைவுகளாலே ரசிகர்களை வயிறு குலுங்க சிரிக்க வைத்தவர்தான் சார்லி சாப்ளின்.**

1889 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் திகதி லண்டனில் உள்ள வால்வொர்த் நகரில் சாள்ஸ்க்கும் ஹன்னா ஹாரியட் ஹில்லுக்கும் மகனாகப் பிறந்தார். இவன் பிறந்த சில நாட்கள் கழித்து பெற்றோர்களது திருமண வாழ்க்கை முறிந்தது.

பெற்றோர் இருவரும் மேடை இசைக் கலைஞர்கள் ஆவர். மிகவும் ஏழ்மை நிலையில் இருந்தனர். சம்பாதிக்கும் பணத்தை எல்லாம் தந்தை குடித்தே தீர்த்தார். ஒரு நாள்மேடையில் பாடும்போது சாப்ளினின் அம்மாவிற்குத் தொண்டையில் பிரச்சினை ஏற்பட்டது. அவளால் பாட முடியவில்லை. அதனால் ரசிகர்கள் ஒரே கூச்சலிட்டனர். அவமானம் கண்ணீராகக் கரைய மேடையை விட்டு கீழே இறங்கினாள் ஹென்னா. அப்போது ஐந்து வயது சிறுவன் சார்லி சாப்ளின் என்ன நினைத்தானோ தெரியவில்லை. உடனே வேகமாக மேடையேறினான். அது ஒரு மகா கலைஞனின் முதல் கலைப் பயணம் என்று யாருக்கும் அப்போது தெரிந்திருக்காது!



தன் அம்மா சொல்லிக் கொடுத்த பாடலைப் பாடி, தன் பிஞ்சு கால், கைகளை அசைத்து நடனமாடத் தொடங்கினான். ரசிகர்களின் விசில் சத்தத்தாலும், கைத்தட்டலாலும் அரங்கமே அதிர்ந்தது! மேடையை நோக்கிச் சில்லறைகள் சீறிப் பறந்தன. சிறுவனான சார்லி சாப்ளின் உடனே பாடுவதை நிறுத்திவிட்டுச் சில்லறைகளைப் பொறுக்கினான். கூட்டமோ சார்லி சாப்ளினை பாடச் சொல்லி கூச்சலிட்டது!

ஆனால் சார்லி சாப்ளினோ சிறிதும் சளைக்காது 'சிறிது நேரம் பொறுத்திருங்கள்! சில்லறைகளைப் பொறுக்கிய பிறகுதான் பாடுவேன்; ஒரே நேரத்தில் இரண்டு வேலைகளை என்னால் செய்ய முடியாது!' என்று கூறிவிட்டுச் சில்லறைக் காசுகளைப் பொறுக்கத் தொடங்கினான் சார்லி சாப்ளின். கூட்டத்தினர் சிரித்தனர். மீண்டும் மீண்டும் எழுந்த சிரிப்பால் வானம் அதிர்ந்தது! தன் தாய் பாடமுடியாமல் தவித்ததை நடித்துக் காட்ட மீண்டும் காது கிழியும் சிரிப்பொலி எழுந்தது.

சார்லி சாப்ளின் ஆதரவற்றோருக்கான பாடசாலை ஒன்றில் வளர்ந்தான். சார்லி சாப்ளினின் பன்னிரண்டாவது வயதில், அவனது தந்தை குடிப் பழக்கத்தால் உடல் நலம் குன்றி இறந்தார். தாயும் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகி ஒரு மன நலம் பாதிக்கப்பட்டோருக்கான காப்பகம் ஒன்றில் சேர்க்கப்பட்டார்.

சார்லி சாப்ளின் பத்து வயதாக இருந்த போது ஒரு பூனையாக நகைச்சுவையான பாத்திரத்தில் நடிக்கும் வாய்ப்பை பெற்றிருந்தார். 1903ஆம் ஆண்டில் ஒரு நாடகத்தில் நடித்தார். ஷெர்லக் ஹோம்ஸ் நாடகத்தில் செய்தித்தாள் விற்கும் சிறுவன் பில்லி வேடத்தில் நடித்தார். இதனைத் தொடர்ந்து பல்சுவை நிகழ்ச்சியிலும், ஒரு நகைச்சுவை நிறுவனத்திலும் கோமாளி வேடத்திலும் நடித்தார்.

1912 ஆம் ஆண்டு ஒக்டோபர் 2 இல் நாடகக் குழுவொன்றுடன் சார்லி சாப்ளின் ஐக்கிய அமெரிக்காவுக்கு சுற்றுலா மேற்கொண்டார். பின்னர் அங்கேயே தங்கிவிட தீர்மானித்தார்.

அவர் நடித்த முதலாவது ஊமைப்படம் 1914 ஆம் ஆண்டு வெளிவந்தது. இப்படம் பெரிய வரவேற்பு எதனையும் பெறவில்லை. அதே ஆண்டில் வெளிவந்த மற்றொரு திரைப்படத்தில் தான் விரும்பியபடி நடிப்பதற்கு சார்லி சாப்ளினுக்கு அவகாசம் வழங்கப்பட்டது. இதில்தான் சார்லி சாப்ளின் எவராலும் மறக்க முடியாத தனது வினோத ஆடைகளுடன் முதன் முதலாக காட்சியளித்தார். பை போன்ற நீளக் காற்சட்டை, மாற்றி அணிந்த சப்பாத்துக்கள், குட்டையாக கத்தரிக்கப்பட்ட மீசை, அழுக்குத் தொப்பி, கைத்தடி, தள்ளாடிய நடை முதலிய சார்லி சாப்ளினின் சிறப்பு சின்னங்கள் இத் திரைப்படத்திலேயேதான் முதன் முதலாக புகுத்தப்பட்டன. இவையே அவருக்கு மறையாத புகழைப் பெற்றுக்கொடுத்த சிறப்பு சின்னங்களாக அமைந்தன. இந்த திரைப்படத்தை தொடர்ந்து அவரது புகழ் அமெரிக்காவில் மட்டுமன்றி உலகின் பல நாடுகளிலும் விரைவாகப் பரவியது. இவை அனைத்தும் அவராலேயே தயாரித்து இயக்கபட்டவையாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். சார்லி சாப்ளினின் முழுநீள திரைப்படங்களுள் பல வெற்றி பெற்றன.



சார்லி சாப்ளினின் முதல் பேசும் படம் 1940 ஆம் ஆண்டில் வெளியானது. இது அடோல்ஃப் ஹிட்லரையும் அவரது பாசிச கொள்கையையும் எதிர்த்து குரல் கொடுத்த படம். இப்படம் அமெரிக்கா இரண்டாம் உலகப் போரில் புகுவதற்கு ஒரு வருடம் முன்பு அங்கு வெளியிடப்பட்டது. இதில் சார்லி சாப்ளின் இரு வேடங்கள் பூண்டிருந்தார். அவை ஹிட்லர் மற்றும் நாசியர்களால் கொடுமையாக கொல்லப்படும் யூத இனத்தைச் சேர்ந்த ஒரு நாவிதன். சினிமா மீது மோகம் கொண்ட ஹிட்லர் இப்படத்தை இரு முறை பார்த்தார்.

சார்லி சாப்ளினின் படங்கள் சாதாரண மக்களால் மாத்திரமன்றி உலகின் பிரபல தலைவர்களாலும் விரும்பி ரசிக்கப்பட்டன. வின்ஸ்டன் சேர்ச்சில், லெனின், ஸ்டாலின், ஜவஹர்லால் நேரு, அடோல்ப் ஹிட்லர் போன்ற அக்கால உலகத் தலைவர்கள் சார்லி சாப்ளினின் திரைப்படங்களின் பிரத்தியேக பிரதிகளை வைத்துக்கொண்டு ஓய்வு நேரங்களில் பார்த்து மகிழ்ந்தனர். ஹிட்லர் எந்தளவு சார்லி சாப்ளினின் மீது பிரியம் வைத்திருந்தாரென்றால் தனது ஹிட்லர் மீசையை கூட சார்லி சாப்ளினை பின்பற்றியே வைத்திருந்தார்.

சாப்ளினின் அரசியல் சிந்தனைகள் இடது சார்புடையதாகக் கருதப்படுகிறது. இது இவரது திரைப்படங்களில் பிரதிபலித்தன. இப்படம் பாட்டாளிகள் மற்றும் ஏழைகளின் கவலைக்கிடமான நிலைமையை சித்தரித்தது. இவர் அமெரிக்க கொள்கைகளுக்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், கம்யூனிஸ்ட் கொள்கைவாதி எனவும் சந்தேகிக்கப்பட்டார். அதனால் புலனாய்வு பிரிவிடம் இவரை கண்காணிக்குமாறு உத்தரவிடப்பட்டது. அமெரிக்காவில் சார்லி சாப்ளின் வாழும் உரிமையை நீக்க முயற்சி எடுக்கப்பட்டது. சார்லி சாப்ளினின் வெற்றிகள் அனைத்துமே அமெரிக்காவில் அமைந்தாலும், அவர் பிரிட்டிஷ் குடியுரிமையினையே நீடித்தார். 1952 ஆம் ஆண்டில் சார்லி சாப்ளின் இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டார். இதனை தெரிந்துகொண்ட புலனாய்வு பிரிவினர் சாப்ளின் அமெரிக்கா திரும்பும் அனுமதிச் சீட்டை ரத்து செய்தார்கள். ஆதலால் அவர் இங்கிலாந்திலேயே தங்கும்படி நேர்ந்தது. பெரும்பாலும் சுவிஸர்லாந்தில் வாழ்ந்தார். இவர் 1972 ஆம் ஆண்டில் தனக்கு அளிக்கப்பட்ட கௌரவ ஒஸ்கார் விருதைப் பெறுவதற்காக அமெரிக்கா திரும்பினார்.

சார்லி சாப்ளின் ஒன்றன் பின் ஒன்றாக நான்கு மனைவிகளை மணந்தார். முதலாவது மனைவி மில்ட்ரெட் ஹாரிஸ் அவர்களுடனும் (ஒரு பிள்ளை), இரண்டாவது மனைவி லீட்டா கிரே அவர்களுடனும் (இரு பிள்ளைகள்), மூன்றாவது மனைவி போலெட் கொடாட் அவர்களுடனும் நான்காவது மனைவி ஊனா ஓ நீல் அவர்களுடனும் (எட்டு பிள்ளைகள்) வாழ்ந்தார். 1943 ஆம் ஆண்டு ஜூன் பதினாறாம் திகதி சார்லி சாப்ளின் தனது 54 ஆம் வயதில் 17 வயது நிரம்பிய நான்காவது மனைவியான ஊனா ஓ நீலை மணந்தார். இத் திருமண வாழ்க்கை மகிழ்ச்சியுடன் பல வருடங்கள் நீடித்தது. இவர்களுக்கு எட்டு பிள்ளைகள் பிறந்தனர்.

1975 மார்ச் நான்காம் திகதி பிரித்தானியாவின் இரண்டாம் எலிசபெத் மகாராணி 'சேர்' பட்டம் வழங்கி கௌரவித்தார். 1985 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம் இவரது உருவத்தை தபால் தலையில் வெளியிட்டு பெருமை சேர்த்தது. சார்லி சாப்ளினின் வாழ்க்கை வரலாறு 1992 ஆம் ஆண்டு 'சாப்ளின்' என்ற பெயரில் ஒஸ்கார் விருது பெற்ற சேர் ரிச்சர்ட் அட்டென்பரோ என்பவரால் இயக்கி திரைப்படமாக்கப்பட்டது. இந்தப் படத்தில் அவரது மகள் ஜெரால்டின் சாப்ளின், சார்லி சாப்ளினின் தாயாக நடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சார்லி சாப்ளின் 1977 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று தனது 88 ஆவது வயதில் சுவிட்சர்லாந்தின் வேவே நகரில் இறந்தார்.

**தொகுப்பு–பரீட் இக்பால் – யாழ்ப்பாணம்**

# செல்ஃபி உலா


தாரீக் அமீன் மடவள பஸார்


எம்.எப் ஹசன் பெந்தோட்டை தண்டவாள வீதி


ரதி வினோத்


தில்ஷாத் , சாஜித் , சகி கிண்ணியா


கிஷாலன் வத்தளை


வன்னித் தமிழ் மறவன் கிளிநொச்சி

தினகரனின் செந்தூரம் இதழின் செல்பிஉலா பக்கத்தில் உங்களது செல்பிக்களும் இடம்பெற விரும்பினால் selfiulla@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு படத்தையும் விபரங்களையும் அனுப்பி வையுங்கள். செல்பிக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.


மன்ஹா ஆலின் ஓட்டமாவடி


நத்வி இர்பாம் ஹம்பாந்தோட்டை


யதீஸ் வினோத்

**குடும்பத்தவர்களினதும் நண்பர்கள், நலன்விரும்பிகளினதும் ஆதரவுடன் நூற்றுக்கணக்கான வறியவர்கள், விதவைகளுக்கு உதவி செய்ய முடிந்தது மட்டற்ற மகிழ்ச்சி தருகிறது.**

இல்லாதவர்களுக்கு உதவும் பண்பு எல்லோருக்கும் வருவதில்லை. இடது கை கொடுப்பது வலது கைக்கு தெரியக் கூடாது என்று உயர்ந்த நோக்கத்துடன் உதவுபவர்களை போலவே தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளவும் பெயருக்கும் புகழுக்கும் சேவை புரிபவர்களும் இருக்கவே செய்கின்றனர். பணம் இருப்பவர்கள் எல்லாம் அள்ளி கொடுப்பதுமில்லை. தானும் தனது குடும்பமும் சொகுசாக வாழ்ந்தால் போதும் என்று இருப்பவர்களும் இருக்கத் தான் செய்கிறார்கள். கொலன்னாவையைச் சேர்ந்த ஹனீப் ஹாஜியாரை தெரிந்தவர்களை விட தெரியாதவர்கள் அதிகமிருப்பர். ஆனால் வறியவர்கள், அங்கவீனர்கள், விதவைகள் மத்தியில் அவர் உயர்ந்த இடத்தில் இருக்கிறார். கடந்த 35 வருடங்களுக்கு மேலாக சமூக சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி தேடித் தேடி சேவை புரியும் அவர் பெயரையோ புகழையோ ஒருபோதும் எதிர்பார்த்ததில்லை.

நான் றொம் பிஸி பகுதிக்காக அவரை சந்தித்தேன்.

1984 ஆம் ஆண்டு முதல் தனிப்பட்ட ரீதியில் வறியவர்களுக்கும் விதவைகளுக்கும் அனர்த்தங்களினால் பாதிக்கப்படுபவர்களுக்கும் முடிந்த உதவிகளை செய்து வந்த அவர் 2016 இல் கொழும்பில் ஏற்பட்ட பாரிய வெள்ளத்தின் பின்னர் அமைப்பாக இணைந்து சேவை செய்து வருகிறார். கொலன்னாவ ஜே.ஜே.பவுண்டேசன் தலைவரும் பிரபல சமூகசேவையாளருமான கலாநிதி அல்ஹாஜ் ஐ.வை.எம் ஹனீப்.

தற்பொழுது அவருக்கு 60 வயதாகிறது.

'' நான் அந்நஸார் பாடசாலையில் படித்தேன். சாதாரண தரம் வரை (அன்று ஜேஎஸ்ஸி) வரை கற்ற பின்னர் குடும்ப சூழ்நிலை காரணமாக படிப்பை கைவிட்டு வியாபாரம் செய்வதில் இறங்கினேன். பிடவை கடையில் விற்பனை உதவியாளராக



# 75 ரூபா மாத சம்பளத்திற்கு வேலை செய்த எனக்கு வறியவர்களின் கஷ்டம் நன்கு தெரியும்

*– 35 வருடங்களாக சமூக சேவையாற்றி வரும் ஜே.ஜே.பவுண்டேசன் தலைவரும் பிரபல சமூகசேவையாளருமான கலாநிதி ஐ.வை.எம் ஹனீப்*

## நான் றொம்ப பிஸி...

ஆரம்பமான எனது வாழ்க்கை படிப்படியாக காசாளர், முகாமையாளர் என உயர்ந்தது. 1981 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டேன். அதனோடு வாழ்க்கை மாறியது. 1982 இல் சொந்தத் தொழில் ஆரம்பித்தேன். பின்னர் நான் தொழில் புரிந்த முதலாளியுடன் கூட்டாக தொழில் ஆரம்பித்தேன்.

1973 ஆம் ஆண்டு கடையில் வேலைக்கு சேந்த போது எனக்கு கிடைத்த முதல் சம்பளம் 75 ரூபா தான். மாதச் சம்பளம் அது. அந்த ஞாபகம் இன்னும் நினைவில் இருக்கிறது.''

அந்த நாள் நினைவுகளை மீட்டினார் ஹனிப்.

சமூக சேவை செய்யும் ஆர்வம் பாடசாலை காலம் முதலே இருந்ததாக கூறும் அவர் இளைஞராக இருக்கும் காலம் முதல் சிறு சேவைகளில் பங்களித்து வந்ததாக கூறுகிறார்.

'' ஆரம்ப காலத்தில் நான் பட்ட கஷ்டங்களின் வலியை நான் மறக்கவில்லை. மற்றவர்களின் வலியை நான்கு உணர்கிறேன். அதனால் தான் நாடுபூராவும் சென்று முடிந்த உதவிகளை செய்து வருகிறேன். 2016 இல் ஏற்பட்ட பாரிய வெள்ளத்தின் போது இரவு பகல் பாராது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவினோம். தினமும் 5000 பேருக்கு மேல் சாப்பாடு கொடுத்தோம். சாப்பாடு, தூக்கம் எதுவுமின்றி அந்த நாட்களில் ஓடி ஓடி சேவைசெய்தது என்னை மேலும் சமூக சேவையின் மீது ஆர்வத்தை தூண்டியது. அதன் பின்னரே ஜே.ஜே.பவுண்டேசனை ஆரம்பித்தோம். 1984 இல் கொலன்னாவை பள்ளிவாசல் நம்பிக்கைபொறுப்பாளராக பொறுப்பேற்று அந்த பள்ளிவாசலை மேம்படுத்த அயராது பாடுபட்டேன். அந்த அனுபவங்கள் சமூக சேவைக்கு மேலும் உந்து சக்தியை தந்தது''

''இது வரை 2 கோடி ரூபாய்க்கு மேல் சமூக சேவைகளுக்காக செலவிட்டிருக்கிறோம்.

இந்தப் பணிக்கு எனதுபணம் மட்டுமல்ல நிறுவனத்தில் அங்கம் வகிப்போர் நாடெங்கிலும் உள்ள நலன்விரும்பிகளும் பங்களிப்பு செய்கின்றனர். இது இன ஒற்றுமைக்கான அடித்தளமாக இருக்குமென கருதுகிறேன். யாரிடமும் சென்று உதவிகள் கோரி வறியவர்களுக்கு நாம் உதவவில்லை. சுயவிருப்பத்தின் போரில் எமது உறவினர்களும் நண்பர்களும் பங்களித்து வருகிறார்கள். அவர்களின் ஒத்துழைப்பை என்றும் மறக்க முடியாது'' அடுக்கிக் கொண்டே சென்றார் ஹனீப்.

விதவைகளின் சுயதொழிலுக்காக தையல் இயந்திரம், அங்கவீனர்களுக்கு முச்சக்கர வண்டி, வறியவர்களுக்கு வீடு கட்டுவதற்கான உதவி, வறிய குடும்பங்களுக்கு சுயதொழில் உதவி என இவர் தமது அமைப்புடன் செய்துள்ள சேவைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இதேவேளை இளைஞர் யுவதிகளுக்கான தலைமைத்துவ பயிற்சிகள், பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்குகள், இலவச கத்னா சேவைகள், போதைப்பொருள் பாவனைக்கெதிரான விழிப்புணர்வுச் செயலமர்வுகள் என நாடெங்கிலும் இவரின் சேவை இடம்பெறுகிறது.

சுயதொழில் புரிவதற்கான தள்ளுவண்டிகள், நடைவண்டிகள், தண்ணீர்தாங்கிகள் தொழில் உபகரணங்களும் இவரின் அமைப்பினூடாக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு பலநூறு பேர் நன்மை அடைந்துள்ளனர்.

''கொரோனா தொற்று நிலைமையினால் வறுமானம் குறைந்ததையும் கொழும்பில் உள்ள எனது புடைவைக்கடை மூடப்பட்டுக்கிடந்த நிலையையும் பொருட்படுத்தாது என் பணியைத்தொடர முடிந்தது. படையினரினதும் மும்மதத்தலைவர்கனினதும் பாதுகாப்பும் ஆசீர்வாதமும் கிடைத்ததை என்னால் மறக்க முடியாது. நான் யாருடைய பிரதிபலனையும் எதிர்பாராது இறைஅன்பை மாத்திரம் கருத்தில் கொண்டு செயல்படுகிறேன். 2016 இல் தொடங்கிய இந்தப் பணியை உயிர் இருக்கும் வரை தொடர திடசங்கட்பம் பூண்டுள்ளேன். எமது அமைப்பிற்கு இலங்கையிலுள்ள சகல இனமக்களும் உதவிசெய்கிறார்கள். இனமத பேதமின்றி பணியைத் தொடர வாய்ப்பேற்பட்டதை பெரும் பேறாகக் கருதுகிறேன்''

''வலது குறைந்தோர் கணவனை இழந்த குடும்பத்தலைவிகள் வாழ்வாதாரமின்றி கஷ்டப்படுவோர் சுயதொழிலுக்கான பணம் தேவையுடையோர் மூக்குக்கண்ணாடி தேவைப்படுவோர் வீடற்றோர் எமது நிறுவன உதவிகளை பெற்று வருகின்றனர். இச்சேவையை தொடர என் மனைவி எனது பிள்ளைகள் ஆக்கமும் ஊக்கமும் அளித்ததை இங்கு கூறாமல் இருக்க முடியாது'' என்று ஆர்வத்துடன் கூறினார் அவர்.

''முஸ்லிம் சமூகத்தில் பணம் பட்டங்களை பெற்றுக்கொண்டு தானுண்டு தன்குடும்பமென்று வாழ்வோர் அதனை சமூகம் பயன்படும் வகையில் செலவழிக்க வேண்டுமென்பதே நான் வழங்கும் ஆலோசனையாக முன்வைக்கிறேன்'' மற்றோருக்கு பிரயோசனமுள்ள மனிதனாக நான் வாழவேண்டும். தனி மனிதனாக நின்று செயல்படுவதைவிட சமூகப்பணிகளுக்கு மற்றோரையும் இணைக்க வேண்டுமென இதயவேட்கை கொண்டதே இந்த பயணத்தின் பிரதான நோக்கமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

தனவந்தர்கள் தமது பணத்தை பல்வேறு சேவைகளுக்காக வழங்கி வந்தாலும் வறியவர்கள் இன்னும் அதே இடத்தில் தான் இருக்கிறார்கள். முஸ்லிங்கள் தமது சொத்தில் இருந்து ஒருபங்கை ஸகாத்தாக கொடுப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அந்த பணம் கூட சரியாக சென்றடைவதில்லை. இது பற்றியும் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்திய அவர் வறியவர்களுக்கு சிறு சிறு உதவிகளை வழங்குவதை விட ஒரு வறிய குடும்பத்தை தூக்கி நிறுத்தவும் அவர்களின் தொழிலை மேம்படுத்துவதற்கு உதவி சொந்தக் காலில் நிற்க வழியமைப்பதும் தான் சரியான வழி என்றும் அவர் விபரித்தார்.



கொலன்னாவையைத் தளமாக கொண்டு செயற்பட்டாலும் இவரின் அமைப்பின் சேவை வடக்கு, கிழக்கு என நாடுபூராவும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. தங்களிடம் வரும் கோரிக்கைகள் குறித்து நேரில் சென்று ஆராய்ந்து உடன் உதவுவது தான் இவரின் சமூக சேவை முறையாகும்.

மன்னார் சிலாபத்துறையில் குழாய் கிணறுகள் அமைத்துக் கொடுத்துள்ள அவர் பண்டாரவெலைக்கு சென்று வீடு கட்ட உதவி வழங்கியுள்ளார்.

ஹனீப் ஹாஜியின் சேவைக்கு பல விருதுகள் கூட கிடைத்துள்ளன. பிரிட்டிஷ் அமெரிக்கன் யூனிவர்சிட்டி (british american univercity ) மனிதாபிமான சேவைக்கான கலாநிதி பட்டத்தை யும், பீஸ் யூனிவர்சிட்டி ஒப் ஜேர்மன் (peace univetcity of jerman) சமூகசேவைக்கான கலாநிதி பட்டத்தையும் வழங்கி கௌரவித்துள்ளது. உள்நாட்டில் பல்வேறு அமைப்புகள் தேசமான்ய, தேசகீர்த்தி பட்டங்களையும் அளித்து கௌரவித்துள்ளது.

இறுதியாக தனது எதிர்கால இலட்சியம் என்னவென வினவியபோது அநாதரவாக்கப்பட்ட மூவின மக்களைப் பராமரிக்க வேலைத்திட்டமொன்றையும் ஆரம்பித்துள்ளதாகக் கூறினார்.







**தகவல். நற்பிட்டிமுனை தினகரன் நிருபர் எஸ். சிராஜுதீன் (ஷம்ஸ் பாஹிம்)**
shumsfahim@gmail.com

# பெண்கள் உடலை ஆரோக்கியமாகவும் உற்சாகமாகவும் வைத்துக்கொள்வதால் குழந்தையின்மை பிரச்சினை ஏற்படாது!







பெண்கள் அன்றாட சுய உடல் பரிசோதனைகள் மூலம் உடலை ஆரோக்கியமாக வைத்து கொள்ள முடியும். உடலில் ஏதேனும் பிரச்சினை என்றால் ஆரம்ப காலத்திலே அதற்கான சிகிச்சையை பெற்றுவிடுவது நல்லது.

பெண் பூப்படைதல் முதல் தாய்மை அடையும் வரை சந்திக்கும் பிரச்சினைகள், மாதவிடாய் பிரச்சினைகள், மாதவிடாய் முடிந்த பிறகு பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் எனப் பெண்கள் தொடர்பான எல்லா பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன.

தற்போது அறுவை சிகிச்சை மூலம் குழந்தை பெறுவது அதிகரித்து வருகிறது. அதற்கு தாமதமான திருமணம், கருத்தரிப்பதில் ஏற்படும் தாமதம், பெண்கள் உடற்பயிற்சி செய்யாமல் இருத்தல் போன்ற பல்வேறு காரணங்கள் உள்ளன.

வலியில்லாமல் குழந்தை பெற்று கொள்ள வேண்டும் எனப் பலர் நினைப்பது கூட காரணமாக உள்ளது. சுக பிரசவத்துக்கு தாய்மார்களை உற்சாகப்படுத்த வேண்டும். சரியான உணவு பழக்கத்தை பின்பற்ற வேண்டும். கர்ப்பிணி பெண்களுக்கு கவலைகள் இருக்கக்கூடாது. உடற்பயிற்சி, யோகா போன்றவற்றை செய்யலாம்.

தற்போது குழந்தையின்மை பிரச்சினை அதிகரித்து வருகிறது, அதற்காக சிகிச்சை பெற விரும்பும் தம்பதிகள் நல்ல தரமான மருத்து வமனையை தேர்வு செய்ய வேண்டும்.

தற்போது உள்ள வாழ்க்கை முறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் குழந்தையின்மை அதிகரித்து உள்ளது. தம்பதிகள் ஒன்றாக இருப்பதற்கு கூட நேரம் இருப்பதில்லை. எனினும் தற்போது குழந்தையில்லாத தம்பதிகள் குழந்தைகள் பெற்றெடுக்க பல வசதிகள் உள்ளன.

அவர்கள் நல்ல மகப்பேறு மருத்துவமனையை அணுக வேண்டும்.

என்டோஸ்காபிக் அறுவை சிகிச்சை முறை மூலம் 50 சதவீத குழந்தையின்மை பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. குழந்தை பாக்கியம் பெற வாய்ப்பே இல்லாதவர்கள் கூட கருமுட்டை தானம், விந்தணு தானம், ஐ.யு.ஐ, ஐ.வி.எப், ஐ.சி.எஸ்.ஐ. போன்ற பல்வேறு சிகிச்சை மூலம் குழந்தை பெற முடியும்.

பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண தற்போது நவீன சிகிச்சை முறைகள் வந்துள்ளன. இதன் மூலம் பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பெரிய அறுவை சிகிச்சைகள் இன்றியும், கர்ப்பப்பையை நீக்காமலும் தீர்க்கப்பட்டு வருகிறது. கருக்கலைப்புகள் எல்லாம் மருந்து, மாத்திரைகள் மூலமே செய்ய முடியும். அதிக ரத்த போக்கு பிரச்சினைகளை கூட எளிதில் தீர்க்கும் சிகிச்சை முறைகள் உள்ளன.

பெரிய அறுவை சிகிச்சைகள் கூட லேபராஸ்கோபி மூலம் செய்யப்படுவதால் நோயாளிகள் 24 மணி நேரத்தில் வீட்டுக்கு செல்ல முடியும்.

பெண்கள் யாருக்கும் தாழ்வானவராக உங்களை நினைக்க வேண்டாம். அன்றாட சுய மருத்துவ சோதனைகள் மூலம் உடலை ஆரோக்கியமாக வைத்து கொள்ளுங்கள். உடலில் ஏதேனும் பிரச்சினை என்றால் ஆரம்ப காலத்திலே அதற்கான சிகிச்சையை பெற்றுவிடுங்கள். மற்ற பெண்களையும் அதுபோல இருக்க உற்சாகப்படுத்துங்கள்.

# நெய் அப்பம்



**தேவையான பொருட்கள்**

பச்சரிசி – 1 கப்
வெல்லம் – 3/4 கப்
தேங்காய் துருவல் – 4 மேசைக்கரண்டி
ஏலக்காய் – 1
சமையல் சோடா – 3 சிட்டிகை
உப்பு – 1/8 தேக்கரண்டி
நெய் – தேவைக்கேற்ப



**செய்வது எப்படி?**

1. அரிசியை கழுவி, 3 மணிநேரம் குறைந்தது ஊறவைக்கவும். தண்ணீரை வடித்து, கெட்டியாக அரைக்கவும்.
2. வெல்லத்தை மிகவும் கொஞ்சமாக தண்ணீர் சேர்த்து உருக்கவும். வடிகட்டி, அரைத்த மாவில் சேர்க்கவும்.
3. தேங்காய் துருவல், பொடித்த ஏலக்காய், சமையல் சோடா, உப்பு சேர்த்து கலக்கவும். இட்லி சட்டியை சூடு செய்து, 1/2 தேக்கரண்டி நெய், ஒவ்வொரு குழியிலும் ஊற்றவும். அதில் 3/4 பங்கு மாவை ஊற்றவும்.
4. மிதமான தீயில், மூடி வேக விடவும். சிவந்ததும் நெய்யப்பத்தை திருப்பவும்.
5. இரு புறமும் சிவந்ததும், எடுத்து, சூடாக பரிமாறவும். சுவையான நெய்யப்பம் ரெடி!



## தமிழ்த் திரையிசைப் பாடல்கள் (நயப்பும் வியப்பும் -05)

# தேனிசையால் வருடும் தேனிசைத் தென்றல் தேவாவின் பாடல்கள்

**தென்னிந்திய இசைத் துறையில் இன்றைக்கும் தனது அட்டகாசமான பல பாடல்களினூடாக ஒரு காலத்தையே தனது வித்தியாசமான பாடல்களினூடாக கட்டிப்போட்ட ஒரு கலைஞர் இசையமைப்பாளர் தேவா. தேனிசைத் தென்றல் என்றப் பட்டப்பெயருக்கூடாக வெளித்தெரியும் இவரது நாமத்திற்கே அழகு சேர்க்கும் இந்தப் பட்டமும் உண்மையில் அவருக்கே உரித்தானது தான். ஏனென்றால் தேனிசையால் நமைக் கட்டிப்போடும் பல பாடல்களிற்கூடாக பல ரசிக நெஞ்சங்களின் இதயங்களில் வாழ்பவர் தேவா. 1989ம் ஆண்டு "மனசுக்கேத்த மகராசா" என்ற திரைப்படத்தின் ஊடாக அறிமுகமான தேவா "வைகாசி பொறந்தாச்சு" என்ற திரைப்படத்தின் ஊடாக பலரது கவனிப்பைப் பெற்றுக் கொண்டார். சிறந்த இசையமைப்பாளருக்கான தமிழக அரசின் திரைப்பட விருதையும் அந்நாளில் பெற்றுக் கொண்டார். இந்தத் திரைப்படத்தில் இடம்பெற்ற அத்தனை பாடல்களும் ரசனை பூர்வமாக அமைந்து அநேகரின் வரவேற்பைப் பெற்றது. இந்தத் திரைப்படத்தில் மனோ, சித்ரா குரலில் உருவான**

'சின்ன பொண்ணு தான் வெட்கப்படுது
அம்மா அம்மாடி
அது என்ன நெனைச்சுக் கன்னம் செவக்குது
சும்மா சும்மாடி'

என்ற பாடல் தேவாவின் இசையில் அமைந்த சிறப்பான பாடலாக அமைந்தது. சமகாலத்தில் இளையராஜாவும், ஏ.ஆர். ரகுமான் என்ற புதுமுக இசையமைப்பாளரின் வருகையையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த இசை ரசிகர்களை அவர்களது எண்ணம் போல தன் பக்கம் இழுக்கக் கூடிய வகையில் பல சுவையான மெலடிப் பாடல்களை உருவாக்கி பல இதய நெஞ்சங்களின் இதய இசையாளனாய் தேனிசைத் தென்றல் தனக்கான தடத்தைப் பதித்துக் கொண்டிருந்தார்.

"சூரிய நமஸ்காரம்" என்ற திரைப்படம் அந்நாளில் தேவாவின் இசையமைப்பில் வெளிவந்தது. இந்தத் திரைப்படத்தில் கவிஞர் காளிதாசனினால் எழுதப்பட்டு எஸ்.பி.பாலசுப்பிரமணியம், சித்ராவால் பாடப்பட்ட

'தாழம்பூச் சேலை மானே எம் மேலே
ராகத்தச் சொல்லுதடி
தொட்டுக் கொள்ளும்
வேகத்தச் சொல்லுதடி'

என்ற பாடல் இன்று வரை அநேகராலும் விரும்பி ரசிக்கப்படுகின்ற பாடலாக அமைந்துள்ளது. அந்நாள்களில் இப்பாடல் அநேக திருமணங்களில் மற்றும் கொண்டாட்டங்களில் ஒலிக்கப்படுகின்ற நேயர் விருப்பப்பாடலாக அமைந்தது.

1993இல் தேவாவின் இசையமைப்பில் வெளிவந்த திரைப்படமான "பாஸ் மார்க்" இல் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் மற்றும் சித்ரா ஆகியோரின் குரலில் இடம்பெற்ற,

'உன் புன்னகை போதுமடி
சில பூக்களும் பூக்குமடி
உன் பார்வைகள் போதுமடி
பொன் பௌர்ணமி தோன்றுமடி'

என்ற பாடல் உண்மையில் மிகச் சிறந்த ஒரு பாடலாக அமைந்தது. இந்தப் பாடலின் சரணங்களில் அவர் கையாண்ட மெட்டுருவாக்கம், உண்மையில் இன்று கேட்டாலும் ரசிக்க வைக்கக் கூடிய பாடலாக அமைந்துள்ளது.

"என் ஆச மச்சான்" திரைப்படம் 1994 ஆம் ஆண்டளவில் தேவாவின் இசையில் வெளியானது. கவிஞர் வாலியின் வரிகளில் எஸ்.பி.பி மற்றும் சித்ராவின் குரலில் வெளியான

'ராசி தான் கை ராசி தான்
உன் முகமே ராசி தான்'

என்ற பாடல் உன்மையில் இசை சார்ந்து பல புதுமைகளை கொண்டு வெளியான வித்தியாசமான பாடலாய் இது அமைந்தது பலரின் விருப்பைப் பெற்றது.

எந்தவொரு இசையமைப்பாளருக்கும் இல்லாத தனித்துவச் சிறப்பொன்று தேவாவுக்கு வாய்த்தது. காரணம் தேவாவின் இசைப் பயணத்தை பல தளங்கள் வாயிலாக நாம் பிரித்து நுணுகி ஆராய முடியும். தேவாவின் ஆரம்பகாலப் பாடல்கள், தொண்ணூறுகளின் நடுப்பகுதிக்குப் பின்னரான புதுமுக நாயகர்களுக்கான பாடல்கள் மற்றுமொன்று தேவாவின் கானா இசைப் பாடல்கள். கானா இசைப் பாடல்கள் என்ற தளம் மிக நீண்டதாக இருப்பினும் கானாப் பாடல்கள் என்றால் அனைவருக்குமே உடன் நினைவில் வருகின்ற நாமம் தேனிசைத் தென்றல் தேவாவே.

சூப்பர் ஸ்டார் ரஜனிகாந்தின் ஸ்டைலிஷ் நடிப்பைப் பார்த்து பிரமித்துப் போன ரசிகர்களின் ரசனையில் பெரு விருந்தை வைத்தவர் தேவா தான். பாட்ஷா மற்றும் அண்ணாமலை திரைப்படத்தின் பின்னணி இசையும், பாடல்களை ரஜனிக்காகவே உருவாக்கிய அவரின் கைப்பக்குவமும் இன்று வரை வியந்து பார்க்கப்படுகின்றது. பாட்ஷா திரைப்படத்தில் ஆட்டோக்காரன் பாடல், தங்கமகன் இன்று சிங்க நடை, நீ நடந்தால் நடை அழகு, போன்ற பாடல்கள் ஒவ்வொன்றும் தேவாவின் அனுபவத்தைக் காட்டிய பாடல்களாக அமைந்தது. அண்ணாமலை திரைப்படத்தில் றெக்க கட்டிப் பறக்குதடா பாடல் மற்றும் ஒரு பெண்புறா பாடல்கள் மிகச் சிறப்பாக அமைந்தன.

1990களின் நடுப்பகுதியில் மற்றும் அதன் பின்னைய காலங்களில் இளம் நடிகர்களாக பல திரைப்படங்களைத் தந்து கொண்டிருந்த விஜய், அஜித் மற்றும் சூர்யா போன்ற நடிகர்களுக்கும் இற்றை வரை மறக்க முடியா பாடல்களை அளித்த பெருமைக்குரியவரும் தேவாவே. நடிகர் முரளியின் பல திரைப்படங்களைப் பாடல்களால் உயிரூட்டியவரும் இவரே. "காலமெல்லாம் காதல் வாழ்க " திரைப்படத்தின் அத்தனை பாடல்களையும் ஹிட் ஆக்கியவரும் இவரே. இந்தப் படத்தில் வந்த

'ஒரு மணி அடித்தால் கண்ணே
உன் ஞாபகம்
ரெலிபோன் மகுயிலே
வேண்டும் உன் தரிசனம்'

என்ற பாடலின் ஆரம்ப ஹம்மிங்கிலேயே நம்மைக் கட்டிப் போட்டவர் தேவா. அந்நாளில் பல இசை நெஞ்சங்களை காதல் நதியில் மூழ்கடித்த பெருமையும் இப்பாடலுக்கு உரியது. பாடகர் ஹரிஹரனை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்கின்ற ரகசியத்தை தேவாவின் பாடல்களினூடாக தரிக்கக்கூடிய வாய்ப்பும் அந்நாளில் இருந்தது. "உன்னுடன்" திரைப்படத்தில், "கோபமா என்மேல் கோபமா" பாடலும், அவ்வை சண்முகி திரைப்படத்தில் "காதலா காதலா" பாடலும், மின்சாரக் கண்ணா திரைப்பபடத்தில், "உன் பேர் சொல்ல ஆசை தான்" பாடலும், இதே படத்தில் இடம்பெற்ற "ஊதா ஊதா" பாடலும் என் ஐந்த சான்றாதார பாடல்கள் நீண்டு விரியக் கூடியது.



ஒன்ஸ்மோர் திரைப்படமானது தேவாவின் இசையில் வெளிவந்து அத்திரைப்படத்தின் அத்தனை பாடல்களும் ரசனை பூர்வமாக இடம் பெற்றிருந்தது.

'பூவே பூவே பெண் பூவே
என் பூஜைக்கு வர வேண்டும்'

என்ற பாடல் எஸ்.என். சுரேந்தர் மற்றும் சித்ரா ஆகியோரின் குரலில் இடம்பெற்ற நல்லதொரு பாடலாக அமைந்திருந்தது.

அஜித் குமார் நடிப்பில் வெளிவந்த "முகவரி" திரைப்படப் பாடல்களும் தேனிசைத் தென்றல் தேவாவே இன்னொரு பரிணாமத்தில் ரசிக்க வைத்த பாடல்களைக் கொண்ட திரைப்படமாக அமைந்தது. இதில் இடம்பெற்ற, "ஓ நெஞ்சே நெஞ்சே" பாடலும், "ஏய் நிலவே நிலவே" என்ற பாடலும் அநேகரால் விரும்பி ரசிக்கப்பட்ட பாடல்களாக அமைந்தது.

கானா பாடல்களாக தேவாவின் இசையில் வெளிவந்த பாடல்கள் அனைத்தும் ஒரு ஜனரஞ்சக அந்தஸ்தைப் பெற்ற பாடல்களாக அமைந்தன. "ஆனந்தப் பூங்காற்றே" திரைப்படத்தில் அமைந்திருந்த "மீனாட்சி மீனாட்சி" பாடலும், கண்ணெதிரே தோன்றினால் திரைப்படத்தில் அமைந்திருந்த "கவலைப்படாதே சகோதரா" பாடலும், "முனிமா முனிமா" பாடலும் என இந்தப் பட்டியலும் நீண்டு செல்கிறது. தேவாவின் கானாப் பாடல்களின் ரசிகர் கூட்டமொன்றின் உருவாக்கம் அவருக்கானது.

தென்னிந்திய திரைத் துறையின் பாடல்தளம் என்பது அது ஒரு பரந்த வெளி. அந்த வெளியில் கடந்த முப்பது ஆண்டுகளாக பலநூறு பாடல்களை ரசிக்கும் படியாக தந்த இசையமைப்பாளராக தேவாவும், அவரது பாடல்களும் மிளிர்கின்றன. வேறு யார் யாரோ செய்திருப்பார்கள் என எண்ணத் தோன்றுகின்ற பல அரிய முத்தான பாடல்களை எல்லாம் தேனிசையாய் நம்மிடையே தந்த மாபெரும் இசைக் கலைஞனாய் வாழும் தேவாவின் பாடல்கள் ஒவ்வொன்றும் என்றைக்கும் தேனிசையாய் நம்மைத் தாலாட்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.





**வெற்றி துஷ்யந்தன்**



கொழும்பு மயூராபதி ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழாவின் போது
இடம்பெற்ற நடன நிகழ்வில் பங்கேற்ற மாணவிகள்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.



# குடை

**குடை மழைக்கு ஏற்றதா அல்லது வெயிலுக்கு ஏற்றதா?**

என்னைய கேட்டா குடை உருவாக்கப்பட்டது எதுக்குன்னு ஒரு வரலாறே சொல்வேன். இத கேட்க ஆர்வமா இருக்கும். நாம கேள்விப்பட்டிருக்க மாட்டோம்னு நினைக்குறேன்.

ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட குடைகளுக்கும் மழைக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. பதவிக்கும் மதிப்புக்குமுரிய சின்னங்களாகவே இவை திகழ்ந்தன.


முக்கிய நபர்கள் மாத்திரமே இவற்றைப் பயன்படுத்தினர். அரசர்களை வெயிலில் இருந்து பாதுகாப்பதற்காக பணிவிடைக்காரர்கள் அவர்களுக்கு குடைகளைப் பிடித்து நிற்பது போன்ற காட்சிகளை அசீரியா, எகிப்து, பெர்சியா, இந்தியா ஆகிய நாடுகளின் பூர்வ காலத்து சிற்பங்களும் ஓவியங்களும் காண்பிக்கின்றன.

அசீரியாவில், ராஜாவைத் தவிர வேறு யாருமே குடையை பயன்படுத்த அனுமதிக்கப்படவில்லை. இதன் சரித்திர பதிவு முழுவதுமாக பார்க்கும்போது, முக்கியமாக ஆசியாவில், குடைகள் அதிகாரத்தையே பிரதிநிதித்துவம் செய்து வந்திருப்பது தெரியவருகிறது. ஒரு அரசன் எத்தனை குடைகளை வைத்திருந்தானோ அந்தளவுக்கு அவனுடைய அந்தஸ்து உயர்ந்தது.

பர்மா நாட்டு ராஜா, இருபத்து நான்கு குடைகளுடைய சீமான் என அழைக்கப்பட்டதிலிருந்து இது தெரிகிறது. சில சமயங்களில், அந்தக் குடைகளில் எத்தனை அடுக்குகள் இருந்தனவென்பது முக்கியமானதாக கருதப்பட்டது.



சீன பேரரசர் வைத்திருந்த குடையில் நான்கு அடுக்குகள் இருந்தன; சியாமின் ராஜா ஏழு அல்லது ஒன்பது அடுக்குகளை உடைய குடையை வைத்திருந்தார். இன்றும்கூட, சில கிழக்கத்திய நாடுகளிலும் ஆப்பிரிக்க நாடுகளிலும் குடைகள் அதிகாரத்தின் சின்னமாகவே திகழ்கின்றன.



**மத சார்பான குடைகள்**

ஆரம்ப காலத்திலிருந்தே குடைகள் மதத்தோடு பிணைக்கப்படலாயின. நட் என்ற தேவதை தன் உடம்பை ஒரு குடையைப் போல விரித்து இந்த முழு பூமியையும் பாதுகாத்ததாக பூர்வ எகிப்தியர்கள் நினைத்தார்கள். ஆகவே, அவளுடைய பாதுகாப்பைப் பெறுவதற்காக மக்கள் குடைகளைப் பயன்படுத்தினர்.

விரித்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு குடை வளைந்த வான்வெளியை பிரதிநிதித்துவம் செய்ததாக இந்தியர்களும் சீனர்களும் நம்பினார்கள்.

புத்த மதத்தினரும் அதை புத்தரின் சின்னமாக பயன்படுத்தினார்கள், அதோடு, அவர்களுடைய நினைவு மண்டபங்களின் உச்சியில் பெரும்பாலும் ஒரு குடை வைக்கப்பட்டிருப்பதை நாம் பார்க்கலாம்.

பொ.ச.மு. 500க்குள் குடைகள் கிரீஸ் நாட்டிலும் தோன்ற ஆரம்பித்தன; அங்கே மத விழாக்களில் ஆண், பெண் தெய்வங்களின் சிலைகளுக்கு மேல் குடைகள் வைக்கப்பட்டு தூக்கி செல்லப்பட்டன. மேலும், ஆதன்ஸ் நகரத்து பெண்களும் தங்களுக்கு குடைகளை பிடித்து செல்ல வேலைக்காரர்களை வைத்திருந்தார்கள்; ஆண்களோ அப்படிப்பட்ட எதையும் பயன்படுத்தவில்லை. பிற்பாடு, குடை பிடிக்கும் இந்த வழக்கம் கிரீஸிலிருந்து ரோமுக்கு பரவியது.

ரோமன் கத்தோலிக்க ஆலயம், குடையை அதன் சடங்காச்சார சின்னங்களில் ஒன்றாக்கியது. சிவப்பு மற்றும் மஞ்சள் வரிகளை உடைய



பட்டுக் குடையுடன் போப் காட்சியளிக்கத் தொடங்கினார்; பிஷப்புகளும் கார்டினல்களும் ஊதா அல்லது பச்சை நிறமுள்ள குடையுடன் காட்சியளித்தனர். இன்று வரையாக பேஸிலிக்காக்களில் போப்புக்கு குடையுடன் கூடிய ஒரு ஆசனம்இருக்கிறது; அந்தக் குடையின் நிறம், மேற்கூறியவாறு சிவப்பும் மஞ்சளும் கலந்தது.

ஒரு போப் இறந்து இன்னொரு போப் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான இடைப்பட்ட காலத்தில், ஆலயத்தின் தலைவராக செயல்படும் கார்டினலும்கூட ஒரு குடையை தன்னுடைய தனிப்பட்ட சின்னமாக வைத்திருப்பார்.

குடையின் வரலாறு பார்த்த நாம். இனி வெயிலிலிருந்தும் மழையிலிருந்தும் பாதுகாப்பு அளிக்க குடை எப்போதிருந்து பயன்படுத்தப்பட்டது என்பதையும் அறிந்துகொள்வோம்.

மழையில் நனையாமல் இருப்பதற்காக காகித குடைகளின் மீது எண்ணெயையும்



மெழுகையும் பூச ஆரம்பித்தது சீனர்களாக இருக்கலாம் அல்லது ஒருவேளை பூர்வ ரோமிலிருந்த பெண்களாக இருக்கலாம். என்றாலும், வெயிலிலோ மழையிலோ பாதுகாப்பு கொடுக்க பயன்படுத்தப்பட்ட இந்தக் குடை காலப் போக்கில் ஐரோப்பாவிலிருந்து மறைந்தே போனது.

பிற்பாடு, 16ம் நூற்றாண்டில் இத்தாலியர்களும், பிறகு பிரெஞ்சுக்காரர்களும் அதை மறுபடியும் பயன்படுத்த தொடங்கினார்கள்.

18ஆம் நூற்றாண்டுக்குள்ளாக, பிரிட்டனில் இருந்த பெண்கள் குடைகளுடன் காட்சியளிக்க ஆரம்பித்தார்கள்; ஆண்களோ அதை பெண்களின் அலங்காரப் பொருளாகவே கருதியதால் அதை தொடக்கூட மறுத்தனர்.

இதற்கு விதிவிலக்கு காஃபி ஹவுஸ் ஓனர்கள்; தங்கள் கடையிலிருந்து குதிரை வண்டிக்கு செல்லும் வாடிக்கையாளர்களை கடும் சீதோஷ்ண நிலையிலிருந்து பாதுகாக்க குடை ஒன்றை தயாராக வைத்திருப்பது எவ்வளவு பிரயோஜனமானதென்று அவர்கள் அறிந்திருந்தார்கள்.

கன மழை பெய்கையில் சவ அடக்க பேச்சுகளை சர்ச்சின் கல்லறை வெளியில் நின்று கொண்டு கொடுக்கும்போது குடை எவ்வளவு உபயோகமானது என்று பாதிரிமார்களும் கண்டார்கள்.

இங்கிலாந்தில், குடையின்



சரித்திரத்தையே மாற்றி எழுதியவர் ஜோனஸ் ஹான்வே என்பவர்; இவர் நாடு நாடாக பயணித்தவர், மனித மேம்பாட்டிற்காகவும் பாடுபட்டவர். லண்டனில், பொது இடங்களில் தைரியமாக குடையை பிடித்து சென்ற முதல் ஆண் இவர்தான் என சொல்லப்படுகிறது. அவர் கடல்கடந்து பயணித்தபோது, வெளிநாடுகளில் ஆண்கள் குடைகளைப் பயன்படுத்துவதை கவனித்ததால் இவரும் குடையை பயன்படுத்த ஆரம்பித்தார்; கோச் டிரைவர்கள் வேண்டுமென்றே வண்டியை வேகமாக ஓட்டி சேற்று நீரை அவர் மீது வாரி இறைத்து கிண்டல் செய்தபோதிலும் தொடர்ந்து குடையை பயன்படுத்தி வந்தார். அடுத்த 30 வருடங்களுக்கு, ஹான்வேயை பொது இடங்களில் பார்த்தவர்கள் அவரை குடையும் கையுமாகத்தான் பார்த்தார்கள். 1786ல் அவர் இறப்பதற்குள்ளாகவே, ஆண்கள் பெண்கள் என எல்லாருமே சர்வசகஜமாக குடைகளை உபயோகிக்க ஆரம்பித்திருந்தனர்.



19ஆம் நூற்றாண்டின் மத்தியில், சாமுவேல் ஃபாக்ஸ் என்பவர் பாரகன் மாடல் குடையின் காப்புரிமையை பெற்றார்; இந்த மாடல் குடைகள் லேசானவையாக இருந்தாலும் அவற்றில் பலமான ஸ்டீல் கம்பிகள் இருந்தன. முன்பு பயன்படுத்தப்பட்ட முரட்டு கேன்வாஸ் துணிகளுக்கு பதிலாக பட்டு, பருத்தி, மெழுகு பூசப்பட்ட லேசான துணிகள் ஆகியவற்றை வைத்து தயாரிக்கப்பட்டன. நவீன குடை பிறந்த கதை இதுதான்.

**குடை மழைக்கு ஏற்றதா? வெயிலுக்கு ஏற்றதா?**

குடை மழைக்காலத்தில் மழைக்கும், வெயில் காலத்தில் வெயிலுக்கும் நல்லது.

நம்மில் சிலர் வெயில் மற்றும் மழைக்காலத்திலும் குடைபிடித்து நடக்கும் குணம் கொண்டவர்கள். அப்படிப்பட்டோர் மேலே உள்ள இணைப்பில்(குடை ஏன் கருப்பு நிறத்தில் தயாரிக்கப்படுகிறது) படிக்கவும். இதில் தங்களுக்குத் தேவையான பதில் உள்ளது.





## எல்பர்ட் ஐன்ஸ்டைன்

சார்பியல் கோட்பாடு




## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்




## வரையுங்கள்




## எழுதுங்கள்

